அந்தக் காலத்து மனிதர் ஆறுவிதமாய் நாராயணனைக் கோரிக் கொண்டு அந்தந்தவித வேதப்படிக்கு நடந்து கொண்டு வருவார்கள். அப்படித் துவாபரயுகம் வரைக்கும் நடந்து கொண்டு வந்தது. அப்பால் கலியுக முண்டாயிற்று. கலியுகமனிதர் சரீரங்கள் நாராயணனுடைய திட்டப்படிக்குப் பேதித்துப் போனபடியினாலேயும் இந்த மனிதருக்கு காமியமும் மூடத்துவமும் மேலிட்டுப் போன படியினாலேயும், நிலைமை தப்பிப்போனதினாலேயும், இவர்களுக்கு அறு......ளங்கும் பொருட் டாயும், யுகதர்மம் அறிவையுடைத்தோருடைய தெரிசனம் காண மாட்டாரென்றும், இவர்கள் வேதப்பொருளினாலே நாராயணனுடைய குணதிசயங்களை தெரிந்து கொள்ள வேணுமென்றும், தெய்வத் தொழில் மனிதருக்கு அறிவும், காமியமும் உண்டு பண்ணி ஒரு காலம் அறிவை விளங்கும் படிக்குச் செய்கிறது ஒரு காலம் மூடத்துவமா செய்கிறதும் நாராயணனுடைய திட்டம்.

---

3. கண்ணுதர் for காணுதர்.

ஆனதினலே, இந்தத்தமிழ் தேசத்திற்கு தமிழ் வித்தை அகஸ்தியரிஷியால் பொதிய மாமலையில் பிறந்ததை தமிழ் வேதமாய் விளங்கும் பொருட்டாய்த் துவாபரயுக அந்தியத்தில் இந்துஸ்தானத்தில், வடமதுரை கோகுல பிருந்தாவனத்தில் கிருஷ்ணவதாரமெடுத்த சாமி அந்த அவதாரத்தை நீக்கிப் பாண்டிய தேசத்திலே வழுதி நாட்டில் திருக்குருகூரில் காரியென்னப்பட்ட ராசா வயிற்றில் கலியுகம் பிறந்த நாற்பத்தைந்தாநாள் விக்கிரம வருடம் வையாசி மாதம் பவுர்ணமாவாசை, விசாக நட்சத்திரம் மாரன் சடகோபாழ்வார் அவதரித்தார்.

அப்படிப்பட்ட ஆழ்வார் சாமி அவதரித்துப் பொசிப்பு வலசலமில்லாமல், நித்திரையுமில்லாமல் முப்பது வருடமும் வளர்ந்து கொண்டு இருக்க மதுரைகவியார்[4] யோகம் சாதித்துக் கொண்டு மனச்சஞ்சலிப்புடனே குருவைத்தேடிக் கொண்டிருக்க தெற்கே சூரிய உதயமாய்த் தோணப்பட்ட குரு அவதாரமாகி இருக்கிறரென்று பிரகாச வழியாய், திருக்குருகூரில் வந்து மாறன் சடகோபாழ்வார் தெரிசனம் பண்ணிக் கொண்டார். அந்த போதே ஆழ்வார் நாராயணனுடைய குணதிசயப் பெருமையை வெளிப்படுத்தி உலக மூடத்துவத்தைத் திருத்திப்பணிகொள்ள வேணுமென்று உலகத்தார் தெய்வ நிதானம் பாத்தை அடைகிறதற்கு மனச்சஞ்சலமாயிருக்கிறதைத் தீர்க்கும் பொருட்டால் சகலவேத இரகசியப் பொருளே திருவாய் மொழியினல் தமிழ் வேதம் மதுரைகவியாருக்குப்[5] போதித்தார் அந்த வேதத்தை மதுரை கவியார் தெரிந்து கொண்டு தாம் ஆழ்வாரே தெய்வமென்று பாடி உலகத்தாருக்குத் தமிழ் வேதத்தை மதுரை கவியார் போதித்தார்.

அந்த வேதப்படியே உலகத்தார் ஒரு வழியாகப் பத்தியை அடைந்து கொண்டு வந்தார்கள். ஆழ்வார் தமிழ் வேதம் பாடினது மஹாரிஷிகள் விஷ்ணுதெரிசனம் கண்டயிடத்திலே அர்ச்சக அவதாரமாய் நாராயணரூபமாய் இருப்பிடமென்று தமிழ் வேதம் சொன்னர். அப்படி ஆறு சமயத்தாரும் இந்தத் தமிழ் வேதம் ஒரு சமயத்திலே சாராமல் பாத்துவமாய் நாராயணன் எல்லா உலகிற்கும் தானேயாகி நிறைந்திருக்கிறரென்று சொல்லப்பட்டது என்று, விசுவாசபத்தியாய் ரெண்டாயிரம் வருடம் வரையில் நடந்து கொண்டு வந்தார்கள்.

பொய்கை ஆழ்வாரென்றும், பூதத்தாழ்வாரென்றும், பேயாழ்வாரென்றும், திருமழிசையாழ்வாரென்றும், துவாபரயுக அந்தியமுதல்

---

4. மதுரை கவிராயர் for மதுரகவிராயர்.

5. ஷை ஷை

யோகம் சாதித்துக் கொண்டு இருந்தவாளும், விஷ்ணு தரிசனம் கண்டு விஷ்ணுபுரமா[6] வேதம் பாடினர்கள். கலியுகத்தில் ரெண்டாயிரம் வருடத்திற்குப் பிறகு திருப்பாணழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், அவதார புருஷாள் உண்டாய் இவர்களும் வயிணவசமயமாய் திருவாய் மொழி பாடினர்கள். இவர்களிலே சிறிது ஆழ்வார்கள் தங்கள் மனத்திற்கு இஷ்டமான திருப்பதிகளேயும் தாங்கள் தெரிசனம் கண்ட திருப்பதிகளேயும் திருமங்கை ஆழ்வார் நூற்றெட்டுத் திருப்பதியும் சாரூபபதவி யென்றும், நாராயணன் இருப்பிடமென்றும், தாம் தெரிசனம் கொண்ட பாவனேயால் திருப்பதிகளெல்லாம் திருமொழி பாடினர்.

அப்படிச் சிறிது காலமிருக்க அப்பரென்றும் சுந்தரரென்றும், திருஞானசம்பந்தரென்றும், மாணிக்கவாசகரென்றும், அவதாரமாய் சிவசமயத்தை விளக்கி ஆயிரத்தெட்டுச் சிவாலயம் பாடினர். அந்தக் காலத்தில் சமணமதம், புத்தமதக்காரர் மஹாவித்வான்கள் ராஜாக்கள் முன்னே சமயவாதிகளோடே தர்க்கங்கள் பண்ணித் திருஞானசம்பந்தராலே தோற்பாய் அலேயப்பட்டுப் போனர்கள், ஒரு காலம் மதுரையில் பாண்டிய ராஜா முன்னே சமயத்தார் தர்க்கங்கள் பண்ணி ராஜா தங்கச்சங்கிலியில் தங்கக்கிளி கட்டிச்சபை மண்டபத்தில் தூக்கிவைத்துச் சமயத்தாரைக் கவிபாடி அறுத்துக் கொண்டு போங்கள், யார் அறுத்தவரோ அவாள் சமயம் பரமென்று சொல்ல, சமயக்ஞான புருஷாளிலே பெரியாழ்வார் விஷ்ணுபரமாய்ப் பாடி அறுத்துக்கொண்டு போனர். ராஜா வைஷ்ணவத்தைச் சார்ந்து பத்தியாய் நடந்தார்.

அப்படிக் கலியுகவருடம் நதநூக்கு மேல் வரைக்கும் நடந்து கொண்டு வந்தது. பிறகு சிறிது காலத்தில் வைஷ்ணவ சமயம் தாழ்வு பட்டுத் திருவாய் மொழி வேதமயமாய்ப் போயிருந்தது நாதமுனி அவதாரமாயி, யோகம் சாதித்துக் கொண்டு இருந்து, சித்தித்து ஞானத்தினலே சடகோபாழ்வார் தெரிசனம் கண்டு, திருவாய் மொழி தமிழ் வேதம் பத்துபேர் ஆழ்வார்கள் பாடின நாலாயிரமும் தெரிந்து கொண்டு, தமிழ் வேதத்தை விளம்பரம் பண்ணினர். சடகோபாழ்வாராலே பரத்தினுடைய இரகசிய மந்திரத்தைத் தெரிந்து கொண்டார்.

வைஷ்ணவசமயமும், சிவசமயமும் ராஜாக்கள் சமனு எண்ணிக் கொண்டு வருவார்கள். அந்தக் காலத்தில் பாண்டியராசா சோழராசா வித்வானுயிருப்பார்கள், அவர்களிடத்தில் மஹாவித்வான் கம்பனென்

---

6. விஷ்ணுபுரமாய் for விஷ்ணுபரமாய்

றும், ஒட்டக்கூத்தரென்றும், புகழேந்தியென்றும் இருப்பார்கள். கம்பன்[7] கீர்வாண ராமாயணத்தை, அளஎ சகாப்தத்தில் தமிழ் ராமாயணம் பாடி, சீரெங்கம் ரெங்கசாமி முன்னே அரங்கேத்தி படி பண்ணினார். சாலிவாகன சகாப்தம் அாயஉ வருடம் சுபகிருத வருடம் பசலிசன ஙா வருடம் கொஞ்சம் ஏறக்குறைய செயம் கொண்ட சோழன். அந்த ராசா திருவதியில் இராஜாவாய் நடுமண்டலம் ஜெயம் கொண்டார். அவனுக்கு ஜெயம் கொண்ட சோழ ராஜா வென்று பெயராச்சுது. அவன் செஞ்சிக்குக்கிழண்டை இரண்டு நாழி வழியில் ஜெயம் கொண்டான் என்ற கிராமம் ஏத்தினார். அவனுக்கும் பிறகு பசலிசன ஙாஙயக்கு குலோத்துங்க சோழன்[8] ராஜாவானான்.

அவன் சதுர்வேதமங்கலமென்கிற பிரம்ம தேசம் என்கிற பட்டணம் உண்டு பண்ணி, அதில் சிவன் கோயிலும் கட்டினான். பசலிசென ஙாஎய வருடம் பூலோக தேவேந்திரன் ராஜாவானான். அவன் தேவநூர் பட்டணம் உண்டு பண்ணினான். அப்பால் பசலிசன சா வருடம் வஜ்ராங்கசோழ ராஜாவானான். அவன் திருவண்ணாமலைக் கோயில் மூன்றும் சுற்று மதிள் கோபுரம் கட்டினான். அந்த ராஜா நாளையில் சகாப்தம் சூாஙயகூ வருடம் வைஷ்ணவமதம் உத்தாரணம் பண்ண ராமானுஜாச்சாரி[9] அவதரித்தார். பிறகு, பசலிசன சாசய வருடம் திருபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன் ராஜாவானார். அந்த ராஜா சில்லறை ராஜாக்களண்டைப் பகுதி வாங்கிக் கொண்டு நீதியாய் ராஜயமாண்டு போனபிறகு பசலிசென சாசூய வருடம் அந்த ராஜா பிள்ளை வீரபாண்டிய சோழன் இராஜாவானான். அந்த ராஜா நாளையில் வைஷ்ணவமதம் உத்தாரணம் பண்ண, ராமாநுஜ ஆசாரி அவதார புருஷரான படியினாலே, ஞானேதயமாகி தமிழ் வேதம் விளங்கச் செய்த சடகோபாழ்வார், நாராயணனுடைய இரகசிய மந்திரத்தை ஒரான் வழியாய் வந்த மந்திரத்தை, சீரெங்கத்தில் பெரிய நம்பியாராலே தெரிந்து கொண்டு அந்தமந்திரம் கேட்டவர்க்குச் சொர்க்

---

7. எனது மூன்றாங்குலோத்துங்கன் மூன்றாம் பதிப்பில் 64ஆம் பக்கத்தில் கம்பர் இராமாயணம் பாடியது கி. பி. 1178லிருந்து கி. பி. 1185 வரையில் என எழுதியுள்ளேன். அதனைப் பார்க்க.

8. இப்பக்கத்திலும் இதனையடுத்துள்ள மன்னர்களின் காலக்கணக்கும் மேலும் ஆராய்ச்சிக்குரியவை.

9. இராமானுஜாசாரியார் இரண்டாங்குலோத்துங்க சோழ தேவற்குச் சமகாலத்தவர் என சில வரலாற்றாசிரியர் கருதுவர்.

கம், சொன்னவருக்கு நரகமென்று குருவாலே அறிந்து கொண்ட மந்திரத்தை சகலமான பேருக்கும் விளம்பரம் பண்ணி தம்முடைய சத்தியைக் காட்டினர். சகலமான பேரும் இவரைச் சாமியாரென்று பக்தியை அடைந்து வைஷ்ணவ சமயத்தைச்சார்ந்து இருந்தவாளும் சிவசமயத்தார் சமணர் புத்தர் சமயத்தார் ஒட்டிக் கொண்டு இருந்த வாளும் அனேகம் மனிதராஜாக்கள் ராமானுஜ சாமிக்கு தொண்டுபட்டு உபதேசம் பெற்றார்கள்.

அப்படிக் கொத்தசாமி தமிழ் வேதம் பொருள்கள் ஆழ்வாராதி களாலே திருவாய் மொழிப்பிரபந்தம், நாலாயிரம் இந்த தேசத்தில் விளங்கியிருந்தது. ஆயிரம் வருடம் கிலமாய்ப் போயிருந்ததை நாத முனி அவதாரமாய் ஞானத்தினலே திருவாய் மொழி நாலாயிரமும் சேர்த்து விளம்பரம் பண்ணியிருந்ததை நன்றாகத்தெரிந்து கொண்டு கீர்வாணவேதம் வேதவியாசமுனியாலே வடமொழியாயிருக்கப்பட்ட தையும் ஆராய்ந்து பார்த்து ராமானுசாஆசாரி தாமே ஜனங்களுக்குப் பாஷ்யமாய் விளம்பரப்படுத்தி இந்த உபயவேதத்தினுடைய அர்த் தங்கள் படிக்கி நூற்றெட்டுத் திருப்பதியிலும், மலையாளம் தவிர மற்ற திருப்பதியில் தாம் தம்முடைய சிஷ்யாக்கள் கூடப்போய் திருப்பதிக் குள்ளே ராஜாக்களாலே கோயில் கட்டி அர்ச்சக அவதாரமாயிருந்த பெருமான்களுக்குச் சங்கு சக்கரம், அஸ்தத்தில் தரித்துத் திருவாய் மொழிப்படிக்கு, வெள்ளை நீறைத்திருநாமமென்று பெருமாள் நெற்றி யில் சாத்தி லக்ஷமிகர நிமித்யம் சீசூர்ணம் நடுவேசாத்தி, துளசி மாலை பெருமாள் சரீரத்தில் சாத்தி ரகசிய மந்திரத்தைச் சாத்தும்படி பண்ணி, திருப்பதிகளைத் திருத்தி வைஷ்ணவசமயத்தை விளக்கினர்.

இந்தப்படியே தம்முடைய பத்தி அமைந்தவர்களிலே யோக்கியர் களாய்ப்பார்த்து, நாலுபீடம் எழுபத்து நாலு சிம்மாசன பதிகளைத் திட்டம் பண்ணி, அவர்களுக்கு பஞ்ச சமஸ்காரம் பண்ணி, உலகத்தாரு க்குத்தாம் திருத்தினபடிக்குத் திருத்தச் சொல்லித்திட்டம் பண்ணினர். அவர்கள் ஆசாரியர் சொல்படிக்கி இராஜாக்களுக்கும், ஜனங்களுக்கும் திருத்திக்கொண்டார்கள். இப்படி இந்த கர்னாடக தேசம் சகலமான பேரும் வைஷ்ணவ மதத்தைச் சார்ந்து இருப்பார்கள்.

சிவசமயம் எப்போதும் போலே மெத்தத்திலே இருக்கும். சமணர், புத்தர் சமயம் முழுகிப் போயிருக்கும். அப்ப்டியிருக்க ராமானுசாச்சாரி தக்கன் சீமை போக வேணுமென்று தம்முடைய சிஷ்யர்களோடே சீரெங்கப்பட்டணம் போனர். அவ்விடத்தில் காவேரி வாய்க்கால் கரையில் இறங்கியிருக்க வாய்க்காலிலே ஸ்நானம் பண்ணி

ஞர். அவ்விடத்தில் ஒரு பெரிய வியாதி பிடித்தவன் கீழ்ப்புறமா ஸ்நானம் பண்ணிஞன்.

ஆசாரியர் திருவடி பட்டஜலம் அவன் சரீரத்தில் படவே வியாதி மறைந்து செம்மையாய்ப் போனன். அது செய்தி விளம்பரமாய் இராஜாமட்டும் ஆயிற்று. இராஜா, ஆசாரிய சாமிகள் வந்திருக்கிற செய்தியும் தெரிந்து கொண்டு, தம்முடைய பராட்டவணை களும் பிரதானி களையும் கூட்டி அனுப்பி, ஆசாரிய சாமியை அழைப்பித்தார். ஆசாரி யார் ஊர்சமீபத்தில் வரும்போது இராஜாபெண்ணிற்கு துர்ம்மராக்ஷசி10 பிடித்திருந்தது, வஸ்திரமுடுக்காமலிருந்தது; பிரம்மராக்ஷஸி போய் பெண்வஸ்திரமெடுத்துக் கட்டிக் கொண்டு அதனலே ராஜா அனேக சந்தோஷத்தை அடைந்து, ஆசாரிய சாமிக்கு தொண்டுபட்டு, பஞ்ச சமஸ்காரம் பெத்த வைஷ்ணவனுனன்.

அப்படியிருக்க ஆசாரியார் தம்முடைய கூட்டத்தோடே ராஜ லட்சணமா பன்னீராயிரம் திருத்தொண்ட சன்யாசி கூட காவிகூடாரங் கள் ராமானுசகத்தி சேடயம் ஈட்டிமுதல்கொண்டு, தக்கன் சீமைகளிலே வைஷ்ணவ சமயம் உத்தாரணம் பண்ணி அவ்விடத்திலிருந்து இந்துஸ் தானம், சீமை வடமதுரை, கோகுலம், துவாரகை, சிந்து, காஷ்மீர், பதரி, கேதாரம் வகையரு, அயோத்தி கூடச் சீமைக்குப் போய், தம் முடைய மகிமையைக் காட்டி வைஷ்ணவ சமயம் உத்தரணம் பண்ணி அவ்விடம் அவ்விடத்தில் யோக்கிய வந்தாளை மடாதிமதியாய்த் திட்டம் பண்ணி, பஞ்ச சமஸ்காரத்திற்கு உத்தாரம் கொடுத்து, அந்தச் சீமையில் வியாபித்திருக்கிற போது, விலாயத்து இரான் தேசத்து பாதுஷா சுலுத்தான் அப்துல்லா உசேன் கசன்பிபார் பௌசாவாங்கிக் கொண்டு இந்துஸ்தானம், சீமைகாபல, மூல்தான், லாவூர் வந்து அவ்விடத்திய சமீன்தார் இராஜாக்களண்டை பணம் வாங்கிக் கொண்டு டெல்லியிலே அனந்த மேவராசா தோமரான் மஹாராச பட்டத்திலிருக்க, அந்த ராஜா பாதுஷாவோடே கவில் பண்ணிக் கொண்டு பகுதிக்குத்திட்டம் பண்ணிக் கொள்ளப் பாதுஷா டெல்லியிலே வந்து இறங்கினர்.

சகலராஜாக்களும், தாங்களும் தங்கள் வக்கீல் முகனையிலும் கண்டு தங்கள், மாமல்லத்துத் தீர்த்துக் கொண்டார்கள். பாதுஷா அவ்விடத் தில் தானேயிருந்து கொண்டு சிறிது தண்டை தக்கன் பக்கம் இராஜாக் கள் பேரில் அனுப்பினர். பாதுஷா தண்டு தக்கனிலேயும் வந்து சிறிது சீமையைக் கொள்ளையுமிட்டு, சிறிது ராஜாக்களண்டை பணமும்

10. துர்ம்மராக்ஷஸி இது பிரஹ்மராக்ஷஸ்ஸாயிருக்கலாம்

வாங்கிக்கொண்டு மேல்கர்னுடகம் சீரெங்கப்பட்டிணம் சீமையில் வந்து கொள்ளையிட்டு, மேல கோட்டை செல்வப்பிள்ளை ராயவிக்கிரகத்தையும் கொள்ளையிட்டுக் கொண்டு, பாதுஷா தண்டு டெல்லி போய்ச் சேர்ந்தார்கள்.

ராமானுஜாச்சாரியார் இந்துஸ்தானத்தில் வியாபித்துக் கொண்டு அந்தக் காலமிருந்தபடியினுலே செல்வப்பிள்ளை ராயவிக்கிரகத்தைப் பாதுஷா தண்டுகாரர் கொண்டு போனதைக் கேட்டு, ஆசாரியார் டெல்லிக்குத் தம்முடைய சன்யாசி தண்டோடே போனுர். ஆசாரியசாமிகள் வந்தது ராஜாதி ராஜாவிற்குத் தெரிந்தது. இப்படி ஒரு மாதக் காலம் ஆசாரியாரிறங்கி இருக்கச் செல்வப்பிள்ளை ராயவிக்கிரகத்திற்காக ஆசாரிய ராஜாக்கள் முகனையில் பாதுஷா வசிர்களுக்கு பேச்சுவிட்டார். "எங்கள் சாமியைப் பாதுஷா தண்டுக்காரர் கொண்டு வந்து விட்டார்கள். எங்கள் சாமியைக் கொடுத்தால் நாங்கள் சன்யாசிகள் எங்கள் தேசம் கர்னுடகம் போவோம் இல்லாவிட்டால் போகமாட்டோமென்று" பேச்சு விட வசிர்கள் பாதுஷா வோடு அறிக்கைப் பண்ணினுர்கள். அதற்குப் பாதுஷா அங்கீகரிக்கயில்லை.

அதன் பேரில் ஆசாரியார் யுத்த சன்னுகமாகி திருக்கூட்டத்தோடே பாதுஷா தண்டு கிட்டே வந்தார்கள். அதுசெய்தி பாதுஷா மட்டுக்கும் ஆயிற்று. அதன் பேரில், பாதுஷா கொஞ்சம் கோபம் பண்ணினுர். வசிர்கள் புத்திசாலியானவர்கள் பாதுஷாவிற்குச் சொன்னது. "இது இந்துஸ்தானம் அவாள் விக்ரகத்தைச் சத்தியமாய்த் தெய்வமென்னப்பட்டவாள்; அதனுலே, அனேகம் பேர் சேதமாகும் அபகீர்த்தியாகும், அவாள் விக்கிரகத்தைக்கொடுத்துவிடுகிறது யுக்த" மென்று சொன்னுர். அதன்பேரில் சுலுத்தான் அப்துல்லா உசேன் கசன்பி பாதுஷா இது யுக்தமென்று அறிந்து விக்கிரகத்தைக் கொடுத்து விடச்சொன்னுர்.

அந்த விக்கிரகம் பாதுஷாக்கள் திரைக்குணிரகராஜாக்கள் பேரில் போனுல், பின்னும் சீமை கட்டப்போனுலும், சமுசாரத்தோடே போறது வாடிக்கையானபடியினுலே, பாதுஷா மகள் சிறு பெண் விக்கிரகத்தைப்பார்த்து அதிகமோகம் வைத்து விளையாடிக்கொண்டிருப்பாள். அந்தப்பெண் அந்த விக்கிரகத்தை புருஷபாவனையாய் நடத்து கொண்டு வருவாள். அப்படியிருக்கிற விக்கிரகத்தைப் பெண் கொடாள். அதைப் பாதுஷா தெரிந்துகொண்டு பெண்ணுக்கு ரொம்பவும் சொல்லுவார் அதன் பேரில் அந்தப்பெண் ஆனுல் "இந்த செல்வப்பிள்ளை ராயர் எனக்கு புருஷன்; இவர்கூட நான் போவேன்; இதற்கு யாரும் விகாதம்

பண்ணத்தேவையில்லை; தெய்வதிட்டம் இப்படியென்று" பெண் சொல்லிப் பின்னும் தங்கள் தகப்பன் இதற்குச் சம்மதி ஆகாவிட்டால் தங்களுக்கு அபகீர்த்திக்கு ஆளாவேனென்று பெண்சொல்ல பாதுஷா இது என்ன காரணமோவென்று ஆசார்யரைத் திருக்கூட்டத்தோடே அழைப்பித்து சம்பந்தப்பேச்சுகள் பேசிக்கொண்டு செல்வப்பிள்ளை ராயருக்கு ரெத்தின கிரீடமும் ஆபரணமும் கொடுத்து, ஆசாரிய சாமிக்கு மரியாதைபண்ணி, பெண்ணையும் கூட்டிச் சிறிது தண்டும் கூட்டி, ஆசாரிகூடக் கர்னுடகத்திற்கு அனுப்பிவிட்டு இரான் தேசம் போய்ச்சேர்ந்தார்.

ஆசாரியார் தம்முடைய தண்டோடே துங்கபத்ரா ஆற்றுகிட்டே வருகிறபோது, அவ்விடத்திய பாளயக்காரர் லட்சம் சனம் வரைக்கும் சேர்ந்து கொண்டு ஆசாரிசாமிகள் ரெத்தினகிரீடம் கொண்டு வருகிறது தெரிந்து கொண்டு பிடுங்கிக்கொள்ள எத்தனம் பண்ணி ஆசாரியசாமி கள் தண்டை சுற்றிக்கொண்டார்கள் அன்னேரம் அந்த சீமை பறயர் என்கிறபேர் கூட்டம் கூடி பாளயக்காரர் மேலிடாமல் துரத்திவிட்டு சாமிகளை மேல்கோடிவந்து சேர்த்துவிட்டார்கள்.

ஆசாரியார் மேல்கோட்டைக்கு வந்து அவ்விடத்திய ராஜாவும் கூட செல்வப்பிள்ளை ராயருக்கு உச்சவங்கள் பண்ணிவைத்தார்கள். அந்த உச்சவகாலத்தில் உபகாரம் பண்ண பறையரும் கூடயிருக்கும் படி திட்டம் பண்ணினர்கள். அது நாளதுவரைக்கும் நடந்துகொண்டு வருகிறது. பாதுஷா பெண்ணிற்குப் **பீபிநாச்சியாரென்று** பேராயிற்று. அந்தநாச்சியார் அவ்விடத்திலிருந்து காலமடைந்த பிறகு கோவிலிலே நாச்சியார் விக்கிரகமென்று விஷ்ணு... தளசுத்தளத்திற்கும் திட்டம் பண்ணிக்கொண்டார்கள்.

அப்படி ராமானுசாச்சாரி அவ்விடத்திலிருந்து சீரெங்கம் அவருக்கு வாசமான படியினலே சிறிதுநாள் வந்து இந்தக் கர்னுடகத்திலும் வியாபித்துக் கொண்டிருந்தார். அப்படியிருக்க செனருளஉ பசலி சாலிவாகன சகாப்தம் சத நஙஉ கிருமிகொண்ட சோழராசாவான அந்த ராஜா, சோழமண்டலத்திற்கும் ஜெயம் கொண்டசோழமண்டலத்திற்கும் ராஜாவாய், கர்னுடக ராஜாக்களுடைப பகுதி வாங்கிக்கொண்டு மஹாராஜா பட்டம் ஆளுகிறபோது, அந்த ராஜா சிவசமயத்தில் பத்தியை அடைந்து கொண்டு வருகிறவனுக்கு அந்த சமயத்தார் வித்துவான்களாயிருக்கப் பட்டவாள் போதனையினலே தில்லை நகர் திருச்சித்திரகூடம் பூர்வம், திருமூர்த்திகள் முதல் தேவதைகள் கூத்

தாடின இடம் அந்த கூத்திற்கு நாயகன் மஹாவிஷ்ணு தேவதைகள் கூட சிவனும் தாண்டவமாடினர்.

அவருக்குத் தாண்டவரென்றும் பெயர் விஷ்ணுநாயகனுனபடி யினுலே விஷ்ணுசப்தன் திருப்பதி உண்டாயிற்று அந்த சாமிக்குக் **கோவிந்தராசன்** என்றும் பெயர். அப்படிக் கொத்தசாமியை அர்ச்சக அவதாரமாகயிருந்த சில விக்கிரகத்தைக் கிருமி கொண்ட சோழராஜா எடுத்துச் சித்திர கூடத்து வாயிற்படியில் வருகிறவர்கள் போகிறவர்கள் காலில் மெரிபடப்போட்டு வைத்தான். அந்த கோவிந்தராஜஸ்வாமிக்கு அடிமைப்பட்டவள் தில்லை என்கிற தாசி. அவளை இராஜா வைத்துக் கொண்டு இருந்தார். அவள் ராஜா ஆக்கினைக்குப் பயப்பட்டு இருந்தவள். சாமிக்கு அவமானம் ராஜா பண்ணினது மனம் பிடியாமல் சிவனுக்கு ஒட்டி ரகசியமாய் சாமியை எடுப்பித்து சமுத்திரத்தில் ஓடத்தில் ஏற்றித் திருப்பதியில் கொண்டு போய் கோயில் கட்டி ஸ்வாமியை வைத்துப் போட்டாள்.

அந்த கோவிந்தராஜசாமி அவ்விடத்திலே தானேயிருக்கிறர். அந்த ராஜா அந்த தாசியைச் சீவ அத்தி பண்ணுததற்கு முன்னமே தானே ஜீவனை விட்டார். அப்படிக் கொத்தராஜா "சிவன்பரம் தர்ம ஞஸ்தி" என்று பட்டத்தில் எழுதி மற்ற சமயத்தவர்களைக் கை யெழுத்துப் போடச்சொல்லிப் பலாத்காரம் பண்ணினன். அதன்பேரில் சமயத்தார்கள் ராஜாவினுடைய கொடுமைக்குப் பயப்பட்டுப் பட்டத்தில் கையெழுத்துப் போட்டார்கள். விஷ்ணு சமயத்தார் கை யெழுத்துப் போடாமல் அட்டி பண்ணிக்கொண்டு எங்கள் சாமியார் ராமானுசாச்சாரி. சீரெங்கத்திலிருக்கிறர். அவர் கை எழுத்துப் போட வேணுமென்று சொன்னர்கள். அதன் பேரில் ராஜா சேவகரை அனுப்பினர்கள். அந்தசேவகர் ஆசாரியார் கிட்டப்போனர்கள்.

ஆசாரியார் இவர்கள் வந்த சேதி தெரிந்து கொண்டு தாம் தப்பித்துக்கொண்டு அவர் முக்கிய சிஷ்யர் கூரத்தாழ்வாரைக்காட்டிப் போட்டு தாங்கள் ராத்திரிகாலத்திலே தானே சீரெங்கப்பட்டணத் திற்குப் போகவேணுமென்று தனியே போய்விட்டார். பிறகாலே சிஷ்யர்களும் வழியில் கூடிப்போனர்கள். ஆசாரியரும் சிஷ்யார்களும் வழியில் போகும் பொழுது உப்புக்குறவர் வழியில் இறங்கி இருந்தவர்கள் பெருமாள் தளிகை செய்துகொண்டு இருந்தார்கள். அந்த வேளையில் ஆசாரியாளைக்கண்டு வணக்கத்துடனே தளியை சாமான்கள் கொடுத்தார்கள். அதற்கு ஆசாரியார் நீங்கள் யாருடைய சிஷ்யர்கள் என்று கேட்டார்கள். உப்புக்குறவர் சொன்னது.

நாங்கள் நல்லான் சக்கரவர்த்தியுடைய சிஷ்யர்கள் என்று சொன்னார்கள். அதற்கு ஆசாரியாள் நல்லான் என்குற காளமேகம் இந்த நடுக் காட்டில் வருஷித்ததா என்று சொல்லிப்போட்டு சீரெங்கப்பட்டணம் போய்ச்சேர்ந்தார். கிருமிகண்ட சோழ ராஜா சேவகர் கூரத்தாழ்வாரை அழைத்துக்கொண்டு இராஜாமுன்னே விட்டார்கள். அப்போ இராஜா கூரத்தாழ்வாரை பட்டத்தில் கை எழுத்துப் போடச் சொன்னார். கூரத்தாழ்வார் "துரோணமஸ்து பரம் தத:" என்று கை எழுத்துப் போட்டார். "சிவமென்கிற குறுணி உண்டானால் பதக்கும் உண்டு" என்று கை எழுத்துப் போட்டாரென்று ராஜாமெத்தக்கோபம் பண்ணி கூரத்தாழ்வாரைக் கண்ணைப்பிடுங்கச் சொன்னார். அதற்குக் கூரத்தாழ்வார் இராஜாவைப் பார்த்து பாவியைப் பார்த்த கண்ணை வைக்குறதில்லை என்று தாமே விரலாலே தம்முடைய கண்ணைப்பிடுங்கிக் கொண்டார். ராஜா பயந்து விட்டு விட்டான்.

கூரத்தாழ்வார் ஆசாரியர்கிட்ட சீரெங்கப்பட்டணம் போய்ச் சேர்ந்தார். அப்படிக் கொஞ்ச நாளிருக்க சாலிவாகன சகாப்தம் சத௩௫௯ வருடம் பசலி சென ௩௱௪௯௲ ராமானுசாச்சாரியர் கெதியை அடைந்துபோனார். அப்படிக்கொத்த கிருமி கொண்ட சோழ ராஜா ராஜ்ஜியமாண்ட பிறகு பசலி சென ௩௱௭௦ வருடம் கரிகால சோழன் ராஜாவானான். அந்த ராஜா இந்த நடு மண்டல ஜெயம் கொண்ட சோழ தேசத்தில் அனேகயிடம் காடுகளாயிருந்ததை வெட்டி வைத்து கிராமங்கள் உண்டு பண்ணி, எல்லை ஏற்படுத்தி, கல்லுகள் நாட்டி வைத்து, மந்திர தாபித்ததினாலே கிராம தேவதைகளுண்டு பண்ணி, ஏரிகள் கட்டிவைத்து, கிராமங்களுக்கு எந்தவிதத்தினாலே ஏற்படுத்தினானோ அந்த விதமாய்ப் பேரிட்டுக் கிராமங்களிலே பெருமாள் கோயில்களும், சிவன் கோயில்களும் கட்டிவைத்து, நீதியாய் ராஜ்ஜியமாண்டு கொண்டிருந்தார்.

அந்தக் காலத்தில் திருக்கோவிலூரில் கொங்கர் கோனென்று ராஜா இருந்தார் அந்த ராஜா மஹாபாரதம் வேதவியாசர் கீர்வாணத்தில் சொல்லியிருக்கிறத்தைத் தமிழ்ப் படுத்தவேண்டு மென்று வித்துவான்களை விசாரணை செய்து கொண்டு இருந்தார். அந்த சமயத்தில் **வில்லிப்புத்தூரார்** என்கிற வித்வான் தமயன்பேரில் பங்கு பகினி நிமித்தம் வியாஜ்ஜியம்பட்டுக் கொங்கர் கோன்கிட்டவந்து ராஜாவை "நான் வித்துவான் எங்கள் தமயன் தம்பி வியாசியத்தைக் கேட்டுத் தீர்க்க வேணுமென்று" சொல்ல ராஜா வித்துவான்கள் வியாஜ்ஜியத்தைக் கேட்டு வில்லிபுத்தூரார் வியாஜியம் கெடுதலை என்று அறிந்து கொண்டு வித்வானைப் பார்த்து ராஜா சொன்னார்.

"பாரதம் வியாசர் சொன்னத்தை தமிழ் பாடவேணும், கவி ஒண்ணுக்கு அஞ்சு பொன் வீழ்க்காடு கொடுக்கிறேனென்று ராஜா சொல்ல வித்துவான் சம்மதப்பட்டு மஹாபாரதம் ஆயிரம் கவிபாடினார். வித்வான் ராஜா சபை முன்னே மஹாபாரதம் அரங்கேற்று படி செய்து கவிபடித்துக் கொண்டு வரும் போது அபிமன்னன் சண்டை பதி மூன்றும் போர் படிக்க அர்ஜுனன் தன் மதன் அபிமன்னனைக் கொன்ற சிந்து பதியாகிய சைந்தவனை நாளையதினத்தில் நான் கொல்லாமல் போவேனேயாகில், பூமியிலேயிருந்து வழக்கு ஓரம் சொன்னவாள் எந்த நரகத்தை அடைகுவார்களோ அந்தகதியை அடைவேனென்று சபதம் சொன்னபிடத்தில் படித்துக் கொண்டு வந்தார். அத்தை ராஜா உன்னிக்கேட்டு மறுகாலும் சொல்லவேணுமென்று ராஜா வித்வானைக் கேட்டார்.

அது வித்துவான் தெரிந்து கொண்டு ராஜாவைப் பார்த்து. "என் விரலினாலே என் கண்ணைக் குத்தினியா" என்று சொன்னார். மஹா பாரதம் படித்தான உடனே ராஜா வித்துவானுக்கு மந்திரிகள் போதனையினாலே கவிக்கு அஞ்சு பணம் கொடுக்கச் சொன்னார். அதன் பேரில் வித்துவர்ன் கோபித்துக் கொண்டு அபிமன்னன் சண்டை எடுத்து வட்டை முறுக்கினார் அதில் இரத்தம் துளித்துளியாய் விழுந்தது பின்னும் ராஜாவைப்பார்த்து உன் அரசு போகக்கடவா யென்று சபித்தார் அதனாலே, ராஜா பயப்பட்டு கவிக்கு அஞ்சு பொன் பேசின விழுக்காடு கொடுத்து விட்டார். அப்படிப்பட்ட காலத்தில் இந்த கர்னடக தேசத்தில் அனேகம் ராஜாக்கள். காஞ்சிபுரம் ராஜாக் கள் முதல் சில்லறை ராஜாக்களும் ஆண்டு கொண்டிருக்கும் போது செஞ்சிப் பட்டணம் கிலமா அனேக நாளாய் ஆரணியமாய் போயிருந்தது.

---

2. செஞ்சியின் வரலாறு

ஆனால், சேஷகிரிமலை அடிவாரத்தில் நரசிங்க சாமி கோயிலும், பத்து வீடு பிராமணாள் வீடும் அதற்கு எதிரே கிழக்கே நாற்பது வீடு ஆனந்தக்கோன்[11] கொல்லன் முதல் எடையர் வீடு இருந்தது. அதற்குக் கிழக்கே பஞ்ச ஈச்வரன் கோயிலும் தீர்த்தக்கொளக் கரையில் கோபால் பிள்ளையார் கோயிலும் இருக்கும் அதற்குத் தெற்கு எட்டியான தாங்கள் அதன் கரைக்குக்கிழே எட்டியம்மன் பிடாரி கோயில் இருக்கும். மயத்தப்பூர்வம் எழுபெண்கள் கன்னிகையாயிருக்க, அவர்கள் ஒரு வீட்டுப்பெண்களாயிருக்க, அவர்களுக்கு ராஜா விட்டுரத்தினால் விரத பங்கம் வரும் காலத்தில், இவர்களுக்கு ஒத்தாசை செய்த தடிக்கார வீரப்பனும், உயிர்ச்சேதம் பண்ணிக் கொள்ள இவர்கள் தெய்வமாயிருந்து சக்தி நடந்துகொண்டு வரும் இவர்கள் செஞ்சிக் கோட்டைக்கி தெய்வமென்று சொல்லப்படுவார்கள்.

இவர்களிலே பெரியவள் கமலம் என்கிற பெண். அவள் கமலகிரி என்கிற பெரியமலை மத்தியில் அவள் கோவில் இருக்கும். பாயன்கில்லா வில்வேலூர் தருவாசாவண்டை கருப்பன்ன கோவிலிருக்கும். கிருஷ்ண கிரி அடிவாரத்தில் மேலண்டை செல்லியும், தென்னண்டை பூவி கோவிலிருக்கும்.

சேஷகிரி அடிவாரத்தில கிழக்கே தேனியும், செஞ்சியம்மன் கோவிலிருக்கும். பொன்கத்தி எல்லையில் பெரியதுர்க்கத்திற்கு நேராக ரெண்டு நாழி வழியில் பச்சி அரியான் கோவிலிருக்கும். சிறுகடம்பை வனத்தை அழித்து கிராமம் பண்ண எல்லையில் கிருஷ்ணகிரி ஈசான்யம் வடக்குப் பார்த்த முத்தம்மை கோவிலிருக்கும்.

கிருஷ்ணகிரிக்கு வடக்கு ஒரு நாழி வழியில் நரசிங்க மலையிருக்கும். அவ்விடத்தில் சிங்கபுரம் நாடு கிராமமிருக்கும். அந்தக் கிராமத்து மலைமேல் பூர்வம் நந்திசோழ ராஜாவென்று காஞ்சிபுரத்தில்

---

11. *ஆனந்தக் கோன் முதலான செஞ்சிமன்னர்களின் காலத்தை* C. S. *ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் செஞ்சிச் சரித்திரத்தில்* (A History of Gingee and its Rulers) *தக்க முறையில் ஆராய்ந்து அறுதியிட்டிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய மேற்கோள் பலவுள் இந்த மக்கன்ஸி கையெழுத்துப் பிரதியும் ஒன்று. செஞ்சியை ஆண்ட 'கோன்' அரசர் வரலாறுகளுக்கு அவருடைய புத்தகம் 33 ஆம் பக்கத்து அடிக்குறிப்பைப் பார்க்க.*

ராஜரீகம் பண்ணிக் கொண்டுயிருந்தார். அந்த ராஜா வரதராஜஸ்வாமிக்குத் தொண்டு பட்டவர். அவர் பெருமாளுக்கு நந்தவனத்தோட்டம் வைப்பித்தார். அதில் தோட்டத்தார் ஆளுகள் பூஞ்செடிவைக்கும் பொழுது ராத்திரி காலத்தில் காட்டுப்பன்றிகள் வந்து உழுது போட்டுப் போக அதை ராஜா கேட்டு காவல்காரரை வைக்க காவல் காரர் என்ன சாக்கிரதையாயிருந்த போதிலும் பன்றிகளுபத்திரவம் தீராமலிருக்க நண......ய தெரிந்து கொண்டு பொழுது விடியக்காலில் குதிரைபேரிலேறிக்கொண்டு கையில் ஈட்டி எடுத்துக் கொண்டு நந்த வனத்தோட்டத்தில் வந்தார். அப்போ பன்றிகள் உழுது கொண்டு இருந்தது. ராஜா பன்றிகள் பேரில் குதிரையை விட்டார். அப்போ பன்றிகள் ஓடிப்போய்விட்டது.

ஒரு பெரிய பன்றி செடிகளை உழுதவாக்கிலே இருந்து ராஜா குதிரை சமீபத்திலே வந்தபோது, உழுத கொம்பிலே மண்ணோடே எலுமிச்சம் செடியும் நந்தியாவட்டம் செடியும் கொத்திக் கொண்டவாக்கிலே தெற்கு முகமாய் ஓட்டம் காட்டிற்று. அதன் பேரில் ராஜா குதிரையை விட்டான். மத்தியான காலத்தில் செஞ்சிக்கு மேலண்டை பாகத்து மலை இந்த தேசத்தில் ரொம்ப பெரியமலை. அதிலே ரிஷிகள் சித்தர்கள் வாசமென்று சொல்லப்படுவார்கள். அந்த மலை அடிவாரத்தில் பன்றி வந்தது. ராஜாவும் துரத்திக் கொண்டு வந்தவருக்கு ரொம்ப இளைப்புக் கொடுத்து நின்றார். அப்போ பன்றியும் நின்று பூமியைக் கொம்பாலே கிழித்தது.

நாராயணனுடைய கட்டளைப் படிக்கு தண்ணீர் ஊற்றுப் புறப்பட்டது. அது ராஜா பார்த்துக் குதிரையை விட்டு இறங்கிக் குதிரைக்கும் தண்ணீர் காட்டித் தானும் தாகத்திற்குச் சாப்பிட்டு இளைப்பாறினான். அப்போ பன்றி நாலடி வித்தியாசமாய் நின்று கொண்டிருந்தது. மறுகாலும் ராஜா பன்றி பேரில் குதிரை பேரில் ஏறிக்கொண்டு ஈட்டியாலே குத்தத்தலைப்பட்டார். பண்ணி[12] மாய்கை ஆனபடியினாலே ராஜாவிற்கு அகப்படாமல் கிழக்கு நோக்கி ஓட்டம் காட்டிற்று. ராஜாவும் பின்துடர்ந்து வந்தார். அந்த மாய்கையாய் வந்த பன்றி சிங்கபுரம் மலைமேலேறிற்று. ராஜா குதிரையை விட்டுக்கூட ஏறினார்.

அந்தப் பன்றி மலைமத்தையில்[13] கேவிற்குள்ளே[14] புகுந்தது, ராஜா பின்துடர்ந்து கேவிற்குள்ளே புகுந்தார். அப்போ அந்த

---

12. பண்ணி for பன்றி

13. மலை மத்தையில் for மலை மத்தியில்

14. கேவிற்குள் for கெவிக்குள்

மாயமாய் வந்த பன்றி கேவுமுனையில் கொம்பிலே தொத்திக் கொண் டிருந்த செடிகள் மண்ணோடே விழுந்து மரமாயிற்று. பன்றி கேவிற் குள்ளே விஷ்ணுரூபமாய் மனிதர் அவதாரமாய்ப் பள்ளி கொண்டார். ராஜா திஷ்டாந்தரமாய்ப் பார்த்து இப்படிப்பட்ட திருக்கோலம் காஞ்சி புரம் வரதராஜர் கொண்டாரென்று அனேக ஆனந்தத்தை அடைந்து பெருமாள் கைங்கரியம் திருப்பணிகள் பண்ணிவைத்தார். அந்த ராஜா பண்ணியும் பின்வரும்போது செஞ்சிக்கு வடக்கே காதவழியில் கமல வல்லிபர்வதம், கெங்கைபுரத்தண்டே பன்றியின், மகிமையைக் கண்டு இருக்க அவ்விடத்திலேயும் வரதராஜா கோவில் திருப்பணிகள் செய்து வைத்தார். பன்றி கொம்பாலே கீறின வழியே தண்ணீர் பெருகி வந்தது வராகநதி என்று பேராயிற்று.

அப்படிப்பட்ட சிங்கபுரம் ரெங்கநாயகர் ஸ்தலமும் இருக்கும். செஞ்சிக்கு எதிரே கிழக்கே ரெண்டுகாழி வழியில் வராகநதிக்கரையில் சக்கரப்பெருமாள் கோயிலிருக்கும். அந்தப் பெருமாள் காஞ்சிபுரத் தில் பிர்ம்மா யாகம் பண்ணும் போது அங்காதவழி நாலுதிக்கிலேயும் சக்கரஸ்தாபிதம் பண்ணினது; மேர்க்கே விரிஞ்சிபுரம். வடக்கே நாரணபுரம். கிழக்கே மகாபலிவாண தெற்கே சக்கராபுரம்; அப்படிக் கொத்தஸ்தலமுமிருக்கும். அப்படிக் கொத்தகாலத்தில் செஞ்சி ஆனந் தக் கோன் ஆடு மேய்க்கிறவனை படியினுலே தன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு கமலகிரி என்கிற பெரிய துர்க்கத்தின் பேரில் மேய்க்கப் போனன்.

அவ்விடத்தில் மலை உச்சியில் பெரிய கெவி இருந்தத்தில் சாலக் கொடி தழை படர்ந்து இருந்தது அந்த கெவிதாண்டி உச்சியில் போக வேணும். ஆனந்தக்கோன் ஆட்டிலே பத்து ஆடுவரைக்கும் சாலக் கொடி மேலே தொத்தி மேய்ந்து கொண்டு உச்சிமலை மேலே போய் விட்டது. அது ஆனந்தக் கோனுக்குத் தெரியாது. மற்ற ஆடுகளை ஓட்டிக் கொண்டு சாயங்காலம் உச்சியில் நின்றதைத் தேடிப்பார்த்து தன்னிடத்தில் வந்து விட்டான். அப்படியே சிறிது நாளைக்கும் பிறகு அஞ்சுவருடத்தில் மறுகாலம் பெரிய துர்க்கத்தின் பேரில் ஆடுகளை ஓட்டிக் கொண்டு மேய்க்கப்போனன். மலை உச்சியில் அம்பது ஆடு வரைக்கும் இருக்கக் கண்டான். முன்னே காணமல்ப் போன ஆடு தான் என்று கெவிமேல் சாலக் கொடி தழை படர்ந்து இருந்ததன் பேரில் தொத்திக்கொண்டு உச்சியில் போனன்.

அவ்விடத்தில் பத்து சுனைகள் பெரிய தாயிருக்கிறது. அந்த சுனைகிட்ட வங்கிலே ஒரு தபசி இருந்தார். அவர் தரிசனம் அந்தக்

கோனுக்கு ஆயி, அவர் ஆனந்தக்கோனைப் பார்த்து, "அப்பா கோனுரே, உனக்கு ராஜரீகம் வருவதற்கு பிராப்தியிருக்கிறது; உன்னுலே இந்த மலை கோட்டையாகும் படியாயும் பூமி பிரகாசிக்கத்தக்கதாகவும் இருக்கிறபடியினுலே என் தெரிசனம் கண்டாய். அதோ இதற்கு நேராய் ரெண்டு நாழி வழியில் ஆலமரம் இருக்கிறதே அதன் கிழே பூர்வம் ராஜாக்கள் ஆண்டவாள் இந்த மலைக் கோட்டை கட்டுவதற்கு திரவியம் புதைத்திருக்கிருர்கள். அத்தையும் எடுத்துக் கொள்ளு. இந்த வங்கிலே போய்ப்பாரு. அதிலே தங்கப்பதுமையிருக்கிறது அத்தையும் எடுத்துக் கொள்ளு" என்று ஆனந்தக் கோவிற்கு ஆசீர் வாதம் பண்ணி மாயமாய்ப் போனுர். ஆனந்தக்கோ மெத்த சந்தோஷத்தை அடைந்து அவ்விடத்திலிருந்த ஆடுகளை ஓட்டிக்கொண்டு மலை மத்தியில் மேய்ந்த ஆடுகளையும் கூட ஓட்டிக் கொண்டு தன் வீடுவந்து சேர்ந்து ஆட்டிற்கு ஆள் போட்டு, தபஸிகாட்டின ஆலமரம் தெரிந்து கொண்டு அவ்விடத்திலிருந்த நிக்ஷேபத்தை எடுத்துக் கொண்டான்.

அந்தப்பணம் பெற்ற இடம் பொன்பெற்ற கிராமம் ஆயிற்று. ஆனந்தக் கோன் வரப்பிரசாதி ஆனபடியினுலே உயர்ந்த புத்தியுண்டாய் இரகசியத்தில் மனிதர்களைச் சேர்த்து தன் இஷ்டர்களோடே கூட இந்த மண்டலத்தில் சிறிது கிராமம் கட்டினுர். அந்தச் சேதி தேவனூர் சதுர் வேதமங்கலம் இவ்விடத்திலிருந்த சில்லறை இராஜாக்கள் கேட்டு, தண்டு கூட்டிக் கொண்டு வர, அவர்களோடே சண்டை பண்ணி ஜெயம் கொண்டு ராஜாவாய் அதிக சிப்பந்திவைத்து, இந்தக் கர்னுடக தேசத்தில் சில்லறை ராஜாக்களைக் கைவசப் படுத்திக்கொண்டு சென கூள பசலி செஞ்சியின் சிம்மாசனபதி ஆனுன்.

இந்த நந்தகோவலன் ராஜா தொண்டை மண்டலம் இராஜாக்கள் இவர்கள் பேரிலும் தண்டு எடுத்து எதிர்த்தவாள் பேரில் சண்டை கொடுத்துச் செயம் கொண்டு, அவர்கள் கையிலேயும் வணக்கமாய் வந்தவாள் கையிலேயும் பகுதி வாங்கிக்கொண்டு, மேலும் பகுதி திட்டம் பண்ணிக் கொண்டு, ராஜ்ஜியம் ஆளறச்சே—செஞ்சி கமலகிரி என்பதை துர்க்கம் கட்டி, ஆனந்தகிரி என்று பெயர்வைத்து பூமிகோட்டை ஒரு சுற்று கட்டிக்கொண்டு, சிம்மாசன மண்டபம் கட்டி மேல்ச்சேரி அதுவும், செஞ்சிக்குள்ளே சேர்ந்தது.

அவ்விடத்தில் இருந்த மலை துர்க்கம் கட்டி அதற்கும் தன் துர்க்கம் என்று பெயர் வைத்து, கங்கபுரம்மலை கமலவல்லி பருவதமும் துர்க்கம் கட்டி, இந்த தேசத்தில் பெருமுக்கல் முதல் மலைகளையும் துர்க்கம் கட்டி, பட வீடு மலையைத் துர்க்கம் கட்டி, அதற்கு ராஜா

கம்பீர துர்க்கமென்று பெயர் வைத்து, படவீடுபட்டணம் விசாலமாய்க் கட்டிவைத்து, பெருமாள் கோவில், சிவன்கோவில், அம்மன் கோவிலும் கட்டி வைத்து அந்தப் பட்டணத்தில் வாசம் பண்ணப்பட்டவாளும், வீதி வீதிக்கு கோவில்கள் கட்டிவைத்து, அவ்விடத்தில் சிம்மாசன மண்டபமும் கட்டி, அவ்விடத்திலிருந்து ராஜ்ஜியபாரம் பண்ணினார்.

பனமலை ஏறிப் பெரியதாய்க்கட்டி, அதற்குத் திருவண்ணமலை கிட்டவார ஆறு துருஞ்சி ஆறு அவ்விடத்திலிருந்து வாய்க்கால் வெட்டி வைத்து, பாக்கத்து மலைக்குத் தெற்காக கொண்டுவந்து தண்ணீர் விட்டார். அந்தக் கால்வாய்க்கி நந்தன் கால்வாயென்று பெயர். அதனாலே நவாபு வாலாஜாபாத் இங்கரேசபாதர் அமிலிலேயும் ராஜா பீடுபர் பாதர் பசலி சன சதளஅ௬ பசலிலேயும் தண்ணீர் திருப்பினார்கள். கைலாசக்கடை கர்னாடகக் கேடையம் கட்டி வைத்தார். அந்த ராஜா தன் சொயசாதியருக்கு ‘சமாண’ எனறு பெயர் கொடுத்தார். அது செஞ்சி சீமை இடையருக்கு ‘சமான இடையரென்று பெயராச்சுது. அப்படிப் பட்ட ஆனந்தக்கோன் கோவலன் ராஜாவிற்கும், பிறகு கிருஷ்ணக் கோன் கோவலனுக்கு பசலி சன கூளடு௬ க்கு கொஞ்சம் ஏறக்குறைய ராஜபட்டம் ஆயிற்று. அந்த ராஜா சில்லறை ராஜாக்கள் எந்த இடத்திலிருக்கிறார்களோ அவ்விடத்தில் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு, செஞ்சியிலே சிம்மாசனபதியாயிருந்து, செஞ்சி கிருஷ்ணகிரி மலைமேல் கிருஷ்ணஸ்வாமி கோயில் கட்டிவைத்து, மலைக்குப் படிகள் கட்டி, அடிவாரத்தில் தீர்த்தக்குளம் கட்டி, கிருஷ்ணபுரம் அக்கிரகாரம் கட்டி, பெருமாள் கோவில் சிவன் கோயிலும் கட்டி, மலையைச் சுற்றி மண்டகப் படி கட்டிவைத்து, தேசங்களிலேயும் கோவில்கள் கட்டிக் கொண்டு, நீதியாய் ராஜ்யம் பண்ணிக் கொண்டிருக்க, பசலி சென கூளஅ௬ வருடம் கோனேரி கோனுக்கு ராஜபட்டமாயிற்று. அந்த ராஜாவும் ராஜரீகம் பண்ணிக் கொண்டு, தட்சிணகிரி மேலாக ராஜகோபாலஸ்வாமி கோவில் கட்டி வைத்துக் கொண்டு, ராஜரீகம் பண்ணிக் கொண்டு இருந்தார். பசலி சென எள வருடம் அவர் பிள்ளை கோவிந்தக் கோனுக்குப்பட்டமாய்க் கிருஷ்ணகிரி மேலே ராஜகோபாலஸ்வாமி கோயில் கட்டியிருந்த வாயிற்படியில் தகப்பன் பேரும் தன் பேரும் கல்லில் எழுதிவைத்தார்.

அப்பால் பசலி சென எளஉ௬ வருடம் புளியக்கோன் கோவலன் இராஜாவிற்குப் பட்டமாயிற்று. அந்த ராஜா இந்த தேசத்தைக் கைவசப் படுத்திக் கொண்டு, நீதியாய் ராஜரீகம் பண்ணிக் கொண்டு, திருச்சிராப் பள்ளி பாதை, விழுப்புரம் பாதை, வெட்டவரம் பாதை, இப்படிப்பட்ட பாதைகளிலே, சோளமண்டபம் கட்டி, சாலைகளும் வைத்தார். அந்த

ராஜா ராஜ்யம் ஆண்டு கொண்டு இருந்தார். அவரோடே ஆனந்த கோன் வம்சம் மஹாபுருஷன் சொன்னபடிக்கு நடந்து வந்தது. அப்படியிருக்க செஞ்சிக்கு மேல் புறம் வராகநதிக்கரையில் குடும்ப இடையர், வடுகர் மாடு, ஆடு வைத்துக் கொண்டு ஜீவனம் பண்ணிக்கொண்டிருக்கிற பொழுது, மஹாபுருஷன் அனுக்கிரகத்தினலே அந்த இடையர் வளவில் கோபிலிங்கன் பிறந்து, பாலியத்தில் சகல வித்தையும் கற்று, அதுஷ்டத்தினலே ராஜாக்கள் நிஷ்டூரங்கள் வந்த காலத்தில் தான் மனிதரைச் சேர்த்துக் கொண்டு தூறியடித்து ராஜாதானய், இந்த மண்டலத்தைக் கைவசப்படுத்திக் கொண்டு பசலி செனாளாசடு வருடம் கொஞ்சம் ஏறக்குறைய சிம்மசானதிபதியாகி, பாக்கத்து மலே மேல் துர்க்கம் கட்டி பட்டணமுண்டாக்கி, தாம் அவ்விடத்திலே விருந்து ராஜ்யபாரம் பண்ணிக் கொண்டிருக்கும் போது, அதிக சிப்பந்திகள் வைத்து, இந்தக் கர்னடக தேசம் மண்டலங்களிலிருக்கப்பட்ட ராஜாக்களண்டை பகுதி வாங்கிக் கொண்டு, தம்முடைய கைவசத்தில் தமக்கு இஷ்டர்களாயிருக்கப்பட்டவாளே அனுப்பி, அவர்களுக்கு ஜாகீர் விட்டு, தாம் இந்தத்தேசத்தில் சிறிது மலேகளே துர்க்கம் கட்டி, பூமி கோட்டை சேந்தமங்கலம் தாமே செங்கலளவு கொடுத்து, அந்தப் படி செய்வித்து, ஆரம்பம் பண்ணி செங்கல் கோட்டைகள் கட்டிவைத்தார்.

பெரிய ஏரிகள் இந்த தேசத்தில் இருக்கிறது. அவரே கட்டி வைத்தார்; சிறிது ஏரி முடியாமலும் போய் விட்டது. அவர் நாளேயில் அவர் ஜாகிதாரும் அசுப்பூர் பெலாகுப்பம், கொள்ளூர் வகையருவிலேயும் சங்கல் கோட்டை கட்டி வைத்தார். பெருமாள் கோவில், சிவன் கோயில்களும் மலேகள் பேரில் அனேக இடத்தில் சுனேகள் கட்டிவைத்தார். அந்தச் சுனேகளுக்குப் பெயர் '**கோபிலிங்கம் சுனே**' என்று நாளது வரைக்கும் இருக்கிறது.

மஹாஸ்தானங்களிலேயும் திருப்பணி செய்து வைத்துக் கொண்டு அனேக நீதியோடே ராஜ்ஜியபாரம் ஆண்டு கொண்டு இருந்தார். அப்பால், பசலி சென அள வருடம் நரசிங்கராய உடையார் ராஜாவானர். அந்த ராஜா ஆனேக்குந்தி விஜயநகரம், பென்ன கொண்டை[15] அவ்விடத்திய மஹாராஜா ராயசமஸ்தான கட்டாரி சாளுவ நரசிங்க தேவ மஹாராஜா இந்த ஜெயம் கொண்ட சோழ மண்டலம் கோபிலிங்க ராஜா பேரில் தண்டு அனுப்பி, தேசத்தை ஜெயம் கொண்டு கோபிலிங்க ராஜா வம்சத்தார் நரசிங்கதேவ உடையார் வசம் பண்ணியிருக்க, அவர் செஞ்சி

15. பென்ன கொண்டை perhaps for பெனுகொண்டா

தேசத்திற்கு ராஜாவாய் ராஜ்யம் பண்ணிக்கொண்டு, ராஜசமஸ்தானத்திற்குப் பகுதி கட்டிக்கொண்டு, ராஜ்யமாண்டு கொண்டிருக்கும் போது சிங்கபுரம் நாடு சிவல்பிறை சிவன் கோவிலுக்கு அந்த கிராமத்தில் பாதி சாலிவாகனசகாப்தம் ௲௪௱௩௰ விகுருதி வருடம் மாசி மாதம் தாரதத்தம் கொடுத்தார்.

அந்தக் காலத்தில்தானே வந்தவாசி சீமை மஹாராஜா வீரலோகன்ராயஉடையார் குமாரன் பூபதியை உடையராயிருப்பேரு சாதனபடிக்கு அவ்விடத்தில் ராஜ்ஜியமாண்டார். சாலிவாகன சகாப்தம் சதநாசக வருடம் விகாரிவருடம் தேவராயஉடையார் குமாரன், வீரவிஜயராயஉடையார் ராஜாவானுர்.

அவர் வந்தவாசி அந்த வட்டாரங்களுக்கு ராஜாவாயிருந்தார். இவர்களுக்குப் பிறகு பசலி சென அளஈடு வருடம் வல்லவாள் ராயனராசாவானுன். அந்த ராசா திருவண்ணுமலையில் சிவன் கோவில் மதில்கள் திருப்பணிகள் பண்ணிக் கொண்டு, ராயசமஸ்தானத்திற்கு பகுதி கட்டிக் கொண்டு, ராஜ்யமாண்டுகொண்டு இருந்தார். அந்த ராஜா விழுந்து போனதைப் பின்னும் கர்னுடக தேசத்திலிருந்த ராஜாக்கள் சில்லறை ஆனபடியினுலே, இவர்களுக்கு மாஹாராஜா ராஜசமஸ்தானமானபடியினுலே, அந்த மஹாராஜாவான கிருஷ்ணதேவராயர் கர்னுடக தேசம் பந்தோபஸ்து நிமித்தம் தம்மண்டையிருக்கிற கவரை சர்தார் கனவையப்பனுய்கர், துபாக்கிக் கிருஷ்ணப்பநாயக்கர்; விஜயராகவனுய்கர், தகரவேங்கிட்டப்பநாயிக்கர் இவர்கள் வசம் குதிரையும் கர்னுடக செனம் லட்சம் ஜெனம் தண்டு கூட்டி அனுப்பினுர். பசலி சென அளஎ0 வருடம் கொஞ்சம் ஏறக்குறைய வையப்பநாயக்கர் வகையரு மேல் கர்னுடகம் சீமையில் வந்து பிதநூர் சித்திரக்கல் துர்க்கம் சீரெங்கப்பட்டணம் வகையரு ராஜாக்களண்டை பகுதி வாங்கிக் கொண்டு, பாயங்காட்டு கீழ்கர்னுடக தேசம் ஆழூர்கணவாய் வழியாயிறங்கி வேலூர்கிட்ட வந்து இறங்கினுர்.

அவ்விடத்தில் சித்தூர் முதல் பாளயப்பட்டு ராஜாக்கள் பின்னும் தனிராஜாக்களிருந்தவாள், தொண்டை மண்டலத்து சீமையிலிருந்தவாள் வையப்பநாயக்கரை வந்து கண்டார்கள். அவாளவாளுக்குப் பகுதி திட்டம் பண்ணி, திருத்தணிவகையிரு பொம்முராஜா, காளாஸ்தி வகையரு ராஜாக்களுக்கு திட்டம் பண்ணிப் போட்டு அந்த சீமைக்குப் பௌவுசுதார் பெம்முரெட்டி வெங்கடரெட்டிக்கி, ராயராக்கினைப் படிக்கி திட்டம் பண்ணிப் போட்டு, தம்முடைய தண்டோடே, கூட வந்த சர்தார்கள் கூடச் செஞ்சி வந்து சேர்ந்தார்.

செஞ்சி முதல் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து இராஜாக்கள் வந்து வைய்யப்பநாயக்கரைக்கண்டு, பகுதி திட்டம் பண்ணிக்கொண்டு போனார்கள். வையப்பநாயக்கர் தாம் செஞ்சியிலேதானே தெண்டோ டேயிருந்தார். விஜயராகவநாயக்கர், வெங்கடப்பநாயக்கர் இவர்கள் கூடத்தண்டு கூட்டி சோழமண்டலம் பாண்டிமண்டலம், சேரமண்டலம் இதுகள் பந்தோபஸ்து பண்ணச் சொல்லி அனுப்பினார். அவர்கள் அவ்விடத்திலே தஞ்சாவூர், திருச்சிராபள்ளி, மதுரை, திருநகரி இவ்விடங்களிலே தண்டோடே போக அவ்விடங்களிலேயிருக்கிற ராஜாக் கள் மஹாராஜாராயராக்கினைப் படிக்கி வந்த சர்தார்களென்றும் சர்க்கார் தண்டு என்றும் பயபத்தியாய், அவ்விடத்தில் பொன்னயக்கன்மாரைக் கண்டு பகுதி கட்டி மேலும் திட்டம் பண்ணிக்கொண்டு போனார்கள்.

கீழ்க்கர்னாடகம் சல்லியங்களில்லாமல் இந்த அஞ்சுமண்டலதேச மும் வைய்யப்பநாயக்கர் ராயசமஸ்தானத்து சர்தார் கைவசமாயிற்று. மஹாராஜாராயருத்தரவுப்படிக்கி, இந்த கர்னாடக தேசம் மூன்று கோடி ரூபாய் எடுக்கப்பட்டதானபடியினாலே மூன்று பங்கு பண்ணினார். செஞ்சி சிம்மாசன இடமென்று அவ்விடத்தில் தானேயிருந்து துப்பாக்கி 16கிருஷ்ணப்பநாயக்கருக்கு இளவரசுப்பட்டம் கட்டி வைத்து, நெல் லூர் தேசம் முதல் தெற்கு கொள்ளிடம் வரைக்கும், கோடிரூபாய் சீமை திட்டம் பண்ணி, விசயராகவ நாயக்கருக்குத் தஞ்சாவூர் முதல் காவேரிப்பாய்ச்சல் சீமை கோடி ரூபாய்க்கு திட்டம் பண்ணி, தஞ்சா வூரில் சிம்மாசன இடம் திட்டம் பண்ணி வெங்கடப்பநாயக்கருக்கு திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநகரி சீமை கோடிரூபாய்க்குத்திட்டம் பண்ணி மதுரை சிம்மாசன இடம் திட்டம் பண்ணினார்கள்.

அந்த ரெண்டு நாயக்கராஜாக்களும் அந்த தேசத்திலிருக்கப்பட்ட ராஜாக்கள் இராமனாதபுரம், சேதுபதிமுதல் அவரவர்கள் அத்து லேயிருக்கப்பட்டவர்களுக்குக் காகிதங்களெழுதி அனுப்பி, சீமை பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு இருந்தார்கள். விசயராகவ நாயக்கர், தஞ்சாவூர் கும்பகோணம் சிம்மாசன இடம் பண்ணிக்

---

16. *விஜயநகர மகாராஜா ராயர் ஆணைப்படி வையப்பநாயக்கன் கர்நாடகம் வந்து செஞ்சியை வென்று துப்பாக்கி கிருஷ்ணப்பநாயக்கனுக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டினான். இந்தக் கிருஷ்ணப்பநாயக்கனே செஞ்சி யை ஆண்ட நாயக்க மன்னருள் முதன்மையானவன் எனக்கருதப்படுகிறன். C. S. ஸ்ரீநிவாஸாசாரியார்* A History of Gingee and its Rulers *பக்கம்* 81 *பார்க்க.*

கொண்டு, அவ்விடத்திய ராஜாக்களுக்கு மஹாராஜா தானமாயிருந்து ராஜ்யமாண்டு கொண்டு, ராஜ சமஸ்தானத்திற்குப் பகுதி கட்டிக்கொண்டிருந்தார். வெங்கடப்பநாயக்கர் மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநகரி இவ்விடத்தில் சிம்மாசன இடம் திட்டம் பண்ணிக் கொண்டு, அவ்விடத்திய ராஜாக்களுக்கு மஹாராஜா தானமாய் ராஜ்யம் பண்ணிக் கொண்டு, ராஜசமஸ்தானத்திற்க்கு பகுதி கட்டிக்கொண்டிருந்தார்.

இராஜா வைய்யப்பநாயக்கர் செஞ்சிக்கோட்டை துர்க்கங்கள் கட்ட வேண்டுமென்று கோலக்கொண்ட நகரம், விஜயாபுர நகரம் அந்த வட்டங்களிலேயிருந்து கல்தச்சர், காமாட்டிகள் [17] காரியஸ்தர்களை அழைப்பித்து, துர்க்கம் கோட்டை கட்ட ஆரம்பம் பண்ணினர். பூர்வம் கோவலராஜாக்கள் கட்டின துர்க்கம் பூமி கோட்டையையும் சேர்த்துக் கொண்டு கல்தச்ச போலாரி ஆசாரி, விரத்தகிரி ஆசாரி, ராளுசங்க மயன் சன்னுரு பாப்பைய்யன் இந்த நாலு சர்தார்களுக்கும் பல்லக்கும், மற்ற விருதுகளும் கொடுத்துப் பன்னீராயிரம் கல்தச்சு, ஆறுயிரம் இனதச்சு தச்சர் ஆறுயிரம், கருமார் ஆயிரம், காமாட்டி சர்தார்கள் மொஞ்சி கவுண்டன் வகையறுக்களுக்கும் மரியாதை பண்ணி, லட்சம் காமாட்டிகளை இவர்களை சேவகம் வைத்து, இதுகளுக்கு எசமானத்துவம் போலாசாரிக்கி திட்டம் பண்ணினர்கள்.

மஹாராஜா ராஜசமஸ்தானத்தின் பேரில் தௌலதாபாத் சுபேதார், விஜயப்பூர் சுபேதார், ஹைதராபாத் சுபேதார், இவர்கள் தங்கள் பாதுஷா பீதாம்பரம், மணியாபாதுஷா இனப்பமாகயிருக்க, அவ்விடத்திலும் ராஜகாரியம் பண்ணிக் கொண்டு வருவார்கள். கிருஷ்ணதேவராயர் பேரிலும் தண்டு எடுத்துக் கொண்டு வருவார்கள். அந்தக் காரியத்திற்காக மஹாராஜா ஆக்கினைப் படிக்கி வைய்யப்பநாயக்கர் சிறிது தண்டோடே செஞ்சி மஹாராஜாபட்டம் துப்பாக்கி கிருஷ்ணப்பநாயக்கர் வசம், பண்ணிப்போட்டு, விஜயநகரம் போய்ச்சேர்ந்தார், ராஜா துப்பாக்கி......நாம் நாயக்கர் செஞ்சிக்கோட்டை சோழமண்டலம் வகையறு சீமைக்கு மஹாராஜா பட்டம் பசலி கூள வருடம் கொஞ்சம் ஏறக்குறைய செஞ்சி சிம்மாசனபதியானர்.

அப்படிக் கொத்த துப்பாக்கி கிருஷ்ணமநாயக்கர் ராஜா செஞ்சிக் கோட்டை கட்டினவயணம் ஆனந்தகிரி பெரிய துர்க்கம். அதற்கு ராயகிரி என்று பெயர் வைத்து அதன் உச்சியில் ஒரு சுத்து அலங்கம்

---

17. காமாட்டிகள்—ஒருவகைத் தொழிலாளரைக் குறிக்கும் போலும். மண்ணைத் தோண்டுகிறவர்கள் என்றுமாம்.

கட்டி கேவிக்கி சாரமும் கட்டி அதன் பேரில் பெரியராயமால் கட்டி அருசிக்களஞ்சியமும், நெல்களஞ்சியமும் கட்டி, தினுசுகளஞ்சியமும் கட்டி, நெய்க்கிணறும் கட்டி, ராமசாமி கோவில் கட்டி, மருந்து கிடங்கும் கட்டி, உச்சிமலைமேலே நடு சுற்றும் கட்டி, அதற்கு வாசப்படி விட்டு சாரம் வாசலும் கட்டினார்கள். சுனைகள் பெரிய்தாய் பத்துயிருக்கும். தண்ணீர் மாருது. மூக்காமலை மேல் வாழைச்சுனைகட்டி அவ்விடத்தில் மேலும் கீழுமாய் ரெண்டு வாசல் விட்டார்கள். அதற்கும் கீழே செங்கல் கட்டு வாசல் கொல்ல ராஜா கட்டினத்தையும் சேர்த்துக் கொண்டார்கள்.

அவ்விடத்தில் ஒரு சுற்று மதிலும் கட்டினார்கள். மலைமத்தியிலே ராமசாமி கோயில். அதற்கு தீர்த்தக்கொளம் மண்டபங்களும் கட்டினார்கள். அவ்விடத்தில் கமலகன்னி கோவிலிருக்கும். அவ்விடத்தில் பரதானத்தில் மூன்று சுனை வெய்யல் காணுது. அவ்விடத்தில் காரையால் திண்ணை கொறடு கட்டினார்கள்.

அவைகளைச் சுற்றி ஒரு சுற்று அரங்கம் கட்டி ரெண்டு வாசல் விட்டார்கள். மலையடிவாரத்தில் ஒரு சுற்று மதில் கட்டி ரெண்டு வாயிற்படி கட்டினார்கள். அந்த ராயகிரியின் கீழே அடிவாரத்தில் நெல்லுக் களஞ்சியமும் லட்சத்து அம்பதினுயிரக்கலம் பிடிக்கும்படி கட்டி அதன் பிறகு வேணுகோபால ராஜா கோவிலும் கட்டினார்கள்.

அரிசிக்களஞ்சியமும் தினுசுவைப்பதற்குக் கட்டினார்கள். அவ்விடத்தில் ராஜா அரமனை செங்கல் மதிலாலே கட்டி வாசல்படி கட்டினார்கள். அவ்விடத்தில் கோஷாக்கள் பெண்டுகள் பாருயிருக்கிறது. அதற்குள்ளே ஜெலக்கிரிடை பண்ணுகிற குளம் சுற்றி மண்டபம் சிங்காரமாய்க் கட்டினார்கள். ராயமாய பதினோரு மெத்தை கட்டி அதன் கீழே ராஜசிம்மாசன மண்டபம். அதற்குள்ளே இருபது அடி சதுரம் சலவைக் கல். அதன் பேரில் பஞ்சுமெத்தை, அதன் பேரில் சரிகைப் பட்டாவளிகள். அதற்குத் தலைகாணி ரெண்டு பக்கம் ரெண்டு திண்டு, அதற்கு அதேபிரகாரம் இப்படி சிங்காரமாய் ராஜா கோலுமண்டபமும் கட்டினார்கள்.

ஏழு மெத்தை கலியாணமால் ராணி வாசம், அத்தைச் சுற்றி ஸ்ரீகள் வீடுகள் இப்படி கட்டினார்கள். நெல்லுக்களஞ்சியத்திற்கு தெற்குப் பக்கம் ராஜகோபாலஸ்வாமி கோயிலும் கட்டினார்கள். சண்டராயன் துர்க்கமும் கட்டினார்கள். கிருஷ்ணகிரி மலையை ரெண்டு சுற்று மதில் கட்டி, அதில் நெல்லுக்களஞ்சியம், சாமான் அருசிக்களஞ்சிய

மும், தண்ணிக்களுஞ்சியமும் கட்டினார்கள். பங்களாவும் கட்டி கிருஷ்ணஸ்வாமி ராஜகோபால்ஸ்வாமி கோயில் மண்டகப் படியும் கட்டினார்கள். அந்தத் துர்க்கத்தில் தண்ணி அருந்தலாயிருக்கும். கூத்தரிசி துர்க்கம், குரங்கு துர்க்கமும் கட்டினார்கள். அப்பால், பூமிக்கோட்டை செண்டராயன் துர்க்கத்திற்குக் கீழே கிழக்குத் தெற்குப் பக்கம் அலங்கம் கட்டி, கிழக்கே வெளியே கொண்டு போய் வடக்கு திருப்பி, கோபாலபிள்ளையார் ஓரம் கொண்டு, போய், அகரம் ஏரிக்கரை மேல் கொண்டு, கிருஷ்ணகிரியைச் சுற்றி, மேலண்டை கொண்டு போய், ராயகிரி துர்க்கத்தை மூட்டிக் கட்டினார்கள்.

அதற்கு வாசல் படி வேலூர், வந்தவாசி, திருவண்ணாமலை, திண்டிவனம், வழுதாவூர், பனமூலை இந்த பேர்னாலே தர்வாசா விட்டார்கள் இந்தக் கோட்டைக்கு 'அடையவளைந்தான்' என்று பெயர், கூத்தரிசி துர்க்கத்திற்கு நேராய்க் கிழக்கே ரெணமண்டல தர்வாசா அதில் பெரிய பீரங்கி தம தமா; அதிலும் ராயகிரி பேரில் ராமலட்சுமணன் என்கிற பீரங்கி; அதன் வாய்க்குள்ளே மனிதர் உட்காரலாம். அப்புறம் உள்ளாக ரண்டு சுற்று கோட்டை அப்படி இந்த மூன்று சுற்று மதிலுக்கும் அகழ் கட்டினார்கள்.

இந்த அகழ் வற்றுமலிருக்க வேணுமென்று வராகநதியில் அஞ்சு நாழி வழியில் கூடப்பட்டு கலிங்கல் கட்டி, தண்ணீர் திருப்பி, சிறு கடம்பூர் ஏரியில் விட்டு, அதன் கோடிக் குத்துகல் கிருஷ்ணகிரி அடிவாரத்திலிருக்கிறது. அது முதல் அகலிருக்கும். அந்த ராஜாவோடே சக்கிலி சர்தார் கூடயிருந்தான். அவன் சொந்தமாய்ச் சக்கிலி துர்க்கம் கட்டினான். அதன் பேரில் சின்ன ஏரிபோல் குளம் அதில் மதகுவைத்து, கழனி பண்ணிப்பயிரிடுகிறது. அந்த மலை பேரில் புஞ்சைப் பயிருமாகும். அப்படியிருக்க, சக்கிலி துர்க்கத்தின் கீழே பட்டாபிராமன் கோவில் கட்டி, ரெண்டு நாழி வழிக்குச் சதுரமாய் பெரிய பேட்டை கட்டி, அதற்கும் கிழக்கே ஜெயம் கொண்டான் பேட்டை இது ரெண்டும் இடங்கைப் பேட்டையாக் கட்டினார்கள்.

இதுவுமல்லாமல் ராஜக்கரணம் பேட்டை, சத்தளகரணம் பேட்டை கொல்லப்பாளயமும் கட்டினார்கள். ராயகிரிக்கு வடக்கே ரெண்டு நாழி வழியில் மதனக் கேடுதுர்க்கம் கட்டி இந்த ரெண்டு துர்க்கத்தின் நடுவே ராயகிரிக்கு வடக்குப் பக்கம் பெரிய பேட்டையும் சிங்கபுரம் பேட்டையும், வலங்கைப்பேட்டையும் கட்டினார்கள். இந்தப் பேட்டைகளிலே சகலவிதக் கோவில்களிலும் அவரவர் கட்டினார்கள். ராஜா

துப்பாக்கி கிருஷ்ணபநாயக்கர், வடுகர் இவர்கள் வம்சத்தாள் நூற்றெண்பது வருடம் ராஜரீகம் பண்ணினார்கள். இப்படி ஏழு துர்த்தார் கோட்டை கட்டியும் குறை நின்று போயிற்று. அப்படிப்பட்டது பாக்கி கிருஷ்ணப்பநாயக்கர் தம்முடைய ஆசாரியர் நல்லான் சக்கரவர்த்தி சத்திரயாகம் சேஷாத்திரி அய்யங்கார் அவர்களுக்கு இளங்காடு என்கிற காட்டைத்திருத்தி யாகம் பண்ணிவைத்து அவ்விடத்தில் அக்ரகாரம் உண்டு பண்ணி ஆசாரியருக்கு தத்தம் பண்ணினார்.

மாம்பட்டு சிங்கபுரம் சுரோத்திரியம் செஞ்சித்தாலூக்காவிலே திட்டம் பண்ணினார். அந்த ராஜா சிறு கடம்பூர், பெருமாள் கோவில் கட்டிவைத்து அந்த நாள் கல்பாறையில், விக்றம வருடம் பசலி செனகூளநடு எழுதிவைத்துப் பின்னும் விஷ்ணுகோவில் சிவன் கோவிலும் கட்டி வைத்துக் கொண்டு இருக்க ராஜாவிற்கு துரோபதையம்மன் பிரத்திக்ஷமாய் அவள் முடித்த பூவில் மயிரும் காட்டானள். ஆனத்தினலே, ராஜா தோபாலானே தர்மகர்த்தாவாய் வைத்து, செஞ்சிக்கு வடக்கு முகனையில் தர்ம்மராஜா துரோபதை கோவில் கட்டி, குளமும் வெட்டி, இந்தச் சீமையில் தம்முடைய ராஜரீகத்தில் இந்த அம்மனுக்கு மிராசு பண்ணிக்கொடுத்து, ஆதி கோவிலா உண்டு பண்ணி, இந்தக் கோவில் தர்ம்மகர்த்தாவிற்குக் கோவில்களில் மரியாதை முன்வரிசையாய் நடக்கத் திட்டம் பண்ணினார்.

இந்த அம்மனுக்குக் கொள்ளிடம் முதல் திருப்பதி வரைக்கும் மிராசு நடந்தது. அந்த தர்ம்மகர்த்தாக்கள் வம்சத்தாள் அப்பாசாமிப் பிள்ளை பெரிய பூசாரி, தினம் நாளது வரைக்கும் நடந்து கொண்டு வருகிறது. மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ராஜாக்களும், அவ்விடத்தில் மஹாத்தலங்களுக்கு ராயகோபுரம் மதில் கட்டிவைத்துக் கொண்டுயிருக்க, ராஜாவிற்கு துரோபதையம்மன் பிரத்தியக்ஷமாய், செஞ்சி ராஜா முதல் ராயசமஸ்தானத்திற்குப் பகுதி கட்டிக் கொண்டு ராஜ நிஷ்டுரமில்லாமல் ராஜரீகம் பண்ணிக்கொண்டு வருவார்கள்.

அப்படிப்பட்ட துப்பாக்கி கிருஷ்ணமநாயக்கர் செஞ்சி சீமைக்கு மஹாராஜா ராயர் உத்தரப்படிக்கு அட்டாரமுகிபாளயக்காரரும், மயத்த சீமைக்கு தனித்தனி பாளயக்காரரும், கிராமங்களுக்கு கணக்கு மிராசுகளும், சீர்க்கணக்கர் சரட்டுக்கணக்கருக்கும் உண்டு பண்ணிக் கொடுத்தார். அந்த ராஜா நீதியாய் ராஜ்யம் பண்ணிக்கொண்டு வரும் போது பசலி சன கூளநடு வருடம் **அச்சுத விஜய ராம்பத்திரனயக்கர்** ராஜாவிற்குப் பட்டமாயிற்று.

அந்த ராஜா நாளையில் சாலிவாகன சகாப்தம் சத சாசங வருடம் திருவண்ணாமலை ராயகோபுரம் நாலு பக்கம் மதிள் கட்ட ஆரம்பம் பண்ணினார். பசலி சன கூாடுய வருடம் சாலிவாகன சகாப்தம் சசசங திண்டிவனம் பெருமாள் கோவில் கட்டினார். அந்த ராஜாபின்னும் இந்த தேசத்தில் ராயகோபுரம் கட்டி நெடுங்கோணம் கோவில் கோபுரம் வகையறு சேத்துப்பட்டு வள்ளமால் பாறையில் எழுதிவைத்து, அவ்விடத்திலேயும் பெருமாள் கோபுரம் கட்டிவைத்தார். தேசத்தில் அக்ரகாரமும் பண்ணிவைத்தார்.

அப்படிப்பட்ட ராஜா ராஜ்யமாண்ட பிறகு பசலி சன கூாகூய வருடத்திற்கு மேல் **முத்தியால் நாயக்கருக்குப்** பட்டமாயிற்று. அந்த ராஜா செஞ்சியில் சண்டராயன் துர்க்கத்திற்கு மேல்புறம் மலை உன்னிதமாயிருந்ததை துர்க்கம் கட்டினார். அதற்குப் பெயர் முத்தியால் நாயக்கர் துர்க்கம் என்று பெயர். அந்த ராஜா செஞ்சிக் கோட்டைக்குள்ளே வெங்கட்டராய பெருமாள் கோவில் கட்டினார். வராகநதிக்குப் போகும் வழியில் மண்டகப்படியும், தெப்பக்குளமும் கட்டினார். வராக நதிக்கரையில் சக்கரப்பெருமாள் கோவிலும், கோபுரமும் கட்டி நதியில் மண்டகப்படிகளும் சிங்காரமாய்க் கட்டினார். அந்த ராஜாவிற்குப் பிறகு அவர் பிள்ளை **வெங்கடப்ப நாயக்கருக்குப்**பட்டமாயிற்று. பசலி சென கூாஅய வருடம் பட்டத்திலுட்கார்ந்து ராஜ்யம் பண்ணிக் கொண்டருக்கும் போது, சித்தாமூர் ஜெயினாள் கோவில் செஞ்சி சீமையில் சாவுக்கார் பூசெட்டிக்கட்டினான். இந்த ராஜா நாளையில் சிவாநாயக்கன் திருவண்ணாமலையில் ராஜாவாயிருந்தான். அவர் நாளையில் சாலிவாகன சகாப்தம் சசகூய வருடம் திருவண்ணாமலை ராயகோபுரம் கட்டி ஆயிற்று.

அந்த நாளையில் நாகப்பநாயக்கர் திண்டிவனம், கிடங்கல் கோட்டை கட்டி, சிவன் கோயிலும் கட்டினார். அப்படிப்பட்ட வெங்கடப்ப நாயக்கன் பெண்சாதி மங்கம்மா என்கிறவள் செஞ்சி சீமையில் பெரிய பாட்டையில் அம்மா குளம் என்று பெயர் வைத்துக் கட்டினாள். விருத்தாசெலம் அம்மா குளமும் அவள் கட்டினது விருத்தாசலம் ரெண்டாம் சுற்று மதிலும் கோபுரமும் சாலிவாகன சகாப்தம் சத சஙடுக வருடம் வீரலோகன உடையார் ராஜா கட்டினது பெரிய சுற்று மதிள் கோபுரம் நாயக்கர் நாளையில் ஆரம்பம் பண்ணி, இந்த ராஜா நாளையில் முடிந்தது. இந்த ராஜா, அந்த ஸ்தானத்து அம்மன் கோவில் மண்டபமும் கட்டினார். இதுவும் அல்லாமல், இவர் நாளையில் துரைத்தனத்திற்குச் சல்லியங்களில்லாமல் ராஜசமஸ்தானத்திற்குப் பகுதியும் கட்டி

க்கொண்டு மஹாராஜா ராயராக்கினைப்படிக்கு மதுரை, திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர், நாயகர் ராஜா பகுதியை அழைப்பித்துக் கொண்டு, வாசல் பாக்கிக் கணக்கு மாஹாராஜாவண்டை அனுப்பி வைத்துக்கொண்டு இருப்பார்.

இவர் கிட்ட துப்பாக்கி கிருஷ்ணப்பநாயக்கர் நாள் முதல் தொப் பல கிருஷ்ணப்பிள்ளை மந்திரி தினம் பண்ண வரங்காதானம் பண்ணின போது[18] முத்தியால் நாயக்கர் இராசா நாளையில் தம்முடைய பொக்கி ஷத்து ரொக்கமும் சிலவு பண்ணி மனதிற்குத் திருப்தியில்லாமல் ராஜா பொக்கிஷதானம் பண்ணினர். அந்த ராஜா நாளையில் ராஜாக்கள் ராணி வாசத்தில் வாசமாயிருக்கும்போது மனதிற்குச் சரிப்போனபோது ரெண்டுமாதத்தில், மூன்றுமாதத்தில் பண்டிகையின் போது ராஜா கச் சேரி சிம்மாசனத்தில் வந்து உட்காருவார்.

அந்த வேளையில் மந்திரி சகலமும் பாடம் ஒப்பிக்குறது. ரா........ சமானமான சேவகத் தன்மையுடைத்தான ராஜாக்கள் பந்து செனங் களுடைய பேட்டியாகுறது. அந்த வேளை சகலமானபேரும் விண்ண ப்பங்களிருந்தால் மனுப்பண்ணிக்கொள்ளுறது. ஆனாலும், மந்திரியை மீறி ஒரு காரியமும் யாரும் செய்யக்கூடாது. மந்திரிகள் மஹாராஜாக் களுக்குப் பகுதி கட்டவேண்டியிருந்தாலும், வெத்தர்சரிடத்தில்[19] திரை வாங்குறதாயிருந்தாலும், மாற்றரசரிடத்தில கோபம் பண்ணுகிறதா யிந்தாலும், ராஜாக்கள் தண்டு சிலவாகிலும் மஹாகார்காரு சிலவாகி லும், ராஜாக்கள் மனவர்த்தனை செலவாகிலும், தங்கள் சொந்த அதி காரத்தின் பேரில் செய்கிறது. ஆனத்தினாலே, மந்திரிகோபாலகிரு ஷ்ணப்பிள்ளை சகல பணம் ஆபரணங்களும் தானம் பண்ணினபடியினா லே, ராஜா அறிந்துகொண்டு மந்திரிபேரில் கோபம் பண்ணி, விலங்கு போட்டு, பெரிய தூர்க்கத்தின் பேரில் போட்டார்.

மந்திரி உத்தியோகம் தங்கள் இனத்தில் திட்டம் பண்ணினர். கோபாலகிருஷ்ணப்பிள்ளை பேரில் ராஜா அதிக தயவாயிருந்தபடியினா லே பத்து லட்சம் பொன் கொடுத்தால் காவல்விட்டு மந்திரி உத்தியோ கம் கொடுக்கிறோமென்று சொல்லியனுப்பினர். அந்த வேளை மந்திரிக் குப் பிள்ளை பிறந்து ஒரு வருடமாயிற்று. அந்தப் பிள்ளைப் பார்க்க வேணுமென்கிற அபிலாஷையைத்தொட்டு ராஜாவிற்குச் சொல்லியனுப்

18. தினம் பண்ண, வரங்காதானம் பண்ணின போது—விளங்க வில்லை.

19. வெத்தர் சரிடத்தில் – வேற்றரசரிடத்தில்

பினது "நான் சுவாமிகாரியத்தில் துரோகம் பண்ணினவன் அல்ல. தங்கள் அடுமை ராஜரீகத்தினுடைய சிரசைக் கோரி[20] மஹாதானம் பண்ணிப்போட்டேன். ஆனால் என்னை விட்டால் லட்சம் பொன் கொடுக்கிறேனென்று" சொன்னார்.

ராஜாசம்மதியில்லாமல் ரெண்டுவருடம் போட்டு வைத்து, அப்போது சொல்லியனுப்பினார். அதற்கு ரெண்டு லட்சம் பொன் கொடுக்கிறேனென்று சொல்லியனுப்பினார். அப்படி அஞ்சு வருடத்திற்குப்பிற்பாடு சொல்லியனுப்பினதற்கு மந்திரி சொல்லியனுப்பினது. "என் பிள்ளையைப் பார்க்க ஆசையைத்தொட்டு சொல்லியனுப்பி வைத்துக் கொண்டு வந்தேனேயல்லாமல் என் வசத்தில் ஒரு பணமாகிலும் இல்லை மேல் பிள்ளையைப்பார்க்க வேண்டியதுமில்லையென்று சொல்லியனுப்பினார்." அதன் பேரில் ராஜா கோபம் பண்ணி கடினமான விலங்குபோட்டார். அப்போ மந்திரி மனம்நொந்து வெங்கடேசப் பெருமாள் பேரில் **என் பிரான்** சதகம் பாடினார். காலில் விலங்கு அற்றுப்போயிற்று அந்த ராஜாவிற்கு அறிக்கையாய் கோபாலகிருஷ்ணப் பிள்ளையை அழைப்பித்து க்ஷவரம் பண்ணிவைத்து, சிங்காரம் பண்ணி, யானைபேரில் ஊர்வலம் வந்து மோகர் மோதிரத்தைக் கொடுத்து, மந்திரி உத்தியோகத்தில் வைத்துப் போட்டார்.

அந்த **என் பிரான்** சதகம் இந்த கர்நாடக தேசத்தில் பரவி நாளது......ரைக்கும் பிள்ளைகள் படித்துக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட மந்திரியினுடைய பின......தா கோபால் பிள்ளை மந்திரி கூட ராஜா **வெங்கிடப்ப நாயக்கர்** ராஜரீகம் பண்ணிக்கொண்டு வந்தார். பசலி சென சதம வருடம் **வருதப்ப நாயக்கர்** ராஜாவானார். அந்த ராஜா தங்கள் தலைமுறையாய் வந்த நல்லான் சக்கரவர்த்தி ராஜாவிற்கு முன்னோர் ராஜாக்கள் நாள் ஒப்பந்தம் சிங்கபுரம் ரங்க நாயகர் கோட்டை, வெங்கடராயப்பெருமாள் பட்டாபிராம பெருமாள் இந்த ஸ்தலத்திற்கு தீர்த்தயோக்கியங்களாயிருந்த படிக்கு பின்னும் அதிகமாய் நடப்பித்து ஸ்ரீரெங்க நாயக்கருக்கு அன்னமங்கலமும், வெங்கடராயப் பெருமாளுக்கு காப்பை பட்டாபிராமப் பெருமாளுக்கு அங்கராய நெல்லூர் இந்த சீமை கிராமங்கள் தானம் பண்ணிக் கொடுத்தார்.

---

20. ராஜரீகத்தினுடைய சிரசைக் கோரி for........சிரேயஸைக் கோரி.

4. முஸ்லிம்களின் வருகை

பின்னும் சிறுகடம்பூர் முதல் கிராமங்கள் அக்கிரகாரம் பண்ணிஞர். அவர் நாளையில் மந்திரி நந்தகோபால் பிள்ளை சகலகாரியமும் பார்த்துக்கொண்டுயிருந்தார். அப்பால் பசலி சென சதகூ௰ வருடம் ராஜா வரதப்பநாயக்கருக்குப் பிள்ளையில்லாமல் அவர் மருமகன் **அப்பா நாயக்கருக்குப்**பட்டமாயிற்று. அந்த ராஜா ஸ்திரீலோலனுய் அனேக ஸ்திரீகள் கூட ஜலக்கிரீடைகள் முதல் பண்ணிக்கொண்டு, ராணிவாசத்தில் தானேயிருந்து, மந்திரி சகலகாரியமும் பார்க்கத்தக்கினதாயிருக்க, ராஜரீகம் பண்ணிக்கொண்டு, பசலி சென சத ௩௰௬ வருடம் செஞ்சியில் சிம்மாசன பதியாயிருக்கத் தக்கின சீமை பீஜப்பூர் பாதுஷா சிகந்தர்ஷா ஹைதராபாத் பாதுஷா தாஞுஷா இவர்கள் முன்ஞலே பசலி சென சத வருடம் கொஞ்சம் ஏறக்குறைய இருக்க, மஹாராஜா சமஸ்தானம் கிருஷ்ணதேவராயரை கும்முராஜா மித்திரபேதத்திஞலே கெடுதல் பண்ணி, கைக்கொண்டு இவர்கள் முன்ஞேர்கள் நாள் முதல் இருக்க, அந்தப் பொம்முராஜாவிற்குக் கர்ஞுடகத்தில் சேதுபட்டுக் கில்லா, செங்கல்பட்டுக் கில்லாவும்; மஹாராஜா ராயர் நடப்பித்து தம்மிடம் நம்பிக்கையாய் வைத்திருக்க, அவர் கரத்ததுரோகம் பண்ணினவரையும் இந்தப் பாதுஷாக்கள் மித்திர பேதகத்துஞலே அடித்துப்போட்டிருக்க கர்ஞுடகத்தில் மஹா ராஜா சேவகர் நாயக்கர்மார் செஞ்சி தஞ்சாவூர், மதுரை, திருச்சிராப்பள்ளியில், பலவந்தவாள் ராஜாரீகம் பண்ணிக்கொண்டு சாந்தமாய்த் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருக்க, இப்படிப்பட்ட கர்ஞுடக ராஜாக்களை ஜெயம் பண்ண வேணுமென்று இந்த பாதுஷாக்கள் நவாபு மீரசுமருத்திகான்...... நகான் கவாசகான் கயர்ச்சிகான் கோரி அயத்துகான், கோரிய சத்து முஷத்தபாகான், கோரிமாமூர் கான் குருடா, சயத்த நாசரல்லிகான், சய்யத் அஸனுகான், சயத்...........ஷணுகான், சிகந்தர் கான்லூதி, ஷேர்கான்லூதி, இப்பாராயம்ஹான்லூதி இவர்கள் கூட அம்பதாயிரம் குதிரை முதல் தண்டு பீஜாப்பூர் பாதுஷாவினுடையது அப்துல்லா கான் பரிதபெக்கு பாவாசாயபு...யஞு அம்பதாயிரம் குதிரை முதல் தண்டு ஹைடாராபாத் பாதுஷாவிற்கு இவர்கள் லட்சம் சென தண்டு கூட்டிக் கொண்டு, கர்ஞுடக சீமையில் வடக்கே நெல்லூர் கிராமபள்ளி முதல் பத்திபண்ணிக்கொண்டு, காஞ்சிபுரம், வேலூர் அவ்விடங்களிலே இறங்கிக்கொண்டு, நாயக்கன்மார் ராஜாக்கள் வேலூர் ஆரணிவகையருக்களிலிருந்தவர்கள் பேரில் சண்டை கொடுத்து ஜெயம் கொண்டு, சீமையைச் செப்திபண்ணிக் கொண்டார்கள். அவ்விடங்களிலே ஹைடாரா

பாத் பாதுஷா தண்டு ஜெனங்கள் செயம் கொண்டார்களானபடியினு லேயும், இருவர் பாதுஷாக்கள் பேச்சு தாராபடிக்கும் சேத்துப்பட் டிற்கு வடக்குப்பட்ட ஹைதராபாத் பாதுஷாவிற்கு சேர்த்துக் கொண்டார்கள்.

அந்தச் சீமைக்கு அப்துல்லாகான் பௌவுசுதார் வேலூரில் இருந்தார் காஞ்சீபுரத்திலும் பௌவுசுதாராயிருந்தார். பெரியது பெக்குபாவா சாயபுவிற்கு சேத்துப்பட்டு செங்கல்ப்பட்டுக்கில்லே தாரி யும், மற்ற கில்லாக்களுக்கும் கில்லேதாரிகளுமாய் சீமைக்கு அம்லஹை தராபாத்ஷா வண்டை அக்கன நாமாதவணாதிவான்கிரியிருந்தவர் கள் வசமாய் போதலிலிங்கண்ணு காஞ்சீபுரத்திலே அமல் தாராயிரு ந்தார்.

அவ்விடத்தில் இந்தப்படிக்கு திட்டமாயிற்று. பீஜப்பூர், தண்டு பாதுஷா நீரகமருத்திகான் நவாபுவகையிரு செஞ்சி பேரில் வந்து இறங்கினுர்கள். செஞ்சி ராஜா அப்பாநாயக்கர் மஹாராஜாசமாமன தைரியத்தோடே தானேயிருந்து கொண்டு பிரதானிகளுக்கு எதிரி வந்து இருக்கிறுர்களே, அதற்கு எப்படி பந்தோபஸ்து பண்ணி ஓட்டி விட வேணுமோ அந்தப்படிக்குப் பார்க்கச் சொல்லித் திட்டம் பண்ணி தாம் ராணிவாசத்திலேயிருப்பார். பிரதானிகர் சகல ராஜகுமாராக் கள், ராஜசேவகர்கள் சேவகத்தன்மையுடையவருக்குக் கோட்டை அலங் கத்தின் பேரிலேயும், வாயிற்படிகள் பேரிலேயும், தூர்க்கங்கள் பேரிலே யும் இருக்கச்சொல்லித்திட்டம் பண்ணி, பெரியபீரங்கிகள், சின்ன பீரங் கிகளண்டை அதற்குத் தக்கின பீரங்கிக்காரர் சர்தார்களேயும் வைத்து பிரதானிகர் ராத்திரி பகலும் எச்சரிக்கையாயிருப்பார்கள்.

அப்படியிருக்க கமருத்திகான் வகையரு செஞ்சிக்குக் கிழக்கே ரெண்டு நாழிவழியில், களவாய் மோட்டிலிறங்கி, தம்முடைய தண்டை கோட்டையைச் சுற்றி வைத்து, நாலு மாதம் சண்டை பண்ணிக் கொண்டிருக்க கோட்டையிலிருக்கிற ராஜா ஜெனங்களும், தண்டு பேரில் வந்து சண்டை பண்ணிக்கொண்டு வருவார்கள். அப்படி இருக்கப் பாதுஷா தண்டு அதிகமானபடியினுலேயும், ராஜாக்களுக்குக் காலம் கிட்டியபடியினுலேயும், பாதுஷா தண்டு தரோபஸ்து கோட்டை அகழ் கரை வந்து திண்டிவனம் தருவாசா பேரில் தருவாசாவண்டையிறங்கி ஞர்கள்.

அந்தக் காலத்தில் துற்கத்தின் பேரிலிருக்கிற பீரங்கிகளும், அலங்கத்தின் பேரிலும் பெரிய தமதம புருசுகள் பேரிலிருக்கிற பீரங்கி

களும், ஏககாலத்தில் சுட்டார்கள். பிரதானிகர் மெதமிஞ்சிப் போகுது என்று ராஜாவிற்கு அறிக்கைப் பண்ண ஊழியக்காரரோடே சொல்லி அனுப்பிவைத்தார். அன்னேரம் ஊழியக்காரர் ராஜா நாம தீர்த்தம் செய்குறூர். சமயமல்லவென்று சொன்னூர்கள். அதற்குப் பிரதானிகர் கடினமாய்ச் சொல்ல ராஜாவிற்கு அறிக்கையாய் வெளியே வந்து பட்டாக்கத்தியை எடுத்துக் கொண்டு வந்தார். ராஜாகூட ராஜகுமாரர்கள், ராஜசேவகர்கள் மந்திரி பிரதானிகர், அவரவர்கள் சேர்ந்து மனிதர் பதினூயிரம் சனம் வரைக்கும் கூட உயுத்த ஸன்னுகமாய் ராஜா கூட வந்தார்கள். அந்த வேளை இராஜா முதல் சேவகத்தன்மையையுடைய வரதங்கள் பெண்டுகளை மானத்தைக் காப்பாற்றிக்கச் சொல்லி திட்டம் பண்ணிப் போட்டு, ராஜா கூட திண்டிவனம் தருவாசா வந்து எதிரி நெருங்கியிருக்கிறபோது வாயிற்கதவைத் திறந்து வெளியே வந்து எதிரி தண்டு செனத்தின் பேரில் விழுந்து கத்தி, கட்டாரி, வலயம் சண்டை பண்ணினூர்கள்.

இப்படி இந்த வாயிற்படி முதல் வராக நந்திவரைக்கும் நவாபு நீரகமருத்திகான் வகையரு தண்டு ஜெனங்களும், செஞ்சி மஹாராஜா அப்பா நாயக்கர் ஜெனங்களும் கலந்து போய் சாம்பரியந்திரம் சண்டை பண்ணினூர்கள். அந்த சண்டை தர்ம்ம சண்டையாய் பாரத சண்டையென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட சமயத்தில் நவாபு மருத்திகான் ஜெனமேரிச்சு ஏறி கோட்டை அலங்கத்தின் பேரில் ஏறி ஜெய பேரி அடித்தார்கள்.

அந்தச் சண்டையில் ராஜா அப்பா நாயக்கர் பிரதானிகர் நந்த கோபாலப்பிள்ளை ராஜகுமாராக்கள் ராஜசேவகர்கள், ஜெனங்கள் இருபதாயிரம் மடிந்து போனூர்கள், நவாபு நீரகமருதிகான் தண்டு ஜெனத்திலே சய்யத் முஸ்தர்பாகான் கோரி, சைய்யத் அஸ்ஸன்கான், சைய்யத் உஸேன்கான், அயாத்கான், கோரிவகையரு ஜெனங்கள் முப்பதாயிரம் ஜெனம் மடிந்தார்கள். அந்த வாசல் முதல் வராகநந்தி வரைக்கும் ரெத்தக்கால்வாய் ஆய் ஓடத்தலைப்பட்டது. ராஜா வீடு முதல் பெண்டுகள் அன்னூறு வரைக்கும் அக்கினிப்பிரவேசமானூர்கள். நவாபு மீரக மருத்திகான் பசலி சன சதசம வருடம் செஞ்சிக் கோட்டை செயம் பண்ணிக் கொண்டு கோட்டையை பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார். ராஜாவினுடைய கஜானு மந்திரியினுடைய கஜானு வகையரு சகலமும் நவாபு கைக்கொண்டார்.

---

21. நாமதீர்த்தம் செய்தறூர் = முடிசூட்டுதல்.

செஞ்சி ராஜாவினுடைய சேவகத் தன்மையும், பிரதானிகர் நந்த கோபால் பிள்ளை இடையன், அவனுடைய ஸ்வாமி காரியத்துரந்தரமும் சேவகத்தன்மையும், பந்தோபஸ்தும், சண்டையினுடைய நகஷாவும், கஜானு வகையறுவும், வயணமாய் பீஜாப்பூர் பாதுஷாவிற்கு எழுதி அனுப்பினுர். பாதுஷா பார்த்து ஆச்சரியப்பட்டு, இந்த நகஷாவை டில்லி தகன்ஷாவிற்கு அனுப்பினுர். எந்த வாயிற்படியில் சண்டையாய் ஒரு நாழி வழிவரைக்கும் பொன்காடு மரத்தச் சேறு மாயிற்ருே அந்த தருவாசாவிற்கு ரிணமண்டல தருவாசா என்று பெயர் வைத்தார். செஞ்சிக்கிப் **'பாதுஷா பாத்'** வென்று பெயரும் வைத்தார்கள். ராஜாவினுடைய சோய செனத்தில் ஆணிலே யாகட்டும் பெண்ணிலே யாகட்டும் ஒருத்தராகிலும் தப்பினவர் இல்லை.

பிரதானிகர் மனிதரிலே டில்லியிலேயிருந்தவாள் தப்பினுர்கள். நவாபு மீரகமருத்திகான், தெற்கு கொள்ளிடம் வரைக்கும் சபத்தி பண்ணிக் கொண்டு, வாலிகொண்டை, பாளயம்கோட்டை, வழுதாவூர் திருவண்ணுமலை, இந்த இடங்களிலே பௌவுசுதார்களை அனுப்பினுர். ஹைதராபாத் பாதுஷா மனிதர் சபர்த்திபண்ணிக்கொண்ட இடத்திலும், பௌவு சுதார்கள் இருந்த இடமும் சருக்கராச்சுது. இப்படி ஹைடராபாத் பாதுஷாவோடே சேர்ந்த சர்க்கார் வந்தவாசி, காஞ்சீபுரம், செங்கல்பட்டு, திருப்பாசூர், சத்திவேடு, சந்திரகிரி, சர்வாப்பள்ளி வேலூர், சாத்துக்கடை, செக்கு தேவகடை, பீஜாப்பூர் பாதுஷாவோடே சனத்து சர்க்கார் செஞ்சி பாதுஷா பாத திருவண்ணுமலை, வழுதாவூர், பாளயம்கோட்டை, வாலி கொண்டை இப்படிச் சர்க்கார்களும் இதில் எண்பத்து நாலுகில்லா சாத்து வென்று பாயங்காட்டு கர்னுடகத்தில் ரெண்டு பாதுஷாக்களுக்கும் அதிகாரம் நடந்தது.

நவாபு மீரகமருத்திகான் தீவானகிரிக்கிக் கர்னுடக பேது அறிந்து கொள்ள வேணுமென்றும், வாடிக்கையுள்ளவாளென்றும். மூன ராஜாக்கள் நாளைய பிரதானிகர் வழியாய்த்தானே அனந்த நாராயணப் பிள்ளைக்கு திட்டம் பண்ணினுர். அப்பால் தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி, மதுரை ராஜாக்களை செயம் பண்ண வேணுமென்று ஷேர்கான் லூதி, சிக்கந்தர்கான்லூதி, இப்பராயன் கான் லூதி இவர்கள் கூட நாற்பதாயிரம் ஜெனம் குதிரை முதல் கொண்டு கூட்டியனுப்பினுர். அவர்கள் தஞ்சாவூர் பேரிலேயும், திருச்சிராப்பள்ளி பேரிலேயும், மதுரை பேரிலேயும் போய் சண்டை பண்ணினுர்கள். தஞ்சாவூர் ராஜா

விஜயராகவநாயக்கர்[22] வக்கில் முகணையில் சமாதானம் பண்ணிக் கொண்டு பணம் கொடுத்து மேலும் பகுதி பண்ணிக் கொண்டார்.

திருச்சிராப்பள்ளி ராஜா விசயரங்கப்ப நாயக்கரும் சமாதானத்திலிருக்க இவர்களுக்கு எஜமான ஸ்தானம் மதுரையில் திருமலை நாயக்கர்[23] ராஜாவாயிருக்கிற படியினலே அந்த ராஜா சமாதானம் பண்ணுமல் தாம் கோட்டையைப் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு, அவ்விடத்திய ராஜாக்கள் ராமனுதபுரம், சிவகங்கை, மற்ற ராஜாக்கள் குமக்கும், பாளயக்காரர் குமக்கும் அழைப்பித்துக் கொண்டு மேல் தன்னரசு நாடு, கீழ் நாடு, மேல் நாடு, வெள்ளூர் நாடு, நாலுகோட்டை நாடு கள்ளருக்குத் திட்டம் பண்ணினர். அந்தக் கள்ளர் மதுரை அரசிற்குக் காவக்காரர் என்று பெயர். அவர்கள் அம்பதாயிரம் சேர்ந்து ராத்திரி காலத்தில் துலுக்கர் தண்டிற்குள்ளே புகுந்து கூடாரங்களை அறிந்தும், குதிரைகளைப் பிடித்துக் கொண்டு தண்டிலே அகப்பட்டதையும் எடுத்துக் கொண்டு போகத்தலைப்பட்டார்கள்.

அப்படியிருக்க மதுரை ராஜாவும் தம்முடைய சேனை கூட வெளியே வந்து குமக்கு ராஜாக்களும் கள்ளர் ஒரு பக்கமும், துலுக்கர் பேரில் விழுந்து சண்டை கொடுக்க, துலுக்கரும் எதிர்த்துச் சண்டை கொடுக்க, துலுக்கர் தண்டு பின்வாங்க, கள்ளர் துலுக்கர் தண்டைக் கொள்ளையிட்டார்கள். அதிலே கொஞ்சம் தப்பினவாள் துலுக்கர் ஓடி, செஞ்சி வந்து சேர்ந்தார்கள். ஷேர்க்கான் லூதி, சிகந்தர்கான் லூதி வகையரு சர்தார்கள் சண்டையில் சென்று போனர்கள். மதுரை சண்டை கள்ளர் அங்காமாவும் நகஷா பிஜாப்பூர் பாதுஷாவிற்கு கமருதிகான் எழுதி அனுப்பினர். அதற்கந்தப் பாதுஷா அல்லா செஞ்சிக்கர் கொல்லர் மதுரை கதாகள்ளர் என்று சென்னர். பிஜாப்பூர் பாதுஷா ரெண்டு பௌவுசுதார் வசம் தெற்குக் கொள்ளிடம் வரைக்கும் நடந்தது. மீரகமருத்திகான் கிருஷ்ணகிரிக்கு நேராக கிழக்கே வராகநதிக்கரையில் மீரபேட்டை கட்டி வைத்தார்.

---

22. ராஜா விஜய ராகவ நாயக்கர்—இவன் தஞ்சையை ஆண்டடின்னருள் சிறந்தவனகக் கருதப்படுகிறன். இவன் வரலாற்றைப் பற்றி V. விருத்தகிரீசன் என்பவர் எழுதிய The Nayaks of Tanjore என்னும் புத்தகத்தைப் பார்க்க.

23. திருமலை நாய்க்கர் வரலாற்றைப் பற்றி ஸத்யநாதய்யர் அவர்கள் எழுதிய The Nayaks of Madura என்னும் புத்தகத்தைப் பார்க்க.

கோ............மும் வெட்டி வைத்தார். அது நவாபு குளமென்று பெயராயிற்று. செஞ்சி கில்லாவிற்கு சையத் நாஸர்கானுக்கு கில்லே தாரியும் திட்டம் பண்ணி தாயனூர், மலையனூர் ஜாகீர் விட்டார்கள். அந்த நாசர்கானுக்குத் தன் பேரிருக்கும் படிக்கு மலையனூரில் நாசர் பேட்டை பெரியதாய்க் கட்டிவைத்தார்கள். தையருத்தி கானுக்குப் பணமூர் ஜாகீர் விட்டார்கள். அவர் கயருத்திபூர் கோரிப்பேட்டை கட்டி வைத்து, சுடங்கசாலை கோரிப்பணம் போடுவித்தார். கக்கனூர் ஒரு சர்தாருக்கு ஜாகீர் விட்டார்கள். அவர் கக்கனூர் பேட்டை கட்டு வித் தார். உளுந்தூர் ஒரு சதாருக்கு ஜாகீர் விட்டார்கள். அவர் உளுந் தூர் பேட்டை கட்டி வைத்து, டங்கசாலை உளுந்தூர் பணம் போடு வித்தார். தீவனூர் பேட்டையும் கட்டிவைத்தார்கள்.

அப்படியிருக்க தக்கன சுபா மலக்கு அம்பாரகானுக்கு ஆயிற்று. அந்தச் சுபேதார் தம்முடைய வளர்ப்புப்பிள்ளை சித்தி அம்பாரக் கானுக்கு செஞ்சி பௌவுசுதாரி சன சத சடு பசலி ஆயிற்று. அவர் செஞ்சியிலேயிருந்து தமக்குத் திண்டிவனக்கிடங்கல் ஜாகீர் விட்டிருக்க அவ்விடத்தில் கோவில் கல்லுகளைப் பிரித்து வந்து கோட்டை கட்டினர். சேத்துப்பட்டுக் கில்லேதார் பரியிது பேக்குவர்த்திபுரம் கிராமம் உண்டு பண்ணி, சேத்துப்பட்டில் பரிதபூர் பேட்டை கட்டி வைத்தார். அப்படி துலுக்கர் தோன்ற தனம் பாயன் காட்டு கர்னடகத்தில் பண்ணும் பொழுது, கர்னடக தேசத்திலிருக்கிற பெருமாள் கோவில் சிவன் கோவில்களை அவந்தரை பண்ணி மசூதி பண்ணிப் போட்டார்கள்.

திருவண்ணுமலைக்கோவில் லிங்கத்தைப் பிடுங்கி, அவ்விடத்திலும் மசூதி பண்ணினர்கள். அப்படியிருக்க, செஞ்சி துர்க்கத்திற்கு வடக்கே ஒரு நாழி வழியில், சிங்கபுரம் மலை மேல் ரெங்கநாயகர் ஸ்தலத்தை மசூதி பண்ணப்போனர்கள். அவ்விடத்தில் முன்னலே நந்தி கோவில் ராஜாவிற்குப் பிரத்தியக்ஷமான வராகக்கொம்பிலே தொத்தி வந்த எலு மிச்சம் செடியை வெட்டினர்கள். அப்பால் சாமி கிட்ட போகறபோது, ஏது காரணத்தினலேயோ படியில் ஏறினவாள் விழுந்து மூக்கினலேயும் வாயினலேயும் இரத்தம் விழுந்தது. அதுவே மூலமாய் கெடுதலைக் காரியத்தை விட்டு விட்டார்கள். அந்த எலுமிச்சம் செடி மறுகாலும் கண்டாச்சுது. அதுவும் நந்தியாவட்டப் பூஞ்செடியும் நாளது வரைக் கும் இருக்குது. சித்தி அம்பராக்கான் இசுரி சென சதகூடுலே பெரிய துர்க்கத்தின் அடிவாரத்தில் இராஜாக்கள் அரண்மனையைச் சுற்றி முன்ராயர் நாளையிலே வேலூர் கில்லா, ஆரணிக்கில்லா, பொம்மு ரெட்டி வெங்கடரெட்டி கட்டின மாதிரி போலே காளக்கோட்டை கட்டி

ஞர். தேசூர்கில்லாவும் அந்த மேட்டிகன் ஞளேயிலே கட்டினது. அந்த ரெங்கநாயகர் ஸ்தலம் பூஜை எந்தக் காலத்திலும் நின்றதில்லே. இப்பவும் இங்கிலீஷ் துரைகள் செம்மையாய் நடப்பிக்கிருர்கள்.

காஜுகாஜும் செஞ்சியில் பெரிய பேட்டை காஜுகாஜு பேட்டை கட்டிஞர்கள். இந்தத் துலுக்க ராஜாவினுடைய சண்டையிலும் எதேச்சையாய் செத்தவாளேயும் புதைத்த கும்மட்டங்களும், கோரிகளும், செஞ்சியைச்சுற்றி ஆயிற்று, அந்தத் துலுக்கர் நாளேயில் கோவில்களே மசூதி பண்ணி, பக்கிரிகளே வைத்து மானியம் விட்டு நடப்பித்தது நாளது வரைக்கும் இருக்கிறது.

அப்படியிருக்க கர்ஞடக துலுக்கரான படியினலே பீஜாப்பூர் பாதுஷா ஆதில்ஷா துலுக்கர் ஞாயத்திற்கு காசி உத்தியோகம் சேர்க்கு அப்துல்காதருக்கு வெங்கந்தூர் வகையரு நாலுகிராமம் ஜாகீர்விட்டு அனுப்பினர். அவரும் செஞ்சியில் வந்து கொள்ளிடம் வரைக்கும் துலுக்கருக்குக் காசி உத்தியோகம் பண்ணிக்கொண்டு வருவார். இந்தத் துலுக்கர் நாளேயில் இந்த தேசத்துக் கணக்கர் பேரில் அதிக தண்டம் பிடித்தார்கள். அந்த வேளே வெகு பேர் தாணர் மலமராசு கிராமங்களே விற்றுப் போட்டார்கள். அப்படிச் சிறிது நாள் பீஜாப்பூர் பாதுஷா வழியிலும், ஹைடராபாத் பாதுஷா வழியிலும் கர்ஞடகம் அமுல் நடக்கும் பொழுது, டில்லி பாதுஷா அவுரங்கசீப் என்கிற ஆலங்கீர் பாதுஷா, ஹைடராபாத், பீஜாப்பூர் தாமே சண்டைபண்ணி, பலவந்தமாய்ச் சேர்த்துக் கொண்டு கர்ஞடகமும், டில்லி பாதுஷா அதிகாரமாயிருக்க அந்த ஆலங்கீர் பாதுஷா தக்கண அவுரங்கா பாத் கிட்டே டில்லிக்குப் போய், அந்த தேசங்கள் சாதித்துக் கொண்டு இருந்த போது, தக்கன மூராட்டிய தேசம் ராஜா சிவாஜி, ராஜாராமசாசி, ராஜா யக்கோசித்து, கோசிராஜா, கோசலா இவர்கள் லட்சம் குதிரை மேல் பாய்தல் தோப்பு காஜு முதல் தண்டு வாங்கிக்கொண்டு, பசலிசன சத அலெவருடம் பாயன் காட்டு கர்ஞடகத்தைத் துலுக்கர் அவந்தரை பண்ணி, மஹாஸ்தலங்களேப் பாழாக்கி, துலுக்கர் கோவில் மசூதி பண்ணிப் போட்டார்களென்றும், சாதிமானத்திற்காகவும் ஆமூர்க்கண வாய் வழியாயும் இறங்கிஞர்கள். இந்த சிவாஜி ராஜாவிற்குச் சீரெங்கப் பட்டிணம் சீமை, மத்தசீமை ராஜாக்களும் வக்கில் முகனயாய்ப் பகுதி கட்டிக்கொண்டு இருப்பார்கள்.

---

5. மராட்டியர் ஆட்சி

அதுவுமல்லாமல் சித்தூர் முதல் இளையப்பட்டு, பொம்முராஜா பாளயம், காளாஸ்தி ராஜாக்கள் கூட பங்காரு எச்சமனய்க்கன் பாதுஷாய் மான்சப்தார் வந்தவாசி முதல் சில்லறை ராஜாக்களும் காண்பித்துக் கொண்டு, நானேசி, காசி, சரபோசி, கோசலாவிற்கு ஆரணி வேலூர் கொடுத்து விட்டு, தாமும் செஞ்சிபேரில் வந்து இறங்கினர். ஹைதராபாத் சுபாவோடே சேர்ந்த தேசத்தை மோராட்டியர் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார்கள். செஞ்சிப்பாதுஷா பாதகில்லாவிற்குள்ளே நாசர்க்கான் கில்லேதார், சித்தி அம்பர்கான் பௌவுசுதார் வகையறு கோட்டையைப் பந்தோபஸ்து பண்ணிச் சண்டை பண்ணினர்கள். ஆனல், மோராட்டியர் தண்டு அதிக பலனுனபடியினலே சென கடைப்பக்கம் அல்லாவேறிப் பகு சண்டை பண்ணியிருக்கிறதிலும் சேதமாய்க் கோட்டை வாங்கி கோட்டை துர்க்கங்களைப் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு சிவாஜி ராஜா தம்முடைய தம்பி ராஜாராமுவிற்கு ராஜரீகம் கொடுத்துச் செஞ்சிக் கோட்டை பூமியில் நாலுசுற்று இருந்ததை உட்கோட்டை ராயகிரி கீழே இருக்கிறதை வைத்து அடைய வளைந்தான் சுற்று முதல் மூன்று சுற்று முன்னலே கோவலராஜா நாயக்கன்மார் ராஜாக்கள் நாளை இத்தைப் பிடுங்கி ஜெனகெடுக்கும், கிருஷ்ணகெடுக்கும் நேராகவும், கிருணக்கேடு ராஜக்கேடுக்கு, செனக்கேடு முத்தியால் நாயக்கர் துர்க்கத்திற்கு நேராகவும் முக்கோணம் கட்டினர்.

அப்படிப்பட்ட சிவாஜி ராஜா நீதியாய் ராஜரீகம் பண்ண, தம்முடைய தண்டே சரபோஜி ஒகோஜி, துக்கோஜி, கொசலா கூடத் தஞ்சாவூர் பேரில் அனுப்பினர். இந்த மோராட்டியர் தண்டு ராமேச்வரத்திற்குப் போற பாவனையாய் தஞ்சாவூர் ராஜா விஜநாயக்கரை மித்திர பேதம் பண்ணி, உபாயமாய் தஞ்சாவூர்க் கோட்டைக்குள்ளே புகுந்து, கோட்டையை வாங்கி, பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார்.

இந்தக் கோசல ராஜாக்கள் அந்தத்தேசத்தில் ஆரணிக் கோட்டையும் தங்கள் வசம் பண்ணிக் கொண்டார்கள். திருச்சிராப்பள்ளி, மதுரை ராஜாக்கள் ராமநாதபுரம், சிவகங்கை வகையரா ராஜாக்களண்டை பகுதி வாங்கிக் கொண்டார். தஞ்சாவூர் ராஜாக்கள் ராமனுதபுரம் சீமையிலும் கொஞ்சம் பட்டுக்கோட்டை, அரந்தாங்கி சீமையையும் கைக்கொண்டார்கள். பசலி சென சதஅடுெ பசலி கோசலாராஜாக்கள் தம்முடைய புரோகிதர் வேதாசி பாஸ்கரர் பண்டிதருக்கு ஆரணிக் கோட்டையில்

லட்சம் வராகன் சீமையையும் விட்டார். அப்படிப்பட்ட சிவாஜி ராஜா செஞ்சிக் கோட்டை கட்டி **ராஜா ராமுவிற்கு மஹாராஜ பட்டம் கட்டிப் போட்டுத்** திருவண்ணுமலைக்குப் போய் தான் சிவபத்தனுன படியினலே, துலுக்கர் சமுத்திரத்தின் பெருமாள் கோவில் திருவண்ணு மலைசிவன் கோவிலும் அவந்தரை பண்ணி, மசூதி பண்ணியிருந்தபடி யினலேயும், மசூதியை இடித்து சிவன் கோவில் செம்மையாய்க் கட்டிச் சமுத்திரத்தின் பெருமாள் கோயில் கல்லுகளைப் பிரித்து சிவன் கோயி லில் நாயக்கன்மார் கட்டின ஆயிரக்கால் மண்டபத்தண்டையும் உண்டு பண்ணினர்.

இதுவுமல்லாமல் சமுத்திரப்பெருமாள் விக்கிரகத்தைச் சிவன் கோயிலில் வைத்து, அவ்விடத்திய பரிசாரகாள், ஸ்தானீகாள், தாசி முதல் சிவன் கோயிலில் சேர்த்துக் கொண்டார்கள். இந்த சீமை மஹா ஸ்தலங்களெல்லாம், முதல் மசூதி பண்ணினத்தை செம்மைபடுத்தி கும்பாபிஷேகம் பண்ணினர்கள். அந்த ஸ்தலங்களிலே நாளது வரைக் கும் சிறிது பாழாகக் கிடக்கிறது.

அப்படியிருக்க டில்லியிலே இருந்து ஆலங்கீர் பாதுஷா தக்கண சீமையிலேயும், கர்னுடக சீமையிலும், மோராட்டியர் பிரபலமாய்ச் சீமையைக் கொண்டு ராஜரீகம் சொந்த அதிகாரம் தோத்திரம் பண்ணி க்கொண்டு இருக்கிறுர்களென்று அவர்களை அடிக்கவேணுமென்பதாய்ப் பாதுஷா தம்முடைய துரைத்தனத்தோடே தக்கன் சீமை அவுரங்கா பாத் வந்து சேர்ந்தார். அந்த சேதி சிவாஜி ராஜா கேட்டு செஞ்சியில் ராஜாராம் வசம் முப்பாதாயிரம் குதிரையும், லட்சம் பாய்தளமும் வைத்துப் போட்டு சகலதண்டோடே பூனு போய்ச் சேர்ந்தார், செஞ்சி யில் ராஜாராம் தாம் கர்னுடக பாதுஷா என்றும் ராஜாசாபி பணமடங்க சாலை போட்டு செஞ்சிக் கோட்டை தேசத்து நாகசொரம் மேளத்திலும் கட்டியக்காரர் கட்டியம் கூறுகிறத்திலும் மஹாராஜா ராஜாராம் சத்திர பதி டில்லிக்கு தாவேதரா என்று சொல்லும் படியாயும் துரைத்தனம் பண்ணிக் கொண்டு சகலராஜாக்கள் சிரெங்கபட்டணமுதல் ராஜாக் களண்டை இருந்தார்.

இந்த மோராட்டியர் அமலிலே பசலி சென சதஅ௰ வருடம் மேல் சதகூ௰ வரைக்கும் நடக்கும் போது தேவனும் பட்டணம். அஸ்தகத் செட்டி சம்மதியின் பேரிலேயும் இருந்த தேவனும் பட்டணம், சென் னைப்பட்டணம் இந்த இடங்களிலே ராஜாராம் உத்தாரத்தின் பேரில் இங்கலோட்டு சீமையிலிருந்து இங்கிலீஷ் துரைகள் வந்து சுண்டை

போட்டு, கோட்டை, கட்டிக் கொண்டு குண்டுசாலே அத்து ஏற்படுத்திக் கொண்டு பட்டணம்உண்டு பண்ணுர்கள். அப்போ வந்ததுரை சாலிஸ் துரை பிறகு வங்காளாதேசத்தில் கல்கத்தாவில் சண்டா போட்ட துரை உல்லி மதுரை அந்தக் காலத்தில் தான் உலாந்தக் கார பிடித்து கீசக காரர் ஆனது. இவர்களுக்கும் பிறகு, புதுச்சேரி பாரிசக்காரர் சண்ட போட்டுக் கொண்டது. இவர்களுக்கு வர்த்தகம் பண்ணு கிறதற்கு ராஜாவிற்கு பகுதிப்பணமும் திட்டம்பண்ணிக் கொண்டார் கள்.

அந்த ராஜாராம் சத்திரபதி கர்னுடக தேசம் மஹாராஜபட்டம் பசலி சென சதகூலகூ வரைக்கும் ஆண்டு கொண்டிருக்கும் பொழுது, தக்கண சீமை அவுரங்காபாத்திலே ஆலங்கீர் பாதுஷா இருந்து கொண்டு ஷாசாதாகாமபகுஷக்கு தக்கன் பௌவுசுதாரி கொடுத்து, அவர் கூட நவாபு அமீருலுமாரா சுலுபக்கான் கான்பாதர் நசரத்செங்கு இவர்கள் கூட யிந்துஸ்தான் ராஜாக்கள் ஜெயப்பூர், உதையப்பூர், பாதப் பூர், பொந்திலிகண்டு ராஜாக்கள் வகையரு தண்டு கூட மூன்று லட்சம் குதிரை பாய்தளங்களும் தோபகானு கூட சித்தாரா சீமை மோராட் டியர் பேரில் மோயும் பண்ணினுர்கள். மோராட்டிய சிவாஜி ராஜா இரண்டு லட்சம் குதிரை கூட தண்டு கூட்டிக் கொண்டு, பாதுஷா தண்டு பேரில் எதிர்த்துச் சண்டை பண்ணுவார்கள். அப்படியிருக்க, மோராட்டியர் சல்லியங்கள் ஆகாது என்று பாதுஷா சமாதானம் பண்ணிக் கொண்டது.

மோகுட்டியர் தண்டிலே லட்சம் குதிரையும், சருகிலும் பாதுஷா சமூகத்தில் சேவகம் பண்ணுகிறது. அவர்களுக்கு சம்பளத்திற்காகச் சகல சீமை காலசா பணத்தில் சவுக்தாயி திட்டம் பண்ணி எழுதிக்கொடுத் தார்கள். அந்தப்படி தக்கனிலே சல்லியமில்லாமல் பண்ணிப்போட்டு, பாதுஷா ஷாசாதா நவாபு அமீருலுமாரா கூட லட்சம் குதிரை கூட இரண்டாயிரம் பீரங்கி போனபங்தியா ரெண்டு லட்சம் பாய்தலமனே கலம் பாணிகள், பொதிமாடு, யானைப்படைகள், அம்பத்திரெண்டு அமீர் கள், பாதுஷாயிமனசபதார், பங்காரு எச்சமநாயக்கன் வகையரு சகல தண்டும் கூட்டி செஞ்சி வகையரு, கர்னுடகம் வாங்கச் சொல்லி அனுப் பினுர்.

ஷாசாதா நவாபு தண்டு அஷசுய வருடம் கணவாய் மேல் ஆம்பூர் அந்த வட்டத்திலே வந்தது. அந்த சேதி ராஜாராம் கேட்டு, கர்னுடக தண்டு முப்பதாயிரம் குதிரை தோப்கானு வகையரு கூடப் போய்க்

கணவாய்க் கட்டி அவ்விடத்தில் சண்டை போட்டார்கள். அவ்விடத்திலே தானே வருடகாலம் தண்டு................பாதுஷா தண்டு பயதனகுதிரைகள் கர்னுடக தேத்து கணவாய் கீழே காலாடிக் கொண்டு இருக்கும். அப்படியிருக்க இரண்டு சண்டை பலமாய்............ஆயிற்று. ஆகையால் பாதுஷா தண்டு கிருஷ்ண தீரம் போய்ச் சேர்ந்தது. ராஜாராம் தண்டு திரும்பி வந்து விட்டது. மறுகால் பசலி சென சதகூ௰கூ சுக்கில வருடம் நவாபு அமீருலுமாராபாதர் தாம் தண்டோடே முன்தண்டிற்கு அதிகமாய் அரவரிசை சேர்த்துக் கொண்டு, தரோபங்தோபஸ்து அமீர்கள் கூடப் பாதுஷாவை பரட்டவணை கூடச் செஞ்சிக்கு ஈசான்யமாய் தேசூர் முதல் திண்டிவனம் வரைக்கும் இறங்கினர்கள். நவாபு தண்டு குதிரைகள் தெற்குக் கொள்ளிடம் வரைக்கும் பரவிப்போயிற்று.

செஞ்சி பாதுஷா பாதவலசை செனம் அரியலூர், உடையார் பாளயம், சோழதேசம், தஞ்சாவூர் சீமை அவ்விடங்களிலே வர்த்தகர் முதல் போய் விட்டார்கள். நவாபு வடக்கு வட்டங்களிலே சபத்தி பண்ணி தாண ஏற்படுத்திப்போட்டார்கள். தாம் செஞ்சிக்கோட்டையைச் சுற்றி முற்றுகையும் போட்டுக் கொண்டார்கள். கோட்டையில் ராஜாராம் குதிரைகள் வெளியிலேயும், கோட்டைக் குள்ளேயும் வைத்து பீரங்கிகளை கோட்டை துர்க்கங்கள் தம் தமாக்கள் முரசுகள் பேரில் எத்த வேண்டிய இடத்திலே எத்தி, எதிரி தண்டு பேரிலே சுடுவார்கள். அந்த வேளையில் நவாபு தண்டு சனம் இடையாளம் இனமம் அக்கினி மூலை அதில் ஒரு மோர்சா கிழக்கே களவாய் அதில் ஒரு மோர்சா வடக்குக் குப்பத்தண்டை ஒரு மோர்சா போட்டு துர்க்கங்கள் பேரில் சுடுகிற பெரிய பீரங்கிகளை மறுக்கத்தக்கதாக மூன்று மொரசா பேரிலேயும் பெரிய பீரங்கிகளை ஏற்றி, நவாப் ஜெனங்களும் சுடுவார்கள். ராஜாராம் ஜெனங்கள் கோட்டையிலிருந்து வெளியே புறப்பட்டு நவாபு முரசாபேரில் வந்து சண்டை பண்ணியும் போவார்கள். அப்படிச் சண்டை பண்ணிக்கொண்டு இருக்க ராஜாராம் கில்லாவிற்கு வெட்டவனம் வழியாய்க் காட்டிலே தானே மொட்டக்காட்டு வழியாய் இசலாம் திட்டியாலேற ஷத்துக் கொண்டு வருவார்கள். அது நவாபிற்குத் தெரியும். சண்டை போடுகிறது ஜாலம் பண்ணுக் கொண்டு பசலி சென சத எகூ வரைக்கும் கோட்டையை முற்றுகை போட்டுக் கொண்டு வருவார்கள். நவாபு எண்ணத்தில் பாதுஷாவிற்கு இந்துஸ்தானம் தக்கன கர்னுடக தேசத்து சல்லிய மில்லை என்றும் சிப்பாய்களுக்குச் சேவகமில்லை என்றும் அட்டிபண்ணிக் கொண்டு வந்தார். அது சகலமான பேருக்கும் தெரிந்து கொண்டுயிருப்பார்கள்.

அந்நேரம் பங்காரு எசமாநாயக்கன் பாதுஷாவிற்கு நவாபுஅமிருல மாராபாதர் ராஜா ராமுவிற்குச் சகாயமாயிருக்கிறுரென்று அர்ஜி எழுதினுன். அது பாதுஷா பார்த்துக் கொண்டு நவாபு அசபத உல்லா அஸத்கான் வசீருக்குக் காட்டினுர். அதற்கு நவாபு சொன்னது. "நான் அம்பது வருடமாய் வசீர் பண்ணுகிறேன் எங்களாலே நமக்கு அருமி[24] ஆகுறதில்லே நடக்கமாட்டாது" என்றும் சொன்னுர்.

அதன் பேரில் பாதுஷா எசமாநாயக்கன் அனுப்பின அர்ஜியை அமீருலுமாராபரமான கூட லிபாபா பண்ணி அனுப்பினுர். நவாபு அஸத்கான் பாதரும். தம்முடைய மகன் நவாபு அமீருலுமாராவிற்கு எழுதினது நமக்கு ஙிம்மக் அருமி[24] என்று பேர்வாராமல் நடந்து கொள்ளவும், என்று வயனமாயெழுதினுர். பரமாருவும் நவாபு காகிதமும் அமீருலுமாரா பார்த்துக் கொண்டு பங்காரு எச்சமாநாயக்கனை வெட்டிப் போட்டார். அப்படியிருக்க பாதுஷா வண்டையிருந்து நவாபிற்கு தண்டு செலவிற்கும் பணம் கும்மக்கு நவாபு தெளவுத்கான் முகமத் சையபத் கெளவுத்தும் வெங்கடபதி இவர்கள் கூடத் தண்டு அனுப்பினுர். இவர்களும் வந்து சேர்ந்த பிறகு செஞ்சிக் கோட்டையை நெருக்கிக் கொண்டார்கள். ராஜாராம் இனிமேலிருக்கக் கூடாதென்று மேல் சேரியில் கில்லாதாரில் கண்டராயனை சரஞ்சாமானேடே அழைப்பித்துக் கொண்டு தம்முடைய சமுசாரம் தண்டு சகலமும் பயணமாயிருந்தார்கள்.

அது நவாபிற்குத் தெரியாது நவாபு மன்திலே செஞ்சிபோய் கும்மக்கு வந்து போகு நாள் பன்னிரெண்டு வருடமாயிற்று பாதுஷா கஜாணு சிலவாய்ப் போயிற்று. இனிமேல் ஆலிசமாகாதென்று கோட்டையை அல்லாபண்ண உத்தாரம் பண்ணினுர். நவாபு தெளவுத்கான் வகையரு செனக்கேடு பேரில் அல்லா பண்ணினுர். கேவுத்தும் வகையரு கிருஷ்ணக்கடை பேரில் அல்லா பண்ணினுர். நவாபு தம்தண்டோடே கோட்டை வாயிற்படிக்கு எதிரில் அல்லா பண்ணினுர். அந்தச் சமயத்தில் ராஜாராம் திருவண்ணுமலை வாயிலைத்திறந்து அது வழியாய் சகல சாமானேடே வெளிப்பட்டு மேற்கு நோக்கிப் பயணமானுர்கள். நவாபு தண்டு சனம் கோட்டையை அல்லாபண்ணி பசலி சென சுத ளஎ வருடம் ஈச்வரவருடம் தைமாதம் ரெண்டாம் தேதி செஞ்சிக் கோட்டையை பத்தே பண்ணினுர்கள். நவாப்கோட்டையில் புகுந்த வாயிற்படிக்கு 'பத்தேதருவாசா' என்று பெயராயிற்று.

---

24. அரபி, ஙிம்மக் அரபி—இடக்குக் குதிரைகளாயிருக்கலாம்.

6. மீட்டும் முஸ்லிம் வெற்றி

நவாபு எதிரி ஓடிப் போனானென்று பிடிக்கச் சொல்லித் தண்டை அனுப்பினர். நவாபு தண்டு தரோபஸ்து கோட்டையிலிருந்து போக மயத்த தண்டா முடிய ராஜாராம் தண்டைச் சுற்றிக் கொண்டார்கள். ராஜாராம் தண்டு செனம் சண்டை பண்ணிக் கொண்டு பெண்ணாற்றார் போயிறங்கினார்கள். அவ்விடத்திலும் சண்டையாய், மறுநாள் திருவண்ணாமலை போயிறங்கி சங்கமாக் கணவாய் வழியாய்த் திருப்பத்தூர் போய்க் கோலார் வழியாய்ப் போய்ச் சேர்ந்து போனார்கள். நவாபு தண்டு செனம் கணவாய் மேலும் போயிவிட்டு வந்து விட்டார்கள். நவாபு அமீருலுமாரா பாதர் செஞ்சிக் கோட்டையைப் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு, கோட்டை கில்லேதாரிக்காக கடகானுக்கும், பௌவுசுதாரி அமல் கேசபாகானுக்கும், திட்டம் பண்ணினார். கர்னாடக பௌவுசுதாரி நவாபு தாவுத்கானுக்கு உசூர் உக்கம் படிக்கு பசலி சென சதஅ திட்டமாயிற்று.

மகமத் சையத்திற்குத் திவான்கிரி திட்டமாயிற்று. லாலாதக்கன ராய்க்குத் திவான் பேஷ்கார் ஆயிற்று. லாலா தொண்டர் மல்லுக்குக் கர்னாடகம் சிரஸ்தா திட்டமாயிற்று. அப்படியிருக்க, நவாபு அமீருலுமாராபாதர் செஞ்சிக் கோட்டைக்கு நசரத் கடைபேர் வைத்தார். செஞ்சியிலேயிருந்து சோழமண்டலம் தஞ்சாவூர் வாங்க வேணுமென்று திருவாதி போயிறங்கினர். தஞ்சாவூர் எக்கோசி, துக்கோசி கோசலராசா வக்கீலனுப்பி ராசா பேட்டி பண்ணிக் கொண்டு நசர் வகையறாப்பணமும் தண்டு கர்சும் கொடுத்து மேல் பகுதி திட்டம் பண்ணிக்கொண்டார்கள்.

அந்தப்படியே திருச்சிராப்பள்ளி, மதுரை நாயக்க ராஜாவும் ராமநாதபுரம் சிவகங்கை வகையறா ராஜாக்களும், நசர்தண்டு சிலவும் கொடுத்து, பகுதி திட்டம் பண்ணிக் கொண்டார்கள். அப்படியிருக்க எச்சமநாயக்கனைக் கொன்று போட்டது பாதுஷா மட்டுக்கும் ஆய் அவர் குமாரன், குமாரர் எச்சமநாயக்கனுக்கு மனதிற்கும் ஜாகீர் விடச் சொல்லி பாதுஷா பரமானா வந்தது. நவாபு குமாரர் எச்சமநாயக்கனை அழைப்பித்து காத்தரசமா சொல்லி வெங்கடகிரிக் கோட்டை ஜாகீர் விட்டார். செய்யூர் ராஜாவண்டையிருந்து வந்த சர்தார் சிவனாதசிங்கிற்கும் அவர் கூட வந்த சிபாயிக்கும் செஞ்சிச் சீமையில் திருவண்ணாமலை சீமையில், திருவாதி சீமையில் திருவண்ண நல்லூர் அணைக்கட்டு மாகாணம் ஜாகீர் விட்டார்.

7. ஸ்வரூப்ஸிங்

உக்கம்படிக்கு பழய செஞ்சி ததனம் சத்து கெடைக்கில்லாவும், தேசூர்கில்லாவும், மனசபும் சிவனாத சிங்கிற்குக் கில்லேதாரி திட்டம் பண்ணினார். சிவநாதசிங்கு பசலி சென சத ாள ஈச்வர வருடம் கில்லே தாரி பந்தோபஸ்து பண்ணிக் கொண்டார். அப்படியிருக்க ஆலங்கிர் பாதுஷா பொந்திலிகண்டு ராஜாவினுடைய சுயமனிதன் சுரூபசிங்கு உசூரிலேயிருந்தவருக்கு சூஹாபசிங்கு என்று பெயர் கொடுத்து அவன் கையைப் பிடித்து அதிக தயவு செய்து இரண்டாயிரம் மனசுபும் பன்னிரெண்டு லட்ச ரூபா ஜாஹீரும் செஞ்சி கில்லேதாரி சன்னத் பரமானு பண்ணிக் கொடுத்து நவாபு அமீருலுமாராபாதர் பேருக்குப் பரமானுவும் கொடுத்து அனுப்பினார்.

சொரூபசிங்கு பசலி சென சத ாா௰ விக்கிரம வருடம் செஞ்சி வந்து சேர்ந்தார். சொரூபசிங்கு செஞ்சிக் கோட்டையை சபத்தி பண்ணிக் கொண்டார். கெசபரகான் கில்லேதார் காக்கடகான் பௌவுசுதார் நவாபு தண்டே போய்ச் சேர்ந்து போனார்கள். பைய்யாராம் கிருஷ்ண வாக்கென வீசும் சேக்கூனார் மாரிபத்சவானகிகார் உதயராம் கூபியான் வீசவச்கிராம் தக்குவிலதார் சீராம ஆசாரி, அமானி ஆசாரி, மெண்டி ஆசாரி வகையறு தோபச்சிகள் கில்லாதயினுத்தாய் பாதுஷா செனம் அ௰....ஆயிரம் வரைக்கும் இருந்ததையும் உத்தாரப்படிக்குச் சொருப சிங்கு கூட கில்லாதாயினுத்தாயிருந்தார்கள். சொரூபசிங் தையினுத்து சனத்தையும் வைத்துக் கொண்டு தம்முடைய சொந்த முன்னூறு குதி ரையையும் வைத்துக் கொண்டு தமக்கு ஜாஹீர் பிரித்து விட்ட செஞ்சி சர்க்கார் பரகணு அவேலி, செஞ்சி, வழுதாவூர், திண்டிவனம், திருவா மாத்தூர், அசுப்பூர், திருக்கோவிலூர், வெட்டவனம் வகையறுவும் பந் தோபஸ்து பண்ணிக்கொண்டார்.

நவாபு அமீருலுமாரா சுலுபகாரகான் பாதர் நசரத்செங்பாதுஷா உத்தாரப்படிக்கு கர்னடக பௌவுசுதாரி நவாபு தௌவுத்கான் தீவானி மகமத் சைய்யத்கான் தொண்டர் மல்லு சிரஸ்திதார் இவர்களை திட்டம் பண்ணி போட்டு, விக்கிரம வருடம் அவுரங்காபாத் போயிசேர்ந்தார். நவாபு பௌவுத்கான் தம்முடைய தண்டோடே ஆர்க்காட்டில் பாலாற் றிற்குத் தென்கரை தண்டு எப்படி இறங்கியிருக்குமோ அப்படித் தானே யிறங்கினார். அதுவே ஆர்க்காடு பட்டணமாயிற்று. அவ்விடத்தில் இருந்து கர்னடக பௌவு சுதாரி பண்ணிக் கொண்டு கர்னடகக்கில்லே தார் முன்னலேயிருக்கிறவாள் நவாபு அமீருலமாரா திட்டம் பண்ண

கில்லேதார், ஜாஹீர்தார், மன்சப்தார் ராஜாக்கள் பாளயக்கார் வகையரு வண்டை திட்டப்படிக்கு நசரும் பேஷ்கிஸ்தியும் வாங்கிக்கொண்டு மத்தகாலசா தாலூக்கிற்கு ஆமில்களை அனுப்பி, அமானி வசூல் பணம் முதல் பந்தர் கோட்டிக்கார் பணமும் வசூல் பண்ணிக் கொண்டு, இசாரா படிக்கு பதினைந்து லட்சரூபாய் உசூருக்கு இருசால் அனுப்பிக் கொண்டு, மைலாப்பூரிலே கோட்டையும், பங்களாவும் கட்டிக்கொண்டு, நீதியாய்க் கர்னுடக மாண்டு கொண்டு பசலி சென சதளடுச வரைக்கும் ஆர்காட்டிலேயிருந்தார். அப்படியிக்க, ஆலங்கீர் பாதுஷா உக்கம் படிக்கு மம்மத்சைய்யத்கானை இருந்தவனைக் கர்னுடம் பௌவு சுதாரி ஏகத்தியாரியாய்ப் பார்க்கச் செல்லியும், தமக்குக் காகிதமெழுதச் சொல்லியும், வக்கீல் வைக்கச் சொல்லியும் திட்டம் பண்ணிப் போட்டு உசூர் போய்ச் சேர்ந்தார்.

மகம்மது சைய்யத்கான் தம்மண்டை உசூர் உத்தாரப்படிக்கு ராயத்தினராய் திவான்கிரி வைத்துக் கொண்டு கர்னுடகம் பௌவு சுதாரி பண்ணிக் கொண்டு, வேலூர்க் கில்லேதாரி தம்முடைய தமயன் பேருக்கு உசூர் பரமானு தசவிசனுமா எழுதியனுப்பி அழைப்பித்துக் கொண்டார். வேலூர் கில்லாதாரி தோஆசாரி மானசப்த் உலாமல்லி கான் பேருக்கு ஆயிற்று. கர்னுடகம் கில்லாக்களிலே முன்னேயிருந்தவாள் போக இன்னம் கர்னுடக கெடைக் கைலாசக்கடை வந்தவாசி திமிரி வகையருக் கில்லேதார்களுக்கும் தம்முடைய இஷ்டசனங்களுக்கும் தசவிசநாமா எழுதி அனுப்பி மன்சுபும் ஜாஹீரும் அழைப்பித்துக் கொடுத்தார். பாதுஷா மகமத்சைய்யத்கானுக்கு மூவாயிரம் மனசப்த் சாத்ததுல்லாக்கான் பேரும் கொடுத்து அனுப்பினுர்.

நவாபு சாத்த துல்லாக்கான் கர்னுடக்கில் ஜாஹீர்தார், திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர், மதுரை வெங்கடகிரி வகையரு ராஜாக்களுக்கும். நல்ல தினமாய் வைத்துக் கொண்டு, பேஷ்கிஸ்தி பணமும், நசரும் வாங்கிக் கொண்டு சர்க்கார் தாலூக்கத்து குடிகளுக்கு அமானியாய் நடப்பித்து, கொல முதல் கொண்டு கவில்படிக்கு தீர்வைவாரம் திட்டம் பண்ணி நீதியாய் நடப்பித்து பணம் வசூல் பண்ணி, உசூருக்கு வாயிதாப்படிக்கு பண பூமி கணக்கும் அனுப்பி, உசூர்திவான் கச்சேரி தரோக முஸ்திகள் முதலாய்க் கொண்டு, தகரிரும் பரிதானமும் அனுப்பிக்கொண்டு வருவார்.

அதன் பேரில் சகலமானபேரும் நலமையைக் கூறப் பாதுஷாவும், சாத்ததுல்லாகான் பேரில் சிறு போதேபுத்தியுள்ளவன் கயாகா மனுஷ

ளென்று தயவாய் நடப்பித்துக் கொண்டு வருவார். அப்படியிருக்க, ஆலங்கீர் பாதுஷாவிற்குப் பிறகு அவர் பிள்ளை பாதுஷாவிற்குப் பட்டமாய் அவரும் செம்மையாய் நடப்பித்துக் கொண்டு வந்தார். அவர் நாளையிலேயும் சர்க்கார் இசாராப்பணம் தம்முடைய கர்னுடகப் பகுதி நசர்பணமும் தர்ப்பார் சிலவும் கட்டிக் கொண்டு வந்தார். அந்தப் பாதுஷாவிற்குப் பிறகு **பரேகுசேர்** பாதுஷாவானுர். அவர் நாளை யிலே செஞ்சிக்கில்லேதார் சொருபசிங்கு பேஷ்கிஸ்திபணம், நசர்பணம் பத்துவருடமாய்க் கொடுக்காததினுலேயும், சர்க்கார் காலசாகிராமங் களை சப்தி பண்ணுகிறதும், பலாத்காரம் பண்ணுகிறதும், பௌவு சுதார் உக்கம் தள்ளிப் போடுறது மாயிருந்தார்.

ஆனத்தினுலே சாத்த துல்லாக்கான் பாதுஷா அக்குபாரிலேயும் தாக்கல் பண்ணி வைத்து அக்பார் நாலேயும் தாமும் எழுபது லட்ச ரூபாய்க்கு சொரூபசிங்கு பேரில் கணக்கு உசூருக்கு அனுப்பினுர். அந்த அக்குபார் கணக்கைப் பார்த்துக் கொண்டு, பாதுஷா கோபம் பண்ணி, சொரூபசிங் வக்கீலைப் பிடித்துப் பாருவிலே வைத்தார்கள். எழுபது லட்சம் ரூபாயும் சொரூபசிங்கிற்கு எழுதியனுப்பிக் கர்னுடகம் பௌவுசுதார் வசம் பண்ணவுமென்று வக்கீலுக்குச் சொன்னுர்கள். அப்படியிருக்க பாதுஷா உசூரிலேயிருக்கிற அமீர்கள் செஞ்சிக்கில்லே தாரிப் பாதுஷாவண்டை தர்க்காஸ்துப் பண்ணினுர்கள். அந்த சமயத் தில் நவாபு சாத்ததுல்லாக்கான் வக்கீல் தீபாதாசா தம்முடைய எசமா னன் சாத்ததுல்லாகான் பேருக்கு அச்சேதி தாரோக குதுப்புதீன் மூலகமாரிபத்தில் முசத்திகள் வகையருக்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய் தர்பார் சிலவு கொடுப்பதாய் புக்கனசிகாசிதாச கோட்டியில் போனே சொல்லி வைத்து தர்க்காசு காயிதம் வைத்து எழுதி உசூரிலே கொடுத்தார்.

அது பாதுஷா பார்த்துக் கொண்டு செஞ்சிக் கில்லேதாரி சாத்த துல்லாக்கான் பேருக்கு வாலிபரமானுவும் சொரூபசிங்கு பேருக்கு தாகீர் பரமானுவும் ஆயிற்று. இந்தச் செய்தி அக்குபர்களாலே சொரூப சிங்கு கேட்டு விசனத்தை அடைந்திருக்கக் காயலாவாய் விழுந்து போனுன். அது செய்தி இந்துஸ்தானம் பொந்திலிகண்டிற்கு சொரூப சிங்கு வீட்டிற்குப் போயிற்று. அதிலே சொரூபசிங்கு மகன் தேசிங் பெண்சாதியையும் அழைத்துக் கொண்டு, அம்பது குதிரையோடே தக்கன் வந்து கர்னுடகத்தில் பிதனூர் பேரில் வந்தார். அந்நேரம் பிதனூர் ராஜாவிற்கு மொராட்டிய சர்தார்களாலே சல்லியம் நடந்து சண்டையும் ஆகுது. அந்தச் சமயத்தில் தேசிங்கு வந்து இறங்கினது

பீதனூர் ராஜா கேட்டுத் தமக்கு கும்மக்காய் வர வேணுமென்றும், உங்கள் தகப்பனார் சொரூபசிங்கு செஞ்சிக்கில்லேதார் நம்சகுரம்பை யிஷ்டர் அவருக்கும் நமக்கும் காயிதப்பத்திரம் வழியுமிருக்குமென்று சுரூபசிங்கு தமக்கு எழுதியிருக்கிற காகிதம் அனுப்பித் தம்முடைய பிரதானிகரைத் தேசிங்கு கிட்ட அனுப்பினார். தேசிங்கு ராஜா அனுப்பின காகிதமும் பார்த்துக் கொண்டு பிரதானிகர் வசனமும் கேட்டுக் பீதனூர் ராஜா எதிரிபேரில் தேசிங்கு தம்முடைய குதிரையையும் கூட்டிக் கொண்டு இராஜா தண்டும் குமக்காய் வைத்துக் கொண்டு எதிரி தண்டைச் சின்னாபின்னம் பண்ணித் துரத்திவிட்டார்.

---

8. தேசிங்

அதனாலே பீதனூர் ராஜா தேசிங்கு பேரில் அதிகச் சந்தோஷமாய் லட்சம் ரூபாய்............தம்முடைய தபேலாவிலே கட்டியிருக்கிற குதிரைகளிலே யாரும் ஏறமாட்டாதே பனிரெண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கினது கட்டியிருந்ததை அதனுடைய குணமும் சொல்லித் தேசிங்குராசனுக்குக் கொடுத்தார்கள். தேசிங்கு குதிரையை தபேலாவிலே போய்க் குதிரை கிட்டப் போகக் குதிரை தலையை இறங்கிக்கொண்டது. அதுவே அந்தக் குதிரைக்கு லகாம் போட்டு, சரசமாய்ப் பண்ணி தேசிங்கு ஏறித்திருப்பினார். அந்தக் குதிரையும் கொடுத்தார், குதிரையும் பணமும், வஸ்திரங்கள், ஆபரணங்களும், வாங்கிக்கொண்டு செஞ்சி வந்து சேர்ந்தார்.

அந்த வேளை தகப்பன் காயலாவா இருந்து விழுந்து போனார். தேசிங்கு பொந்திலிகண்டுலேயிருந்து வருகிறபோது அவாத்துக்கு காயலாவான சமாசாரம் போயிற்று. தேசிங்கு செஞ்சி வந்து சேர்ந்த பொழுது விழுந்த சமாசாரம் போச்சுது. தேசிங்கு தகப்பன் செரூப சிங்கிற்குச் செய்ய வேண்டிய கர்மம் காரியங்கள் செய்து போட்டுத் தகப்பன் பட்டத்தில் உட்கார்ந்தான். தேசிங்கு தகப்பன் இலாக்கா மனிதர் நசர் வைத்தார்கள். பாதுஷா கில்லே தைனாத்துவாக.......... நவிச முதல் கொண்டு நசர்வைக்கயில்லே. தேசிங்கு முன் கோபக்காரனென்று யாரும் சர்க்காருத்தாரம் இல்லாமல் பட்டத்திலுட்காரக் கூடாது சொல்லவில்லே. பின்னாலே சந்தோஷ வேளையில் பைய்யர் ராமகிருஷ்ண வாக்னெவிச நீர் பட்டத்திலுட்கார்ந்து சர்க்காரறிய

உக்காரவேணுமென்றும் பாதுஷா உக்கம் வேணுமென்றும், இல்லா விட்டால் கர்னடகம் பௌவுசுதார் நவாபு சாத்ததுல்லாக்கான் உத்தார மாகிலும் வேணுமென்று சொன்னர்.

அதற்குத் தேசிங்கு சொன்னது "எங்கள் தகப்பன் சொரூப சிங்கிற்கு ஆலங்கீர் பாதுஷா மிராசு பண்ணிக் கொடுத்தார். எங்களுக்கு யாரையிட்டும் காரியம் இல்லே. ஒருத்தரதிகாரம் தேவையில்லே" என்று சொன்னர். அதற்குப் பைய்யராமகிருஷ்ணன் சும்மாயிருந்தான். இதற்குள்ளே ஆறுமாதமாயிற்று. அப்படியிருக்க சொரூபசிங்கு செத்தது சாத்ததுல்லாக்கான் அறிந்தும், சபத்தி அனுப்பயில்லே. செத்துப் போன விசாரணைக் காகிதம் தேசிங்கு பேருக்கு எழுதி அனுப்பினர். சொரூபசிங் ஜாஹீர் தாலூக்காத்துகளெல்லாம் தேசிங்கு அதிகாரம் பண்ணிக் கொண்டு வந்தான்.

அப்படியிருக்கப் பாதுஷாயிலேயிருந்து செஞ்சிக் கில்லேதாரி சாத்ததுல்லாக்கான் பேருக்கு பரமானுவும், சொரூபசிங்கு பேருக்கு தாக்கீர்பரமானுவும், உசூரிலேயிருந்து சோடி அரக்காராக்கள் கொண்டு வந்து தாவுத்கான் முதல் கொண்டு தண்டு இறங்கினப்போலே பட்டண மாயிருக்கும். ஆர்க்காட்டில் சாத்ததுல்லாக்கானுக்குக் கொடுத்தார்கள். பாதுஷா பரமானுபார்த்துக் கொண்டு யோசனைகள் பண்ணிப் பாதுஷா சிரசத்தேதார் லாலா தொண்டர் மாலே அழைப்பித்துச் சொரூபசிங்கு மகன் தேசிங்கு முன்கோபி; சாகஸிமனுஷன்; ஆனபடியினலே, நீர் செஞ்சிக்குப் போய் சொரூபசிங்கு தாகீர் பரமானுவும் நம்முடைய காகிதமும் கொடுத்து, கோட்டையை சப்திபண்ணி, ஜாஹீர் ரத்துகளே யும் சப்தி பண்ணி, தேசிங்கை அனுப்பிவைய்யுமென்று சாத்ததுல்லா கான் அனுப்பிவைத்தார்.

தொண்டர்மால் ஆர்க்காட்டிலேயிருந்து அம்பது குதிரை கூடார முதல் வாங்கிக்கொண்டு, செஞ்சிக்கு வந்து முத்தியால் நாயக்கர் கட்டின வெங்கட்டராய சுவாமி தீர்த்தக் குளத்தண்டை கூடாரம் போட்டு இறங்கினர். கோட்டையிலிருந்து பைய்யர் ராமகிருஷ்ண வகையரா பாதுஷா இலாக்காதாரை வந்து கண்டார்கள். தொண்டர்மால் சொன் னது நவாபு சாத்ததுல்லாக்கானுக்கு செஞ்சி கிலேதாரி பாலிபரமானு வும் சொரூபசிங்கு தாகீர் பரமானுவும் கொண்டு வந்து இருக்குது என்று சொன்னர். அதற்கு அவர்கள் நல்ல தாயிற்று: யீயனினு இலாயத்து நாமாவும் பார்த்துக் கொண்டு பரமானுக்களுக்கு நகலும் பார்த்துக் கொண்டு வந்து தேசிங்குக்குச் சொன்னர்கள்.

அதற்குத் தேசிங்கு சொன்னார் "எங்கள் தகப்பனார் சொரூபசிங்கிற்கு ஆலங்கீர் பாதுஷா செஞ்சிக் கில்லா மிராசு பண்ணிக் கொடுத்தார். தான் கோட்டை விடுகிறது யில்லை" என்று சொன்னார். அதற்குப் பைய்யாராமக்கிருஷ்ண வகையறு சொன்னது "பாதுஷா பரமானு பௌவுசுதாரி யினையத்துனுமா பாதுஷா முசத்தி கொண்டு வந்துயிருக்கிறார். பேசவேண்டிய பேச்சு அவாளண்டே பேசிக் கொள்ளலாம். அவர் ரொம்ப நல்லவர். நவாப் சாத்ததுல்லாக்கானும் மெத்த நல்லவர். உங்கள் மிராசு வாங்கமாட்டார். நீர் தொண்டர் மாலைக்கண்டு பௌவுசுதாரையும் கண்டால் உம்முடைய பேருக்கு கில்லேதாரி பண்ணிக் கொடுப்பார். யுக்தியம் தொண்டர்மல்லைக்காணு" மென்று சொன்னார்கள். அதற்கு தேசிங்கு "நல்லது என்று தம்முடைய குதிரைகளைக் கூட்டிக் கொண்டு தகப்பன் பாட்டவணையோடே சவாரி பண்ணிக் கொண்டு மேல் செரியார் ராஜாக்கள் மசான கட்டம் பக்கம் போய் சக்கர்ப்பெருமாள் கோயில் ஆற்றங்கரை வழியாய் வந்து அவ்விடத்திலிருந்து கோட்டைக்கு வருகுற வழியாய் தொண்டர்மல்லுக்கூடாரம் வழியில் போட்டு இருந்ததைக்கிட்ட வந்தார்.

தொண்டர்மால் பாதுஷாக்கில்லேதாரன் மகன் வருகிறானே என்று பாதையில் எதிர் கொண்டு வந்தார். தேசிங்குக்குத் துறையின் பேரில் இருந்த வாக்கிலே ராமாராம் பண்ணினார். தொண்டர்மல்லு சவாரி பண்ணிக் கொண்டு கோட்டையிலே போய் தேசிங்கு இருக்கிற கச்சேரிக்குப் போனார். ஆனால் தொண்டர்மால் சாத்வீகபுத்தியையுடையவராயிருக்கும் போது பொங்திலியர் மட்டித்தனம் அதனாலே குற்றம் பார்க்கப் போகாதென்று பரமானுவும், பௌவுசுதாராய் நாயத்து நாமாவும், தேசிங் கையில் கொடுத்தார்.

தேசிங்கு படிப்பித்துப் பார்த்துக் கொண்டு கண் சிகப்பேற, கோபம் பண்ணிக்கொண்டு, "எங்கள் முராசு கோட்டையை சப்தி பண்ண ஒட்டேன். அப்படிச் சப்தி பண்ணினால் அனேகம் தலை உருண்டு போம்" என்று சொல்லி பாதுஷா பரமானுவும் பௌவுசுதாராய் இனமத்து நாமாவும் அக்கரையில்லை யென்று தொண்டர் மல்லுபக்கம் போட்டு விட்டார். தொண்டர்மல்லு அதற்குள்ளே எடுத்துக் கொண்டு தம்முடைய சவாரியோடே சாகாவுக்கு வந்து விட்டார். துய்நாத்திமனிதர் கூட வந்து எங்களுக்கு நடக்க வேண்டியதென்னவென்று கேட்டார்கள். நீங்கள் எப்போதும் போலே உங்கள் காரியத்திலிருங்களென்று அனுப்பிவிட்டார்.

தேசிங்கும் அப்படி நடப்பித்த செகிதியையும் அவன் கெடுதலையும் அவன் சொந்தத்தில் முன்னூற்று அம்பது குதிரைக்காரர் அவன் இலாகா மனிதர் அய்னூறு பேர் வரைக்கும் இருக்கிறார்கள். கோட்டை சப்தி பண்ணினால் கானசங்கியாகுமென்றும் வயணமாய்க் கர்னாடகம் பௌவுசுதார் நவாபு சாத்ததுல்லாக்கானுக்குத் தொண்டர்மால் எழுதினார். அத்தை பௌவுசுதார் பார்த்துக் கொண்டு தமிரியமயத்தானத்தில் சண்டா போட்டார். ஒரு மாதத்திற்குள்ளே பௌவுசுதார் தண்டு அய்யாயிரம் குதிரை பதினாயிரம் காலாள் இதுவுமல்லாமல் வெங்கடகிரி பங்காரு எச்சம் நாயக்கன், காளபத்திரியான் பொம்மு ராஜா, பாளயக்காரர் கில்லேதார்கள் தண்டும் முப்பதினாயிரம் பௌவுசு கூடிற்று. பௌவுசுதார் எதிரிபேரில் எந்த எந்த சாமான் செண்டைக்குச் சேகரம் பண்ண வேணுமோ அந்தப்படி சேர்த்துக் கொண்டு ஆரணி வந்து சேர்ந்தார்.

ஆரணிக்கில்லேதார் வெங்கிட்டராயர் வந்து நவாபைக் கண்டு நசர் பணமும், பேஷ்கிஸ்தி பணமும் கொடுத்து, அவர் செனங்களையும் கூட்டினார். நவாபு அவ்விடத்தில் பதினைந்து முகாம் பண்ணி சேத்துப்பட்டிற்கு வந்து சேர்ந்தார். சேத்துப்பட்டுக்கில்லேதார் சலாபத்துக்கான் பௌளவுசுதார் வந்து கண்டான். அவ்விடத்திலேயும் பணம் வாங்கிக் கொண்டு பத்து முகாம் பண்ணினார். தொண்டர்மல்லும் தண்டு வந்து சேர்ந்தார். செஞ்சிக் கோட்டையிலிருக்கிற பாதுஷா தையினுத்து பைய்யாராமகிருஷ்ண வகையறாவர்க்கே நவீச் தேசிங்குக்குச் சொன்னது கர்னாடகம் பௌவுசுதார் நவாபு சாத்ததுல்லாக்கான் சகலமான ஜாஹீர்தார், ராஜாக்கள் தண்டைச் சேர்த்துக் கொண்டு செஞ்சிக் கோட்டை பேரில் வருகிறார்.

பாதுஷா பௌவுசுதார் கர்னாடகம் கில்லேதார் சாஹீர்தார் ராஜாக்கள் பேரில் எசமானத்துவமாய் மீறவொட்டாமல் பகுதிப் பணம் வாங்கும் பொருட்டால் அதிகாரம் பெற்று இருக்கிறவர் உங்கள் தகப்பன் பேருக்கு தாகிர் பரமான ஆயிருக்கிறது. அத்தையும் மதியாமல் செய்கிறது யுக்தமல்ல இப்பவும் நீர் பௌவுசுதார் பேட்டி கண்டால் உசூருக்கு எழுதியனுப்பி உம்முடைய பேருக்கு கில்லேதாரி அழைப்பிப்பார்கள். கனமான தண்டு வாங்கிக் கொண்டு சமீபத்திலே வந்து இருக்கிறார். உம்முடைய சக்திக்குத் தோணினபடிக்குப் பார்த்துக் கொள்ளுமென்று சொன்னார்கள். அதற்குத் தேசிங்கு உத்தரம் கொடுக்கயில்லை. அப்படியிருக்க நவாபு தண்டு கடலி வலையண்டை வந்து இறங்கிற்று.

செஞ்சிச் சீமையில் நவாபு தண்டு..............உத்தாரம் இல்லாமல் கொஞ்சம் கொள்ளையிட்டார்கள். செஞ்சிப் பட்டணத்தில் தண்டு மனிதர் பரவினார்கள். செஞ்சிக் கோட்டையில் பாதுஷா........தாபச்சி கள் தையிநாத்தான் படியினாலே யாரும் பௌவுசுதார் தண்டு பேரில் கத்தி எடுக்கயில்லை. அப்படியிருக்க, தேசிங்கு தகப்பன் அவர் தாவிலி லிருக்க...........வழுதாவூர் கில்லேதாருக்கு எழுதியனுப்பி கில்லேதார் மகன் மோகபத்கான் அவன் சினேகிதர் ரெண்டுபேர் அம்பது குதிரை யும் அழைப்பித்தார். அவாளும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வந்த உடனே தேசிங்கு தம்முடைய குதிரை பேரில் ஆயுதபாணியாய் ஏறினார். அதற்கு அவர் இஷ்டர் நீ போறது யுக்தமாய்க் காணவில்லை. சகுனத்தடையாவுது என்று சொன்னார்கள். அது கேளாமல் பெண்சாதி க்கு நான் திரும்பி வராமல் போனால் உன் மானத்தைக் காப்பாற்றிக் கொள். துலுக்கர் வருகிறார்களென்று சொல்லியனுப்பி இஷ்ட செனத் திற்கு சம்மதியாகாமலிருக்கிறவாள் தேவையில்லை என்று குதிரையை ஆர்க்காடு பாதையில் விட்டார்.

அப்பொழுது இரநூறு குதிரை மட்டும் பொகுபக்காரனும் கூட வந்தார். நவாபு தண்டு மனிதர் எதிர் பட்டால் அவர்கள் பேரில் திரு ஷ்டி வைய்யாமல் வராகநதிக் கரையில் வந்து சேர்ந்தார். அப்படி ஐப் பசி மாதம் மாரிகாலமான படியினாலே ஆறு தண்ணி ரொம்பி வந்தது. அவ்விடத்தில் ஒரு நிமிடமிருந்து முன்னதாய்த் தேசிங்கு ஆற்றில் குதிரையை விட்டார். அந்தக் குதிரை பீதனூர் ராஜா கொடுத்தது. நூறு குதிரை வரைக்கும் தேசிங்கு கூட மோபத்கானும் ஆறு அக் கரை போய்ச் சேர்ந்தார்கள். மற்ற குதிரைக்காரர் தனியே நின்றார்கள். ஆறும் பெரியதல்ல: மனிதர் மழை பெய்து அடைபட்டால் ரெண்டு சாமமப்பால் போகலாம்.

தேசிங்கு அக்கரை போய்ச்சேர்ந்து நவாபு தண்டு..............தம் மோடு குதிரையோடே விட்டார்கள். தேசிங்கு வருகிறசேதி நவாபிற் குத் தெரிந்து தம்மண்டையிருக்கிற தௌலத்கானைத் தண்டு தயார் பண்ணிக்கொண்டு போய்த் தேசிங்கு வருகிறவனை சண்டைபண்ணி அடியாமல் வளைத்துப் பிடித்துக் கொண்டு வா என்று அனுப்பித்தாமும் தயாராய் அம்பாரியின் பேரிலேறினார். தௌலத்கான் அம்பாரியின் பேரிலேறிக் கொண்டு தம்முடைய சனத்தோடே வந்தவர் தேசிங் நூறு குதிரையோடே வருகிறதைப் பார்த்து ஜெனங்களைச் சுற்றி வளைக்கச் சொல்லித் தாம் பிடிக்கிறோம் என்று வந்தார். அப்பொழுது தேசிங்கு

..........கான் வகையரு தௌலத்கான் தண்டு ஜனங்கள் பேரில் குதிரையை விட்டுச் சண்டைபண்ணினார்கள்.

தௌலத்கான் சேனம் குதிரைக்காரரும் காவலாளுமாய் ராஜ...... சேனங்கள் கூடயிருந்தவாள் மிஞ்சி சண்டை கொடுக்கிறார்களென்று மேல் விழுந்து சண்டை பண்ணினார்கள். ஒரு நாழிவரைக்கும் கை கலந்து சண்டைபண்ணி நவாபு தண்டிலேயும், தேசிங்கு மனிதரிலேயும் அம்பது பேர் வரைக்கும் விழுந்து போனார்கள்.

தேசிங்கு கூடவந்த குதிரைக்காரர்களிலே சிறிது பேர் ஓடிப் போய்விட்டார்கள். மொரபதகானும் அவன் சினேகிதர் ரெண்டு பேரும் நின்றார்கள். அவர்கள் தீர்க்க சண்டை பண்ணி நவாப் சேனத்திலே சிறிது பேரை வே...........இங்ககளும் வெட்டுப்பட்டுச் செத்துப் போனார்கள். அது தேசிங்கு தனியே நின்றவன் பார்த்து அதிக கோபமாய்த் தௌலத்கான் அம்பாரி பேரில் இருக்கிறவனைக் கொல்ல வேணுமென்று நவாபு சேனங்களை விட்டு அம்பாரி பக்கம் குதிரையை விட்டான்.

அப்போது தௌலத்கான் தம்முடைய சேனங்களை "ஜெயசிங்கெக் கொல்லவேண்டாம்: எசமானர் உத்திரவு இல்லை. கைப்பிடியாய் பிடியுங்களென்று" யானையை விட்டுக்கொண்டு வந்து தேசிங்கைப் பிடிக்குறதைதினத்தின்[25] பேரில் இருந்தான். அப்படியிருக்க தேசிங் கொஞ்சம் சந்து கொடுத்து அம்பாரி பேரில் குதிரையை விட்டு அதி வேகமாய்க் குதிரை முன் காலனண்டையும் யானைப்பக்கத்தில் சூல பக்கம் வைத்து தேசிங்கு சாங்கினாலே தௌலத்கானைக் குத்தி வேகத் தோடே செஞ்சி பக்கம் நோக்கிக் குதிரையை விட்டுக் கொண்டு வந்தார்.

நவாபு தௌலத்கானைத் தேசிங்கு கொன்று போட்டும் கோபம் பாராட்டாமல் தேசிங்கைக் கையால் பிடியுங்களென்று யானையைவிட்டுக் கொண்டு வந்தார். தேசிங்கு நவாபு யானை பேரில் குதிரையை விட்டான். அப்பொழுது நவாபு யானையைச் சுற்றிக் கொண்டுயிருந்த சேனங்களிலே ஒருத்தன் குதிரை மேல் விழுந்து வரகிறபோது குதிரையின் காலை வெட்டினான். குதிரை விழுந்து போயிற்று. தேசிங்கு காலாளானான். அப்பொழுது நவாபு குதிரை விழுந்து காலாளானது பார்த்துத் தம்முடைய ஜெனங்களை "மிஞ்சாதையுங்கள் கைப்பிடியாய்ப்

25. தேசிங்கைப் பிடிக்குறதைத் தினத்தில்—தேசிங்கைப் பிடிக்கிறயத் தனத்தில்.

பிடியுங்களென்று யானையை சமீபத்தில் கொண்டு வந்தார். பக்கத்தில் பங்காரு எச்சம நாயக்கன் யானையம்பாரியின் பேரிலிருந்தவன் தம்முட சேனத்தைத் தேசிங்கைப் பிடிக்கச் சொன்னான். அதிலே ஒரு சமேதாரான கேடயத்தை ஆசாமா பிடித்துக் கொண்டு, அந்த அசாரா விலே பிடிக்கவந்தான். அவனைத் தேசிங்கு[26] சாங்கினாலே குத்தினான். அதுவே எச்சமநாயக்கன் அடியுங்களென்று சொன்னான்.

ஒருத்தன் கர்னாடக துப்பாக்கிபார் பண்ணி வத்தி கொளுத்தி வைத்திருந்தவன் மாருக்குப் பிடித்துச் சுட்டான். அதுவே நவாபு தேசிங்கு பொணத்தைக் கொண்டு வரச்சொல்லி செய வருடம் ஐப்பசி மாதம் ரெண்டாம் தேதி சென சதளவசெ பசலி இரண்டு நாழிப் பொழுதிற்குச் செஞ்சிக் கோட்டையில் போய்ச் சேர்ந்தார். நவாபு செஞ்சி பாதுஷா பாதனசாது கெடை கில்லேதார் மாசி சொருபசிங்கு கலியாணமாலிலே போயி உட்கார்ந்து சொருபசிங்கு கஜானா வகையறு பேரில் மோகர் பண்ணிக் கொண்டார். பாதுஷா இலாகாதார் இனயத்து ஜெனங்கள் நவாபு தண்டு கூட வந்த அமீர்கள் ராஜாக்கள் வகையறு சொருபசிங்கு இலாகாமனிதர் தமாம் முபராக் பர்சி கொடுத்து நசரும் வைத்தார்கள்.

கோட்டை சக்கிராப் பாருத்கானா வகையறு சவுக்கி பாராபந்தோ பஸ்து பண்ணிக் கொண்டு தேசிங் பெண்சாதி வகையறுவிற்குக் காதர் சமாசாரம் சொல்லியனுப்பினார். தேசிங்கு பெண்சாதி தாங்கள் தகப்பன் ஆனபுருஷன் சென்றுபோய் என் சிவனை வைக்கமாட்டேன். உடன் கட்டை ஏறச்செலவு கொடுங்களென்று சொல்லியனுப்பினார். நவாபு என்ன ராசி பண்ணினாலும் கேட்கமாட்டேன் என்று சொன்னாள். உடன் கட்டை ஏறுவதற்கு என்ன சாமான் வேண்டுமோ அதற்கும் அக்கினிப்பிரவேசமாவதற்கும் நவாபு செலவு கொடுத்தார். மறுநாள் காலமே கோட்டைக்குள்ளே ராஜாராம் நாளையில் ராமுச்செட்டி

26. தேசிங்—இப்போது அச்சில் வழங்குகிற தேசிங்குராஜன் கதை இந்த வரலாறேடு மாறு பட்டிருக்கிறது. See தேசிங்குராஜன் கதை & C. S. Muthuswami Ayyar's தேசிங். இதற்குக் காலஞ்சென்ற புரொபெஸர் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முகவுரையொன்று எழுதியுள்ளார். C. S. ஸ்ரீநிவாஸா சாரியார் எழுதிய A History of Gingee and its Rulers என்னும் புத்தகத்து 410ஆம் பக்கம் அடிக்குறிப்பைப் பார்க்க.

கட்டின குளக்கரையில் தேசிங்கு பிணத்துடன் உடன்கட்டை ஏறினாள். தேசிங்கு தமயன் பிள்ளை அனுபசிங்கினுடைய பிள்ளை செய்யவேண்டிய கர்மம் காரியம் செய்து போட்டார்.

---

8. தேசிங்கின் இறுதியும் ஆர்க்காடு நவாபின் திட்டங்களும்

சகலசிலவும் நவாபு உத்தரவின் பேரில் செய்தார்கள். தேசிங்கு இலாக தாரகனே முன்னாலே எப்படியிருந்தார்களோ அந்தப்படியிருக்கச் சொல்லி நவாபு சொன்னார். அந்தப்பேச்சு அவாள் கேட்கமாட்டோ மென்று நவாபு உத்தாரம் வாங்கிக்கொண்டு தேசிங்கு விழுந்த கடலிமலை கிட்ட பெட்டை ஏற்றச் சொல்லி கவில்கொடுத்து தேசிங்குக்குக் கோவில் கட்டி மோகபத்கான் வகையரு துலுக்க செனங்களுக்கு விழுந்த இடத் தில் கோரி கட்டி, குதிரைக்கும் கோரிகட்டி, மோகபத்கான் அவன் சினேகிதர்கள் ரெண்டு பேரும் மூன்று பேருக்கும் செஞ்சி கசுபாவில், அவர்கள் பிணத்தை அழைப்பித்துப் புதைத்துக் கோரி கட்டினார்கள். செட்டிகுளக்கரையில் பிருந்தாவனம் கட்டி வேம்பும் அரசும் வைத்தார் கள்.

தேசிங்கு இலாகாவில் சேர்ந்த பொந்திலியர் தமாம் தங்கள் வர்த்தன பொந்திலிகண்டு போய்ச் சேர்ந்தார்கள். நவாபு தேசிங்கு தீவான் மல்லா அனுமாசி பணம்தர திருவெங்கடப்பிள்ளை வகையரு வண்டை ஜாஹீராத்தும் ராவாசல் பாக்கி வாங்கிக் கொண்டு பர்க்கானு அமானிபண்ணி, அமல்தார்களை அனுப்பினார்கள். வாரம் தீர்வை கோலும் பேட்டையாருக்கு கவில் நாமாவும் திட்டம் பண்ணினார். கோட்டைக்குத் தம்முடைய சகலன் சாத்தயாராகானை நவாபுகில்லே தாரியும், மனசுபும் கோனைவகையரு ஜாஹீரும் கொடுத்தார். பதண்ட ராயருக்கு பௌவுசுதாரிகை திட்டம் பண்ணினார்.

தேசிங்கு விழுந்தயிடத்தில் பேட்டை கட்டினது பத்தே பேட்டை என்று பெயர் வைத்தார். பாதுஷா தையினாத்தி பையாராம் கிரு ஷ்ண வகையருக்களுக்கு மாமூல் படிக்கு உத்தியோகத்தில் வைத்தார். ராசக்கடை, கிருஷ்ணக்கடை, ஜெண்டராயன் துர்க்கம் இதுகளுக்கு கில்லேதாரியும், முசுத்திகளையும், சர்தார்களையும் திட்டம் பண்ணினார். கிருஷ்ணக்கடை கெவுத்தம் வெங்கடபதிக்குக் கொடுத்து மாமூல்

படிக்கு பென்னுத்தூர் ஜாஹீர் விட்டார். பூமிக் கோட்டைக்கு ஆஷா முஷாரபசவுக்கி நவீசல் வகையறு திட்டம் பண்ணினர். சகலமான பேரும் சாத்த தையார்க்கான் வரத்தி கேழ்க்கச் சொல்லியும் திட்டம் பண்ணினர். முன்னாலே தைனத்திருந்த, அசாரிகள் தவிர சையத்து சூலுத்கான், அபுதுல்கரீம் ஆயத்கான் வகையறு சமேதராக்களையும், பிராதரி கூட கில்லாத இனுயத்துப் பண்ணினர்.

கில்லா காரியம் சாத்ததையார்க்கான் யகத்தியாரியாய் பண்ணிக் கொண்டார். பாதுஷா காசிசேக்கு அப்துல்காதர் மருமகன் மகமத் லலிக்கு காசி உத்தியோகம் திட்டம் பண்ணினர். கோட்டைக்குள்ளே சிம்மா மசூதியும், செட்டிபாளயம் ஏரியதருவாயில் ஈதுகாவும் கட்டி வைத்தார். இந்தவேலை ஒரு இடத்திலும் இராத லாலாத்கனராய் திவானும், சிங்காரத்தோட்டம் போட்டு, மெத்தை வீடும் கட்டினர். செஞ்சிக்கோட்டை வாங்கின நாள் வருடம் கல்லில் அடித்துப்பத்தே தருவாசா வாசப்படிமேலே கட்டிவைத்தார்கள். அப்படி நாலுவருடம் நவாபு சாத்ததுல்லாக்கான் செஞ்சிக் கோட்டையிலிருந்து கொண்டு கர்னுடகம் பௌவுசுதாரி பண்ணிக்கொண்டு, உசூர் உக்கம் படிக்குச் சிரெங்கப்பட்டணம் வகையறு, மதுரை, திருச்சிராப்பள்ளி, ராமனுத புரம், தஞ்சாவூர், வெங்கடகிரி வகையறு ராஜாக்களண்டையும், கர்னுட கம் கில்லா அம்பது நாலு கில்லா கில்லாதார்களண்டையும், பாளயக் காரரண்டையும், சென்னைப்பட்டணம் வகையறு பந்தர் கொட்டிக்காரர் களண்டையும், பேஷ்கிஸ்தி திட்டப்படி வாங்கிக்கொண்டு கால்சா பணமும் வசூல் பண்ணிக்கொண்டு இருந்து செஞ்சி தண்ணி செம்மை யல்லவென்று செஞ்சிக்கில்லா சகல அதிகாரமும், செஞ்சி நாயப்பர்வசம் பண்ணி விட்டு ஆர்க்காடு போய்ச் சேர்ந்தார். ஆர்க்காட்டிலிருந்து கொண்டு நீதியாய் ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு இருக்கும்போது மல்லியிலே மகமத்ஷா பாதுஷா நாளையிலே தக்கனவசீர் நிசாமத் உலக நிசாமத்தஉல்லா அசபஷா பத்தேசிங்பாதர், கர்னுடகம்.........அயீத்து ....பாதுலேயிருந்து.........ராயாலாத்துக்கு வடக்கு தக்கனராயி திவான் கட்டிவைத்த பேட்டைகிட்ட தண்டோடே.........இன் கர்னுட கம் ராசாக்கள் கில்லேதார் பேஷ்கிஸ்தி கணக்கு, காலசா கணக்கு, சிப்பந்தி துமரவாசல் பாக்கி தயார் பண்ணிக்.........அனுப்பினர். அது சாத்ததுல்லாக்கான் பார்த்துக்கொண்டு கானுகோதி மாசத்தா நொண்டிகிருஷ்ணுசி பண்டிதரை அழை.........ணிக்கொண்டு கில்லா ஜாகீர்வாரிக் கணக்கும் நாளையதினம் நவாபு தண்டு போய் சேரவேணு மென்று தக்கணராய்.........க்கும் திட்டம் பண்ணினர்.

அதற்குக் கிருஷ்ணஜிப்பண்டிதர் சகல கணக்கும் தயாராவுது என்று சொன்னர். அப்படியே மறு நாள்.........நா தம்முடைய பரட்ட வணேயோடே கூடார முதல், கடைகள் முதல் வாங்கிக்கொண்டு திவான் சிரஸ்திதார் கானுகோவிற்கு மாசத்தா.........கிப்போய் நவாபு அஸபஷா தண்டிற்கு அதாடிப்போயிறங்கினர்கள். அதற்கு மறுநாள் சாத்ததுல்லாக்கான் அகல்கலம்.........க்கிப்போய் நசர் வைத்துக் கொண்டார்கள். நவாபு அஸபஷா சாத்ததுல்லாக்கான் கர்னடகம் பௌவுசுதார் பேரில் அதிகதய.........சாத்ததுல்லாக்கான் சலாம் உட்கார்ந்தார். திவான் முதல் முஸ்திகள் நின்று கொண்டு இருந்தார்கள்.

அஸபஷா சாத்ததுல்லாக்கான்.................டகம் ஜாஹீர் வாரிக் கணக்குக் கேட்டார். அதற்குத் திவான் உத்தரம் கொடுக்கமாட்டாமல் கிருஷ்ணஜி பண்டிதர் காகிதம் கையில் எடுத்துக் கொண்டு............ ரியாய்ச் சொன்னர். காலசா கணக்கும் சொன்னர். சிப்பந்திச் சருக் கார் இசாராவாசல் பாக்கியும், சகலகணக்கும் கேட்ட கேழ்............ கம் ஜாஹீர்தார், ஜமீன்தார், ராஜாக்கள், பாளயக்காரர், பேஷ்கிஸ்தி வாசல் பாக்கியும் சொன்னர். நவாபு அஸபஷாபாதர்கர.........தோஷ மாய்ச் காரகோபிகில்லேத்தும் சரப்பேச்சு வகையறு இனயத்துப் பண் ணினர். நாவாபுக்கு நசர் பேஷ்கிஸ்தியுமாய் அஞ்சு லட்சம் ரூபா..... யும்............நசி சர்வகாருக்கு............லாகான் திட்டம் பண்ணினர். அதுவே நவாபு அஸபஷா பாதர் பத்து நாளிருந்து பௌவுசுதாருக்கு ....பகுஷிமாறுபத்தில் சேவகம் அமர்ந்தார். அப்படி ரெண்டு மாதமிருந்து உரூர் மட்டுக்கும் போக்குவரத்தாய் எதுப்பாராய்......... ....நாள் யானேயம்பாரி தயார் பண்ணிக் கொண்டு ஷாஸாதாவை அம்பாரியின் பேரிலேறச் சொன்னர். அதற்கு 'ஷாஸாதா சோட்டாவா ....என்ன அடித்தாலும் விடமாட்டேனென்று தன்னுடைய பாதரி அன்நூறு குதிரையும்............அவ.........திய ஜமீன்தார்கள் ....பேஷ்கிஸ்தியும் நசரும் சிராசு பாதர் வசம் வாங்கிக்கொண்டு ஹைதராபாத் போயிசேர்ந்தார்.

அப்.........மகமத்ஷா சாதா அக்ராகில்லாவிலிருந்து தப்பித் துக்கொண்டு சிறிது இரத்தினங்களெடுத்துக் கொண்டு நாலுவசீர்கள் தம்மண்டையிருந்............த்தாவுக்குப் போம் சேட்டு வசம் அம்பது லட்சம் ரூபாய்க்கு உண்டி திருப்பதிக்கு வாங்கிக் கொண்டு திருப்பதிக்கி வந்து சென்னேப்பட............வண்டையிறங்கி சகலமான பௌவு சுதார் நவாபு அஸபஷா முதல் கொண்டு தம்முடைய செண்டாவின் கீழ் அவாளவாள்...............ரு பரமாணு எழுதி நாம் சிப்பந்திவைத்தார்.

ரெண்டாயிரம் செனம் சேர்ந்தது கர்னடகம் பௌவுசுதாருக்கும் எழுதினபடியினலே...............னபடியினலே ஷாசாதாவுக்கும் உத்திரம் எழுதிப் போட்டு டில்லிக்கு முகமத்ஷாவிற்கும் ஷாசாதா பூர்வோத்திரம் வயணமாய்...............ண்டு ஷாசாதா தப்பல அவரை மரியாதை தாழ்வு பாராமல் பத்திரப் படுத்தவுமென்று பாதுஷா பரமான சாத்ததுல்லாகானுக்கு............பார்த்துக்கொண்டு யோசனையின் பேரிலிருந்தார்.

அதற்கு அடுக்கல்கான் ஜமேதார் பரதர் பண்ணிக் கொண்டு பாராதரி............பகுஷி மாறுபத்தில் சேவகம் அமர்ந்தார்.

அப்படி ரெண்டு மாதத்திலிருந்து உசூர் மட்டிற்கும் போக்குவரத்தாய் எதுப்பாராய்............நாள் யானையம்பாரி தயார் பண்ணிக் கொண்டு, ஷாசாதாவை அம்பாரியின் பேரிலே ஏறச் சொன்னர்.

அதற்கு ஷாசாதா சோட்டாவா..........என்ன அடித்தாலும் விடமாட்டேனென்று தன்னுடைய பாதரி அன்நூறு குதிரையும் சுற்றி நிறுத்திக்கொண்டு பாதுஷா உத்தரவு இப்.........ரு சொல்ல ஷாசாதா நாசராய் அம்பாரியின் பேரிலே ஏறினர். வசீர்கள் நாலுபேரும் சவாரி பண்ணிக் கொண்டு.........தரைகொண்டு போனர். ஷாசாதா அனேக கோபம் பண்ணி வாயினலே சின்னப்பேச்சுகள் பேசினர். அந்தப்படியே ஆர்க்காடு.........கினர்கள். ஷாசாதா மூன்று நாள் பட்டினியாகயிருந்தார்.

சாத்ததுல்லாக்கான் மூன்று நாளும் ஷாசாதா யிறங்கின தர்வா.........கட்டியிருந்தார். அப்படியிருக்க, ஒரு கிழவி துலுக்கச்சி நாலா நாள் சோறு கொண்டு போய் ரகசியமாய்த்தானே ஷாசாதா............திட்டம் பண்ணினர். அ.........போட்டுக் கொண்டுவந்தாள். அப்படி ஒரு மாதமாயிற்று. ஷாசாதா கோபம் நிற்கவில்லை.

பௌவுசுதார் ஷாசாதா தர்வாசாவிலே இருந்தார். ஷாசாதா பௌவுசுதாரைக்கண்டால், சின்னப்பேச்சுகள் சொல்லுகிறர். அப்படியிருக்க சாத்ததுல்லாக்கான் யோசனை பண்ணி, ஆர்க்காட்டிலே சாபாஷகான் மருதே அதுமே மகள் குரான் படிக்கப்பட்டவள் புத்திசாலி. அவளை ஷாசாதாவிற்கு நிகாபண்ணிவைத்தார். பிற்பாடு ஷாசாதாவிற்குக் கோபம் தணிந்தது. இதுகளெல்லாம் ஷாசாதாவை அழைத்து வந்த உபாய முதல் டில்லிக்கு மஹமத்ஷா பாதுஷாவிற்கு பௌவுசுதார் எழுதினர்.

அவ்விடத்திலிருந்து பாதுஷா உத்தாரமானது ஷாஸாதாவை நசாத்து கிடைகில்லா உனக்குள் பத்திரமாய் வைத்துக்கொண்டு மூன்று லட்சரூபாய் சாலியானு கர்னாடகம் இசாரா பணத்தில் கொடுக்கவும். கர்னாடகம் விஜாரா பணத்தில் முசல் கொடுக்கிறேமென்று பரமானு பௌவுசுதார் பேருக்கு வந்தது. அது பௌவுசுதார் பார்த்துக்கொண்டு செஞ்சி பாதுஷா பாதருபென சாதுக்கெடை தாங்கள் பார்க்கலாமென்று சொல்லி சவாரி தயார் பண்ணி ஷாசாதா மால் கூட அழைத்துக்கொண்டு செஞ்சிக்கில்லாவில் சேர்ந்தார்கள்.

அப்படியிருக்க, சாத்ததுல்லாக்கான் யோசனை பண்ணி சாலியானு லட்சரூபாய் கொடுத்துக்கொண்டு வந்தார். ஷாசாதா சொரூபசிங்கு கில்லேதார் மாசி கலியாணமாலிலே இருந்தார். நாயக்கக்கில்லேதார் சாத்ததயார்க்கான் தினம் முசல் பண்ணிக்கொண்டு வருவான். அவர் தயவும் சம்பாதித்துக்கொண்டு இருப்பான். நவாபு சாத்ததுல்லாக்கான் ரெண்டு வருடத்திற்கு ஒருதரம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் வகையரு பேஷ்கிஸ்தி வாங்க தண்டோடே ஆர்க்காட்டிலிருந்து செஞ்சிக்கு வந்து, கில்லே தார் வீட்டிலே யிறங்கி, ஷாசாதா பேட்டி பண்ணிக் கொண்டு, பத்து முகாம் பண்ணிப் போவார். அப்படியிருக்க பௌவுசுதார் கர்னாடக ராஜாக்கள் வகையரு கில்லேதார் சீரெங்கப்பட்டண ராஜா இவர்களிடத்திலும், பந்தராஜா கொட்டிக்காரரிடத்லேயும் பேஷ் கிஸ்தி வாங்கிக்கொண்டு, கர்னாடகத்தில் அம்பத்து நாலு சில்லாக்களுக்குப் பாதுஷா உக்கம் படிக்கு பாதுஷா பரமானுப்படிக்கி வசீர்கள் பரமானுபடிக்கும், கில்லேதாராயிருக்கிறவாள் போக மற்ற கில்லாக்களுக்கும் தம்மிடதரப்பில் கில்லேதார்களைத் திட்டம் பண்ணிப் பாதுஷா உத்தாரம் நவாபு வசீர் அஸபஷா வகையரு உத்தாரம் பண்ணிக் கொண்டு ஜாஹீர் ஏற்படுத்தியும் வைத்தார்.

ஆனல் சாத்ததுல்லாக்கான் நவாய்த்தனுன படியினலே தன் னுடைய சாதியாரைக் கில்லேதார்களாய் ஏற்படுத்தி மானமாய் நடப் பித்தார். செஞ்சி சீமை முன்நூற்று அறுபத்தைந்து கிராமங்களிலே ஜாஹீர் பொக்காலசா குன்னத்தூர் வகையரு கிராமம் அம்பது மற்ற கிராமமெல்லாம் ஜாஹீர் அவர் பௌவுசுதாரியில் சென்னைப்பட்டணத் தில் இங்கிரேச்காரர் கில்லாகட்டினது அஸபஷா கேட்டுப் பௌவு சுதாருக்கு இங்லீஷ்க்காரர் கில்லாகட்டுறது, நிறுத்திப் போடவுமென்று தாக்கீது எழுதினர்.

பௌவுசுதார் நல்லவரான படியினலே இங்கிலீஷக்காரர் பேரில் பிதாடிக்கயில்லே கர்னாடகம் பாயனகட்டு சீமை கில்லாக்கள் பாதுஷா

கில்லா செஞ்சி ஏழுகில்லா, கலவல் கிடங்கல் பெருமுக்கல் வழுதாவூர் விருத்தாசெலம், பாளயங்கோட்டை, ரஞ்சன்கடை, குஞ்சலக்கெடை, சங்கிராபுரம், முஸ்தபாக்கெடை, வேப்பூர் துர்க்கம், ராவத்தநல்லூர், சிதம்பரம், திருவண்ணுமலையில் வாளசூரபோவன் கடை, கர்னுடகக் கடைக் கோனூர்க்கில்லா பெண்ணுத்தூர், திம்மப்பையன் துர்க்கம், மல்லிகார்சுனக்கிடை, ஆரணி, சேத்துப்பட்டு, செங்கல்பட்டு, கருங்குழி, பூந்தமல்லி, மைலாப்பூர், திருப்பாச்சூர், தாமர்ப்பாக்கம், திமிரி, ஆர்க்காடு, வேலூர் துர்க்கம், கோட்டை, வந்தவாசி, கைலாச கெடப்பை வீடு வண்ணுன் துர்க்கம், சக்கிலி துர்க்கம், வசந்திரக்கடை, கெடியாம்பூர் கெடை, ஆம்பூர் ஆர்க்கெடை, சாத்தூர் கடை, சித்தூர்மாய் மண்டலம், ஆவல்கொண்டை, சந்திரகிரி, உதயகிரி, ராமப்பூர், சைத்திய வீடு, செக்கு தேவக்கடை, சுலுபக்கடை, கிருஷ்ணகிரி வகையரு இன்னும் சில்லறைக் கடைகள், இப்படி எண்பத்து நாலுக்கில்லேதார்களிடத்திலும் பேஷ் கிஸ்திவாங்கிக் கொண்டு, சர்க்கார்காலசா கிராமங்களிலேயும் நீதியாய் பணம் தாசில் பண்ணிக்கொண்டு ஜமீந்தார்களண்டையும் பகுதி வாங்கிக் கொண்டு சென சதசயிசு பசலி ஆனந்த வருடம் வரைக்கும் நீதியாய் ராஜியம் பண்ணி விழுந்து போனூர். அவருக்குப் பிள்ளைகளில்லை. அவர் மச்சினிபிள்ளை ஒருத்தர் கருங்குழி சாபரல்லிகான் கில்லேதார் ஒருத்தர் மகமத் சய்யத்கான் கானபாதர் சாத்ததுல்லாக்கான் இருக்கும்பொழுது பாதுஷாவிற்கு நசர் அனுப்பி, ஆலேக்காருக்குப்பணம் அனுப்பி, தமக் குயஞ்ச அசாரி மன்சபும், சாலர்தார் பலவருக்கும் கத்தி கேடையம் சமதாடு சிகா கல்கி மாயிமார்த்த பலவகையரு அழைப்பித்துக் கொண்ட போது மச்சினிச்சி பிள்ளைகளுக்கும், மனசம் ஜாஹீர் அழைப்பித்து இருக்கவும்.

இவர்கள் இசம்நவிசு பாதுஷா வண்டை தாக்கலிருக்கவும். சாத்ததுல்லாக்கான் பட்டத்தில் யோக்கியமில்லாமல் அவர் தமயன் வேலூர் கில்லேதார் குலாமல்லிகான் பிள்ளை **தோஷுதல்லிகானுக்கு** கர்னுடகம் பட்டமாயிற்று.

---

9. கர்னுடகத்தில் அரசியல் நிகழ்ச்சிகள்

அந்த தோஷ தல்லிகானும் பௌவுசுதாரி ரீதியாய்ப் பண்ணிக் கொண்டு இருக்கிற நாளேயில் தாட்பத்திரி சய்யத்மகமத்கான் முன்னூறு குதிரையோடே கூட சைய்யத் கூட்டம் செஞ்சிக் கில்லாதயினுத்தா வந்திருந்தார்கள். அவாள் செஞ்சியிலிருகற பொழுது, செஞ்சிக்குக் கீழண்டை ரெண்டு நாழி வழியில் வராக நதிக்கரையில் மலேயோரமடி வாரத்தில் டிகாணுடபாவா என்கிறவர் முன்னூறு வருடமாய் யோக மடம் கட்டிக்கொண்டு சுனேயுமிருக்க யோகம் சாதித்துக்கொண்டிருந்தார். அதுசேதி துலுக்கசலாலிவக்கீல்கள் கேட்டு ராத்திரி காலத்தில் பொறு மையினுலே அந்த மஹா புருஷனேக்கொன்று போட்டார்கள். அது சேதிவாலா பதண்டாராயர் ஆசாரி கூட்டம் இந்துக்கள் தெரிந்து அவர் பொணத்தை எடுத்துக்கொண்டு சாத்ததுல்லாக்கான் கிலேதாரண்டை வந்து பாவாடம் போட்டுக் கொண்டு இந்துக்களெல்லாம் ஒன்று கூடி கயவாளிகளேப் பிடித்துக் கொண்டு கில்லேதார் முன்னே கொண்டுவந்து விட்டார்கள். கில்லேதார் பாராவிலே வைத்தார்.

சைய்யத் முகமத்கான் வகையரு பினுதரியோடை பக்கிரிகள் பேரில் மானமாகும் பல கூடி இந்துக்கள் பேரில் ராஜகாரியம் பண்ணி னுர்கள். இது சேதி பௌவுசுதாருக்கு துலுக்கர் எழுதினுர்கள். காகிதத்தாள் தீவான்சிமுதல் கொண்டு செஞ்சி காயித்தாள் இந்துக் களுக்கு எழுதினுர்கள். பௌவுசுதார் உத்தரவு வந்து பக்கிரிகளே இந்து வசம் ஒப்பிக்கச்சொல்லி, அதற்கு சைய்யத்மகமத்கான் வகையரு பக்கிரிகளே அவாள் வசம் ஒப்பிப்பதல்லே என்று காணுசிங்குக்கு ஆரம் பம்பண்ணினுர்கள். துலுக்கரெல்லாம் ஒரு கும்பல் கூடினுர்கள். இந்துக்கள் காய்த்தர்கள் ரசப்பூத்தர்கள் வக்..........ஒரு கும்பல் கூடினுர்கள். கெவுத்துங்கூட தன் பிராதுரியோடே துலுக்கர் பேரில் வந்தான். இப்படி ஒன்றுக்கொன்று ராஜகாரியமாய் பதினேந்து நாள் இருக்கிறது...........தூரத்தினம் துலுக்கர்தான் படியினுலே இந்துக்கள் பேச்சு சாயவில்லே.

கில்லேதாரும் ரொம்ப உடன் படிக்கை பண்ணினுர். இந்துக்கள் முஸ்திகளான படியினுலே மிஞ்சிப்போனது வராது என்று அந்த மக்காணுதப் பிணத்தை அவர் தபசு பண்ணின யிடத்தில் புதைத்தும் மசானே கட்டி சன்னியாசிகளே அவ்விடத்தில் பட்டம் கட்டிவைத்து பதினேந்து காணிமானியம் விட்டார்கள். அந்தத் துலுக்கர் நாளேயில் ஏழைபேரில் சுலும் நடப்பார்கள். கேழ்வியிராது.

அப்படியிருக்க தோஸ்தல்லிகான் தம்முடைய மருமகன் சந்தா சாயிபு இவர்கூடத் தண்டு கூட்டி தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி பேரில் பகுதிப்பணத்திற்கும் அனுப்பினார். சந்தாசாகிபும் படேசாயிபும் தண்டு வாங்கிக் கொண்டு போய் திருச்சிராப்பள்ளி பேரில் பெடர் போட்டு, சண்டை கொடுத்து, அன்னேரம் திருச்சிராப்பள்ளி ராசா விஜயரெங்க சொக்கப்ப நாயக்கர் விழுந்து போய் மங்கம்மா ராணியிருந்தாள். அவளுக்கு கவில் சொல்லி அனுப்பி உங்கள் வீட்டை நாங்கள் வாங்கிக் கொள்ளுகிறதுமில்லே, மோசம் பண்ணுகிறதுமில்லே என்று சீரங்கத்துக் கோவிலண்டை சத்தியம் பண்ணிக்கொடுத்து கோட்டைக்குள்ளேபோய் தண்டுக்கு வந்து பகுதிப்பணத்திற்கும் பேச்சுக்கள் நடப்பித்து சம... ....த்து தண்டோடே காட்டிற்குள்ளே போய் ராணி அரண்மனையைக் சுற்றிப்பாரா போட்டுக் கோட்டையும் பாரா போட்டு சவுக்கி பாரா பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார்.

அவ்விடத்திலே தானே சந்தாசாயிபு இருக்க படேசாயிபு பௌவு சுவாங்கிக்கொண்டு, தஞ்சாவூர் சீமையைக் கொள்ளையிட்டு மதுரை திருநெல்வேலியையும் செயங் கொண்டு பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு, ராமனாதபுரம் சிவகங்கை ராஜாக்கள் மராவனடையும் பகுதி வாங்கிக் கொண்டு, ராஜ்ஜியமாண்டு கொண்டு இருந்தார்கள். தோச தல்லி கான் தஞ்சாவூர் வாங்கவேணுமென்று அவன் மகன் சபதல்லி கானைத் தண்டு கூட்டி அனுப்பினார். சபதல்லிகான் தண்டோடே தஞ்சாவூர் சீமைக்குப் போய் சீமையும் கொள்ளையிட்டுக் கோட்டையும் பேடாபோட்டுச் சண்டை பண்ணிக்கொண்டிருந்தார்.

அப்படியிருக்கிற கோசல பத்தேசிங்கு கோசலர் அறுபதினாயிரம் குதிரை வாங்கிக் கொண்டு பராடுசீமை விட்டு மேல்கணவாய் கோலாற் அந்த மைதானத்தில் குபத்தி முராரிராவ் கூட வந்தார்கள். அந்தச் சேதி தோஸ்தல்லிகான் கேட்டுக் கான்கணவாய் கட்டப்போக வேணு மென்று தம்மண்டையிருந்த தண்டும் ராஜாக்கள் வகையரு[27] குமக்கு தண்டும் சேர்த்துக் கொண்டு தன்பிள்ளை சபதல்லிகானைத் தஞ்சாவூர் பேடாவிட்டு அவ்விடத்திய தண்டும் குமக்கு சேர்த்துக் கொண்டு அதி சீக்கிரம் வரச்சொல்லிக் காகிதம் எழுதிப் போட்டு தாம் ராஜகோடி கணவாய்க்கிட்டப்போய் தண்டு இறங்கிக் கொண்டு கணவாயும் பந்தோ பஸ்து பண்ணினார். மோராட்டியர் தண்டு கணவாய் மேல் வந்தது. தோஸ்தல்லிகானும் கணவாய் மேல்போக இருவர் தண்டும் கைகலந்து சண்டையாய் தோஸ்தல்லிகானுக்குக் குமக்கு வாராததினாலே சண்டை

27. தூடிக்தூத்தண்டு—துணைப்படை

யில் பின்வாங்க, மோராட்டியர் மேல் விழுந்து நல்ல சண்டை பண்ணி, இருவர் தண்டிலேயும் சேதமாய் தோஸ்தல்லிகான் தலையை அறுத்துப் போட்டார்கள்.

சித்தார்த்தி வருடம் சன சதாசமெ்கூ பசலி விழுந்து போனுர். அன் நேரம் **சபதரல்லிகான்** தண்டோடே வாணியம்பாடி திருப்பத்தூர் வந்து சேர்ந்தார். தகப்பன் விழுந்து போனது கேட்டு, விட்ட விடியா வேலூர் வந்து சேர்ந்தார். மோராட்டியர் குதிரை ஆர்க்காடுக்குப் பக்கம் வந்து திருவண்ணுமலை மேல் திருச்சிராப்பள்ளி வழியே போய் விட்டது. அது போய் கலகமென்று பெயர். ரகோசிபத்து தேசிங்கு கணவாய் மேல்வந்து சேலத்திற்குச் சேவையாய்ப் போய் திருச்சிராப்பள்ளி மேல் போனுர்.

சந்தாசாயிபு, படேசாயிபு எதிர்த்துச் சண்டை பண்ணினுர்கள். மோராட்டியர் படேசாயிபு என்கிற சேயனுலாபத்திகானைக் கொன்று போட்டு, சந்தாசாயபை பிடித்துக் கொண்டு, முராரிராயனுக்கு திருச்சிராப்பள்ளி கோட்டை கொடுத்து, மேலுக்கு மேலாய் ஆற்காடுபக்கம் வராமல் பொன்னு போய்ச் சேர்ந்து, சந்தாசாகிப்பை பாராவில்வைத்து கொண்டார்கள். சபத்தரல்லிகான் ஆர்க்காட்டில் வந்து பட்டத்திலுட்கார்ந்து, நசர் வாங்கிக் கொண்டு, கர்னுடகம் பௌவுசுதாரி பந்தோபஸ்து பண்ணிக் கொண்டார். நவாபு அஸபஷா பாதருக்கு அர்ஜியும் நஸரும் அனுப்பிப் பௌவுசுதாரி சன்னது அழைப்பித்துக் கொண்டார். சபத்தரல்லிகான் ஆர்க்காடு சுபா பௌவுசுதாரி பண்ணிக் கொண்டிருக்க **முராரி ராயன்** திருச்சிராப்பள்ளியிலே இருந்தார்.

சபதரல்லிகான் நவாபு அஸபஷாபாதர் மீரஸத்து துல்லாகானுக்கு சேத்துப்பட்டு, வழுதாவூர் கில்லேதாரி கொடுத்தார். அந்த மீரசத்து துல்லாக்கான் சேத்துப்பட்டு, வழுதாவூர் கில்லேதாரி பண்ணிக் கொண்டிருக்க சபதரல்லிகான் தம்முடைய தீவான்கிரியில் வைத்துக் கொண்டு அப்படிச் சபதரல்லிகான் பௌவுசுதார் பண்ணிக் கொண்டிருக்க நவாப் அஸபஷாபாதர் சபதரல்லிகான் சிபாயிகிரியில் சமத்தனென்று கேட்டு, சபத்தரல்லிகான் ரூபம் எழுதி வரச்சொல்லி, தசபீர் எழுதப்பட்டவாளண்டை அழைப்பித்து, அஸபஷா பாதார் பார்த்து இவன் 'சேவகத்தன்மையுள்ளவன்' என்று,மனதிலே வைத்துக் கொண்டுயிருக்க, நவாபு நாசர்சங்கு தம்முடைய தகப்பன் அஸபஷாவோடே சொன்னது.

“எனக்கு சிலவு கொடுத்தால் கர்னுடகத்திற்குப் போய் சபத்தரல்லிகானை பிடித்துக் கொண்டு மனிதரை கர்னுடக பௌவுசுதாரிக்கி

திட்டப்படுத்தி வருகிறேனென்று கேட்டார். அதற்கு நவாபு அசபஷா சொன்னது அப்படி சபதரல்லிகான் சேவகத்தன்மையுள்ளவாள் போக வேண்டாம். நம்முடைய சேவகன் அவன் பேரில் சண்டைபண்ணுகிறது செம்மையல்ல. சொன்னபடி நடக்கத்தக்கினவனென்று சொன்னார். அதற்கு நாசர்சங்சொன்னது "அவன் ஒரு பொருளா சிலவு குடுங்கோ ளென்று சொல்லி வெளியிலே சண்டை போட்டார்கள். அதற்கு அஸ பஷா நாசர் சங்கு கேழ்க்கமாட்டோமென்று குரானை இவனுக்கு சபத ரில்லிகானுடைய திறமையைக் காட்டவேணு மென்று நாசர் சங்கை அழைப்பித்து முன்னதாய்ச் சபதரல்லிகானுக்குக் காகிதமெழுதவேணு மென்று கர்னாடகம் வாசல் பாக்கி கணக்கும் நாம் மோராட்டியர் பேரில் மோயிம் போறேம்; தண்டு சிலவும் குமக்கு தண்டும் அனுப்பவேணு மென்று சபத்தரல்லிகானுக்கு பரமானு எழுதினார்கள்.

இந்தச்சேதிகளெல்லாம் சபதரல்லிகான் தம்முடையவக்கீலினாலே தெரிந்து கொண்டு, பரமானு அஸபஷாபாதரண்டையிருந்து வந்தால் ஆர்க்காட்டிற்கு அஞ்சு நாழி வழி லாலாப்பேட்டை மைதானத்தில் வந்துதெணறு கபர் வந்தால் ஆர்க்காடு பௌவுசுதார் சபதரல்லிகான் எதிர்கொண்டு போய் மரியாதைகள் பண்ணி தம்முடைய கச்சேரியிலுட் கார்ந்து படித்துப் பார்த்து உத்தாரப்படிக்கி நடந்து கொள்ளுறது. இப் பவந்த பரமானுவிற்கு எதிர் கொண்டு போகாமலழைப்பித்து தான் படித்துப் பார்த்துச் சேதி தெரிந்து கொண்டு தீவான் மீரஸத்துல்லாக் கான் பின்னும் பெரிய மனிதர் இருக்கப்பட்டவர்கள் இவர்களண்டை பரமானுவைக் கொடுத்து இதற்கு ஜவாப் எழுதுவதற்கு யோசனை சொல்லுங்களென்று சபதரல்லிகான் கேழ்க்க யாருக்கும் தோற்ற........ உத்தரவு கொடுக்கவில்லை.

சபத்தரல்லிகான் அந்த பரமானுவிற்கு உத்திரம் எழுதினது. "கர்னாடகக் கணக்கு அனுப்பினேன் இசாராபணம் பாக்கியில்லை பேஷ்கி தண்டு கர்ஜ்ஜி அனுப்பச் சொல்லி எழுதினதற்கு சீமை மோராட்டியர் தண்டு வந்து பாயமாலியாய்ப் போயிற்று. கஜானுவில் பணம் இல்லை. குமக்கு அனுப்பினேனென்று எழுதி அனுப்பிவிட்டி மோராட்டிய சர் தார் தமக்கு வாக்கையிருக்கிறவாளுக்கு நாற்பதாயிரம் குதிரை இந்த மாதம் இன்ன தேதி முதல் நம்மண்டை சேவகர் இருக்கிறது"

சவரா ஒன்றுக்கு நாற்பது ரூபாய் சம்பளம் இந்தப்படியே நடப் பிக்கிறேம். சத்தியாய் நாலுலட்சரூபாய் அனுப்பினேம். நீங்கள் அசபஷாபாதர் இனயத் இருக்கவுமென்று எழுதியனுப்பினார். அந்தப் படியே நவாபு அசபஷா தண்டிலே ரெண்டு மாதத்திற்குப் பிறகு

நாற்பதாயிரம் குதிரையும் வந்தது. அது நவாபு அஸபஷா தெரிந்து கொண்டு மோராட்டியர் குதிரையை தையினுத்தார் வந்த சர்தாரை அழைப்பித்து "நீங்கள் இவ்விடத்தில் யாருத்திரவின் பேரில் வந்தீர் களென்று" கேட்டார் அதற்கு அந்தச் சர்தார் சொன்னது.

"நாங்கள் சபதரல்லிகான் சேவகம் தங்கள் தையினுத்கா வந்தோ மென்று" சொன்னுர்கள். அது சேதி நவாபு அஸபஷா தம்முடைய பிள்ளை நாசர் சங்கை அழைப்பித்து சபதரல்லிகான் சேவகத்தன்மை தெரிந்துதாவென்று சொல்லிப் போட்டு மோராட்டிய சர்தாரைப் பார்த்து நாம் எவ்விடத்திலும் மொயிம் போகயில்லே. எப்படி ஞாபகம் பண்ணுவோமோ அப்போ அவர்களென்று அவர்களே அனுப்பிவிட்டு தாம் ஹைதராபாத் போய்ச் சேர்ந்தார். அது செய்தி சபதரல்லிகான் கேட்டு மோராட்டியர் குதிரைகளெல்லாம் வாங்கிப் போட்டு லாவணம், அன் நாளைக்குள்ளே சம்பளம் தீர்த்துக் கொடுத்து அனுப்பிவிட்டார். அப்படியிருக்க வேலூர் கில்லேதாரான குலாமல்லிகான் பிள்ளை பாக ரல்லிகான் விழுந்துபோய் அவர் பிள்ளை குலாம் முரத்துசாகான் சபத ரல்லிகான் தங்கை புருஷா சபதரல்லிகானே மோசம் பண்ண வேண மென்று விருந்து பண்ணுகிறேமென்று தன்கில்லாவுக்குள்ளே அழைப் பித்துச் சோத்திலே விஷம் கலந்து போட அது சேதி சபதரல்லி கானுக்குத் தெரிந்து இந்தக் கில்லேதாரனைப் பொழுது விடியயதே நாயை அடிக்கிறுப்போலே அடித்துப் போடுகிறேனென்று சொல்ல அது செய்தி கில்லேதார் கேட்டுத் தம்முடைய தமக்கை பிள்ளை அக மத் அசன்சாமாகானே அழைப்பித்து இந்த ராத்திரியிலே தானே சபத ரல்லிகானைக் கொன்று போட்டால் நாம் இத்தனை பேரும் பிழைப்போம் இல்லாவிட்டால் நாளைக்காலமே பறையரைவிட்டு அவமானம் பண்ணிப் போடுவானென்று சொல்ல அசன்சமாகான் வகையரு பத்து பேர் கூடி ராத்திரி காலத்தில் சுவர் ஏறிக்குதித்துச் சபதரல்லிகான் தூங்கும் பொழுது போய்க் கத்தியாலே வெட்டினர்கள்.

சபதரல்லிகான் கனகாயத்தோடே எழுந்திருந்து கத்தியை எடுக் கப்போகிற வேளையில் நாலு ஐந்து கத்தியாலே சபதரல்லிகானே வெட் டிக்கொன்று போட்டார்கள். துர்மதி வருடம் சென சதாடுக பசுலி விழுந்து போனர். சபதரல்லிகான் பொணத்தை வெளியே கொண்டு வந்து, அவமரியாதையாய் வைத்தார்கள். மகமதல்லி, மேரெல்லி, புத்தூரை அகமதல்லிக்கான் தகப்பன் தன்னுடைய சாலுவையைப் போத்தினன். அது முரத்துசாக்கான் கண்டு "மோகல்விசாயபு இன் னேரம் ஜீவனேடேயிருந்தால் நம்முட வீட்டு சட்டிப்பானேயெல்லாம்

பறையரைவிட்டு எடுப்பித்து நம்மை அவமானம் பண்ணிக் கொன்று போடுவான், அவனுக்கு நீர் சாலுவை போத்தலாமா'' வென்று கேட்டார்.

அதற்கு மோகரல்லி சென்னது "இவன் தான் புருஷன்; நாமெல்லாம் கம்மனுட்டிகள்; என்ன காரியம் பண்ணினீர், நம்முடைய நவாயத்து வீட்டு பேர் போயிற்று என்று அங்கலாய்த்து'' சபதரல்லிகான் பிணத்தைப் புதைத்துப் போட்டார்கள். இதற்கு சபதரல்லிகான் தங்கை முரத்து சாகான் பெண்சாதியும் உட்பட்டிருந்தாள். முரத்து சாகான் ஆர்க்காட்டிற்கு வந்து பௌவுசுதார் கச்சேரியில் உட்கார்ந்து சிறிது பேர் நசர் வாங்கிக்கொண்டு தாலூக்காதாத்துகளுக்கு சபத்தியும் அனுப்பி ஒரு மாதம் வரைக்கும் ஆர்க்காட்டிலிருந்து அவ்விடத்தில் மித்திரபேதம் நடக்கிறதாய்க் கேட்டு வேலூருக்குப் போய் விட்டார். ஆர்க்காட்டிலிருந்தவர்கள் பெரிய மனிதர்கள். சாத்தக்கடை இராசத்த கான் வகையரு சபதரல்லிகான் பிள்ளை, ரெண்டுபேரை வைத்துக் கொண்டு சபதரல்லிகான் தாயாரும் கூட பெரிய பிள்ளை பத்து பிராயத்துப் பிள்ளை மகமத்சையத்கான் பேரினுலே தக்கண நவாபு நிசாமதவுல்லா அஸபஷா பாதர்க்கு வேலூரிலே நடந்த பூர்வோத்தரம், ஆர்க்காட்டில் நடந்த பூர்வோத்தரமும், கர்னுடகம் பௌவுசுதாரி அவர்தரையாயிருக்கிறதும் வயணமாயெழுதினுர்கள்.

பின்னும் சபதரல்லிகான் பிள்ளை பேருக்கு பௌவுசுதாரி சன்னது வேண்டியதற்கும் அர்ஜி எழுதினுர்கள். அது நவாபு அஸபஷா பாதர் பார்த்துக் கொண்டு சிறிது அமீர்களை கூட அழைத்துக் கொண்டு தண்டோடே ஆர்க்காடு வந்து சேர்ந்தார்.

குலாம் முரத்சாகானை பாருவிலே வைத்தார். ஆர்க்காடு பௌவுசுதாரிக்கி அமீர்கள் தர்க்காஸ்துப் பண்ணினுர்கள். அப்படியிருக்க சபதரல்லிகான் தாயார் தன் பேரப்பிள்ளை மகமத்சையத்கானை பத்து வயதுப் பிள்ளை அவனை அழைத்துக் கொண்டு போய் நவாபு காலின் பேரில் போட்டார்கள். நவாபு பிள்ளையை எடுத்து பக்கத்திலுட்கார வைத்து சாதர்சமாசொல்லி தங்களதிகாரம் தங்களுக்குத்தான் சத்திய பௌவுசுதாரிக்கி உங்கள் நாயபா ஒருத்தரை திட்டம் பண்ணுகிறேம். பிள்ளை புத்தி வந்ததனுல் இவனைப் பார்ப்பானென்று பாக்கு வெற்றிலை கொடுத்தார். காசு அப்துல்லாகானுக்கு கர்னுடக பௌவுசுதாரி திட்டம் பண்ணித் தாம் தண்டோடே திருச்சிராப்பள்ளி போய்ச் சேர்ந்தார். அப்போ செஞ்சியிலே ஷாசாதாயிருக்கிருர்.

அவரைக் காணவேணும். அவரென்னமாகிலும் கேழ்ப்பார். அவரைக் காணுமல்ப் போனுலும் கேட்டபடிக்கு நடந்து கொள்ளாமல் போனுலும் துரோக சிந்தையாகிறேமென்று மேலுக்கு மேலாய்ப் போய் விட்டார்.

ராசிஅப்துல்லாகான் காசு எமதுல்லாகானுக்கு ஆர்க்காடு அதிகாரம் கொடுத்தான். தண்டோடே திருச்சிராப்பள்ளிக்குப் போனுன். நவாபு திருச்சிராப்பள்ளிக்குப் போக, முராரி கவில் பண்ணிக் கொண்டு, தண்டோடே சேலத்து வழியாய் பத்தி போய்ச் சேர்ந்தார். நவாபு அஸபஷா திருச்சிராப்பள்ளிக் கோட்டை சீமை பந்தோபஸ்துப் பண்ணிப் போட்டு **சைய்யதல்லிகானுக்குக்** கில்லேதார் திட்டம் பண்ணி பௌவுசுதார் உத்தாரப்படிக்கு நடக்கச் சொல்லி ஹைதராபாத்திற்குப் பயணமாய்ப் போனுர். தண்டு வரும் பொழுது காசி அப்துல்லாகான் சென சதாருடிவ பசுலி விழுந்து போனுர். நவாபு கர்னடகம் அவந்தரையாய்ப் போகுது என்று அதிக புத்தி உள்ளவர் தம்முட கயர் காவாயிருக்கப் பட்டவரென்று பாதுஷா தசபிகானுதவரோகாசி ஆனவர் பிள்ளை அனவரதிகான் பாதரைக் கூடயிருந்தவரை அழைப்பித்துக் கர்னடக பௌவுசுதாரி அவந்தரையாயிருக்கிறது.

சபதரல்லிகான் பிள்ளை சின்னவன் உம்மாலே பந்தோபஸ்தாக வேணுமென்று அந்தப் பிள்ளையும் கூடவைத்துக் கொண்டு இசாரா பணம் கட்ட வேணுமென்று சொல்லித் திட்டம் பண்ணிப் பரமானு பாலிசன்னத் எழுதிக் கொடுத்து ஜாமீனுக்கு அவர் பிள்ளை மகமதல்லிகானை வைத்துக் கொண்டு அனுப்பிவைத்தார். அனவர்திகான்பாதர் ஆர்க்காடு வந்து சேர்ந்து பாதுஷா கச்சேரியிலுட்கார்ந்து நசர் வாங்கிக் கொண்டு தமாம் கில்லேதார் மனசப்தார், ஜமீன்தார், பாளயக்காரர் பௌவுசுதார்கள், அமல்தார்கள் சகலமான பேருக்கும் இனயத்து நாமா எழுதி அவரவர்களுக்கு உத்தாகாயப்படுத்தி பாலி சனத்தும் அனுப்பினர்.

---

10. நவாபு அநவர்த்திகான்

சகலமான பேரும் **அனவர்த்திகான் பாதர் உத்தாரப்படிக்கி** நடந்து கொண்டு நசரும் அனுப்பினுர்கள். மகமதல்லிகான் உசூரிலே ஜாமீன் சொல்லி வைத்து அவரும் வந்து சேர்ந்தார். மகமத்மாபூச்கான் பெரிய பிள்ளை அவரும் வந்து சேர்ந்தார். அப்படி அனவர்த்தி

அப்படி நவாபு அனவர்த்திகான்பாதர் கர்னடகம் பௌவுசுதாரி பண்ணிக் கொண்டு ஆர்க்காட்டிலிருக்கும் பொழுது ஆர்க்காட்டுக் கோட்டைக் குள்ளே நவாய்த்தன் வீட்டிலே கலியாணமாயிற்று. நவாபு அனவர்த்திகான் முதல் நவாயத்து இராத்ததுகான் வகையரு அமீர்களுக்கும் அனவர்த்திகான் தீவான் சம்பத்துராயர் முதல் முசத்திகளுக்கும் சொல்லியழைப்பித்தார்கள். கலியாணப் பந்தல் சதர் உச்சிதமாய் சரிகைப் புடவைகளாலே மொக்கு மல்லிகளினாலே சிங்காரம் பண்ணியிருந்தார்கள். அவாளவாளுக்கு தக்கின இடம் இதுவென்று திட்டம் பண்ணியிருந்தார்கள்.

பகலிலே அழைப்பித்து சபதரல்லிகான் பிள்ளையை கலியாணப் பந்தலிலே அழைத்துக் கொண்டு சாத்துக்கடை இராசத்துக்கான் தன் பிள்ளை அக்காபிள்ளை சொய சென்ம சம்பத்து பேர் வரைக்கும் வந்து அவாளவாளிடத்தில் உட்கார்ந்தார்கள். நவாபு அநவர்த்திகான் சவாரி இனி மேல் வரப் போவது. அப்படியிருக்க அடுதலக்கான் சமேதாரா பதினெட்டு செனம் பட்டாணிகள் கலியாணப் பந்தலிலே கானசங்கி சண்டை பண்ணவேணுமென்று யாரு போதனையின் பேரிலேயோ வந்து இராசத்துக்கான் சபத்தரல்லிக்கான் பிள்ளைக்கு நடுவே வந்து உட்கார்ந்தார்கள். அதற்கு இராசத்துக்கான் பெரிய மனிதன் புத்திசாலி இந்தப் பட்டாணிகள் சேவகம் பண்ணப்பட்டவாள் அவமரியாதையாய் இடம் விட்டு அமீர்களோடே நெருங்கி உட்கார்ந்தார்கள்.

ஆனால் யாரோ தூக்கி விட்டிருக்கிறார்களென்று அறிந்து கொண்டு நல்ல பேச்சாய் பேசிக்கொண்டு இருந்தார். அப்படியிருக்கப் பட்டாணிகள் இராஜத்துக்கானைப்பார்த்து சபதரல்லிகான் நாளையில் செவிச்சகம் பணம் வர வேண்டும். அவர் பிள்ளையும் இருக்கிறாரா. சம்பளத்தைக் கொடுத்து விட்டு எழுந்திருங்களென்று சொன்னார்கள். அதற்கு இராசத்துக்கான் வெளியே போனபிறகு கச்சேரியிலுட்கார்ந்து, கணக்கு பார்த்து, உங்கள் சம்பளத்திற்கு வழி சொல்லுகிறோமென்று சொன்னார்கள். “அது கேழ்க்கமாட்டோம் இவ்விடத்திலே அழைப்பித்துக் கொடு” மென்று சொன்னார்கள். இராசத்துக்கான் இவாள் கேழ்க்கிறதில்லே கானசங்கி பண்ணுவார்களென்று தன் பிள்ளைகளைச் சைகை காட்டி வெளியே போகச் சொன்னார்.

நவாயத்துப்பிள்ளைகள் நாலு பேர் செலபாதைக்குப் போகிற சாக்காய்ப் போய் விட்டார்கள். இராசத்துக்கான் சலபாதைக்குத் தண்ணீர் வைக்கச் சொல்லி சபதரல்லிகான் பிள்ளையைக் கையைப்பிடித்துக் கொண்டு எழுந்திருந்தார். அடுதல்கான் இராசத்கான் பதினேழு பிரா

யத்துப்பிள்ளை அவன் மனது தீர்க்கத்தின் பேரில் எண்ணினான். அப்ப நவாபு அனவர்த்திகான் சவாரி புறப்பட்டது. அந்த வேளை இராசத்துக்கான் அக்காள் பிள்ளை அடுதல்கானைப் பார்த்து அடாபாசினியா, நவாபுகள் தெளவுரைப் பிடித்து உட்காரவைக்குறவன் அதோ நவாபு சவாரி வருகிறது. உங்களை நாயை அடிக்கிறாப் போலே அடிக்கப் போகிறானென்று சொன்னான். அவனை அடுதல்கான் கத்தியாலே வெட்டினான். அவன் வெட்டு படச்சேதானே அடுதல்கானே கட்டாரியாலே குத்திப் போட்டான். அப்படி ஒரு க்ஷணிகத்திலே தானே ஒன்றுக் கொன்று வெட்டிக் கொண்டு மடிந்தார்கள்.

நவாயத்து அமீர் பிள்ளைகள் ஏழு பேர் இராசதகானுக்கு நாற்பது காயம் சபத்தரல்லிகான் பிள்ளை மகமத்சைய்யத்கானை சேரத்தூர் கல்லாலிபட்டு, ஜாகீர்தார், காசி மகத்துஸா என்பவர் எடுத்து வீட்டின் பேரில் எறிகிற போது, ஒரு பட்டாணி குத்திப் போட்டான். அந்தப் பிள்ளையும் செத்துப் போயிற்று. பட்டாணிகளிலே பதினாறு பேர் செத்துப் போனார்கள். ஒருத்தன் ஓடிப் போய் கோட்டை அலங்கம் ஏறிக் குதித்தான். அவன் கால் ஒடிந்து போயிற்று. ஒருத்தனை சினேகிதன் ஒளித்து வைத்தான். அப்படியிருக்க நவாபு அனவர்த்திகான் சவாரி கலியாணம் வீட்டுக்கு சமீபத்தில் வந்தது.

கலியாண வாசல் பந்தல் கீழ் பிச்சாணூர் தச்சேறும் பிணமாய் விழுந்து போயிற்று. நவாபு இது செய்தி தெரிந்து கொண்டு, அனேக கோபம் பண்ணிக் கச்சேரியில் போயி உட்கார்ந்து, பட்டாணிகள் வீட்டிற்குள்ளே புகுந்து பெண்டுகள் முதல் இழுத்து கோட்டாவாலே அடித்துக் கொண்டு போய் கணவாயின் பேரில் விட்டு வரச்சொல்லி சாவடி தண்டியாக்களுக்கு உத்தாரம் ஆயிற்று. அப்படியே தண்டியாக்கள் வகையறா பட்டாணிகளென்று பெறப்பட்டவாளெல்லாரையும் கணவாயின் பேரில் விட்டு வந்தார்கள். அந்தப் பட்டாணிகளை எண்ணினால் நவாபு அனவர்த்திகான் வமிசம் நவாபுகிரி ஆளப்பட்டவர்கள் அவாளை உமந்ததுல் உமரா வரைக்கும் சேவகம் வைக்குறது இல்லை. ஆனால் ஒரு வேளை வைக்கவேண்டு மென்றால் [28]செகுக் கூட்டமென்று பெயர்.

எண்பித்து சேவகம் வைப்பார்கள் சபதரல்லிகான் பிள்ளையைக் கொன்று போட்டது சிறிது செனங்கள் நவாபு அனவர்த்திகான் மித்திரபேத மென்பார்கள். சிறிது பேர் ஏது காரணமோவென்பார்கள். வேலூர் கில்லேதார் மூரத்து சாகான் பண்ணினது என்பார்கள் ஆனால்

28. செதுக்கூட்டம்—சீக்கியர்களாக இருக்கலாம்

நவாபு அனவர்த்திகான் பாதருக்கு அது பொருட்டல்ல அந்த பிள்ளை பேரில் அதிகமானம் இவன் மூரத்து சாகான் தகப்பன் பழி வாங்கு வானென்று பட்டாணிகளை எடுத்து விட்டது. சபதரல்லிகான் இளைய பிள்ளை ஆறுபிராயத்துப் பிள்ளையை இப்படிப் பட்ட காரியம் வரு மென்று வந்தவாசிக் கில்லேதார் குலாம் தக்கிகான் அவனும் ஒரு மச் சான் சபதரல்லிகானுக்கு அவன் அந்தப் பிள்ளையை அழைத்துக் கொண்டு போய் தன்கில்லாவிற்குள்ளே வளர்த்துக் கொண்டுயிருந் தான்.

அப்பால் நவாபு அனவர்த்திகான் இந்த கெதிக்கு ஆச்சரியப் பட்டு நவாபு அஸபஷாவிற்கு எழுதினர். தாம் தம்முடைய கர்னடக பௌவுசுதாரிகை பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு இருந்தார் செஞ்சிக் கில்லேதார் சாத்தனதயார்க்கான் சென சதாடுடுஎ பசலி விழுந்து போனர். அவன் மகன் **வசுத்திகானுக்கு** கில்லேதாரி ஆய் அவன் சென சதாடுடுவெ பசலி வரைக்கும் கில்லேதாரி பண்ணிக் கொண்டு இருக்க, அவனுக்குப் பயித்தியம் பிடித்துப் போன படியினலே, நீர் குலாம் உசேலுக்கு கில்லேதாரியும், பென்னத்தூர் கில்லேதாரி ஜாகீ ராயிற்று; கேவுத்தும் விழுந்து போய் அவன் பிள்ளைக்கு ஜாகீர் விடாமல் சர்தாரி கொடுத்துச் சம்பளம் திட்டம் பண்ணினர்கள்.

அந்தக் கெவுத்து மனைச் செஞ்சிக் கில்லாவில் மாமூல்படி தைனத் துப் பண்ணினர்கள். அந்த நாளையிலே ஷாசாதா விழுந்து போய் சிறுகடம்பூர் எல்லையில் புதைத்துக் கோரி கட்டினர்கள். அவர் பெண்சாதிக்கி ரோஜீக்கு ஒரு ரூபாய் திட்டம் பண்ணினர்கள். அப் படியிருக்க அனவர்த்திகான் பாதர் மூத்த பிள்ளை மகமத் மாபூசகா னுக்கு காஞ்சிபுரம் வகையரு அமுல் கொடுத்தார். மகமதல்லி கானுக்கு திருவாதி, புவனகிரி வகையரு அமுல் கொடுத்தார். மகமதல் லிகான் ராசா அனந்த சாசுக்கு தம்முடைய தீவான்கிரி கொடுத்தார். அப்துல்லாபகானுக்கு நெல்லூர் அமல் கொடுத்தார். அப்துல்கரீம், அப்துல் சலீல், அப்துல்ரகீம், அப்துல்கனீம், கான்களுக்கு விழுப்புரம் வகையரு கொடுத்தார்.

கருமுல்லாகான் தம்முடைய மருமகனுக்குத் திருவண்ணுமலை அமல் கொடுத்தார். கயருத்திகானுக்கும் சிறிது தாலூக்கு அமலும், சிறிது நாள் தம்மண்டையும் வைத்துக் கொண்டு இருந்தார். அப்படி யிருக்க வெட்டவனம் பண்டாரி பெரியவைய்யா என்பவன் சருக்கார் சிகையில் சிலார் பண்ணினதாய் நவாபு உத்தாரப் படிக்கு கரிமுல்லாக் கான் தண்டு எடுத்து வெட்டவனம் பேரில் வந்தார். பண்டாரி காட்டிற்

குள்ளே இருந்து சண்டை பண்ணினுன். அதன் பேரில் கரிமுல்லா கான் பெதிமனிதராலே பண்டாரி பாளயத்தை நெருப்புப் போட்டு உட் புகுந்து சண்டை பண்ணினுர். பண்டாரி செனங்களெல்லாம் ஓடிப் போய் விட்டார்கள். பண்டாரி ஓடிப் போய் விட்டான். அவன் தகப்பன் பெரிய பண்டாரியைப் பிடித்துக் கொண்டார்கள்.

வெட்டவனம் சப்தி பண்ணிக் கொண்டார்கள். பண்டாரி ராமேச் வரத்திற்குப் போய் ஆறு மாதத்திற்குப் பிறகு ரகசியமாய் இரநூறு கர்னுடக செனம் வைத்துக்கொண்டு, திருக்கோவிலூர், சர்க்கார் கச் சேரியில் கஜாஞவைக் கொள்ளையிட்டுக் கொண்டு தன் வெட்டவனம் பாளயத்தில் காட்டிலே வந்து சேர்ந்து கொண்டு சிலார் பண்ணினுன். அது கரிமல்லாகான் கேட்டு மறுகாலும் தண்டு எடுத்து சண்டை பண்ணினுன். பண்டாரி நாளுக்கு நாள் சிப்பந்தி செனங்களை சம் பாதித்துக் கொண்டு கரிமல்லாகான் தண்டு பேரிலேயும் ராத்திரி காலத் தில் சிலார் பண்ணத்தலைப்பட்டான். அந்தப் பண்டாரி உபத்திரம் ரொம்ப ஆயிற்று அதன் பேரில் நவாபிற்குக் கரிமல்லாகான் எழுதி அனுப்ப, நவாபு தம்முடைய தண்டு கூட தாமே ஆவூர் தேத்துப் பக் கம் வந்து இறங்கினுர்.

வெட்டவனம் காட்டைச் சுற்றிக் கொண்டார்கள். பண்டாரி சர்க் கார் சபத்திகாரரை எழுப்பி விட்டு பாளயத்தை பந்தோபஸ்து பண் ணிக் கொண்டு தேத்துகள் உறுதியாய்ப் போட்டு வைத்து செனங்களை யும் வைத்து தானும் அன்நூறு செனம் வரைக்கும் இருளர் வகையரு சேர்த்துக் கொண்டு ராக்காலங்களிலே நவாபு தண்டும் பேரிலே லத்து சிலார்கள் பண்ணத் தலைப்பட்டார்கள் நவாபு இருபது நாள் வரைக்கும் இறங்கியிருந்து பேதிகளை விட்டு பெண்டாரி சகோதரத்தின் ஜெனங் களைக் கைவசப்படுத்திக் கொண்டு காட்டை வளைத்து ஜெனங்களை வைத்து தாமே பல்லக்கின் பேரிலேறிக் கொண்டு அய்யாயிரம் ஜெனத் தோடே ஆவூர் தேத்து வழியாப் போய் சண்டை பண்ணிக் கொண்டு மெரித்துக் கொண்டு போய் தேத்தைக் கொளுத்திப் போட்டு அவ் விடத்திலிருந்து மூன்று தேத்தை வாடியும் வாங்கிக் கொண்டு வெட்ட வனம் போய்ச் சேர்ந்தார்.

பண்டாரி ஓடிப் போகாமல் படிக்கு வெளியிலே ரெண்டாயிரம் ஜெனம் வரைக்கும் காட்டைச் சுற்றி வைத்தார்கள். பண்டாரி போக யிடமில்லாமல் கவல் கெடை துர்க்கத்தின் பேரிலேறிக் கொண்டான். அது சேதி உளவாளிகளாலே தெரிந்து கொண்டு அந்த துர்க்கத்தைக் சுற்றிக் கொண்டார்கள். ஜெனங்கள் துர்க்கத்தைச் சோதித்துப் பார்க்

குமளவில் பண்டாரி அகப்பட்டு பாறையின் பேரில் கட்டி உருட்டினுர் கள் அதற்குச் சாகவில்லே. பிற்பாடு கொன்று விட்டார்கள். பண் டாரியைப் பிடித்துச் செஞ்சியிலே கொண்டு வந்து பெரிய பண்டாரியை வெட்டிப் போட்டு அவன் மகன் சின்னப் பண்டாரி பெரிய அய்யா என் பவனைத் துலுக்கன் பண்ணிக் கைவிலங்கு கால் விலங்கு போட்டு, பெரிய துர்க்கத்தின் பேரில் பாருவில் வைத்தார்கள். அப்படி ஆறு மாதம் பாருவில் இருந்து தன் மனிதருக்கு ரகசியமாய்ச் சொல்லி அனுப்பி நூறு செனமும் குதிரையும் அழைப்பித்துப் பெரிய துர்க்கத் தின் மேல் புரம் அடி வாரத்திலே காட்டிற்குள்ளே பதுங்க வைத்து தான் பாராக்காரருக்கு விருந்து பண்ணி காஞ்சா வகையறு மயக்கப்பட்ட வஸ்துக்களே ஆட்டுக் கறியில் கொடுத்துப் பாருக்காரர்களுக்கு மயக்கப் படுத்தி தான் விலங்கைக் கழற்றிக் கொண்டு கோட்டை அலங்கத்தின் பேரில் கயிறு கட்டி அது வழியாய் இழிஞ்சு தன் செனங்களொடே கூடிக் கொண்டு ஓடிப் போய் விட்டான்.

ஓடிப் போனது அக்ஷய வருடம் சென சதாருகெூ பசலி புதுச் சேரி பராக்ஷீஷ கப்பித்தான். அப்படி தின சென்னப் பட்டணத்திற்கு போய் இங்கிலீஷ்காரர் பேரில் சண்டை கொடுத்துக் கோட்டை வாங்கி இடித்துப் போட்டு மாசுக் கப்பித்தானைச் செனங்களைப் பிடித்துப் போய் புதுச்சேரி சேர்த்தான். அதன் பேரில் **ஆட்டு மல்லார்** முப்பது கப்பலோடே வந்து தொண்ணூறு நாழியில் லட்சத்து நாற்பத்தையா யிரம் குண்டு சுட்டு திப்பிலீசு கவில் பண்ணுகிற சமயத்தில் விலாயத்தி லிருந்து சமாதான காகிதம் வந்து சென்னைப் பட்டிணம் கோட்டையும் கட்டிக் கொடுத்து மாசுக் கப்பித்தானையும் விட்டார்கள்.

நவாப் பாளயத்தைப் பண்டாரி தம்பி வசம் பண்ணிப் போட்டு ஆர்க்காடு போய்ச் சேர்ந்தான். மஹமத் மாபூசகான் காஞ்சீபுரம் அமல் பண்ணுகிற போது சென்னே பட்டணத்தின் பேரில் புதுச்சேரி பராஷக் காரரை ஒருமைப் படுத்திக் கொண்டு கும்மக்கு கொஞ்சம் அழைப் பித்துக் கொண்டு இங்கிலீஷ் பாதர் பேரிலே போய்ச் சண்டை பண்ணி பின்வாங்கி வந்து விட்டார்.

மகமதல்லிகான் இங்கிலீஷ் பாதர் தேவனும் பட்டணம் கற்பித் தார். கூட அனுகூலமாயிருப்பார். பாதுஷா காரர் பேரில் வாங்கலா யிருப்பார். நவாபு அனவர்த்திகானுக்குச் சகலமான பேரும் சமனு யிருக்கும். அப்படியிருக்கத் திண்டிவனம் நாட்டான் முத்துமல்லா ரெட்டி சர்க்காரிலே திண்டிவனம் தாலூக்கா இசாரா வாங்கி இருப்பார் அவனுக்கு நாலாயிரம் பசுமாடு காளே மாடு உண்டு. அவன் மாடு

சீமைகளிலே துண்டு துண்டாய் மேயும் பயிறுகளிலே மேயுறதும் உண்டு. அவன் பலவந்தக்காரனுமாயிருப்பான். அவன் மாடு புதுச் செரி, ஆனந்தரெங்கப்பிள்ளை கிராமத்தில் பயிரை மேய்ந்ததாய்க் குடிகள் சொல்ல முத்து மல்லாரெட்டி மாட்டைப் புதுச்சேரி ஆற்றிலே ஒட்டிக் கொண்டு போய் மறைத்து வைத்தான்.

அது செய்தி இடையர்களாலே மூத்துமல்லா ரெட்டி கேட்டு ரெங்கப்பிள்ளையைச் சின்னத்தனமாய் எழுதினுன். அதின் பேரில் ஒருத்தருக் கொருத்தர் வாங்கலாயிருந்தது. அதனுலே நவாபிற்கு முத்துமல்லா ரெட்டி அர்ஜ்ஜி எழுதினது. தாங்கள் தண்டு கூட்டிக் கொண்டு புதுச்சேரி பேரில் வந்தால் ரோசு ஒன்றிற்கு ஆயிரம் விராகன் தண்டு கரைத்துக் கொடுக்கிறேன் புதுச்சேரியும் செயம் கொள்ளுவீர்களென்று எழுதி அனுப்ப நவாபு தண்டு கூட்டிக் கொண்டு திண்டிவனம் வந்து சேர்ந்தார். ஒரு மாதம் அவ்விடத்திலே தானே தண்டு இறங்கியிருந்தது. முப்பதாயிரம் வராகன் முத்துமல்லாரெட்டி கொடுத்தான்.

நவாப் நாசர் சங்

அத்தையும் வாங்கிக் கொண்டு புதுச்சேரி பேரில் போய் பேடா போட்டுக் கொண்டு இருந்து அவர்களிடமும் பணம் வாங்கிக் கொண்டு தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி பேரில் பணத்திற்குப் போய் அவ்விடத்திலே பேஷ்கிஸ்தி பணமும் வாங்கிக்கொண்டிருக்க சென சதாறுயஅ பசலி நவாபு அஸபஷாபாதர் விழுந்து போய், **நவாபு நாசர் சங்கிற்கு** பட்டமாயிருக்க, டில்லியிலே நாசர்சிங்கு தமயன் பாதுஷா வண்டை காசுதீகான் வசீராயிருக்க, அவர் பேரில் பாதுஷா கோபம் பண்ணி கைதிலே வைக்க, காசுதீக்கான் தன்னுடைய தம்பி நாசர் சிங்கிற்கு தமாம்தக்கன குமக்கு தண்டு முதல் வாங்கிக் கொண்டு பாதுஷா பேரில் வரச்சொல்லி எழுதியனுப்ப, நாசர் சங்கு இனபதாயிரம் குதிரை தோப்காணு பாய்தல் செனங்களும் இரண்டு லட்சம் சேர்த்துக் கொண்டு தக்கன் சீமைக்கு பௌவுசுதார்களாலே பந்தோபஸ்தாயிருக்கும் படி திட்டம் பண்ணிப் போட்டு பாதுஷா பேரில் நர்மதாவரைக்கும் தண்டோடே போனுர்.

அப்படியிருக்க அஸபஷா மகன் மொத்தசிம்கான் பெண்சாதிக்கி நவாபு அஸபஷா ஹைதராபாத் சுபா கர்னுடகம் எழுதிக் கொடுத்து

இருப்பதாய் அத்தை தன் மகன் இதாயத்து மோதின்கான் கையில்க் கொடுத்து உன்பாட்டனர் எனக்கு ஹைதராபாத் சுபா எழுதிக் கொடுத்து இருக்கிறர். இது சமயம் நீ கர்னடகம் போய் சீமையைக் கட்டிக் கொள்ளு என்று அந்த கர்னடகத்து நிலமையை அறிந்தவன் உசேன் தோஷத்துக் கானென்கிற சந்தாசாகிபு பொன்னவிலே மோராட்டியர் பாருவிலேயிருக்கிருன் அவனே அழைப்பிக்கிறேனென்று மோராட்டியருக்கு எழுதியனுப்பி சந்தாசாகிப்பை அழைப்பித்து வஸ்திரங்கள் கொடுத்து தன்மகனேடே கூட கர்னடகத்திற்குப் போகச் சொல்லி கர்னடகம் செயம் கொண்டு ஆர்க்காடு பௌவுசுதாரி சந்தாசாகிபுவிற்கு திட்டம் பண்ணச் சொல்லி இதாயத்து மோதின்கானுக்கு திட்டப்படுத்தினன்.

அந்தப் படியே இதாயத்து மோதின்கான் சந்தாசாகிபை வைத்துக் கொண்டு யோசனைகள் பண்ணி சிப்பந்தியும் வைத்து இருபதாயிசம் குதிரை தோப்கான பாய்தல் அன்பதாயிரம் செனம் கூட்டி கொண்டு சென சதாருயகூ பசலி கோலாராம் மைதானத்தில் தண்டோடே வந்தார்கள். அது செய்தி கான் கேட்டு விட்டார். விடியா மகமதல்லிகானே குமக்குச் சேர்த்துக் கொண்டு சண்டை சாமானேடே அதிசல்தாயி வரச்சொல்லி தாம் கூடயிருந்த தண்டோடே வாங்கிக் கொண்டு செஞ்சி வழியாய் வந்து ஆர்க்காடு போய் அவ்விடத்திலேயும் செனங்களேக் சேர்த்துக் கொண்டு பெரிய நசீப்கான் உசேன் தாயார்கான் கூட ஆம்பூர் கணவாய் கட்டப் போனர்கள்.

நவாபு ஹைதராபாத் மோதீன்கான் தண்டும் கணவாய் வந்து சேர்ந்து இரு திறத்தாருக்கும் சண்டை ஆயிற்று. அப்படியிருக்க சந்தாசாகிபும் கன்ற சாலகிகான் புதுச்சேரியிலிருந்தான். அவனுக்கு முசேதிப்பிலிசுக்கும் காகிதம் எழுதி இரண்டாயிரம் வெள்ளேக்காரர் தோப்கானகூட ரசாரல்லிகான் திப்பிலி சண்டை வாங்கிக் கொண்டு அனவர்த்திகான் தண்டிற்குப் பின்னலே வந்து இறங்கினன். நடுவே அனவர்த்திகான் தண்டு இறங்கியிருக்க ஒருத்தருக்கொருத்தர் சண்டையாய்ப் போது செனம் இருவரிலேயும் மாண்டு போய் நவாபு அனவர்த்திகானுக்கு குமக்கு சல்தியிலே வாாததினலேயும் பாரஷிஷ் தண்டு போக ஒட்டாமல் சண்டை கொடுத்தார்கள்.

அதன் பேரில் நவாபு அனவர்த்திகான் தொண்நூறு பிராயம் நல்ல பிழைப்பாய் பிழைத்து இருபத்திரெண்டு சண்டை பத்தேபண்ணி இப்போ ஓடிப் போவது யுத்தமல்லவென்று தீரங்தாசு பண்ணிக்

கொண்டு அம்பாரி யானையை எதிரி பேரில் விட்டார். நசிப்கான் உசேன் தயார்க்கான் கூடயிருந்தவாளும் நவாபு அம்பாரியை எதிரி பேரில் விட அவர் மகன் ருஷன் அவர் உப்பு தின்று இருக்கிறோம் அவருக்கு அத்தது ஆகட்டு மென்று நவாபு அனவர்த்திகான் யானை கூட தீரந்தா சுபா பண்ணிக் கொண்டு தாங்களும் விட்டார்கள்.

இப்படி மூன்று அம்பாரியும் எதிரியோடே தீரந்தாசு சண்டை ரெண்டு நாழிகைவரைப் பண்ணினார்கள். எதிரி அதிகமான பலமான படியினாலே மெரித்து வந்து நவாபு அனவர்த்திகான்பாதர் கூட மூன்று அம்பாரியாரையும் தலையறுத்துப் போட்டார்கள். சென சதாசூடிவ இசரியில் விழுந்து போனார்கள். அது சேதி மாபூசகான் கேட்டு தண்டு கூடப் போகாமல் ஆர்க்காட்டிற்கு வந்து ஹைதராபாத் போய்ச் சேர்ந்தார். மகமதல்லிகான் தண்டு கூட்டிக் கொண்டு போனார். இந்த மைதானத்தில் அதி சீக்கிரமாய் வந்தார். விழுந்து போன சேதி கேட்டு விட்டா விடியா தேவனும் பட்டணத்தண்டை வந்து தண்டோடேயிறங்கினார். தேவனும் பட்டணத்தில் இந்த கலாபத்துக்கு ராஜா ....தாசவலசை போயிருந்தார். அவருக்குக் காகிதம் எழுதினது "நாமும் நஸ்தர கப்பிதான் சந்தசுக்கு கும்மக்கு நிமித்தம் காகிதமெழுதியிருக்கிறோம் நீர் போய் அவரண்டை கொடுத்து ஜவாப் ஜால் பண்ணி இது சமயத்தில் இரண்டாயிரம் பாரவகைபறு செனம் பீரங்கி மருந்து உண்டு கும்மக்குப் பண்ணினால் சிலவு ஆகிறதும் சிப்பந்திச் சிலவும் கொடுக்கிறோமென்று தெரியப்படச் சொல்லி வாங்கி யனுப்பினால், திருச்சிராப்பள்ளி போய்ச் சேர்ந்து கோட்டை அவர்கள் ஏகத்து.....................யாய் பண்ணிக் கொள்ளுவோ" மென்று எழுதி தீப்புக் கோட்டை கப்பிதான் நஸ்தர் கோபுக்கும் கிராணி வெங்கிடசலய்யனாலே நவாபு சால்விட்டு அவர்களாலே கும்மக்கு சேகரம் பண்ணிக்கொண்டு திருச்சிராப்பள்ளி போய்ச் சேர்ந்தார். அந்தக் கோட்டை சவுக்கி பாராகில்லேதாரி அதிக...............இங்கரேசு பாதர் சர்தார் வசம் பண்ணினார்.

அப்படியிருக்க இதாயத்து மோதீன்கான் சந்தாசாகிபு ஆர்க்காடு வந்து சேர்ந்தார்கள். கர்னாடகக் கில்லேதாரிகளுக்கு உக்கம் நாமா எழுதி நகாமும் உபாரக் பாதி அழைப்பித்துக் கொண்டு சீமைக்கு தங்கள் அவல்தார்கள் அனுப்பி அவ்விடத்தில் நாலுமாதமிருந்து செஞ்சி வழியாய்ப் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார்கள். இதாயத்து மோதீன்கானுக்கும் **முசேதிபிலீசுக்கும்** பேட்டியாய் இதாயத்து மோதீன்கானுக்கு பாணவித்தையோடே அதிக விருந்து பண்ணி

வைத்தார். அந்தப்படியே ஆனந்த ரெங்கப்பிள்ளையும் இதாயத்து மோதீன்கான் நவாபிற்கு விருந்து பண்ணிவைக்க ஆனந்தரெங்க பிள்ளை[29] பேரில் அதிக சந்தோஷத்தின் பேரில் இவன் கர்னுடக அமீரென்று சாலர்தார் பல்லக்கு கோஷா போஷ் கொடுத்து வைசரத்து விசையானந்தரங்கிராவு என்கிற கிதாபு கொடுத்து செங்கல்பட்டு கில்லேதாரி சன்னத்தும் கொடுத்தார்.

அவ்விடத்தில் ஒரு மாதம் வரைக்கும் இருந்து தம்முடைய தண்டும் பாரஷீஷ் தண்டும் முசேலாச் சென்ற ராலத்திப்பிலீச மருமகன் பாரஷீஷ தண்டிலே சுபேதாராயிருந்து உயர்ந்த அஸநுத்திகான், முச பர்கான் இப்ராயிரம்கான் காடதி இவர்கள் பதினையாயிரம் சேனம் சுலதாது பாரா வகையரு சேர்ந்தார். சாயபு கடதஞ்சாவூர் ராஜா பிரதாபராஜா பேரில் போயி கோட்டையைச் சுற்றிக் கொண்டு சண்டை பண்ணினர்கள். ராஜாவும் கோட்டையை பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு சண்டை கொடுத்துக் கொண்டு இருந்தார்.

அப்படியிருக்க தக்கனவசீர் நிஜாம் தௌவுல்லானி நிசாமன் மூலக் அஸபஷா நாசர் செங்கு பாதர் நர்மதா ஆற்றண்டை போயி தண்டோடேயிறங்கியிருக்க டில்லியிலே வசீர் காசுதீகான் பாதுஷா வோடே சமாதானமாயி மாமூல் படிக்கு தனவசீர் உத்தியோகம் சேகரம் பண்ணிக் கொண்டு தம்பி நாசர் சங்கு பாதருக்கு எழுதினது “பாதுஷாவிற்கும் எனக்கும் சமாதானமாயிற்று. நீ இந்துஸ்தானத் திற்கு வரவேண்டியதில்லை, பாதுஷா தம்முடைய பேரில் கோபம் பண்ணுவார். துரோகஸ்தனைப் போவோம். தக்கனுக்குப் போய் விடு என்னு எழுதியனுப்ப நாசர் சங்குபாதர் தமயன் காரியம் பார்த் துக்கொண்டு தக்கனுக்கு வரும் போது தம்முடைய அக்காள் பிள்ளை இதாயத்து மோதீன்கான் சந்தாசாகிபை அழைத்துக் கொண்டு கர்னுடகத்திற்குப் போய் கர்னுடகம் பௌவுசுதார் அநவர்த்திகான் பாதரைக் கொன்று விட்டு புதுச்சேரி, வெள்ளைக்காரர் ஒத்தாசை பண்ணிக்கொண்டு சீமையை சப்தி பண்ணி தஞ்சாவூர் பேரில் மொயிம்

---

29. தற்காலம் பிரபலமாய் வழங்கிவரும் ஆனந்தரங்கம் பிள்ளை இவரே. இவரைப் பற்றி C. S. ஸ்ரீநிவாஸாசாரியார் ஒரு நூல் எழுதியுள்ளார். புதுச்சேரி கவர்னர் ட்யூப்ளே காலத்தில் புகழுடன் விளங்கிய தமிழர். இவர் எழுதிய நாட்குறிப்புக் களைச் சென்னைத் துரைத்தனத்தார் பல தொகுதிகளாக வெளி யிட்டிருக்கிறர்கள்.

போயிருக்கிறார்களென்று கேட்டு அதிகோபமாய் இந்துஸ்தானத் திற்குப் போகப் போன தண்டோடே, மோராட்டியர் காணேசி, சந்திர செயன், கடப்பா, கர்நூல், சாவனூர், பங்காப்பூர் வகையரு கும்மக்கும் மனசப்தாரையும் கூட்டிக் கொண்டு சதாநூ௰கூ பசலி சுக்கில வருடம் ஆனிமாதம் கோராபக்கம் வந்து சேர்ந்தார்.

நவாபு நாசர் செங்கு வருகிற செய்தி மஹமதல்லிகான் திருச்சி ராப்பள்ளியிலிருந்தவர் கேட்டு அதிக சந்தோஷத்துடனே இரண்டா யிரம் செனத்தோடே சேலத்து வழியாய் வர நவாபு நாசர் செங்கை வாணியம்பாடி மைதானத்தில் கண்டு பேட்டி பண்ணிக் கொண்டு தகப்பனைக் கொன்று விட்டது தெரியச் சொல்லித் துக்கிக்க நவாபு நாசர் செங்குபாதர் "உம்முடைய நிமித்தம் வந்தோம் புத்தி கெட்ட வனையும் பாரிஷக்காரரையும் அடித்து உங்கள் மிராசு ஆர்க்காடு பௌவு சுதாரி உங்களது தானென்று திட்டப்படுத்தி காதர் சமாசொல்லி இருபதாயிரம் குதிரை கொடுத்து உங்கள் பேரில் முன்னுதாய்ப் போய் சண்டை பண்ணினால் நாமும் வருகிறோ" மென்று அனுப்பினார்.

மஹமதல்லிகான் தண்டை வாங்கிக் கொண்டு சிதம்பரம் போய்ச் சேர்ந்தார். இதாயத்து மோதீன்கான் சந்தாசாகிபு முசேலாவகையரு நவாபு தண்டை எடுத்துக் கொண்டு தக்கன் வீட்டுக் கர்னாடகம் வரு கிறது கேட்டுத் தஞ்சாவூர் சண்டையை விட்டு சிதம்பரம் தண்டை வரச்சே மஹமதல்லிகானுக்கும் அவர்களுக்கும் நல்ல சண்டையாயிற்று. சந்தார் சாகிபு தீவான் சேஷராயன் விழுந்து போனான் அதுவே பாரி ஷக்காரர் தண்டு தூறிக் கொண்டு காட்டு.........................திலே வந்து இறங்கினார்கள்.

இதாயத்து மோதீன்கான் சந்தாசாகிபு வழுதாவூர் மைதானத் தில் இறங்கினார்கள். முகமதல்லிகான் தம்முடைய தண்டு நவாபு பதினா யிரத்துப் பண்ண தண்டு இங்கரேச்பாதர் தண்டும் வைத்துக் கொண்டு எதிரி தண்டை சுற்றிக் கொண்டு இருக்க நவாபு நாசர் சங்கு தண்டோ டே சங்கமாகணவாய் வழியாய் இறங்கினார். அப்போ சேத்துப்பட்டு கில்லேதாரான மீரஸத்துல்லாகான் சங்கமாவண்டை போய் நவாபு பேட்டி பண்ணிக் கொண்டான். நவாபு கர்னாடக பூர்வோத்திரம் முன் நடந்தது, பின் நடந்தது நடக்கிறது. சகலசமாசாரமும் அவளவாள் குணங்களையும் கேட்டார்.

நவாபு கேட்டதற்கெல்லாம் தெரியச் சொல்லி மகமதல்லிகான் புத்தியும் குணாதிசயமும் சிபாய்கிரியும், சாமிகாரியங்கள் நிலமையும்

நவாபிற்குச் சொன்னர். அதன் பேரில் நவாபு சொன்னது "அனவர்த்திகான் சர்க்கார் கயர்கா மனிதன் அவன் மக்களிலே மகமதல்லிகான் புத்தியிலேயும் ஆலோசனையிலும் மிருந்தவன் அவன் தான் கர்னடகம் பந்தோபஸ்து பண்ணுவான் ஆனல் அனவர்த்திகான் விழுந்து போன தேதம்முடைய தண்டை சமாளிக்கமாட்டாமல் மாபூசகான் நம் மண்டை வந்தான். அவனுக்கு காதல் தசலி பண்ணி அவன் பேருக்கு பௌவு சுதாரி திட்டம் பண்ணியிருக்கிறது" என்று சொல்லி மீரதுல்லா கானுக்கு போஞர், வந்தவாசி கலவைக்கில்லேதாரி பண்ணிக் கொடுத்து அனுப்பி தாம் விழுப்புரம் வந்து சேர்ந்து தம்முடைய மால்களை ரெண்டாயிரம் உடுதாபேகம் சவார் கூட்டி செஞ்சிக்கி அனுப்பினர்.

செஞ்சியிலே நவாபு இறங்கின போதே மேல்ச்சேரிக் கில்லேதார் மனரூபசிங்கு பேருக்கு சபத்தி பண்ணச் சொல்லி அனுப்பினர். அந்த சன்னதைப் பார்த்துக் கொண்டு செஞ்சிக்கு வெளியெல்லாம் தாலூக்காத்துகளை சப்தி பண்ணி ரெண்டு நாளைக்குப் பிறகு மிரசா அசன் பெக்கே கில்லேதாரியும் தடிகார பொந்திலியர் செனம் நாலாயிரம் பேரையும் தாராபெக்கு பௌவுசுதாரியும் திட்டம் பண்ணி கில்லா பந்தோபஸ்திற்கும் தாலூக்காத்துக்களுக்கும் அனுப்பிவைக்க அவாள் செஞ்சிக் கோட்டையிலே வந்து பந்தோபஸ்து பண்ணிக் கொண்டிருந்தவாள் நவாபு மால்களே சாக்கிரதையாய் வைத்திருந்தர்கள்.

அப்படியிருக்க மறுகால் உத்தாரப்படிக்கு மால்கள் ஆர்க்காடு போய்ச் சேர்ந்தார்கள். நவாபு விழுப்புரத்திலிருந்து வழுதாவூர் கிட்ட தண்டோடே போக நவாபு வருகிறது இதாயத்து மோதீன்கான் சந்தா சாயபு கேட்டு இனிமேல் இவ்விடத்திலிருந்தால் செம்மையல்ல: மகமதல்லிகான் பக்கத்தில் இறங்கியிருக்கிறன். நவாபு வருகிறது நமக்கு நிலே கொடாது என்று சந்தார் சாகிபு இதாயத்து மோதின்கானுக்குச் சொல்லிப் புதுச்சேரிக்குப் போகலாமென்று அழைத்தார். அதற்கு இதாயத்து மோதீன்கான் சொன்னது "நவாபு மொத்தசிமகான் மகன் நவாபு தக்கன வசீர் அசபஷா பேரன் ஓடிப்போக மாட்டேன் நீராஞல் போமென்று சொன்ஞர்.

சந்தார் சாகிபு புதுச்சேரி போய்ச் சேர்ந்தார். பாரிசு தண்டு புதுச்சேரி குண்டு சாலேக்கு மேல் பக்கம் இறங்கினர்கள். நவாபு நாசர் சங்கு பாளயம் இதாயத்து மோதீன்கான் பாளயத்தைச் சுற்றிக் கொண்டார்கள். மகமதல்லிகான் தண்டு பாரிச தண்டிற்கு முகாபனராவாய் பக்கமாயிறங்கியிருந்தார்கள். நவாபு தண்டு மெதித்துப் போகும் பொழுது இதாயத்து மோதீன்கான் தண்டு கலந்து போயிற்று. இதாயத்து

மோதீன்கான் அம்பாரி நின்று கொண்டு இருந்தது. அது நவாபு பார்த்து யாருடைய அம்பாரி என்று கேழ்க்க இதாயத்து மோதீன்கான் அம்பாரி யென்று சொன்னுர்கள். அந்த புத்தி கெட்டவனைப் பிடித்துப் பாருவிலே வைய்யுங்களென்று சொன்னுர். இதாயத்து மோதீன்கானை அம்பாரியோடே கொண்டு வந்து பாருவிலே வைத்து நவாபு தண்டோடே ஊசுத்து ஏரியண்டையிறங்கினுர்.

இதாயத்து மோதீன்கான் பாளயமும் ஓடிப் போனவாள் போக மற்ற செனங்கள் குதிரை அமீர்களும் தண்டு வந்து சேர்ந்தார்கள். நவாபு தம்முடவசம் பண்ணிக் கொண்டார். அவ்விடத்தில் பதினைந்து முகாம் ஆயிற்று. புதுச்சேரி பேரில் பேடா போட்டு சண்டை பண்ண வேணுமென்று யோசனை பண்ணினுர்கள். மகமதல்லிகான் நவாபண்டை வந்து தொப்பிக்காரருக்கு எதிர் தொப்பிகாரர் தங்கள் கயற்கா மனிதர் இங்லீஷ்பாதர் தண்டை அழைப்பித்து இருக்கிறேன். அவர்கள் சவாயத்து வித்தையை தங்கள் பார்க்க வேணுமென்று சொல்லி பார்க்க வேண்டியது என்ன உம்முடைய வசம் வைத்துக் கொள்ளுமென்று சொன்னுர். நாம் ஆர்க்காட்டிற்கு வலிகள் தருகா தெரிசனத்திற்குப் போகவேணும்.

புதுச்சேரி ஒரு பொருளல்ல நம்முடைய தண்டு செனங்கள் ஒற்றைக்கால் பாப்பாச்சி[30] எறிஞ்சால் கோட்டை நிறைந்து போம். நாம் போய் நாலு மாதத்திற்குப் பிறகு வருகிறேும். நீர் உம்முடைய எதிரி பேரில் சண்டை கொடுத்துக் கொண்டு இருமென்று பின்னும் செனங்களைக் கொடுத்து பந்தோபஸ்தாயிருக்கச் சொல்லித் திட்டம் பண்ணிப் போட்டு நவாபு நாசர் சங்கு பாதர் ஆர்க்காடு போய்ச் சேர்ந்தார். மகமதல்லிகான் அவ்விடத்திலிருந்து திருவாதி வந்து இறங்கி தண்டைச்சுற்றி சுவர் போட்டுக் கொண்டு குதிரைகளை பாரஷீஷதண்டு பேரில் வைத்தார். அப்பயிருக்க பாரஷீஷபாளயம் வில்லியநூர் வந்து இறங்கினுர்கள். அஸநுத்திகான் முசேலாத உத்தாரப் படிக்கு அய்யாயிரம் சொல்லதாது ஆருயிரம் பார் ஆலே மான குதிரையும் வாங்கிக் கொண்டு மகமதல்லிகான் பேரில் வந்தார்கள்.

---

30. ஒற்றைக்கால் பாப்பாச்சி—ஒரு காலில் உள்ள பாதக்குறடு

31. நாசர் சங்—நைசாமுல் முல்கின் மகனும் முஸாபர்ஜங்குக்கு மாமனும் ஆவான். இவரைப் பற்றிய விரிவான செய்திகளுக்கு Cambridge History of India Vol. V பக்கம் 127லிருந்து பார்க்க.

மஹமத்தல்லிகான் குதிரை பௌவுசான படியினலே எதிர்க்காமல் திருவதிவிட்டு திருக்கோவிலூர் பக்கம் போயி செஞ்சிவந்து செஞ்சிக் கில்லா கிருஷ்ணகிரிக்கு வடக்கே சிறுகடம்பூர் ஏரி எதுர்வாயில் வந்து இறங்கினர்கள். பாரிஷக்காரர் தண்டு உசேலாச விழுப்புரத்திற்கு வடக்கே தும்பூரிலே இறங்கினர்கள் பாரிசக்காரர் தண்டிலேயிருந்து அசனுத்திகான் பதினயிரம் சனம் சகலத்திலேயும் வாங்கிக் கொண்டு செஞ்சிக்குத்தெற்கே நாலு நாழி வழி சிட்டாம் பூண்டியில் வந்தார்கள். அது செய்தி மகமதல்லிகான் கேட்டு தாம் அம்பாரி ஏறிக்கொண்டு அம்புவில்லு முதல் ஆயுதமெடுத்துக்கொண்டு பதினயிரம் குதிரை தண்டு வாங்கிக்கொண்டு அஸநுத்திகான் பேரில் மெரித்தேறிப் போய், பீரங்கிசண்டை முதல் பண்ணினர்.

பீரங்கி சப்தம் கேட்டு விட்டாவிடியாய் மூசல்லாதண்டோடே அசனுத்திகானுக்குக் குமக்குப் பண்ணினர். அப்பொழுது மகமதல்லி கான் தண்டு பகுஷி விழுந்து போய் பின்னிட்டு செஞ்சிப்பட்டணம் வழியாய் வந்து கோட்டைக்குள்ளே புகுந்து சண்டை பண்ணுவோ மென்று கோட்டை வாயிற்படிகிட்டே வந்தார். கோட்டையில் நவாபு நாசர் சங்கு மனிதன் தடிகாரரும் மிரசா அசன் பேக்கு கில்லேதாரும் கதவைச் சார்த்திக் கொண்டார்கள். அதற்கு மகமதல்லிகான் கில்லே தாருக்குச் சொல்லியனுப்பினது. "நாம் கோட்டைக் குள்ளே வந்து எதிரி பேரில் சண்டை பண்ண வேணும். வாசற்படியைத்திறவுங்க ளென்று" சொல்லியனுப்பினர்.

அதற்குக் கில்லேதார் நவாபு உத்தாரம் இன்றித் திறக்கமாட்டோ மென்று சொன்னர். மறுகாலும் காரியம் வந்து மேலிட்டு இருக்க இப்படி அட்டி சொல்லப் போகாது. எதிரி சமீபத்தில் வந்துவிட்டான் நாமும் நவாபு உத்தாரப்படிக்கு தந்தோம் கதவைத்திறவு மென்று கில்லேதாருக்கு ரொம்ப சொல்லியும், கில்லேதார் கேழ்க்க மாட்டோ மென்ற படியினலே முகமதல்லிகான் கோபம் பண்ணிக் கொண்டு தெத்திற்கு வெளியே இறங்கியிருந்த சோத்துப் பாளயத்தில் வந்து தண்டோடே கூஜ் பண்ணிக் கொண்டு திருவண்ணமலை வழியாய் ஆர்க் காடு போயிச் சேர்ந்தார். உசேலாச அசனுதீக்கான் வகையரு மகம தல்லிகான் தண்டு பின்னலே தொடர்ந்து வந்தவர்கள் செஞ்சிக் கோட் டைக்கு நேர் கிழக்கே வரும் பொழுது கோட்டையிலிருந்தவர்கள் துர்க்கத்தின் பேரிலிருந்த புருசுகள், கோட்டை சபீல்கள் பேரிலிருந்த பிருசுகள், பீரங்கிபார் பண்ணிச் சுட்டார்கள்.

பிரங்கிக்காரர் குருவன்ஸா பாஷ் டெங்கடி பேரிலிருந்த பிரங்கியைச் சுட்டான். அது போய் பாதுஷா தண்டு வயணிலே குண்டு விழுந்து ஐந்து பேர் சுலதாதுகள் விழுந்து போனார்கள். ஒரு குண்டு உசேலாச்சவாரி கிட்ட வந்து விழுந்து சவாரி கிட்ட இருந்தவர்கள் பேரிலேயும் பட்டு செத்துப்போனார்கள் அது வெலாச கோபம் பண்ணி செஞ்சிக் கோட்டை பேரில் தண்டோடே திரும்பி பட்டணத்தில் உட்புகுந்து தேத்துகளை வாங்கிக் கொண்டு கோட்டைக்குப் போய்க் கோட்டையைச் சுற்றிக் கொண்டு பிரங்கிகளை மேட்டுப் புறங்களிலே வைத்து சுட்டார்கள். கோட்டையிலேயிருந்த புறபியா பொர்ந்திஸியர் தடிக்காரர் வகையறு சிறிது பேர் கில்லேதார் முதல் வேலூர் தர்வாசா திறந்து கொண்டு மகமதல்லிகான் தண்டிலே போயி விட்டார்கள்.

சிறிது பேர் இருந்து சண்டை பண்ணினார்கள். சிறிது பேர் ஓடிப் போய் விட்டது, இருந்தவர்களுக்குத் தெரியாது. அதுவே பாரிசக்காரர் பிரங்கி இழுத்து வந்து பத்தேதருவாசா பேரில் அடிக்க தருவாசா விகழ்சி கொண்டு மதில் பேரிலேயும் செனக்கடைப் பக்கமும் அல்லா பண்ணிக் கொண்டு கோட்டையை வாங்கினார்கள். கோட்டையில் ஓடிப் போனவர் போக அகப்பட்டவர்களை பின்னாலே நவாபு தண்டுக்கு அனுப்பி விட்டார்கள். கோட்டையிலிருந்த வீடுகளைக் கொள்ளையிட்டார்கள். அன் நேரம் கோட்டைக் குள்ளே ரெண்டாயிரம் வீடு துலுக்கர், பொர்ந்திஸியர், செட்டிகள் கெவுத்துமா கொல்லர் வகையறு இருப்பார்கள். ஷேக் அப்துல்லாகாதர் பாதுஷா காசி பேரன் மகம்மது பாகர் வீட்டில் ரெண்டு லட்சம் ரூபாய் அபீஸ் மகமதல்லி பீர்ஸாதா வளவில் லட்சம் ரூபாய் இப்படி சர்வத்திராள் வீட்டிலும் கொள்ளையிட்டதும் பேட்டையில் பதினாயிரம் வீடு இருக்கும், இதுகளெல்லாம் கொள்ளையிட்டது கோடி ரூபாய்க்கு இருக்கும்.

அந்தக் காலத்தில் ராஜா ராமடங்கு சாலே போட்டது ராஜா சாயி பணம் வழக்கம் அந்தப் பணங்கள் பொட்டி பெட்டியாய் அகப்பட்டது பாரிஷசுல்தாதுகள் பருப்பு எண்ணு தெரியாமலும், ரூபாய் உயர்த்தி என்னும் அவர்கள் ரூபாய் பேரில் திருஷ்டிவைத்துக் கொள்ளையிட்ட பணத்தை ரெண்டு நாழி வழியில் கணவாய் பாரசக்காரர் சுபத்தி பண்ணி துர்க்கத்தின் பேரிலேயும், கோட்டையின் பேரிலேயும், தேதுகள் பேரிலேயும் சவுக்கு பாராபந்தோபஸ்து பண்ணிப் போட்டது உடனே ரூபாய் முன்னுக்கு ஒரு படி பணமும், அப்பால் சாமத்திற்குப் பிறகு கால் படிப் பணமும், அப்பால் ரெண்டு நாழிக்கு இருபது பணமும் மறுநாள் நாலு பணமுமா செல்வாக்குப் பண்ணினார்கள்.

அந்த வேளையில் பாக்கிய வந்தன் தரித்திரரான, தரித்திரன் பாக்கிய வந்தனை வெளிப்பட்டைகள் தப்பிப் போயிற்று. ஆனல் முனகர்னுடக காலத்தில் லட்சத்திற்கு மேல் வீடுகளிருக்கும் துலுக்கர் நாளான பிறகு இறங்கிப் போய் இருபதாயிரம் வீட்டில் வந்தது. யப்ப பாரிசக்காரர் கோட்டை வாங்கி அவர்கள் அமலான பிற்பாடு செஞ்சிப் பட்டணம் இறங்கிப் போயிற்று குடித்தனங்கள் எடுபட்டுப் போயிற்று பிரமாதூத வருடம் சென சதாசுடு பசலி பிரட்டாசி மாதம் பராக்காரர் அமலாய்த்தது முசலாசலத் தோசுக்கு கில்லேதாரி கொடுத்து இரண்டாயிரம் செனம் வெள்ளக்காரர் பாருமாயி தைனத்து வைத்துதாம் தண்டோடே சேத்துப்பட்டு மட்டாய்ப் போய் அவ்விடத்தில் ஒரு மாதம் இறங்கியிருந்து நவாபு நாசர் சங்கு ஆர்க்காட்டிலிருந்த படியினலே, குதிரைகளுபத்திரவத்தினலும், நவாபு தண்டோடே வருவாரென்றும் கோட்டை ஆஜரா வேணு மென்றும் செஞ்சிக்கு வடக்கே ரெண்டு நாழி வழியில் இறங்கினர்கள்.

நவாபு ஆர்க்காட்டிலிருக்க மகமதல்லிகான் பாரசக்காரருக்குப் பின் வாங்கி தம்முடைய தண்டோடே ஆர்க்காட்டில் சேர்ந்து நவாபு பேட்டி பண்ணிக் கொண்டு உசூரிலேயும் திவான்ஷான் வாசக்கான் மோரோ பண்டிதராம் ராஜபண்டிதராம் இவர்கள் கச்சேரியிலும். போக்கு வரத்து மாயிருப்பார்.

நவாபு அவ்விடத்திலேயிருக்கிற துலுக்கர் யோகிகளுக் கெல்லாம் கிராமங்கள், ரோஜீகள், திருநாள்கள் நடப்பித்தார் அப்படியிருக்க மாபூசகானுக்கு ஷாமத்து செங்கு என்று முன்னலே தானே பேர் கொடுத்து இருந்த வருக்கு ஆர்க்காடு பௌவுசுதாரி திட்டமாயிருக்க அவரைக் கர்னுடகம் பதினெட்டு லட்சம் ரூபாய்க்கு இசாரா பண்ணிக் கொள்ளச் சொல்லி உத்தாரமாயிருந்தது அதற்கு ஷாமத்து சங்கு பாதர் அங்காமாவில் சீமை பாய் மாலியாய்ப் போய் விட்டது பணமும் காணமாட்டாது என்று சொன்னர் அந்த வேளையில் இந்த இசாராவிக்கு நவாயித்தான் வேலூர்க் கில்லேதார் முரத்து சாகான் முதல் பெரிய மனிதர் தர்க்காஸ்துக் கொடுத்தார்கள். அப்படி தர்க்காஸ்து கொடுத்தும் நவாபு பார்த்துக் கொண்டு மனதிலே எண்ணங்களை எண்ணி **நவாபு மகமதல்லிகான் பேருக்கு கர்னுடக பௌவுசுதாரி** சன்னது எழுதி மோகர் பண்ணி தம்முடைய சேபிலே வைத்துக்கொண்டு பத்து நாழி ராத்திரியில் மகமதல்லிகானை அழைப்பித்து சன்னது கொடுத்தார்.

மகமதல்லிகான் வாடிக்கை தம்முடைய அங்கி சேபிலே அஷருபி வாசமாயி வைத்திருப்பார். நூற்றுப்பதினேரு அஷருபி நசர்வைத்து சலாம் பண்ணி நின்ருர். நவாபு அதிக சந்தோஷப்பட்டு மகமதல்லி கான் பாதர் "உமக்கு உங்கள் தகப்பன் பேரும் கொடுத்தோம் உமக்கு இந்த கர்னுடகம் மிராசு இருக்கிறது ஏது காரியத்திற்கும் காத்தாச மாயிருக்கவுமென்று பேச்சு உறுதியாய்ச் சொல்லி முசத்திகள் கச்சேரி க்குப் போயி உம்முடைய தசத்தவசு முச்சலிகா வகையரு தபத்தர் கவைகளை சேகாரம் பண்ணிக் கொண்டு பௌவுசுதாரி கர்னுடகத்தை பந்தோபஸ்து பண்ணிக் கொள்ளு" மென்று அனுப்பி விட்டார்.

தற்காஸ்து பண்ணின வாளெல்லாம் ஆசையை விட்டு விட்டார்கள் மகமதல்லிகான் சகலமான கில்லேதார் ஜமீன்தார் வகையருக்களுக்கு இனயத்து நாமா அனுப்பி நசரும் முபாரக் பாதியும் அழைப்பித்து கொண்டார். அப்படியிருக்க நவாபு கார்த்திகை மாதம் முதலிலே ஆர்க்காட்டிலேயிருந்து புதுச்சேரி வாங்கவேணு மென்று தண்டோடே இளம் காட்டில் வந்து இறங்கினர். வந்தவாசிக் கில்லேதார் குலாம் தக்கயக்கான் தன் மகனை அல்லி நக்கி என்கிறவனை வக்கீலா அனுப்பி யிருந்தவனும் ஆர்க்காடு முதல் கூட வந்து யிருக்கிறன். நவாபு செனங்கள் வந்தவாசி கில்லாவை சுற்றிக் கொண்டார்கள். கில்லேதார் தம்முடைய சிப்பந்தி செனங்களுக்கும், வலசி செனங்களுக்கும் ஆயுதங் கள் தடிகள் கொடுத்து கோட்டை அலங்கத்தின் பேரில் வைத்துக் கொண்டு பீரங்கிகளையும் பார்பண்ணி வைத்துக் கொண்டு இருக்க இந்த சேதி அல்லி நக்கி கேட்டு கில்லாவுக் குள்ளே தகப்பன் கிட்டவந்து தப்பு தண்டை எசமானன் பேரில் பண்ணத் தேவையில்லை. நவா பண்டை கவில் வாங்கிக் கொள்ளுவோமென்று சொல்ல, கில்லேதார் நசர் பணம் மாத்திரமென்று தண்டு காச்சு இம் மாத்திரம் கொடுக்கிறே னென்று அர்ஜ்ஜி பௌவுசுதார் மாறுபத்தில் எழுதியனுப்பி தம்முட மாமல்லத்து தீர்த்துக் கொண்டார்.

நவாபு உத்தாரப்படிக்கு திவான் ஷானவாசகான் மோரோ பண்டி தராம் தாசபண்டிதர், மகமதல்லிகான் கர்னுடகம் பௌவுசுதார். அல்லி நக்கி கூட அவாளவாள் பாட்டவணையோடே வந்தவாசிக் கில்லாவிற்கு வந்தார்கள். கில்லேதார் சகல சனங்களையும் கூட்டிக் கொண்டு இடுப் புக்கட்டி தவாலி போட்டு ஆயுதபாணியாய் தர்வாசாக் குள்ளே நின்று கொண்டிருந்தார்.

ஷானவாசகான் வகையரு தர்வாசாக் குள்ளே வந்து இறங்கினர் கள். கில்லேதார் இவர்கள் பேட்டி பண்ணிக் கொண்டு ஆலிங்கனம்

பண்ணி அவளவாளுக்கு பதினொரு ரூபாய் நசர் வைத்து தாம் தம்முடைய தீவான் கானவில் பங்களா அதில் நடுவும் பக்கத்தில் தம்பங்களண்டை நாலு பக்கமும் அஞ்சும் சன்னத்துப் பண்ணி வைத்திருந்தார். அவ்விடத்தில் இவர்களை அழைத்துக் கொண்ற போனார். ஷானவாஸ்கான் முன்னே உட்கார்ந்தார். பிறகு மோரோ பண்டிதர் உட்கார்ந்தார். பிறகு ராமதாஸ் பண்டிதர் உட்கார்ந்தார் பிறகு பௌவுசுதார் உட்கார்ந்தார் அப்பால் கில்லேதார் யோசனை பண்ணிக் கொண்டு சபதரல்லிகான் பிள்ளையை உட்காரச் சொல்லி கொஞ்சம் பக்கமாய்த் தானும் உட்கார்ந்தார். இப்படி இரண்டு நாழி யோக க்ஷேமம் பேசிக் கொண்டு விருந்துகள் சாப்பிட்டார்கள். ஒரு ராத்திரி தங்கினார்கள்.

கில்லேதார் அவாளவாளுக்கு பணத்தினாலேயும் வஸ்திரங்களாலேயும் மரியாதை பண்ணினார் கில்லேதாருக்கும் அவர்களும் மரியாதை பண்ணினார்கள். மறு நாள் காலமே கில்லேதாரும் தண்டு வந்து சேர்ந்தார். கில்லேதார் தண்டிலே பதினைந்து நாள் வரைக்கும் திவான் பௌவுசுதார் முசுத்திகளிடத்தில் போக்கு வரத்தாயிருந்து அவர்கள் முகனையா நவாபு பேட்டி பண்ணிக் கொண்டு தான் நசர் வகையரு படம் ஏத்துக் கொண்டதற்கு காகிதத்திலே எழுதி நவாபண்டை வைத்து நவாபு கையினாலே பாக்கு வெற்றிலை வாங்கிக் கொண்டு கில்லாவிற்குச் செலவு வாங்கிக் கொண்டு திவான் பௌவுசுதார் சிலவும் வாங்கிக் கொண்டு கில்லா போயிச் சேர்ந்தார். கில்லேதார் மகன் அல்லிநக்கி உத்தாரப்படிக்கு தண்டிலே தானேயிருந்தார் அப்படியிருக்க மழை காலமான படியினாலேயும் அவ்விடத்திலிருந்து செஞ்சிக்கி ஈசான்யமாயி பத்து நாழி வழி வெள்ளி மேட்டு பேட்டை மைதானத்தில் நவாபு தண்டோடே இறங்கினார்.

பாரிஷக்காரர் தண்டு செஞ்சிகிட்ட இறக்கியிருந்தது. பாரிஷ தண்டு முசபரகான் ரஷத்து விழுப்புரம் பாதையாய்க் கொண்டுவரும் பொழுது நவாபு தண்டு சர்தார்கள் வழிமறித்துச் சண்டை பண்ணி முசபரகானைப் பிடித்து நவாபு தண்டிலே கொண்டு போயி உத்தாரப்படிக்குப் பாராவில் போட்டார்கள். அப்படிப்பட்ட காலத்தில் நவாபு தண்டு கூடயிருபத்திரெண்டு அமீர்கள் வந்தவாளிலே ஒருத்தன் கன்னூல் இம்மதபாதர்கான் தப்பு நினைவு எண்ணி செஞ்சியண்டை பாரிசு தண்டு சண்டரால் முசேலாசு இறங்கியிருந்தவர்களுக்கு மோசடிக்காகிதம் எழுதி நாலு குதிரைக் காரரண்டை அனுப்பினது நவாபு தண்டு மழை காலமான படியினாலே அகோராத்திரி பகலாய் மழைபெய்து தண்டில் சனங்கள் முதல் சேதமாகிறது.

“தண்டிலே ஒரு மூலைக்கொரு மூலை நடப்பது தெரியமாட்டாது. சமயம் பார்த்து சொல்லி அனுப்பிவைக்கிறேன். உம்முட தண்டோடே வந்து ராத்திரி காலத்தில் நவாபு தண்டு பேரில் வந்து பீரங்கி சண்டை பண்ணினால் அன்னேரம் யாருக்கும் கையாடாது அப்போ நவாபே அடித்து விடுகிறேன். அந்த நவாபு பட்டம் என்னது உங்களுக்கு கர்னாடகம் முரசு எழுதிக் கொடுக்கிறேனென்று பின்னும் தப்பு போதனையாய் எழுதின காகிதம் வந்து சேர்ந்து முசேலாசபாத் இம்மத் பாதர்கானை நம்பாமல் நிங்களது துலுக்கர் ரொம்ப மோசக்காரர் இந்தப் படிக்கு குரான் பேரில் சத்தியம் பண்ணிக் கொடுத்தால் வருகிறோ மென்று உத்திரம் எழுதினார். அதற்கு இம்மத்து பாதர்கான் ரகசியமாய்த்தானே குதிரைக் காரர் வசம் “உமக்கும் நமக்கும் இந்தக்குரான் சத்தியமென்று” குரானைக் கொடுத்து அனுப்பிவைத்தான். அது முசேலாசாபாத்துக் கொண்டு நம்பினார். அந்தப்படியே சமயம் பார்த்து அனுப்பினால் வருகிறோமென்று மறுகாகிதமனுப்பிவைத்தார்.

அது பார்த்துக் கொண்டு இம்மத்து பாதர்கான் ஒரு நாள் சமயம் பார்த்து சொல்லியனுப்பினார். அது உசேலாச் பார்த்துக் கொண்டு நாலு நாழி வழி நிகநூர் கிட்டபோனார்கள். இது சமய மல்ல வென்று அவ்விடத்தில் பராசு தண்டு வரச்சே இம்மத்து பாதர்கான் எழுதினது வாச பார்த்துக் கொண்டு பழய இடத்தில் வந்து இறங்கினார். மறுகால் நாலு நாள் பிறகு நவாபு தண்டு அகாடி பக்கம் வாங்கோள் என்று எழுதினார். அதுபார்த்துக் கொண்டு வாச தேசூர் வழி பிடித்து நவாபு தண்டு அகாடியில் நாலு நாழி ராத்திரி இருக்க பாராக்காரர் தண்டோடே வந்து பீரங்கி சுட்டார்கள்.

அது செய்தி பாத்தினி அரக்கா ராக்கன் நவாபண்டை வந்து பாசக்காரர் அகாடி பக்கம் வந்து பீரங்கி சுடுகிறார்களென்று சொல்ல நவாபு பீரங்கிகளைச் சுடச் சொல்லி தோப்கானு தாரோகாவிற்கு உத்தாரம் அனுப்பினார். அதற்கு தாரோ கான் காலி மருந்து போட்டு சுட்டார். அதுவே பராசக்கார தண்டு நவாபு தண்டுக்குள்ளே வந்து விட்டார்கள். நவாபு யானையைத் தயார் பண்ணிக்கொண்டு அம்பாரியின் பேரிலேறினார். காச செனங்களெல்லாம் தயாரானார்கள். காச சவுக்கிசு மேதாரானே ரெண்டாயிரம் குதிரையும் தயாராயிருந்தவனை உன் பிராதிரி குதிரைகள் வாங்கிக் கொண்டு தோப்கானுவிற்கு குமக் பண்ணச்சொன்னார். அதற்கு சபேதரான் சொன்னது. “தேவரீர் பாரச தண்டு கொஞ்சம் அவர்களை யாரோ பிதூர் பண்ணினார்கள். பிதூர் அழைப்பித்தப் படியினாலே தைரியமாய் வந்தார்கள். மோசம்

வரும் போலேயிருக்கிறது. தாங்கள் இந்த பள்ளத்தாக்கிலே இரண்டு நாழியிருந்தால் பொழுது விடியும். மோராட்டியர் தண்டும் பௌவு சுதார் தண்டும் தயாராகும். கொஞ்சம் பாரிசக்காரர் தண்டை அடிக் கலாம். நான் தங்கள் பாதத்தண்டை காரியமாவோ மென்று இருக் கிறேனென்று சொல்ல அதற்கு நவாபு கோபம் பண்ணி நாம் பார்த்த இம்மத்து பாதர்கான் பாய் பக்கம் போவோம். நீ அகாடி தோப்கானு வண்டைபோவென்று சொன்னர்.

அப்பவும் சமேதரான அரக்கத்து பண்ணுன் அதற்கு நவாபு நீ நிமக்கு அருமென்று சொன்னர். அந்தப் பேச்சை சமேதாரன் கேட்டு அங்கலாய்த்துக் கொண்டு என்ன காரணமாமோ வென்று தன்னுடைய கும்பலோடே தோப்கானு பக்கம் போனுன். பாரிசதண்டு நவாபு நடுவே வந்து விட்டது.

அப்போ நவாபு யானையை இம்மத்து பாதர்கான் பக்கம் கொண்டு போகச் சொன்னர். மாவுத்தன் யானையைக் கொண்டு போனுல் பின் வாங்குது அதற்கு மாவுத்தன் சொன்னது "தேவரீர் யானை பின் வாங்குது அவன் பக்கம் போகப் போகாது. தேவரீர் மோராட்டியர் பக்கமாகிலும் பௌவுசுதார் பக்கமாகிலும் போகலா" மென்று சொன் னுன். அதற்கு நவாபு மாவுத்தன் பேரிலே ரொம்பக் கோபம் பண்ணி னர். இம்மத்து பாதர்கான் எனக்குத் தம்பி. அவன் எனக்கு துரோகம் பண்ணமாட்டான். சீக்கிரத்திற்குக் கொண்டு போவென்று கடினமாய் சொல்ல தீராமல் மாவுத்தன் யானையை விட யானை கூட நவாபு தம்பி மார் செலாபத்து சிங்கு வசாலத்து செங்கு மீர் நிஜாமல்லிகான் வகை யரு அம்பாரியோடே காசனமீ உளுதாப் பேகினி வகையருவோடே போனர்கள்.

அப்போ சகலமான அமீர்கள் மோராட்டியர், பௌவுசுதார்களுக் கும் சேதி தெரிந்து அவாளவாள் தண்டு சேகரம் பண்ணிக் கொண்டு நவாபண்டை வருகிருர்கள். அப்படியிருக்க நவாபு இம்மத்து பாதர் கான் யானையம்பாரி கிட்டப் போயி தம்பி இம்மத்து பாதர் இத்தினி நிம்மக்கு அரும் அமீர்களிருக்கிருர்கள். ஒரு தாயோழிகளாகிலும்[32] பாதுஷா தண்டை அடியாமல் இருக்கிருர்கள். கொஞ்ச தண்டோடே பாராஷக்காரர் நம்மிட தண்டுக் குள்ளே வந்து விட்டார்கள் என்று

32. ஒரு தாயோழிகளாகிலும்—அவையல்கிளவி

சொல்ல இம்மத்து பாதர்கான் [33]**பிசத்தோலே** எடுத்து நவாப்பை சுட்டு விட்டான். நவாபு அம்பாரி பேரில் சாய்ந்தார். அதுவே இம்மத்து பாதர்கான் தன் அம்பாரியைச் சேர்த்து, நவாபு அம்பாரியில் குதித்து நவாபு கழுத்தை அறுத்து பாலாவிலே குத்தித்தூக்கினான். அன்னேரம் பொழுது விடியற் காலமாயிற்று. சற்று இருட்டாயிருந்தது. அப்போது கர்னாடகம் பௌவுசுதார் மகமதல்லிகான் பாதர் குதிரை மேலேறிக் கொண்டு எஜமானர் முன்னே தீர்க்கசண்டை பண்ண வேணுமென்று தாம் இடுப்புக் கட்டி தவாலி போட்டு ஆயுத பாணியாயி தம்முடைய சனத்தோடே பகுதி நசவரால்லிகான் கூட நவாபு அம்பாரி சமீபத்தில் வந்தார்கள்.

அமீர்கள், மோராட்டியரும் தங்கள் தங்கள் தண்டோடே வந்தார்கள். கொஞ்சம் மிஞ்சி நவாபு தலையை அறுக்துப் போட்டு ஜெய பேரிகை அடித்த படியினாலே பௌவுசுதார் மகமதல்லிகான் அவ்விடத்தில்சமீபத்தில் தம்முடைய தண்டோடே வந்தவர் எஜமானன் தலையை மிஞ்சி அறுத்துப் போட்டார்கள். இனிமேலிருக்கப் போகாது என்று சகலமான சரஞ்சாம் தண்டு விட்டுப் போட்டு கெஜபால்லிகான் கூட விட்டா விட்டியா அவரிடத்திலேயிருந்து திருச்சிராப்பள்ளி வழி நோக்கி தேசூருக்கு தெற்குபட வந்து பென்னாத்தூருக்கு வடக்கேவந்து ரெண்டு சாமத்திற்கு மணலூர் பேட்டை சமீபத்தில் காட்டில் வந்தார்கள்.

நவாபு நிஜாமன் மூலக்நிஸாமதவுல்லா அலபஷா நாசர் சங்கு பாதர் பிரமாதூத வருடம் மார்கழி மாதம் சென சதளசுடு பசலி விழுந்து போனார். நவாபு தண்டு நாலு நாழி அதல குதலப்பட்டு ஒருத்தர் கொள்ளையிட்ட உடமையை ஒருத்தர் வெட்டிப் போட்டு எடுத்துக் கொண்டு சர்க்கார் கசானாவை நாலு நாழி சகல பொக்கிழமும் கொள்ளையிட்டார்கள். கும்மக்கு வந்த அமீர்களெல்லாம் தங்கள் தங்கள் தண்டு கூச்சு பண்ணிக் கொண்டு அப்புறம் போயிறங்கினார்கள். அப்படி தண்டு தங்களுக்குத்தானே அடிபட்டுக்கொண்டு கொள்ளையுமிட்டுக் கொண்டுயிருக்க செனங்கள் அத்திலேயிருக்கவில்லை யென்று தண்டிலேயிருந்த அமீர்கள் முலேச வகையரு நவாபு இதாயத்து மோதீன் கானே அம்பாரியில் வைத்துத் தக்கவசாரத்து நசர் வைத்து செயபேரிகை அடித்து. அவர் பேரில்...............யீ வைத்தார்கள். தண்டு அத்திலே நின்றது.

---

33. பிசுத்தோல்—Pistol

இதாயத்து மோதீன் கான் நவாபு சலாபத்து சங் வகையரு சாயபு சாதா அம்மானமாரே கூடவைத்துக் கெண்டு நவாபு நாசர் செங்குமால் செனங்கள் முதல் தம்முடகயது வாரியிலே பந்தோபஸ்து பண்ணிக் கொண்டார். அது இம்மத்து பாதர்கானுக்கு சம்மதியில்லை. மகம தல்லிகான் பாதர் கர்னுடகம் பௌவுசுதாரி தேடிக்கொண்டு போகச் சொல்லி அன் நூறு குதிரையை திருச்சிராப்பள்ளி வழியே அனுப்பி னூர்கள். பௌவுசுதார் தண்டு செனங்கள் அதிக்காலுக் கோரண்டை யாயிப் போய் விட்டார்கள்.

மஹமதல்லிகான் மணலூர் பேட்டை கிட்ட காட்டில் போகும் பொழுது ஒரு இடைச்சி கஞ்சி கொண்டு வந்தவளை அழைத்து நல்ல பேச்சுப் பேசினூர்கள். அவள் இவர்கள் ரெண்டு பேர் நல்ல துரைக ளென்று அய்யா கஞ்சி குடிக்கிறீர்களா வென்று கேட்டு கொடுத்து அவர்களுக்கு மன இஷ்டமாயி அவர்கள் சம்மதியின் பேரில் கஞ்சிப் பல்லாவோடே வாங்கிக் குடித்தார்கள். அதிலே மகமதல்லிகான்பாதர் விடாயி நீங்கி சந்தோஷமாய் அவள் கையில் பத்து அஷரிபி கொடு த்து அவள் பேரும் ஊரும் கேட்டுக் கொண்டு தியாக துர்க்கத்தண்டே ராத்திரி போய் அவ்விடத்தில் வயற் காட்டில் இருவரும் குதிரையை விட்டு இறங்கி குதிரையை மேய்த்து தண்ணியிருக்கிறதாவிலே கை கால் சுத்தி பண்ணிக் கொண்டு நாலு நாழி இளைப்பாறி மறு நாள் குதிரை சவாரி பண்ணிக் கொண்டு, மறு நாள் காலமே ரஞ்சன் கடை போய் கில்லேதார் மாத்துவர்க்கானைக் கண்டார்கள்.

கில்லேதார் அந்த க்ஷணம் சமயல் பண்ணச் சொல்லி குதிரையை விட்டு இறங்கச் சென்னூர். கெஜபாலல்லிகான் குதிரையை விட்டு இறங் கினூர். மகமதல்லிகான் பாதர் இறங்கவில்லை. அப்படியிருக்க என்ன மோ நினைத்துக் கொண்டு கெஜபாலல்லிகான் சைகை பண்ணி மாத்து மரக்கான் கிட்டயிருக்க மகமதல்லிகான்பாதர் குதிரையை விட்டுக் கொண்டு திருச்சிராபள்ளி பாதையை நோக்கி வசாளியிட்டு போகும் போது கில்லேதார் ரொம்பவும் உபசாரணை பண்ணியும் கேளாமல்ப் போய் விட்டார். கெஜ பாலல்லிகான் அவ்விடத்திலே தானேயிருந்தார். அன்றய தினம் ரெண்டு ஜாமத்திற்கு சமயபுரம் தோப்பிலே ஆற்றுக் காவாயிலே வடக்கத்தி கோசாயி பெண் பேச்சு நிமித்தம் தஞ்சாவூருக்கு வக்கீலா சாவக்கார் வளவிற்குப் போறவன் பெரிய குதிரை கட்டிக் கொண்டு தனியாய் சவுக்கா பண்ணி இலையிலே சாதம் போட்டு நெய் மத்தும் வச்சுக் கொண்டு பூசை பண்ணி ஆன உடனே சாப்பிடுகிற காலத்தில் மகமதல்லிகான் ரொம்ப இளப்பாகாது விடாய்த்துக்

கொண்டு, தனிக் குதிரை யோடே கோஷாய் கிட்டவந்து குதிரையை நிறுத்தினர்.

கோஷாய் குதிரைக் காரனைப் பார்த்து "நீ யார்" என்று கேட்டான். அதற்கு மகமதல்லிகான் சொன்னது "நான் நவாபு நிஜா மத்து உல்லா நாசர் சங்கு சேவகம் நவாய்ப்பட்டு நவாபு தண்டு அதல குதலப்பட்டுப் போயிற்று. நவாபும் விழுந்து போனர். நான் திருச்சிராப்பள்ளிக்குப் போறேன். மூணுநாள் ஆயிற்று சாப்பிட்டுப் பசியோடேயிருக்கிறேனென்று" சொன்னர். அதற்கு கோசாயி "நீ சேவகனல்ல யாரோ அமீராய்க்காணுது ஆனலும் யாராகிலும் ஆனலென்ன? சமயலாயிருக்குது சாப்பிடு" என்று சொன்னன்.

மகமதல்லிகான் பாதர் குதிரையை விட்டு யிறங்கி மரத்தில் பாக டோர் கயிற்றுலே கட்டி தாம் வலஜலாதிக்குப் போயி காவாயில் கை கால் சுத்தி பண்ணிக் கொண்டு முகம் கழுவி நேம....................டிச்சு கோசாயி யிலையில்ப் போட்ட கிச்சடி சாதத்தைச் சாப்பிட்டு கோசாயி உக்காவில் குடாக்குப் பிடித்து தாம்பூலம் போட்டுக் கொண்டு ஒருநாழி இளைப்பாறி கோஷாயிக்கு குதிரையை ஏறிப் பார்க்குறேனென்று கேட்டு வாங்கி குதிரை மேலேறி திருச்சிராப்பள்ளி பாதையை நோக்கி ஒரு கோஷாயி நீர் நாளைய திருச்சிராப்பள்ளிக்கி வந்தால் குதிரையைக் கொடுக்கிறேனென்று குதிரையை விட்டுக் கொண்டு கொள்ளிடம் ஆற்றில் போய்ச் சேர்ந்து ஆற்றில் ஓடக்காராலே திருச்சிராப்பள்ளிக் கில்லேதார் கயருத்திகான் வகையருவிற்கு நாம் வந்தோ மென்று சொல்லி அனுப்பிவிட்டு தாமும் ஓடத்தின் பேரில் ஏறினர்.

நடு வாற்றில்ப் போகச்சே இதாயத்து மோதீன்கான்.............. சொல்லி அனுப்பின அன்நூறு குதிரையும் கோசாயிகிட்ட வந்து இப்படி ஒரு குதிரைக்காரன் போருண என்று கேட்டான். அது கோசாயி தெரிந்து கொண்டு முன்னே வந்தான் அமீர் அவனைப் பிடிக்க வந்தவாள், ஆனல் அவன் கொஞ்ச தூரம் போவான். போய் அரை நாழிகை ஆயிற்று. இவர்கள் கையில் அகப்படுவானென்று இவர்களை ஜாலம் பண்ணிக் கொண்டுயிருக்க வேணுமென்று சபத்திலிருக்கிறவனு யிருந்தான். அப்படி சிறிது நேரமாயிற்று. அப்படியிருக்க வந்த குதிரைக்காரர் கடினமாய்க் கேட்டார்கள். அதற்கு கோஷாயி மெது வாயிச் சொன்னது. "யாரோ தெரியாது குதிரை ஒண்டி குதிரைக் காரன் இவ்விடத்தில் வந்து இருந்து கொஞ்ச நேரம் இளைப்பாறி இந்த வழியாய்த் தெற்கு நோக்கிப் போனன். அவன் போயி யிரண்டு நாழி கை ஆயிற்று" என்று சொன்னன்.

அது குதிரைக்காரர் வசாளிவிட்டுக் கொண்டு ஆற்றங்கரை போய் சேர்ந்தார்கள். அப்போ முகமதல்லிகான் ஆற்றிற்கு அக்கரை கிட்ட ஓடத்தில் போய் ஓடத்தில் போறார். திருச்சிராப்பள்ளிக் கோட்டையி லிருந்து ஒரு பட்டாளம் பாரகுதிரை மருதை அது மிகில் கில்லேதார் முதல் பௌவுசுதாருடைய பரட்டவணை சாவரதார் பல்லக்கு யானையம் பாரி, நகாரா, நவபத்து சகல விருதுகளோடே ஆற்றங்கரையில் தென் பக்கம்வந்துயிருக்கிறார்கள். அதுகளெல்லாம் வடகரையில்வந்தகுதிரைக் காரர்கள் பார்த்து மகமதலிகான் அக்கரை போய்ச் சேர்ந்து போனார். இனியாக வேண்டிய தென்ன வென்று மனது சலிப்பாய் தங்கள் தண்டு வந்து சேர்ந்து போனார்கள்.

பௌவுசுதாரி தம்முடைய சவாரியோடே அம்பாரி பேரிலேறிக் கொண்டு சகலமான பேரும் முபாரகபாதி கொடுக்க பின்னாலே வந்த குதிரைக்காரரையும் பார்த்து இந்த நவாபு மகமதல்லிகான் ரொம்ப புண்ணியசாலி, கொஞ்சம் தப்பினார். இனி மேல் கெடுதல் வரமாட்டாது. என்று சகலமான பேரும் சந்தோஷப் பட சாயங்கால வேளையில் திருச்சிராப்பள்ளிக் கில்லா போய்ச் சேர்ந்தான். அப்பால் இதாயத்து மோதின்கானுக்கு தக்கின வசராத்துப் பட்டம் சகலமான பேரும் கூடி கட்டின பிறகு தண்டு அத்திலே நின்றது. கர்னடகம் பௌவுசுதாரி சந்தா[34] சாகிபுவிற்கு தானே திட்டம் பண்ணினார். பாரிஷகும்பினிக்கு ஜாகிர் திட்டம் பண்ணி தமக்கு முசேபூசி பாளயம் கானக்காடிதி அச னுத்திகான், முசபரகான் கும்மக்கா சேவகம் பண்ண திட்டம் பண்ணிக் கொண்டு சகல அமீர்களும் தம்முடைய தாபேதாரியில் ஆனார்கள்.

அப்படியிருக்க இம்மத்து பாதர்கான் தகப்பன் வசீர் தனக்குக் கட்டுகிறதாய் பராசக்காரரோடே பேசியிருக்க இதாயத்து மோதீன் கானுக்குக் கட்டுகிறார்களென்று கோபமாய்ப் புதுச்சேரிக்குப் போய் முசேதிப்பிலீசுடனே சந்தா சாகிபும் கூடயிருக்கச்சே நீங்கள் கவில் தப்பின காரியம் பண்ணினீர்களென்று கேட்டார். அதற்கு முசேதிப் பிலீச மனதிலே கோபம் பண்ணி உத்திரவு நீயாரென்று கொடுக்கயிருந் தார். அது சந்தா சாகிபு விற்குத் தெரிந்து செய்கை பண்ணி திப்பி லீசும் சந்தா சாகிபும் யோசனை பண்ணி அப்படியே யாகப் போகுது நவாபு இதாயத்து மோதீன்கான் தண்டோடே ஹைதாராபாதுற்குப் போன பிறகு யுகதரமான படி நடப்பிப்போமென்று சமுசாயிப்பாயி சொல்லி அனுப்பி விட்டார்கள்.

34. சந்தாசாயபு—நவாப் தோஸ்த் அலி மகன் ஸப்தர் அலி. அவன் மருமகன் சந்தா சாயபு என்று கொள்க.

இமமத்து பாதர்கான் சந்தா சாகிபு இவர்கள் தண்டு வந்து சேர்ந் தார்கள். தண்டு ஆர்க்காட்டில் வந்துயிறங்கி அஸனுத்திகானே வெங்கட கிரிவகையறு பாளயப்பட்டு பேரில் தண்டு கொடுத்து அனுப்பிவைத்து நவாபு இதாயத்து மோதீன்கான் சந்தா சாகிபுவிற்கு நடக்க வேண்டிய தற்குதிட்டம் பண்ணிப் போட்டு சந்தா சாகிபும் கன்றசால்லிகான் முசேபூசி வகையறுவும் தக்கன அமீர்கள் மோராட்டியர் சகலமான பேரையும் அழைத்துக் கொண்டு வெங்கடகிரியார் வகையறு நவாபு நாசர் செங்கு விழுந்து போன போது போயி விட்டவாள் தவிர மற்ற கும் மக்கு வந்த வாளெல்லாம் அழைத்துக் கொண்டு ராஜசுட்டி கணவாய்க் கிட்ட போயிறங்கினுர்கள்.

---

11. நவாப் இதாயத்து மொகதீன்கான்

அவ்விடத்தில் தண்டு முகாமாயிருந்த போது ரசால்லிகான் வகை யறு பாரிசதண்டு வண்டிக்காறராய் மம்மத்து பாதர்கான் தண்டு பக்கம் போயிருந்தது. அந்த பண்டியினுலே இம்மத்து பாதர்கான் செனத் திற்கு காயமானதாய் அதனுலே கானசங்கு சண்டையிருதிறத்தாருக் கும் ஆயி அது இம்மத்து பாதர்கான் கேட்டு பாரிசக்காரர் தண்டு செனங்களைப் பிடிக்கச் சொல்ல அதிலே பாரிசக்காரர் செனம் அஞ்சு பேர் சேதமாயிற்று. அது செய்தி நவாபு இதாயத்து மோதீன்கான் பாரிஷக்காரராலே பிரியாது பண்ணினது கேட்டு இம்மத்துபாதர்கானே அழைத்து வரச்சொல்லி டலாயித்தாரே அனுப்பிவைக்க இம்மத்துபாதர் கான் தமக்கு அவமானம் வருமென்பதாய்க் கேட்டு தம்முடைய இரண்டாயிரம் பட்டாணிகள் குதிரைகட பேசாவனுரான் குதிரை நாலாயிரம் ஏகத்துக்கு ஆறுயிரம் குதிரையும் தயார் பண்ணிக் கொண்டு சண்டை சாமானேடே அம்பாரியின் பேரிலேறிக் கொண்டு நவாபு தண்டு பக்கம்வர இது சேதி நவாபு கேட்டு எண்பதாயிரம் குதிரையும் தயார் பண்ணி பாரிசக்காரரையும் தயார் பண்ணச் சொல்லி அழைப் பிக்க, இம்மத்து பாதர்கான் ஆறுயிரம் குதிரை கடப்பையாள், சாவனூ ரான் கூட நவாபு தண்டிற்குள்ளே சண்டை பண்ணிக் கொண்டு சுற்றியிருந்த குதிரையை அம்பாரியைச் சுற்றிவைத்துக் கொண்டதன் பேரில் வந்து கத்தி சண்டை பண்ணிக் கொண்டு பாரிசக்காரர் ஒரு பக்கம் வந்து சண்டை பண்ண இம்மத்து பாதர்கான் ரெண்டு நாழியில் பதினயிரம் குதிரையும் கிழித்துக்கொண்டு செத்தது போக மற்ற குதிரையோடே நவாபு இதாயத்து மொதீன்கான் அம்பாரி கிட்டவந்து

தீரந்தாசு பண்ணி துப்பாக்கியாலே சுட்டுப் போட்டான். அந்த க்ஷணம் இதாயத்து மோதீன்கான் அம்பாரியோடே கூட அம்பாரியிலிருந்த சலாபத்துச் சங்கு, வசாலத்து சங்கு, நிஜாமல்லிகான் இவர்கள் தீரந்தாஸ் சண்டை பண்ண நிஜாமல்லிகான் தீரந்தாஸ் இம்மத்து பாதர் பேரில் பட்டு இம்மத்து பாதர்கான் விழுந்து போனார்.

இருதிறத்திலும் சகலவிதத்திலேயும் பாதி தண்டு மாண்டு போயிற்று. பட்டாணிகள் குதிரை ஆறாயிரம் குதிரை தப்பித்து இருக்கிறபோது தண்டு கொள்ளையுமாகுது. ஜெனங்களானால், அத்திலே நிக்கவில்லே. கொள்ளையினாலேயும் ஜெனங்கள் சேதமாய்ப் போகுது. அந்த வேளை ராஸால்லிகான் முசேபு சிவகயரு தக்கன அமீர்கள் சிறிது பேர் மோராட்டியர் யோசனை பண்ணி தண்டு அத்திலே நிற்கவில்லே என்றும் **நவாபு சலாபத்து சங்கிற்குப் பட்டம்** கட்டி துராயிப்பிளேத்து ஜெய பேரிகை அடித்தார்கள்.

ஒரு மாதத்திற்குப் பிறகு தண்டு அத்திலே நின்றது. அந்தப் படியே தப்பின ஜெனங்களோடே நவாபு சலாபத்து சங்குபாதர் பாராஷ்தண்டும்கூட ஹைதராபாத் போயிச் சேர்ந்தார். சால்லிகான் வந்துவிட்டார். முசேபூசிக்கி தீவான்கிரி கொடுத்தார். இப்பிராயம்கான் காடுதியேயும் பொன்பாரசதண்டும் அவ்விடத்திலேதானே சலாபத்து சங்குபாதர் வைத்துக் கொண்டார். அப்படியிருக்க நவாபு நிஜாமத்த உல்லா நாசர்சங்கு விழுந்து போனது டில்லியிலே அவர் தமயன் காஸீதீகான் கேட்டு தக்கணசீமை அவந்தரையாய்ப் போயிற்று என்று பாதுஷா உத்தாரம் வாங்கிக்கொண்டு அவர் தண்டோடே அவுரங்காபாத் வந்து சேர்ந்தார். அந்தக் காலத்தில் அகமதுஷா பாதுஷா காஸீத்திகான் அவுரங்காபாத்து வந்து சேர்ந்து சிப்பந்திகலம் சாரி பண்ணினார்.

இருபது ரூபாய் சம்பளக்காரருக்கு நாற்பது ரூபாய் திட்டம் பண்ணினார். நாற்பதாயிரம் குதிரை வரைக்கும் சேர்ந்தது. இன்னம் கலம்சாரி பண்ணிக்கொண்டிருக்க சலாபத்து சங்கு தாயார் அவுரங்காபாத்திலேயிருந்தவள் காஸீத்திகான் தன் மகன் பேரில் போவானென்று காஸீத்திகான் சக்களத்தி பிள்ளையானபடியினாலே தன்னண்டை அழைப்பித்தாள். சிறிய தாயார் அழைப்பிக்குறாளென்று நம்பி காசுத்திகான் போனார். அவருக்கு சோத்திலே விஷம் கொடுத்துக் கொன்று போட்டாள். அது செய்தி சலாயத்து சங்கு பாதர்

கேட்டு மனஸ்தாபப்பட்டார். அப்படியிருக்க சலாபத்து சங்குபாதர் தம்முட தம்பிமார் பசாலத்து சங்கிற்கு அதோணி மௌலாலிக்கி அவுரங்கபாத்து சுபாவிலே காரியமும் நசாமல்லிகானுக்கு சீகாகோல நாசுபன்கிலி கொடுத்து அனுப்பினர். நிஜாமல்லிகான் போகயில்லை.

உரூரிலே தானே போக மாட்டேனென்று இருந்தார் அப்படியிருக்க பாரிசக்காரர் அசமத்சங்கு இவர்களை ஒருமை பண்ணிக்கொண்டு சமயம் பார்த்து கூடாரத்தில் சலாபத்து சங்கு பாதர் சுத்தி பாராவைத் துப் போட்டார். தான் சகலமான பேராசையின் பேரில் நவாபு நிஜா மத்உல்லா நிஜாமன் மூலக்கு அஸபஷா மீர நிஜாமல்லிகான் பாதர் **ருசத்தமதவுரா** சன சதாகூடு பசலி தக்கன வசாரத்து பட்டத்தில் உட்கார்ந்தார். தமாமதக்கன கர்னாடகம் பவுசுதார் மகம்மதல்லிகான் வகையரு சமீன்தார் மனசப்தார் பாளையக்காரர் வகையருவுக்கு பரமானு அனுப்பி நசர் அழைப்பித்துக் கொண்டு மோராட்டியர் முதல் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார். ஆனால், முன்னாலே நவாப் அஸபஷா பாதர் தம்முடைய பிள்ளை நாலர் செங்கு முதல் பிள்ளைகளுக்கு மோராட்டியரோடே பிகா................த்தேவை இல்லை அவாள் ராசியின் பேரிலே இருங்கோளென்று புத்தி சொல்லி இருந்த படிக்கி நவாப் நிசாமதவுல்லா மோராட்டியருடனே ராசியாயிருந்தால் அப்படி சிறிது நாள் இருக்க பாரசக்காரர் சர்தார்கள் பேரில் விசுவாசமட்டாய் யெது காரியத்திலும் வையாமல் மேலுக்கு மேலாய் இருந்தார்.

---

12. வடஇந்தியாவில் மராட்டியர்கள்

அதனாலே முசேபூசி வகையரு சேவகம் பறதறப்பண்ணிக் கொண்டு மோராட்டிய ஸ்ரீமந்து கிட்டப் போய்ச் சேர்ந்தார்கள். சீமந்துமுசேபு சிவதயாராவே பாரிசதண்டோடே வைத்தார். சீமந்து தம்பி பாவுமுசேபு சிவகையருவையும் ரெண்டு லட்சம் குதிரையும் சேர்த்துக் கொண்டு நற்மதாவிற்கு அப்பால் இந்துஸ்தானத்திற்குப் போயி ஜெயப்பூர் பாதப்பூர் உத்துப்பூர், சோத்துப்பூர் ராஜாக்களோடே சண்டை கொடுத்து கவில் பண்ணி பணம் வாங்கிக் கொண்டு டில்லீ போய்ச் சேர்ந்தார்.

பாதுஷாவும் மோராட்டியர் வருகிருரென்று ரேக்கன் கண்டு பக்கம் போய் விட்டார். பாவ டில்லியிலே யிருந்து பாதுஷாவிற்கு எழுதியனுப்பி வசாரத்து உத்தியோக சன்னத்தும் வாங்கிக்கொண்டார். அவ்விடத்திலே சிறிது நாளிருந்து தம்முடைய சர்தார்மல்லார் உலக் காரா ஞேசி சிந்தியாய் சுவந்தராவு வகையரு ஜெயப்பூர் செயசிங்கு சூரிசம் வலிசாட்டு சத்திரசால் துரச்சன சால் வகையரு தமாம் ஹிந் துஸ்தான் பௌவுசு கூட மூன்று லட்சம் குதிரை இபராயம்கான் காமதி வகையரு லட்சம் பாய்தல் செனம் இதுகளெல்லாம் சேர்த்துக் கொண்டு லாவூர் போய்ச் சேர்ந்து அவ்விடத்திலேயிருந்து காமல்ல துரானி பேரில் போகவேணுமென்று யிருக்க துரானி தையமூர்ஷா அம்மதுஷா கேட்டு அயோத்தி சுபாவசிர் சுகயாத்தவுலா பாதருக்கு கும்மக் அழைப்பித்து வரச் சொல்லி எழுதி துரானி பாதுஷா நாலு தஷத்தா நாற்பத்தெண்ணுயிரம் குதிரை ரெண்டு ரிகாபி பதினைந்து நாளய ரொட்டியும் குதிரைகளுக்கு தாணுவும் வாங்கிக் கொண்டு காபல விட்டு வந்தார்கள்.

அப்பாவு தண்டு பாளயத்து கரனுல் ஆத்தண்டையிறங்கி யிருந் தார். அவ்விடத்தில் துரானிதண்டு கூட கசாயத்து தண்டு கூட வந்து சேர்ந்தது. அவ்விடத்தில் துரானிகள் நாலு தஸ்தா குதிரையும் பாவு தண்டு பேரில் விட்டார்கள். இருதிறத்தாரும் பராத உயித்தியமாகச் சண்டை பண்ணி பாவுதண்டு பேரில்............ராணிகள் அல்லா பண்ணி சுத்தமாய் மடிந்து போகத் தக்கதாய்க் கொன்று விட்டார்கள். அந்த சண்டையிலே பாவு முதல் சகல சர்தார்கள் சுரிச்சமல்லுச் சாட் டுகள் முதல் ராஜாக்கள் இபராயம்கான் காடிதி தண்டும் முழுகிப்போய் விட்டார்கள்.

மல்லர் ஊவகார் கொஞ்சம் தண்டோடே இன்னும் சிறிது சர்தார் ராஜாக்கள் தப்பி ஓடிவந்து விட்டார்கள். ஊலக்கார் தக்கன் வந்து சேர்ந் தார். துரானி பாதுஷா நவாபு வசிர் சுசாயத்த உல்லாவிற்கு சிலவு கொடுத்து அனுப்பிவிட்டு தாம் டில்லி வந்துசேர்ந்து டில்லி பாதுஷா அம்மதுஷாவை அழைப்பித்து இப்படி மோராட்டியர் வசம் வசாரத்துப் பண்ணலாமா ஆனல் நீர் தகன்ஷாமஹா ராசபட்டம் டில்லி எங்களுக்கு எசமான ஸ்தானம். இப்படிப் பட்டகாரியப் பண்ணப் போகாது. என்று சொல்லி டில்லி பாதுஷாவிற்கு பந்தோபஸ்து பண்ணிக் கொடுத்துப் போட்டுது. ராணி பாதுஷா காபல் போய்ச்சேர்ந்தார். அப்படியிருக்க மகமதல்லீகான் கர்னுடகம் பௌவுசுதார் திருச்சிராப்பள்ளிக் கோட்

டையில் இங்கிலீஷ் பாதர் கும்மக் வைத்துக்கொண்டு தஞ்சாவூர் ராஜாவும் அனுகூலமாயிருக்கப் பின்னும் சண்டைக்கு வேண்டிய சாமான் தேவனும் பட்டணம் சென்னைப்பட்டணம் கவர்னர்களுக்கு எழுதிய னுப்பி அழைப்பித்துக்கொண்டு திருச்சிராப்பள்ளிக் கோட்டையை பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு இருந்தார்.

இதாயத்து மோதீன்கான் தண்டு ஆர்க்காடு விட்டுப் போனபின்பு கெதியானதிற்கும் பிறகும் புதுச்சேரியிலிருந்து சந்தாசாகிபு திப்பிலிச்[35] செஞ்சிக்கி வந்து கோட்டையைப் பார்த்து திப்பிலீச் இப்படிப்பட்ட கோட்டை எங்குமிராது. இந்தக் கோட்டை கட்டின ராஜா எப்படிப் பட்டவனோ வென்று ஆச்சரியப்பட்டு கோட்டை அங்கம் தூர்க்கத்து அலங்கங்கள், மெத்தைகள், கோபுரங்கள், மலைக்கல்லுகள் இவ்விடத்தில் சாணுக்கு ஒரு விளக்கு எரியவிட்டு அனேக பாண வித்தைகள் பண்ணிவைத்து வசராத்துலி ஜயானந்த ரெங்கராவு கூட விருந்து சாப்பிட்டு திப்பிலீச் ஆனந்தரங்கப்பிள்ளை புதுச்சேரி போயிச் சேர்ந்தார்.

---

13. சந்தா சாயபுவும் மகம்மதாலியும்

சந்தார் சாகிபு ஆர்க்காடு போயிச் சேர்ந்தார். இதாயத்து மோதீன்கான் சன்னது படிக்கி பௌவுசுதாரி பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு கில்லேதார்கள் ஒருமையாய் ராஜரீகம் பண்ணிக் கொண்டு யிருந்தார். வெங்கடகிரியார் ஜமீன்தார் சுவாயில்லாமலும் இருப்பார்கள். எதனாலே என்றால் சர்க்கார் தரப்பினாலே மகமதல்லிகான் கர்னாடகம் பௌவுசுதாரா திருச்சிராப்பள்ளி கோட்டையில் இங்கிலீஷ் கோட்டையில் கும்மக்கு வைத்துக் கொண்டிருக்கிறபடியினாலே **சந்தா சாகிபுவிற்கு** பௌவுசுதாரி செம்மயாய் நடப்பதங்கு விகல்ப்பமாயிருக்கும். அப்படி ஆர்க்காட்டில் சந்தார் சாகிபு இருக்கும்போது திருச்சிராப்பள்ளியிலேயிருந்து நவாபு மகமதல்லிகான் தம்பி அப்துல்லா புகான் ரெண்டாயிரம் பார் கப்பித்தான் தோப்கானு................மொகலாயக் குதிரை இரண்டாயிரம். பாய்தல் நாலாயிரம். இந்த சேனையை வாங்கிக்கொண்டு வாலிகண்டாபுரம் வந்து ரஞ்சன் கடை ஜாகிதார் பேரில் ராஜ காரியம் பண்ணிக் கொண்டு யிருந்தார்.

---

35. செஞ்சி சிலகாலம் பிரெஞ்சுக்காரர் ஆதினத்தில் இருந்ததாக தெரிகிறது.

அது செய்தி சந்தார் சாகிபுவிற்குத் தெரிந்து திப்பிலீசுவிற்கு எழுதியனுப்பி முசேலாசு தண்டோடே வரச்சொல்லி தாமும் பராசு தண்டோடே கூட்டிக்கொண்டு............ கல்லாப்கானு..........சண்டை பண்ணினார்கள். அப்துல்வாப்கான் திருச்சிராப்பள்ளி போயிச் சேர்ந்தார். **சந்தா சாகிபு** தண்டு வாங்கிக்கொண்டு திருச்சிராப்பள்ளி போயிச் சேர்ந்தார்.

திருச்சிராப்பள்ளிக் கோட்டையை முஸ்திகையும் போட்டுக் கொண்டார். நவாபு மகமத் அல்லிகான் இங்கிலீஷ் கற்பித்தான். சென்னைப்பட்டிணம், தேவனும் பட்டிணத்திற்கு எழுதியனுப்பிக் கொஞ்சம் செனமும் ரஸத்துமதீபுக் கோட்டைக்கரை துறை வழியாய் இறங்கி தஞ்சாவூர் வழியாய் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தார்கள். பின்னாலே...............மாசனபூ மருந்து குண்டும் ரஸ்தும் அனுப்பி வைக்கிறோமென்று சென்னைப்பட்டணத்து கவர்னர் எழுதி அனுப்பி விட்டு அது காரியமாய் சொரஞ்சாம பண்ணிக்கொண்டு இருந்தார். தேவனும் பட்டணத்திலிருந்து மூன்று கும்பினியாரும் கப்பித்தானும் திருச்சிராப்பள்ளிக்குப் போகும் போது பராசுக்காரர் வசம் அகப்பட்டு தப்பித் தானே செஞ்சி கோட்டையில் பாரு போட்டு வைத்தார்கள்.

மகமதல்லிகான் கும்மக்கு நிமித்தம் குபத்தி முராரிருயனுக்கு[36] எழுதியனுப்பியிருந்தார். அவன் பாரிசக்காரருக்கு கும்மக்காய் அவாளண்டை வந்து அவனும் தம்முடைய ரெண்டாயிரம் குதிரை கொஞ்சம் பாய்தலோடே வந்துயிருந்தான். சிரெங்கப்பட்டணம் ராஜாவிற்கு பாரிசக்காரர் சந்தார் சாகிபு எழுதியனுப்பி அவ்விடத்திலிருந்து கத்தி கோபால நாயக்கன் ஹைதர் நாயகன் பிராதரிக்கானது ராஜாவோடே குதிரையும் பாய்தரும் அய்யாயிரம் ஜெனம் வந்து திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்கு மேல்ப்புறம் வந்து இறங்கினார்கள். சந்தா சாகிபு கூட நவாய்த்தான் சுயசெனம் ஆயிரம் குதிரை சிப்பாயிகள், ஆயிரம்குதிரை பாய்தல், மூவாயிரம் செனம் இதுகளோடே சந்தார் சாகிபு சிரெங்கத்துக் கோவிலண்டேயிறங்கினார். முசேலாசு கூட............சொல்தாது அலே............குதிரை தோப்கானு கூட பதினெய்யாயிரம் செனத்தோடே கொள்ளிடக் கரையில் இறங்கினார்கள். கோட்டையில் மௌவு சுதார் கூட..................தொண்டமான் செனத்தோடே பதினாயிரம் சேர்ந்து கோட்டையிலும் கோட்டை வெளியிலுமாயிருந்தார்கள்.

---

36. இவனை ஆங்கிலத்தில் முராரிராவ் கோர் பாதே என்பர். இவன் கருநாடகத்தில் செய்த செயல்களைப் பற்றி C. S. ஸ்ரீநிவாஸ சாரியார் எழுதிய ஆனந்தரங்கம் பிள்ளை என்னும் நூலுள் 19—ஆம் பக்கத்திலிருந்து தொடர்ந்து பார்க்க.

பாரிசக்காரர் மோரச்சா போட்டு கோட்டையிலிருக்கிற இங்கிலீஷ்க்காரருமாய் பீரங்கி சண்டை பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். மகமதல்லிகான் தஞ்சாவூர் ராஜாவிற்கும் கும்மக்கு அனுப்பச் சொல்லி எழுதினார். சந்தார் சாகிபும் பார்சக்காரரும் தங்களுக்கு கும்மக்கு அனுப்பச் சொல்லி எழுதினார். சுந்தார் சாகிபும் பாரிசுக்காரரும் தங்களுக்கு கும்மக்கு அனுப்பச் சொல்லி எழுதினார்கள். இப்படிப் பட்ட சமயத்தில் கோட்டை நொருங்கிப் போயிற்று. கோட்டையில் நவாபு மகமதல்லிகான்பாதர் ரொம்பவிஜாரத்திலிருந்தார். கோட்டை பரவசமில்லாமலும் எண்ணியிருந்தார்.

அப்படியிருக்க நவாபு மகமதல்லிகான் இங்கிலீஷ் கப்பித்தான் ஆலோசனைகள் பண்ணி புதுச்சேரியில் துபாசுகள் பின்னும் வெள்ளைக் காரருக்கு ஆசாபதம் சொல்லி ஊகை பண்ணிக் கொண்டு முசேலாசுக்கு திப்பிலீச பெண்சாதி காகிதம் மேலுக்கு மோயிருக்கும்படி எழுதி யனுப்பிவிக்கச் சொல்லி எழுதியனுப்பினார்கள். அதற்கான மனிதரைக் கொண்டு எழுதச் சொன்னார்கள். அக்தப்படியே திப்பிலீசர் பெண் சாதி மருமகன் அலாஸீக்கு எழுதினாள். அந்த ராஜாவிற்குப் பேச்சு விட்டிருந்தார்கள். சுந்தார் சாகிபே ஜெயம் கொண்டால் திருச்சிராப் பள்ளி[37] விடுகிறோமென்று எழுதியனுப்பினார்கள். முராரிராயனுக்கும் ஆசாபதம் சொல்லி எழுதினார்கள். அப்படியிருக்க சென்னைப்பட்டணத் திலிருந்து இரண்டாயிரம் பார் சொலகாது கொஞ்சம் துருபஅலேமாண் குதிரை பீரங்கி மருந்து குண்டு ரஷத்து முதல் வாங்கிக் கொண்டு தீபு கோட்டை கரை துறையிலிறங்கி தஞ்சாவூர் வழியாய் வந்தார்கள்.

தஞ்சாவூர் ராஜா சர்தார்; மனோசி அப்பா ரெண்டாயிரம் குதிரை யோடே அவரும் நவாபுக்கு கும்மக்கா வந்தார். அப்படி நெருங்கி ரொம்ப சண்டையாயி செயிங்கரேசு கும்மக்கு தூறிக் கொண்டு கோட் வந்து சேர்ந்தார்கள். மானோசி அப்பாவும் ஒரு பக்கம் வந்துயிறங்கினார். அந்தக் காலத்தில் இங்கிலீஷ்காரர் மனிதரும் காஞ்சிபுரம் வரைக்கும் சப்தி பண்ணிக்கொண்டு அமல் பண்ணுவார்கள். நவாபு பக்கத்திலே ராயக்கிருஷ்ணராயன், மார்க்கசகாயன், கல்லக்குறிச்சி, சங்கிராபுரம், திரு வண்ணமலை சீமைபும் செப்தி பண்ணிக் கொண்டு இருப்பார்கள். மற்ற இடத்தில் பாரிசக்காரர் மனிதர் அமல் நடக்கும்.

---

37. திருச்சியில் நடந்த போர்ச் செய்திகளின் விவரங்களுக்கு கேம் பிரிஜ் ஹிஸ்டரி ஐந்தாம் தொகுதி பக்கம் 128லிருந்து தொடர்ச்சி யாய்ப் பார்க்க.

அப்படிப் பட்ட காலத்தில் திருச்சிராப்பள்ளிக் கோட்டையி லிருந்து இங்கிலீஷ் தண்டு வெளியே வந்து பாரிசதண்டு பேரிலேயும் சந்தா சாகிபு தண்டு பேரிலேயும் சண்டை பண்ணுவார்கள். அப்பொழுது நவாபிற்குத் தயிரியமாயிருக்கும். அப்படி கடினமான சண்டை இங்கிலீஷ்க்காரர் குடுக்கிறபோது முசேலாச தண்டு ரெண்டு நாழி வழி வடக்கே வந்து இறங்கிற்று. முராரிராயனும் பின் வாங்கி யிறங்கினன். சிரெங்கப்பட்டணத்தாரும் நவாபு முகமதல்லிகானுக்கு ராசியாயிருப்பாள். அந்த வேளை சந்தார் சாகிபு பாரிசதண்டு நமக்கு கும்மக்கு வந்த தண்டும் மனஸ்கரித்துச்சண்டை பண்ணவில்லை. மேனுக் மேலாயிருக்கிறுர்கள். நம்மைக் காட்டி கொடுப்பார்கள் போலே காணுது.

நாளய தினம் இங்கிலீஷ் தண்டு வந்து அல்லா பண்ணுகிறதாக வுமிருக்குது. இவ்விடத்திலிருந்தால் செம்மையல்ல வென்று மானேசி அப்பாவிற்கு நமக்கு இடம் கொடுக்க வேணுமென்று சந்தா சாகிபு எழுதினர். அது சேதி மனேசி அப்பா அறிந்து கொண்டு தாம் தஞ்சா வூர் பக்கம் இறங்கியிருந்தவர் நவாபு முகமதல்லிகான் பாதருக்கு எழுதி யனுப்பி வைத்து சந்தார் சாகிப்பு விற்குக் காகிதம் எழுதினர். "உமக்கு ஆஜரா கொடுக்கிறோம் நம்மிட இடத்தில் வாருமென்று" எழு தினர். மானேசி அப்பா பேச்சை நம்பி தம்முட தண்டு சனத்துக்கும் தெரியாமல் இஷ்ட செனத்தோடே மானேசி அப்பா தண்டிற்குப் போனர். அவர் வைத்துக் கொண்டு மேல் எச்சரிக்கை பண்ணி நவாபு மகமதல்லிகானுக்கு எழுதினர்.

அது பார்த்துக் கொண்டு நம்மைப் பிடித்த பீடை தொலைந்து போயிற்று என்று அதற்குத் தக்கின மனிதரை அனுப்பி மனேசி அப்பாவிற்கு மலழிதி அனுப்பி சந்தா சாகிபே அவர் மங்கம்மாள் ராஜா ராணிக்கு அவசத்தியம் பண்ணிக் கொடுத்த இடத்தில் நமாஸ் படிக்கிற வேளையில் கழுத்தையறுத்துப் போட்டார்கள். சந்தா சாகிபு சமசுத்த உலா உசேன் தோஷத்துக்கான் உபராகசங்கு பாதர் ஆங்கீரஸ வருடம் சென சதாகூ0உ பசலி விழுந்து போனர். நவாபு முகமதல்லிகான் அனவர்த்திகான் பாதர் கர்னுடகம் பௌவுசுதாருக்குக் கடினமான சல்லியமில்லாமல் தொலைந்து சகலமான பேரும் முபாராகபதியும் நசரும் வைத்தார்கள். முசேலாச தண்டு புதுச்சேரிக்கு வந்து விட்டது. முராரிராயனுக்கும் பௌவுசுதாரண்டை சரிபடாமல் லாசதண்டோடே வந்து புதுச்சேரியார் கிட்ட கும்மக்கா சேவகம் பண்ணிக் கொண்டு இருந்தார்.

---

14. முகமதாலியும் கர்னாடக நிகழ்ச்சிகளும்

மானேசி அப்பாவும் நவாபு மகமதல்லிகான் சிலவு வாங்கிக் கொண்டு தஞ்சாவூர் வந்து சேர்ந்தார். சிரெங்கப்பட்டிணம் நந்தி ராஜா, சுத்திக் கோபாலநாயக்கன், ஹைதர்நாயக்கன் நவாபு சொல்லியிருந்தபடி திருச்சிராப்பள்ளிக் கோட்டை தமக்கு விடச் சொல்லிக் கேட்டார்கள். அந்தப்படியே கோட்டை வைத்துக் கொள்ளச் சொல்லிச் சொன்னத் திற்கு கோட்டைக்குள்ளே வந்து சவுக்கி திட்டம் பண்ணினார்கள். அதன் பேரில் கப்பித்தான் யோசனை பண்ணி கோபாலனாயக்கன் வகை யருவைப் பாருவிலே வைத்தார்கள். அது கோபாலநாயக்கன் தெரிந்து கொண்டு நவாபுக்குச் சொன்னது "நாங்கள் தங்கள் பேச்சும் பேரில் வந்தோம். எங்களுக்கு தங்கள் மனது படிக்கே நடக்கக் காரணமே தவிர வேறில்லை" என்று தப்பித்துக் கொள்ளுகிற பேச்சுப் பேசி தண்டோ டே போயிச் சேர்ந்தார். மறுகாலும் நவாபிற்கும் நந்தி ராஜாவுக்கும் பேட்டியாய் சமாதானத்தின் பேரில் தண்டுக் கர்ஜ்ஜீம் வாங்கிக்கொண்டு வஸ்திரமும் வாங்கிக் கொண்டு போயி விட்டார்கள்.

நந்தி ராஜாவும்[38] சிரெங்கப்பட்டிணம் போயிச் சேர்ந்தார்கள். அந்தக் காலத்தில் திருநெல்வேலியில் மணது மியாவென்று துலுக்கன் அவ்விடத்திய அமல்களிலாயிருந்த வேலை பார்த்து சீமையைக்கட்டிக் கொண்டு ராஜரீகம் பண்ணிக்கொண்டு யிருந்தான். அந்த சேதி நவாபு மமதல்லிகான் கேட்டு சீமையைக் கலிலாகுது என்று இங்கலீஷ் பார் சேவகம் பண்ணிக்கொண்டு இருந்து **மகம்மது ஈஸப்** என்பவன் கெட்டிக்காரனாயி நாளுக்கு நாள் அமல் தார், அவல் தார், சமேதரா சுபேதாரனாகி கும்மந்தானுமாயிருந்தவன் சம்மதத்துத் தெரிந்து இங்க ரேசு சர்தார் கூட நவாபு யோஜனை பண்ணி அந்த மகம்மது யிஸப்புக்கு காணி பேர்க்கொடுத்து மதுரை பௌவுசுதாரி திட்டம் பண்ணி மகமத் யீஸப்கானை அனுப்பிவைத்தார்.

அந்த குமந்தான் மதுரை போய்க் கோட்டை பந்தோபஸ்துப் பண்ணிக் கொண்டு சவுக்கி பாராவைத்து சீமையும் கட்டி பந்தோ பஸ்து பண்ணினார். அப்போ மகமது மாபூசகான் நவாபு நாசர் சங்கு விழுந்து போனதை ஹைதராபாத்துக்குப் போய் விட்டவர் அவ்விடத்

---

38. நந்தி ராஜா—கி. பி. 1752-ஆம் ஆண்டில் இங்கிலீஷ்காரருக்தும் பிரெஞ்சுக்காரநம் திருச்சிக் கோட்டையை முற்றுகையிட்ட போது, மைசூர் சேனைத் தலைவரான நந்திராசா பிரெஞ்சுக்காரநக்குத் துணை செய்தவராக அறியப்படுகிறார்.

திலிருந்து கொஞ்ச செனத்தோடே வந்து சீரெங்கப்பட்டணம் சேர்ந்து ஹைதரா நாயக்கனைக் கண்டு கும்மக்கு வாங்கிக்கொண்டு திருநெல் வேலிக்குப் போயி மனது மியாவோடே சண்டை கொடுத்து செயம் கொண்டு அவனைப் பிடித்துக்கொண்டு திருநெல்வேலி தாம் ராஜரீகம் பண்ணிக்கொண்டிருந்தார். அந்த சேதி நவாபு முகமதலிகான் தெரிந்து கொண்டு மகமத்யீஸத்கானுக்கு எழுதியனுப்ப அவன் தண்டு சேகரம் பண்ணி பட்டாளம் பாளயக்கார செனத்தோடே போய் மாபூசகான் பேரில் சண்டை கொடுத்து ஜெயம் கொண்டு அவ்விடத்திலும் அமல்தார்களை வைத்து பந்தோபஸ்துப் பண்ணி மாபூசகான் சாமத சங்கை நவாபு கிட்ட அனுப்பினர்.

நவாபு தமயனுக்கு மரியாதை பண்ணி "எல்லாம் தங்கள் காரியமா யிருக்க தாங்கள் இப்படி செய்கிறது யுக்தமல்ல"வென்று சொல்லி கிட்ட வைத்துக்கொண்டார். அவ்விடத்திலிருந்து ராயக்கிருஷ்ண ராயர் வகையறுவை தாலுக்காத்துக்களை சப்தி பண்ணச்சொல்லி அனுப்பி வைத்தார். நவாபு தம்பி அப்துல்லாபகானுக்கு ஆர்க்காடு பௌவுசுதாரி சுபாவுக்கு அமல் கொடுத்து இரண்டு பட்டாளமும் பார் இங்கலீஷ் சர்தார்கள் கூட அனுப்பினர்.

அவர் தம்முடைய சிப்பந்தி குதிரை முதல் ரெண்டாயிரம் செனம் வைத்துக்கொண்டு பட்டாளம் கூட ஆர்க்காடு வந்து சேர்ந்து தாலூக் காக்களுக்கு அமூல்தாரையும் அனுப்பினர். அமூல்தார்கள் சிறிது தாலூக்காக்களை பந்தோபஸ்து பண்ணி ராயகிருஷ்ணராயன் முதல் பணம் வசூல் பண்ணி அப்துல்லாபகான் தர்பாருக்கு அனுப்பிவைப்பார் கள். சிறிது தாலூக்காக்களிலே பராச அங்காமாவாயிருக்கும் சேத் துப்பட்டுக் கில்லாவில் இசாரம் மமதுகான் பாரசமாரி பந்தாயிருப்பான். அவ்விடங்களெல்லாம் திருவண்ணமலை முதல் நாலு நாள் நவாபு மனி தர் இருப்பார்கள். இவர்களை துரத்திவிட்டு நாலுநாள் பாரிசு மாரி பத்து மனிதர்கள் இருப்பார்கள். பாரிசு மாறு பத்து பிச்சகுப்பன் செம்பேடு தொட்டி சுபேதார் சேவகமிருந்து அவன் திருவண்ணமலை சீமை பெண்ணுத்தூர் தாலூக்கா செஞ்சி சீமையிலுமா சப்தி பண்ணி அதிகாரம் பண்ணுவான்.

செஞ்சிக் கோட்டையில் பாரிசக் கில்லேதார் ளத்தோசுக்கு உத்தி யோகம் போயி முசேபரணியிருப்பான். கில்லா பந்தோபஸ்தானபடி யினாலே சீமை சல்லியம் இராது. தியாக துர்க்கத்திலும் பாரசடாணு யிருக்கும் யில்லா நாகூரிலே மோகன் பாரிச மாறுபத்தா வந்தவன்

சொயம் தனிப்பாளயக்காரனு சிப்பந்தி வைத்து சீமையைக் கட்டிக் கொண்டு யிருப்பான். அந்தக் காலத்தில் நெல்லூர் சீமை நவாபு தம்பி நசீபுல்லாகானுக்கு பௌவுசுதாரி கொடுத்து இருந்தார். அந்த சீமை யும் காஞ்சிபுரம் வகையறாவும் திருச்சிராப்பள்ளி மதுரை வகையறா சல்லியமில்லை. திருப்பதியும் சல்லியமில்லை. வெங்கடகிரி, காளாஸ்தி பொம்பு ராஜா ஜமீன்தார்கள் நவாபு பக்கம் ருசுவாயிருப்பார்கள். பகு தியும் கட்டிக்கொண்டு வருவார்கள்.

அப்படியிருக்க நவாபு மகமதல்லிகான் இங்கிலீஷ் தண்டும் தம்மு டைய முகலாய தண்டும் வாங்கிக்கொண்டு திருவாதி வந்து சேர்ந்தார். அந்த சேதி தெரிந்து பாரிசதண்டும், முராசராயன் தண்டும் வந்து எதிர்த்து நல்ல சண்டை பண்ணினுர்கள். முராரிராயன் தம்பி புஜங்க ராயன் விழுந்து போனுன். அவ்விடத்திலேயிருந்து யிருக்கிறதாலும் தண்டு வாங்கிக்கொண்டு பராசுக்காரர் தண்டு புதுச்சேரிக்கு வந்துவிட் டது. முராரிராயனும் வந்து விட்டான். நவாபு திருச்சிராப்பள்ளிக்குப் போயி வந்துவிட்டார். முசேதிபிலீச் சுந்தாசாகிபு விழுந்து போன பிறகு ரஸால்லிகானுக்கு தங்கள் தரப்பிலே பௌவுசுதாரி திட்டம் பண்ணினுர்கள்.

அவரும் நவாயத்து சுயாசனம் முதல் ரெண்டாயிரம் குதிரை வரைக்கும் வைத்துக்கொண்டு பாரிச தண்டோடே கூடயிருப்பார். அப்படி யிருக்க அப்துல்லாகான் வேலூர் வாங்கவேணுமென்று நாலு பட்டாளம் பார் இங்கிலீஷ் சர்தார்கள் மொகலாயி தண்டும் அனுமேலு மங்காபுரம் போயிறங்கினுர்கள். கில்லேதார் குலாமூர்த்து சாகான் கோட்டையை பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு அவியார் கானரி சால சுந்தர் சிறுசாலா ஆயிரம் குதிரை வரைக்கும் சண்டைக்கு அனுப்பினுர். அவர்களுக்கும் அப்துல்லாபகான் செனத்திற்கும் சண்டையாயிற்று. வேலூர்கில்லேதார் செனம் குதிரையோடே பயப்பட்டு தூரமானிற் பார்கள். அதனுலே குதிரைக்காரர் இங்கரீஸ்லாம்பிலே குதிரையை விட்டு தூறி வந்தார்கள்.

அந்த சமயத்திலே கில்லேதார் குதிரைகளையெல்லாம் கும்மக்குப் பண்ணவே ஒரு சர்தாரையும் ரெண்டு ஒட்டையும் பிடித்துக்கொண்டு போனுர்கள். அதுவே இங்கிலீஷ் பட்டாளம். சர்தார்கள் குதிரையும் வாங்கிக்கொண்டு கில்லேதார் செனங்கள் பேரில் பீரங்கி துப்பாக்கி சண்டை பண்ணவே பத்து குதிரை வரைக்கும் விழுந்து போயி வேலூர் கோட்டை போயிச் சேர்ந்தார்கள். அப்துல்லாகான் பொறுத்துப் பார்த்துக்கொள்ளுவோமென்று ஆர்க்காடு வந்து சேர்ந்

தார். அப்படியிருக்க திப்பிலீச் தரப்பிலே **பாப்பைய்யப்பிள்ளை** [39] ஆர்க்காடு சுபேதாரனுயிருந்தான். அந்தக் காலத்தில் சென சதாகூடுநி பசலி மூசே கொடுத்து விலாயத்திலேயிருந்து புதுச்சேரி கவர்னராய் வந்தார். திப்பிலீச் போய்விட்டார். அவர் நாளையில் பாரிச பௌவுசு தெற்கே போறதும் வறதுமாயிருப்பார்கள்.

சந்தா சாகிபு கன்ற சாலிகான் சொயசாதி நவாயத்து வகையரு ரெண்டாயிரம் குதிரையோடே தஞ்சாவூர் சீமை காவேரி ஆற்றண்டை இறங்கி யிருக்க தஞ்சாவூர் ராஜா சர்தார் பீஜமல்லா சாகிபு ஆயிரம் குதிரையோடே ரஸால்லிகான் பேரில் வந்தார். அவாள் இருதிறத் துக்கும் சண்டை ஆயிக்கொண்டுயிருக்கும்போது ரஸாரல்லிகான் தங்கள் இஷ்டசெனம் ஒரு கலத்தில் சாப்பிடத் தக்கினவாள் அவர்களை அழைப் பித்து இந்த சிப்பாயிகளிலே ஈஸ்மல்லா சாயிபு தலையைக் கொண்டு வரத் தக்கினவர்கள் உண்டாயிருந்தால் பாக்கு வெற்றிலை வாங்குகிறரா வென்று கேழ்க்க யாரும் பேசாமலிருந்தார்கள். அதிலே செஞ்சி காசி மகம்மது பாக்கர் தம்பி சேக்கு அப்துல்காதர் என்கிற படே சாயிபு நான் வாங்குறேன் பாக்கு வெற்றிலை என்று கேட்டார்.

அதற்கு நாசரல்லிகான் “நீர் கொண்டுவரத்தக்கினவர்.” நீர் சொன்ன தைரியம் போதுமென்று சொன்னர்! அப்படியல்ல: உங்கள் உப்பு தின்று காரியம் வந்த வேளையிலெ பின்வாங்குவது செம்மையல்ல வென்று பாக்கு வெற்றிலை கொடுக்கச் சொல்லி வாங்கிக்கொண்டு குதிரை பேரிலேறிக்கொண்டு போகும்போது அவர் தம்பி சபதர்சாயிபு சினேகிதாள் ரெண்டு பேர் இந்த நாலு பேரும் ஈஸ்மல்லா சாயிபு அம் பாரியண்டை சேர்ந்து முன்கால் ரெண்டும் யானை பக்கத்து மூலில் காலை வைக்க ஈஸ்மல்லா சாயிபு அர்க்காளம் தாளப்பட்டாவாலே படே சாயிபு அதிவேகமா கை பாய்ந்து யானை யம்பாரியில் குதிரையை விட்டு ஈஸ்மல்லா சாயிபு வயிற்றில் கட்டாரியை வைத்தான். இஸ்மல்லா சாயிபு அக்காளும் கன வெட்டின வெட்டு படே சாயிபு முதுகில் கேடயத்தில் பட்டது.இஸமல்லா படேசாயிபு சாயிபு அதிலே அதிவேகமா குதிரையை

---

39. பாப்பைய பிள்ளை—கர்நாடகத்தில் வரி வசூலிப்பவராக டியூப் ளேயால் நியமனம் செய்யப் பெற்றவர். பின்னர் திருவாதி, தீர்த்த நகரி, பரங்கிப்பேட்டை, புவனகிரி, வேங்கடம்மாள் பேட்டை என்னும் ஊர்களைக்கொண்ட பஞ்சமஹால் நாட்டுக் குத் தலைவராயிருந்தவர். பின்னர் ஒரு சமயம் ஆனந்தரங்கப் பிள்ளையால் வெறுக்கப் பெற்றவர்.

விட்டு அம்பாரியில் குதித்து கட்டாரியை மடிமேல் வைத்ததற்கு நீர் நல்ல சிப்பாயி சூரன். என்னுடைய உயிர் சேதம் செய்யவேண்டாமென்று கையைப் பிடித்துச் சொன்னுர். ஆனுல் அம்பாரியோடே எங்கள் சர்தார் கிட்டவாரும். மறுகால் வந்து விடுவீரென்று சொன்னுர்.

அதற்கு ஈஸ்மல்லா சாயிபு தைரியம் வந்து தம்முடைய தண்டை தஞ்சாவூருக்குப் போகச் சொல்லி திட்டம் போட்டு ரஸால்லிகான் தண்டுக்கு வந்தார். ரஸால்லிகான் படே சாயிபு[40] பேரில் அதிக சந்தோஷப் பட்டு ரொக்கமும் வஸ்திரமும் வாகனமும் இனும் கொடுத்தார். படே சாயிபு இஸமல்லா சாயிபுவிற்கு கவில்ப்படிக்கு மரியாதைகள் விருந்துகள் பண்ணிவைத்து வஸ்த்திரங்கள் கொடுப்பித்து பல்லக்கு சவாரி யோடே தஞ்சாவூருக்கு அனுப்பிவிட்டார்.

அந்தக்காலத்தில் வேலூர் கில்லா மனிதன் சத்தி சாயிபு என்பவன் படிமார்க்க சகாயன் பேரில் சண்டை பண்ணிக்கொண்டுயிருப்பான். அப்படியிருக்க ஈஸ்வரவருடம் சென ஆயிரத்து நூற்று அறுபத்தேழு பசலி பாரிச விலாயத்து யிருந்து இருபது கப்பல் சொலதாதும் பீரங்கி மருந்து குண்டு சாமானும் முசேலகரி, முசேலாலி, முசேசப்பினு, கொணப்பறங்கி இவர்கள்வந்து புதுச்சேரியில் இறங்கினுர்கள். அப்போ நவாபு சம்சாரத்தோடே சென்னப் பட்டணம் போயிச் சேர்ந்தார். முசேலாலி புதுச்சேரி கவர்னர். அவர் செஞ்சிக்குவந்து கோட்டைகளைப் பார்த்து சந்தோஷப்பட்டு லகரிபுருசுகள் கட்டிவைத்து பாயருக்கும் மசகன் கட்டச் சொல்லி சங்கிலி வாசல் கட்டச்சொல்லி திட்டம் பண்ணிப் போனுர்.

சென்னைப் பட்டணத்தில் மேஸ்தர்[41] பீக்கட்டு கர்னலும் சென்னல் கூட்டும் துறைகள் இருக்கிறுர்கள். அந்தக் காலத்தில் கைரி வகையரு சபீனு கூட இருவதாயிரம் சொல்லாது பார் தோப்கானு வாங்கிக் கொண்டு தேவனும் பட்டணம் கில்லா இங்கிலீஷ் பாதர் பேரில் போய் சண்டை பண்ணி செயம் கொண்டு கோட்டையைப் பிடித்துப் போட்டார்கள். அந்த சன்னிலே தவாரிக்கைக்காரன் செனம் பாரிச தண்டு தேவனும் பட்டிணம் விட்டு தஞ்சாவூர் கோட்டை பேரில் போயிறங்கி யிருந்தார்கள். சண்டையும் போடச்சே முராரிராயன் தண்டு கூட யிருந்தார். அப்படி யிருக்க நவாபு மகமதல்லிகான் பாதர் சென்னைப்

---

40. படேசாயபு—இவர் சந்தா சாயுபுவின் சகோதரர்.

41. இப்பெயர்கள் கவர்னர் Pigot ஐயும் Sir Eyre Coote ஐயும் குறிக்கலாம்.

பட்டணத்திலிருந்து தம்முடைய முகாலிப்பு பௌவுசும் இங்கிலீஷ் பாதர் தண்டும் வந்தவாசி அந்தப் பக்கம் வந்தார்கள். அது கேட்டு பாரிச மொகலாயி வகையரு திரும்பி கூடலூர் பக்கம் வந்து யிறங்கினார்கள். அந்த காலத்தில் அப்துல்லா லாப்கான் மொகலாயி பௌவுசும் இங்கிலீஷ் செனங்களும் கூட திருவற்றூர் பக்கம் இறங்கினார்கள்.

அப்போ சேத்துப்பட்டு கில்லா...............காரர் வசமாய் இசாரா மகம்மதுகான் கில்லேதாரியிருந்தான். அவன் அப்துல்லாகானுக்குஅனுகூலமாயி இருந்ததாகவும் செஞ்சியிலிருந்து அவனுக்கு கும்மக்காய் ரெண்டும் பினி முசேபரனி அனுப்...............தாகவும் அந்த செனங்களை கில்லேதாரன் பாறு வைத்ததாக அந்த செனங்களாலே சிறிது பேர் இசாரா மகம்மதுகான் பீதூர் நடக்கிறானென்று பாரிசக்காரர்கள் அறிந்து முசேலகரி மட்டும் தெரிந்து அவர்களிடத்திலிருந்து முசேபீனா மூவாயிரம் செலதாது பார செனம் வாங்கிக்கொண்டு சேத்துப்பட்டிற்கு வந்து கில்லாமேலே இரா மகம்மதுகானோடே சண்டை பண்ணி அல்லா வெறிச்சார்.

மகம்மதுகான் முதல் சகல செனங்களையும் பிள்ளைகள் முதல் கதலாம்படி அவ்விடத்தில் தம்முடைய டாணா போட்டு திருவண்ணாமலைக்குப் போயி அவ்விடத்திலேயும் கோயிலுக்குள்ளே கோவில் கோட்டையாயிருப்பதற்குள்ளேயிருந்த செனத்தையும் கத்தல் பண்ணிப்போட்டு அவ்விடத்திலிருந்து தியாகக் கடைக்குப் போய் அவ்விடத்திலேயும் பந்தோபஸ்து பண்ணிப் போட்டு தண்டு போயிச் சேர்ந்தார். பாரிச தண்டு அவ்விடத்திலிருந்து முராரிராயன் கூட இங்கிலீஷ் பாதர் தண்டு பேரில் வந்தார்கள். அவ்விடத்திலேயும் சண்டை பண்ணிக்கொண்டு இங்கிலீஷ் தண்டு சென்னப்பட்டணம் போயிச் சேர்ந்தார்கள். அப்துல்லாப்கான் தண்டும் அவ்விடத்திலே பக்கமாயிறங்கினார்கன்.

மகமத்ஈஸத்கான் மதுரை பௌவுசுதாரை தண்டு கூட்டிக் கொணவரச் சொல்லி நவாபு இங்கிலீஷ் சர்தார்கள் எழுதினார்கள். அப்போ சென்னைப் பட்டணத்துக் கோட்டையில் நவாபு சம்சாரத்தோடேயிருந்தார். பிக்கட்டு கவர்னரும் சென்னல் கூட்டும் இருந்தார்கள். அப்படியிருக்க பாரிசதண்டு சென்னைப்பட்டணம் வந்து கோட்டை சுற்றிக்கொண்டார்கள். நவாபு சம்சாரத்தோடே கப்பலின் பேரிலேறிக்கொண்டு போயித் தீவுக் கோட்டையில் இறங்கி தஞ்சாவூர் வழியா திருச்சிராப்பள்ளி போயிச் சேர்ந்தார். சென்னைப்பட்டணத்தில் பாரசக்காரர் கோட்டை பேரில் மொரசா போட்டு சண்டை கொடுத்தார்கள். முராரிராயன் கும்மக்காயிருந்தவனும் சண்டை கொடுத்துக் கொண்டு

யிருந்தான். அப்படியிருக்க பாரிசக்காரர் அதிகபலமாயி சண்டை பண்ணி கோட்டையை அல்லா பண்ணுகிற சமயத்தில் இங்கிலீஷ் சர்தார்கள் யோசனை பண்ணி சமுத்திரத்திலிருந்த கப்பல் ஓடம் இதுகளை தயார் பண்ணி ராத்திரி காலத்தில் தீவட்டிகளைக் கொளுத்தி கப்பல் வந்த பாவனை பண்ணியிருக்க பாரிசக்காரர் கோட்டை அகலக்கரை அலங்கம் கிட்டி வந்து அதிக சண்டை பண்ணி துப்பாக்கிகளின் சண்டையும் பண்ணிக் கொண்டிருக்க வெடியக் காலமுமாயிருக்க சமுத்திரத்தில் இங்கிலீஷ் பாதருக்கு கும்மக்கு வந்த பாவனையாய் எதிரியாருக்குக் காண்பிக்கவும் பின்னாலே சமயத்தில் ஈஸக்கான் கும்மனதான் விழுந்து சண்டை கொடுக்க அப்துல்லாகான் முராரி குதிரை முராரிராயன் பேரிலேயும் பாரிஷ தண்டு பேரிலேயும் சண்டை கொடுக்க பாரிசக்காரர் அல்லா பண்ணுகிற சமயமாயிருக்கிற போது, இங்கிலீஷ் சர்தார்கள் தங்கள் சேனையோடே விழுந்து சண்டை பண்ணினார்கள்.

அந்த வேளை பாரிச சௌனங்களும் மூசேசபினாவும் விழுந்து போனான். முசேலாலிக்கு காயம் பட்டு பாரிசதண்டு திரும்பி விட்டது. அதுவே இங்கிலீஷ் தண்டு வெளிப்புறம் பட்டு அடிக்கிற அடியில் காஞ்சிபுரம் வந்து வந்தவாசி மலையண்டை யிறங்கினார்கள். முராரி ராயனும் தன் தண்டோடே குபத்தி போயிச் சேர்ந்தான். செஞ்சிக் கில்லேதாரி பரணிபோயி மகுடதோர் இருந்தான். பாரிச தண்டுக்கு முசேமீரா அவல் வகையறா செஞ்சியிலேயிருந்து ரஷத்து அனுப்பின வாள் பன மூலே போயி அவ்விடத்திலிருந்து ரஷத்து அனுப்பிக் கொண்டு யிருந்து புதுச்சேரி போயிச்சேர்ந்தார்கள். பாரிசதண்டு வந்த வாசியில் வந்து இருந்த போது ராமலிங்கப்பிள்ளை ஆர்க்காடு சுபேதா ரென்று பேர் பெற்றுக் கொண்டு வந்து செஞ்சியிலே வந்துயிருந்து ஆர்க்காட்டிற்கும் போயி அவ்விடத்திலிருந்து பாரிசதண்டு அடிபட்டு வந்த உடனே செஞ்சி வந்து சேர்ந்து வர்த்தகர் குடிகள் பேரில் தண்டம் போட்டு லட்சம் ரூபா வசூல் பண்ணினான். அங்காமாபோன பிறகு உங்கள் பணம் முசூரா கொடுக்கிறோமென்று சொன்னான்.

அந்தக் கணக்கு சவுதரி கங்காராம் வீட்டிலிருக்கிறது. அந்த ராம லிங்கப்பிள்ளை செஞ்சியிலேயிருந்து பாரிசதண்டு குறசத்து அனுப்பிக் கொண்டு யிருந்தவன் சிப்பந்தி திருவண்ணாமலைக்குப் போயி, தியாக துர்க்கம் போயி, புதுச்சேரிக்குப் போயிவிட்டான். அப்படியிருக்க சன்னல் கூட்டு பாதர் தம்முடைய பௌவுசு நவாபு பௌவுசும் வாங்கிக் கொண்டு வந்தவாசியில் பாரிசதண்டு பேரில் வந்து தோப்கானா சண்டை பண்ணினார்கள்.

அப்படி சண்டை பண்ணும் போது பாரிச தண்டிலேயிருந்து போட்டி பேரில் இங்கிலீஷ்காரர் பீரங்கி குண்டுபட்டு மருந்து பற்றிக் கொண்டு ஆயிரம் செனம் சொலதாது முதல் செத்துப் போனார்கள். அதுவே பாரிசதண்டு பின் வாங்கி புதுச்சேரி போயிச் சேர்ந்தார்கள். இங்கிலீஷ் தண்டும் சன்னல் கூட்டும் புதுச்சேரியைச் சுற்றிக் கொண்டார்கள். நவாபு மகமதல்லிகான் வகையரு மொகலாயி பௌவுசும் கூட ரெண்டு மாதம் சண்டை கொடுத்து செயம் கொண்டார்கள். சென சதாஎ௰ பசலி புதுச்சேரிக் கோட்டையை வாங்கி பாரிசர்தார் முதல் வெள்ளைக்காரரை சென்னப்பட்டணத்திற்கு அனுப்பி சிறிது நாள் வைத்திருந்து அவர்கள் விலாயத்து பரிசுக்கு அனுப்பி விட்டார்கள் புதுச்சேரி கோட்டையைப் பிடித்துப் போட்டார்கள். பிறகு அவ்விடத்திலேயிருந்து சென்னல் ஈஸ்மத்து பாதர் செஞ்சிக்குக் கிழக்கே இரண்டு நாழி வழியில் செயங் கொண்டானிலே வந்து இறங்கி உணவாளிகையினலே சனக்கெடை மேலேயும், கூத்தரிசி துர்க்கத்தின் வடவண்டையும், அல்லாவரி கோட்டைக் குள்ளே போயி பத்தே தருவாசாவில் எதிர் நோக்கி வந்து பாயளக்கில்லாவே பந்தோ பஸ்து பண்ணி கொண்டார்கள்.

பாரிசக்கில்லேதார் மகுடத்தேமா செனங்களும் பெரிய துர்க்கத்தின் பேரிலேயிருந்தார்கள். பாயளக்கில்லாவில் அகப்பட்டவாளை வைத்துக் கொண்டுயிருந்தும் குடதோருக்குக் கவில் செய்து வைத்து ஒரு மாதத்திற்குள்ளேயிறங்கி புதுச்சேரி இங்கிலீஷ் தண்டிலே அனுப்பிவிட்டார்கள். செஞ்சிக் கில்லா பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு மூன்று கும்பினியும் ஆபஸரும் தையின் வைத்து வெங்கிடசாமி நாயக்கனை அமுலுக்கு வைத்தார்கள். கும்மன்தான் தாலூக்கு பந்தோ பஸ்து பண்ணிக் கொண்டான். அதற்குப் பிறகு இருபது நாளைக்கும் பிற்பாடு தியாக துர்க்கம் பாரிசக்காரர் டாணவும் எழும்பிப் போயி விட்டது. இவர்களும் தங்கள் சர்தார்களிடத்தில் போயிச் சேர்ந்தார்கள்.

15. நவாபு முகம்மதலிகான்

நவாபு மகமதல்லிகான் பாதருக்கு கர்னடகம் விக்கிரம வருடம் சித்திரைமாதம் சல்லிய மில்லாமல் பந்தோபஸ்து ஆயிற்று. செஞ்சிக் கில்லாவுக்கு ஆபசரும் மூன்று கும்பினி வைத்தார்கள். ஆர்க்காடு

சுபா பந்தோபஸ்து ஆனபிறகு நவாபும் சென்னல் வகையறு சென்னப் பட்டணம் போயிச் சேர்ந்தார்கள். ஆர்க்காடு மலாத்து சுபாமீரசுத்துல் லாகானுக்கு அரவது லட்சம் ரூபாயாய் சென சுதாஎடுக பசலி நவாபு இசாராபண்ணிக் கொடுத்தார். மீரஸத்துல்லாகான் தாலூக்காத்து களுக்கு முசுத்தாசர்களை அனுப்பினர்.

அப்படியிருக்க நவாபும் இங்கிலீஷ் சர்தார்கள் தண்டோடே வேலூர் கில்லா பேரில் வந்து கில்லேதார் மூத்சாகானோடே சண்டை கொடுத்து செயம் கொண்டு கில்லாவை சென சுதாஎடு பசலி பந்தோ பஸ்து பண்ணிக் கொண்டார்கள். கில்லேதார் தமயன் ரஸால்லி கானுக்கு வருசந்திரகேடை, ஆவல் கொண்டைக் கில்லேதாரியும், பசு மாத்தூர் ஜாஹீரும் விட்டார். இந்தக் கில்லேதார் விழுந்து போகிற போது அவர் மருமகன் அசன்ரசாகான் பேருக்கு நவாபு சன்னத்தப்படிக்கு கில்லேதாரி பண்ணிக் கொடுத்து விழுந்து போனர். வேலூர்க் கில்லா தாரனை திருச்சிராப்பள்ளியில் கயது பண்ணச் சொல்லி அனுப்பி விட்டார். அவர் பெண்டுகள் பிள்ளையைச் சென்னைப்பட்டணத்திற்குக் கொண்டு போயி நவாபு அந்தக் கில்லேதார் மகளைக் கலியாணம் பண்ணிக் கொண்டார்.

ஆரணிசாகீர் சப்தி பண்ணிக் கொண்டு ஜாஹீர் தாருக்கும் அவ ரோடு சேர்ந்த வருக்கும் அந்த சன்னிலே தானே சம்பளம் திட்டம் பண்ணினர். போளூர் வந்தவாசி, கலவை வகையறு, கில்லேதார் வகை யறு ஜாஹீரும் ஜப்தி பண்ணிக் கொண்டு நவாபு தம்பி நசிபுல்லாகான் நெல்லூரிலேயிருந்தவர் எதிர்த்து சிப்பந்தி வைத்தார். அது கேட்டு நவாபு இங்கிலீஷ் கும்மக்கும் வாங்கிக் கொண்டு போயி சண்டை கொடு தார். நசிபுல்லாகான் ஓடிப் போயி உதயகிரிகில்லேதார் அப்துல்கரீம் கான் பக்கம் போயி சேர்ந்து மரயயிருந்தார்.

அது கேட்டு நவாபு கில்லேதாருக்குச் சொல்லியனுப்பவே கில்லே தார் நசிபுல்லாகானைக் காட்டிக் கொடுத்தார். நசிபுல்லாகானை நவாபு கிட்ட அழைத்து வரும் பொழுது ரெண்டு கையையும் மறுமாலாலே கட்டி கொண்டு வந்தார். அது பார்த்து தம்பி பேரில் துக்கித்து தயவு மிருந்து ஆரணிக் கோட்டையில் பாராவைத்தார். சென சுதாஎடு பசலி மதுரை மகமத் ஈஸத்கான்யிசாரா பணம் அஞ்சு ஆறு வருடமாயி செம்மையாய் கொடுக்கிறது மில்லை. எதிர்த்தவனுயிருக்கிருனென்று மனதிலே துருதிவைத்துக் கொண்டுயிருந்தார். அப்படியிருக்க டில்லி பாதுஷா ஷாயை ஆலம் என்கிற அலி கோகாபாதுஷா பங்காளாசீமை

பௌவுசு வாங்கிக் கொண்டு பட்டணா கில்லா பக்கம் இங்கலீஷ் பாதர் அனுகூலமாவுமிருக்க வந்துயிருந்த போது நவாபு மகமதல்லிகான் பாதுஷாவுக்கு அர்ஜியும் நசர் வகையறு அனுப்பினார்.

நவாபும் இங்கிலீஷ் பாதர் கும்பினிக்கு அனுகூலமாயிருக்கிறபடியினாலேயும் பாதுஷா சந்தோஷப்பட்டு நவாபு முகம்மது அல்லிகானுக்கு கிதாப் அனுப்பினது கர்னாடகம் வசராத்து உத்தியோகம் சயபுல் கலம் பாசிதை அசிர் அச்சான் நவாபு சிராசத்தவுலா அமீருல் இந்து வாலா உமந்ததுல முலக் அனவர்த்திகான் பாதர் சவர்சங்பேர் சவலாரி என்குற பேரும் நவாபு பெரிய குமாரனுக்கு நவாபு உமன்துல உமரா மோயின் முலக் அசேபத் தௌலா உசேனல்லிகான் பாதர் சுனாபகார சங்கு அவருக்கு இளையவருக்கு நவாபு அமீருலமாரா மதாருண மூலக் கோஷக் தௌலா அபீச முன்வர அல்லிகான் கான்பாதர் பாதர்சங்கு அவருக்கு இளயவர் நவாபு சயபன மூலக் அனவர் தௌலா அனவர்த்திகான் பாதர் பத்தேசிங் அவருக்கு இளைய நவாபு சொனன மூலக் பாத்துமாத் தௌலா மகமத் அப்துலலாகான் பாதர் இஷப்பாசிங்கு அவருக்கு இளையவர் நவாபு நசிர் தௌலா, நசிருன மூலக் பலானாகான் பாதர் சலாசங்கு இப்படி சொந்த பிள்ளைகள் அஞ்சு பேருக்கும் கிதாபும், நவாபுத நவாபு நசிர் தௌலா அப்துல்லாப்கான் பாதர் நசரத்சங்கு இன்னம் நவாபண்டையிருக்கிற அமீருக்கும் நவாபே கிதாப் கொடுக்கச் சொல்லி உத்தாரமுமாய் மாரதம் வகையறு சகல விருதுகளும் கொடுப்பித்தார்.

அந்தப்படியே தக்கன வசிர் நிஜாமத் தௌலா, நிஜாமன் மூலக் அஸபஷா, மீர நிஜாமல்லிகான் பாதருச்சமத் தௌரானும் உத்தாரம் பண்ணினார். அப்படியிருக்க மதுரை பௌவுசுதார் ஈஸப் மகமத்கான் பேரில் நவாபு வாலாசர் பாதர் மகம்மது நசிப் வகையறு அமீர்கள் கலி பானாசர்ல்லிகான், நஸபரல்லிகான், உஸேன் மகம்மது கான் சாயிபு சாதா அமீருஞ் மாராபாதர், மொகலாயி பௌவுசு நாலாயிரம் குதிரை மானுக்கான் வகையறு பாய்தல் தபேலா குதிரை நவாபு காசபார் பேசுபு வகையறு பதினாயிரம் செனம் எச்சமனாயக்கன் வகையறு ஜமீன்தார், மன்சப்தார், இங்கிலீஷ் பாதர் பௌவுசு ஜென்னல் இஷ்டன், கர்னல் கேமல் வகையறு சுல்தா ரெண்டாயிரம், பார் பதினாயிரம், அலேமான் குதிரை துலுப் குதிரை ரெண்டாயிரம், தோப்கானா வகையறு சேர்த்துக் கொண்டு சென்னைப் பட்டணம் கும்பினி கவர்னரை நவாபு அமீருல இந்து வாலாஜா பாதர் யோசனைபண்ணி தண்டு கூச் பண்ணிக்கொண்டு மதுரைக்குப் போயி மதுரை கோட்டையை பேடா போட்டு ஆற்றிற்கு வடகரையில் இறங்கினார்கள்.

மகம்மது யீஸப்கான் நவாபு இங்கிலீஷ் தண்டு வருகிறது கேட்டு தன்னண்டையிருந்த ஆயிரம் குதிரை................பெசபு ஆயிரம் பார் வகையரு செனம் ரெண்டாயிரம் இந்த செனத்தோடே கோட்டையை பந்தோபஸ்து பண்ணி கிருஷ்ணராயர் வகையரு முசுத்திகள் காரியஸ் தாளாயிருக்க தனக்கு கும்மக்கு நிமித்தம் பாரிசக்காரர் வெள்ளைக்கார ரும் அழைப்பித்து சேவகம் வைத்துக்கொண்டு சீரெங்கப்பட்டிணம் ராஜாவுக்கு மகம்மக்கு அனுப்பச்சொல்லி எழுதினர். அவ்விடத்திலே இந்து ஹைதர் நாயகன் குமக்கு வந்தான். நவாபு நிஜாமத்தௌலா விற்கும் கிருஷ்ணராயனை அனுப்பினர். அவனும் முராரிராயனுக்கு எழுதினர். அவ்விடத்திலேயிருந்து யாரும் வரவில்லை. இன்னம் கலம் சாரி பண்ணி சிப்பந்தி வைத்தான். அப்படியிருக்க நவாபு வாலாஜா பாதர் தண்டும் இங்கிலீஷ் தண்டும் போய் மதுரை பேரில் இறங்கி முரா சாபோட்டு சண்டை கொடுத்தார்கள்.

அப்படியிருதிருத்தாரும் சண்டை கொடுக்க கோட்டையிலிருந்து முகம்மது யீஸப்கான் செனம் முராஜாவில் விழுந்து சண்டை பண்ணி இடைஞ்சு போவார்கள். அப்படி சண்டை பண்ணிக் கொண்டுயிருக் கிறகாலத்தில் சென சதாஎநே பசலி அகாத கருப்பு வந்தது. அரிசி கொள்ளக்கிடையாது. நவாபு தண்டு செனம் கஷ்டப்பட்டுக் கொண்டு யிருக்கிற போது நவாபு தாத்துக் குடிப்பக்கம் லஷசாந்திரம் ரூபா அனுப்பி ரூபாய்க்கு அஞ்ச சேர் வீழ்க்காடு கொண்டு மாட்டும் பேரில் அழைப்பித்து தம்முடைய தண்டிலே பனிரெண்டு சேர்விற்கப் பண்ணி செனங்களைக் காப்பாற்றினர். அப்படி பதினைந்து மாதம் சண்டை பண்ணினர்.

அப்படியிருக்க யீஸப் மகமதுகான் செனம் அவனை நவாபு இங்கி லீஷ் மொராஜா பேரில் வந்து நல்ல சண்டை பண்ணினன். அதிலே கேமலுக்கு காயப்பட்டது. இசபம்மதுகான் குமந்தான் கோட்டைக் குப்போயிச் சேர்ந்தான். அப்படியிருக்க நவாபு ஜன்னல் யோசனை பண்ணி உபாயயாயி கோட்டை யிலிருந்து காரியஸ்தான் பாரிசக்கார சர்தார் மருதே அதுமிகள் கிருஷ்ணராயருக்கு அந்தரங்கமாயெழுதினர் கள். அவர்கள் நவாபு ஜன்னல் மித்திரபேதத்திற்கு உட்பட்டு கொடையில் இன்னும் சிறிது பேரை அவர்கள் பந்தோபஸ்து பண்ணி உபாயமாய் யீசப்மகமத்கானைப் பிடித்துக் கட்டிப் போட்டார்கள். அந்த வேளை இங்கிலீஷ் செனம் அல்லாபண்ணி கோட்டையை வாங்கி சவுக்கி பாரா வைத்தார்கள்.

நவாபு அவ்விடத்திய அமல் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டார். மீஸப் மசமத்கானை தண்டிலே கொண்டு வந்து நவாபு ஜென்னல் உத்தாரப்படிக்குத் தூக்கிலே போட்டார்கள். தூக்கிலேயிருந்து அறுந்து விழுந்தான். மறுகாலும் தூக்கிலே போட்டார்கள். செத்துப்போன பிறகு புதைத்துப் போட்டார்கள். செ௱ சதாஎ௰௪ பசலி மதுரையை வாங்கி அவ்விடத்திய திருநெல்வேலி பௌவுசுதாரி ராஜாவுக்கும், தாயனுக்கு கொடுத்து விட்டு தான் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தார். ஜென்னல் அவ்விடத்தில் கராசன்[42] வைத்துப் போட்டு அவரும் வந்து சேர்ந்தார். அவ்விடத்திலேயிருந்து நவாபு தண்டோடே சென்னைப் பட்டிணம் வந்து செ௱ சதாஎ௰௫ பசலி புரட்டாசி மாதம் வேலூருக்கு வந்தார். செ௱ சதாஎ௰௨ பசலி பராச வெள்ளைக்காரர் பாதுஷாவுக்கும், இங்கிலீஷ் பாதுஷாவுக்கும் சமாதானமாயி பாரிச கவர்னர் லாஸ் வந்து புதுச்சேரி யிறங்கி கோட்டைக்கு ஆரம்பம் பண்ணி கட்டினார்கள்.

ஆனந்த பிள்ளை ரெங்க குமாரன் வசாரத்து முத்து விசய திருவெங்கிடருவுக்கு தீவானி கந்தப்ப முதலிக்கு பிரதானிகமும் கொடுத்து இங்கிலீஷ் சர்தார் அனுகூலமாயி தங்களுடைய அத்திலே யிருந்தார்கள். நவாபிற்கும் பேஷ்கிஸ்தி மாமூல் படி திட்டம் பண்ணிக்கொண்டு நவாபிற்கும் அனுகூலமாயிருந்தார்கள். அப்படி யிருக்க நவாபு வேலூருக்கு வந்து யிருந்தபோது ஆர்க்காடு சுபாதாலூக்காத்து அவந்தரையாயி சர்க்கார் பணம் நஷ்டமாயி போச்சுது என்று மீரஸத்துல்லாகானை சமாவாசல் பாக்கி கணக்கு கேழ்க்க சிரஸ்தார் அச்சன்னபண்டிதர் தாலூக்காத்து முஸ்தாசர பேரில் கோடி ரூபாய்க்கு மேல்பாக்கி ஜாபிதா எழுதி கொடுத்தார்.

அதன் பேரில் நவாபு வாலாசா பாதர் தாலூக்காத்து இசாரா பண்ணி அவந்தரையாய்ப் போயிற்று அமானி பண்ணிக் கொள்ளுமென்று மீரசத்துல்லாகானுக்குச் சொல்ல "அமானி விவகாரம் என்னாலே ஆகமாட்டாது; நான் கிழவன்; தள்ளாத காலம், சரிப்படாதென்று" மீஸத்தபா கொடுத்துவிட்டார். அதன் பேரில் உம்முடைய மகன் சைய்யத் மகமத்கானை பார்க்கச் சொல்லுமென்று மனதிலே பேதகம் வைத்துக்கொண்டு கேட்டார். அதற்கு மீரஸத்துல்லாகான் சொன்னது ஆர்க்காடு சுபாவில் காரம் **அச்சென்னபண்டிதருக்கு** திட்டம் பண்ணினால் பந்தோபஸ்து ஆகுமென்று சொன்னார். நவாபு மனதிலே எண்ணியிருந்ததும் ஆசன்ன பண்டிதராலே தான் ஆகுமென்று யிருந்தார். அதுவே ஆர்க்காடு சுபா சாயிபு சாதா நவாபு

---

42. கராசன் for Garrison.

உமந்துல உமாரா பேருக்கும் தீவானி அச்சன்ன பண்டிதர் பேருக்கும் திட்டம் பண்ணிப் போட்டு நவாபு சென்னைப் பட்டிணம் போயிச் சேர்ந் தார்.

சாயிபு சாதாவும் தீவானும் ஆர்க்காடு வந்து தாலூக்காத்து சப்தி பண்ணி சென சதாளஎ௰ பசலி புரட்டாசி மாதம் அமானி விவகாரமாயி அமீல்களை அனுப்பினார்கள். அச சென பண்டிதருக்கு ராயகித்தாப் நவாபு கொடுத்தார். ராய் அச்சின பண்டிதர் தம்முடைய குமாஸ்தா **நரசன பண்டிதர்.** ராமண்ண பண்டிதருக்கு சிரஸ்தா உத்தியோகம் திட்டம் பண்ணினார். அப்படி ஒரு வருடகாலம் விவகாரம் பண்ணிக் கொண்டிருக்க சாயிபு சாதா எசமானன் பிள்ளையான படியினாலே அச் சென பண்டிதருக்கு அதிகாரம் செம்மயாய் சாயவில்லை. ஏது காரிய மும் தடங்கலாகுது.

இது செய்தி அந்தரெங்கமா நவாபிற்கு அச்சென பண்டிதர் எழு திக் கொண்டார். அது நவாபு யுக்த மென்று அறிந்து சாயிபு சாதாவை சாக்கு வைத்து பார்க்கவேணுமென்று அழைப்பித்து உசூ ரிலே வைத்துக் கொண்டார். அச்சென பண்டிதருக்கு ராயராய் கிதாப் கொடுத்து வஸ்திரமும் கொடுத்து அனுப்பினார். சென சதாளஎகூ பசலி ராஜசி எகத்தியாரியாய் விவகாரம் தலைப்பட்டார். தாலூக்காத்துகள் பந்தோபஸ்து ஆகவேணுமென்று தன் புத்தியினாலே நாட்டுக் கட்டு யிருக்கிற தாலூக்காத்துக்கள் நாட்டார்களைப் பிடித்துக் கைது பண் ணிக்கொண்டார். தாலூக்காத்து பாளயக்காரர்களையும் பிடித்து கைது பண்ணி இந்த ரெண்டு திரத்தார்களையும் அடக்கி கைவசப் படுத்தி அடக்கிப் போட்டார்.

அப்பால் விவகாரம் செம்மையாய் நடந்து கொண்டு வந்தது அப். படியிருக்க சென சதாளஎ௯ பசலி ஆவணிமாதம் நவாபு நிஜாமத் தௌலா, ஹைதரல்லிகான் இருவரும் கூடி முப்பதாயிரம் குதிரை அம் பதாயிரம் காலாள் தண்டு கூட்டிக்கொண்டு, தோப்கானாவோடே, சங் கம் கணவாய் வழியாய் இழிஞ்சு திருவண்ணாமலை அந்த பூமியில் வந்து யிறங்கினார்கள். ஆர்க்காடு வாங்கவேணுமென்று போனார். அவ் விடங்களிலே கில்லா பேரில் சண்டைக்கு யத்தனம் பண்ணி சண்டையும் பண்ணினார்கள். அப்படியிருக்க நவாபு அமீருல இந்து வாலாசா பாதர் இங்கிலீஷ் பாதர் கும்பினிக்கு சென சதாளஎ௯ பசலி காஞ்சிபுரம், சர்க் கார், திருப்பாச்சூர் சர்க்கார், செங்கல்பட்டு சர்க்கார், பதினாலு பாகனு நாலு லட்சம் வராகனுக்கு ஜாஹீர் விட்டார். அந்த சன்னிலே தான் எதிரிகள் அங்காமாவுக்கு சென்னலே சுமத்து பாதர் கர்னல் கொட்டு,

கர்னல் ரிஸாலா வகையறே ஆயிரம் அலேமான் குதிரை, ரெண்டாயிரம் துருப்பு, நாலு ரிஸிமிட்,[43] பதினாயிரம் சொல்தாது பார் தோப்கானு வகையரு சேர்மானம் பண்ணிக்கொண்டு நவாபு கவர்னர் உத்தாரப்படிக்கி சென்னல் மூன்று துர்க்கம் பண்ணி எதிரிகள் பேரில் போயி கலசபாக்கம் மைதானத்தில் சண்டை பண்ணினார்கள்.

எதிரிகள் இளப்பமாய் பீரங்கிகளை விட்டு பின்னிடைஞ்சு போயி நவாபு நிஜாமத் தௌலா தம்முடைய தண்டோடே கணவாய் மேல் போயி ஹைதராபாத் போயிச் சேர்ந்தார்கள். ஹைதரல்லிகான் சென்னலோடே சண்டை பண்ணிக்கொண்டு யிருந்து அவரும் கணவாய் மேல் போயி விட்டார்.

ஜென்னல் வகையரு தண்டு மூன்று பிரிவாய் பின் தொடர்ந்து போய்ச் சண்டை பண்ணினார்கள். கர்னல் கோட்டு ஹைதரல்லிகான் சீமையில் தாராபூர் திருபத்தூர் ராயதுர்க்கம் சீமையில் எங்களுக்கு கணவாய்ப் பக்கம் வரைக்கும் கோட்டைகளை வாங்கி தாணு வைத்துக் கொண்டு போனார். ஜென்னலும் நவாபு வாலாஜாபாதர் மொகலாயி சயாத பேலா பாய்தல் வகையரு தண்டும் எச்சம நாயக்கன் வகையரு மன்சப்தார் தண்டும், சே...........பக்கம் போயி சண்டை பண்ணினார்கள். அப்படி அவ்விடத்தில் சண்டை பண்ணிக் கொண்டிருக்கும் போது ஹைதரல்லிகான் சீரெங்கப் பட்டணத்திலிருந்து கும்மக்கும் லட்சத்து நாற்பதாயிரம் பொதி மாட்டு மேலே அழைப்பித்தார். அதனாலே ஜன்னல் தண்டிலே நவாபு தண்டில் ரொம்ப அதிக கும்மக்கு வந்தது என்றும் எச்சரிகையாயிருந்து கொண்டு யிருக்கும் போது நவாபு வாலாசா இவ்விடத்திலிருக்கிறது யோசனையாய் காண்பிக்கயில்லை என்று மனது யிளைப்பாய், பின் வாங்கி அவ்விடத்திலிருந்து விட்டாவிடியா தம்முடைய முகலாய தண்டோடே மனசப்தார் கூட ஆர்க்காடு வந்து நவாபு சென்னைப் பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

அதுவே சென்னலும் தண்டோடே கணவாய்க் கீழ் வந்து விட்டார். கர்னல் கோட் தம்முடைய தண்டு வாங்கிக் கொண்டு டாணு டாணுக்களையும் எழுப்பிக் கொண்டு கர்னல் பிசாலும் வந்து சென்னல் தண்டோடே சேர்ந்து போனார்கள். இங்கிலீஷ்பாதர் தண்டு கணவாய் கீழ்பட்டது. நவாபு ஹைதரல்லிகான் பாதர் தம்முடைய தண்டோடே சாயபு சாதா டிப்பு சுல்தான் கூட சென சதாளஙஅ பசலி தைமாதம் கணவாய்க் கீழ் ஆர்க்காடு சீமையில் வந்து கொள்ளைக் குதிரையில்

---

43. ரிஸிமிட் for Regiment.

தமாம் பரவி தாலூக்கா கிராமங்களை கொள்ளையிட்டு வீடுகளைக் கொளுத்தினார்கள். கோட்டைகள் பேரில் வரவில்லை.

அப்படியிருக்க சென்னல் ஈசவத்து பாதர் தம்முடைய தண்டே வாங்கிக் கொண்டு ஹைதரல்லிகான் பேரில் போனார். சண்டை பண்ணுகிறதில்லே ஹைதரல்லிகான் அப்பால் போயிறங்குவார். அப்படியே லவான் சூரதியாக் கெடை திருவாதி விழுப்புரம் செஞ்சி திண்டிவனம் இந்த மைதானத்தில் இருதிறத்தாரும் ச.........து காட்டிக்......ண்டுயிருக்க நவாபு ஹைதரல்லிகான் தண்டு காஞ்சிபுரத்திற்கு கிழக்கே போயிறங்கினார். அவ்விடத்திலிருக்கும் போது ஹைதரல்லிகான் பாதருக்கும் நவாபு வாலாஜாபாதர், இங்கிலீஷ் பாதருக்கும் சமாதானம் பேசிக் கொண்டு டிப்பு சுல்தான் உமந்ததுல உமராபாதர் இருவருக்கும் பேட்டியாய் ராசி பண்ணிக் கொண்டு, சன மச பூரிலே சித்திரை மாதம் ஹைதரல்லிகான் கணவாய் மேல் போயி சிரெங்கப்பட்டிணம் போயிச் சேர்ந்தார்..

சதாஅய பசலி அரியலூர் உடையார்பாளயம் வாங்கி சப்தி பண்ணிக் கொண்டார்கள். சென அய சென ஹைதரல்லிகான் குதிரைகள் கலசபாக்கம் வந்து கொள்ளையிட்டார்கள் அப்பால் மிஞ்சி வரவில்லை போயி விட்டார்கள். ஆர்க்காடு சுபா ாய சிக்கி நவாபு ராஜி பீருபர் பேர் கொடுத்தார். அந்த பீருபர்பாதர் ஆர்க்காடு சுபா தலூக்காத்துக்களுக்கு புஞ்சை, நஞ்சைக்கி இருபத்து நாலடிக் கோல் பனிரெண்டு சேர் மரக்கால் வாலாஜா பேரிைலே போட்டு புஞ்சைக்கி தாலூக்குக் குத் தகினதாய் விளைவுக்குத் தக்கினதாய் தீர்வையும், நஞ்சைக்கு சகல தாலூக்குக்கும் உளக்குடி பிறக்குடி பிராம்மணாள் கம்பத்தவாரம் திட்டம் பண்ணி கவில் படிக்கு பணம் வசூல் பண்ணிக் கொண்டு சென சதாஎயள பசலி முதல் கொண்டு கர்னாடகம் கில்லா எண்பத்து நாலுக்கும் நாயுபு கில்லேதார் முஷர் பசவுக்கி நவீச் சிப்பந்திபார் கர்னாடகம் காமாட்டி கலாசி, பெசபு, அமலா, பயலா வைத்து கில்லாக்கள் மராமத்து பண்ணிக் கொண்டு சக்கிரா தோப்கானா, பாருத்கானா, வகையறா கில்லாவுக்குத் தக்கின தாயி வைத்து சவுக்கி பாரா பந்தோபஸ்தாய் பண்ணிக் கொண்டு யிருந்தார்.

ரெண்டொரு கில்லாவிலே இங்கிலீஷ் தாணாவுமிருக்கும். அப்படி கில்லா சிப்பந்திகள் அதற்கு குடிகள் ஷேம நிமித்தம் கணக்காய் பாதி ரொக்கம் பாதி தெவசம்[44] சக்கிர அமாசி நசநெல்லு வகையறா சாமான்

---

44. தெவசம்—தான்யவசம். Kist in Kind.

கள் தபதில் பண்ணிக் கொண்டும் கில்லா நவாபுகள் முதல் தம்முடைய அதிகாரத்தில் பாலி பரதர், பயேகத்தியாரியாய் வைத்துக் கொண்டு இதுகளுக் கெல்லாம் வயணமாயி பிசகு வாராமல் கணக்கு............ரா பண்ணி நவாபு உசூருக்குக் கணக்கனுப்பிக் கொண்டு ராஜ்யபாரம் பண்ணிக் கொண்டு ஆர்க்காட்டிலேயிருந்தார்.

---

16. நவாபு தஞ்சை, ராமநாதபுரம் சிவகங்கை முதலான ஊர்களைப் படையெடுத்தது.

அப்படியிருக்க வாலாஜா பாதர்[45] தஞ்சாவூர் வாங்க வேணு மென்று இங்கிலீஷ் பாதர் கவர்னரை யோஜனையின் பேரில் சாயபு சாதா நவாபு உமதததுல உமாராபாதர் நவாபு அமீருல உமாராபாதர் கூட மொகலாய் தண்டும் இங்கிலீஷ் பாதர் தண்டும் சென சதாஅடிக பசலி அனுப.............நவாபு உமததுலமாரா பாதர் வகையறு தண்டு தஞ்சாவூர் ராஜா துளசிங்க ராஜா பேரில் போயி தஞ்சாவூர்க் கோட்டை சமீபமிருக்கிற வல்லம் கோட்டையை வாங்கி தஞ்சாவூர் கோட்டை பேரில் மொரச்சாவும் போட்டு சண்டை பண்ணினர்கள்.

தஞ்சாவூர் கோட்டையிலிருந்து ராஜாவினுடைய சிப்பாய்கள் குதிரைக்காரர்கள் வந்து நவாபு இங்கிலீஷ் தண்டிலே உட்புகுந்து சண்டை பண்ணிப் போவார்கள். அப்படி நாற்பது நாள் வரைக்கும் இறங்கியிருந்து சண்டை பண்ணிக் கொண்டுயிருக்க ராஜா சமாதானம் பண்ணிக் கொள்ள சாயிபு சாதாவண்டை வக்கீல்களை அனுப்பி ராஜி யாய் பணத்திற்கும் ஒப்புக் கொண்டு சமாதானமானர்கள். நவாபு உகந்ததுல உமராபாதர், முகலாய தண்டும் இங்கிலீஷ் பாதர் தண்டும் அவ்விடத்திலிருந்து ராமநாதபுரம் சேதுபதிபேரில் போயி ராமநாத புரம் கோட்டையைச் சுற்றிக் கொண்டு சண்டையும் பண்ணி செயம் கொண்டு சேதுபதியும் பிடித்து திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி கயது பண்ணிக் கொண்டார்கள்.

ராமநாதபுரம் சீமையை சப்தி பண்ணி பந்தோபஸ்து பண்ணி அவ்விடத்திலிருந்து சிவகங்கை யுடையாத தேவர் பேரில் காளியார்

---

45. இவர் மகம்மதலிகான் பகதூர் நவாப் வாலாஜா I ஆய் இருக்கலாம். இவர் 1795ல் விழுந்துபோனர். இவர் மகனே Umdatul-Umara Bahadur Nawwab Walajah II.

கோவில் கோட்டையின் பேரில் வந்து காடு வெட்டி உட்புகுந்து கோட்டையைச் சுற்றிக்கொண்டு சண்டை பண்ணி அல்லா வேறினார்கள். அந்த சமயத்தில் உடையாத தேவர் தன்னிஷ்ட செனத்தோடே சேவகத் தன்மையாய் சண்டை பண்ணிக்கொண்டு வெளியில் வந்தான். அந்த வேளை சாயபு சாதா தண்டு செனமும் இங்கிலீஷ் தண்டு செனமும் சண்டை பண்ணிக்கொண்டு யிருந்தவாள் உடையாத தேவனை வெட்டிப்போட்டார்கள்.

சாயபு சாதா சிவகெங்கை சீமையும் செப்தி பண்ணிக்கொண்டார். ராமநாதபுரம் கில்லேதாரியும் அதற்கு ஏகத்தியாரியாய் கர்னல்[46] மாட்டியனே கமடோறியு மாயி நாலு பட்டாளம் பார் சட்டக்காரருமாயி திட்டம் பண்ணினார்கள். அப்பால் சாயிபு சாதா இங்கரேசு தண்டும் மேல் நாடு தன்னரசு நாடு அந்தப் பக்கம் போயி கள்ளர் பேரில் சண்டை பண்ணினார்கள். கள்ளரான படியினாலே தண்டிலே சில...............ண்ணிக் கொண்டு வருவார்கள். சமயம் பார்த்துச் சண்டை பண்ணுவார்கள். அந்த நடு காட்டு சீமையான படியினாலேயும், நாட்டிலே வாசம் பண்ணுகிற............களும் அவர்களான படியினாலே சர்க்கார் தண்டிலே ஜெனங்களும், அப்படி ரெண்டு மாஸ வரைக்கும் சண்டை பண்ணிக் கொண்டு யிருந்து மிரித்து உட் புகுந்து நாடுகளை வாங்கி அநேக கள்ளரை சேதம் பண்ணி ரெண்டாயிரம் கள்ளர் வரைக்கும் பிடித்து வீட்டிலே போட்டு சுட்டுப் போட்டு சிறிது காரியஸ்தனுயிருக்கிற சோலே மலே அம்பலக் காரன், கருப்பண்ண அம்பலக்காரன் வகையறுவைப் பிடித்து அவர்களை கைவசப்படுத்தி அவர்கள் கையில் சர்க்கார் செனத்தில் ஒரு தலேக்கு ஆயிரம் தலேயும் பனிரெண்டாயிரம் விராகன் குனேகாரியும் குடுக்கிறதாய் முச்சிலிகா வாங்கிக் கொண்டு முப்பத்திரெண்டு கிராமமும் சப்தி பண்ணி சல்லியங்களைத் தீர்த்து, அவ்விடத்தில் கோட்டை கட்டி, மேலும் அவர்கள் மிஞ்சாமல் ரமளி துருப்பை வைத்தும், மம்மத்குல்லிக்கு அவ்விடத்திய பௌவுசுதாரியும் திட்டம் பண்ணி சாயா குதிரையும் தையினுத் பண்ணி பந்தோபஸ்து பண்ணிப் போட்டு சாயபு சாதா வகையறு தண்டோடே சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

அப்படியிருக்க சென சதாஅடுஉ பசலி மறு காலும் தஞ்சாவூர் வாங்கவேணு மென்று நவாபு வாலாஜா பாதர் இங்கலீஷ் சர்தார்கள் கவர்னர் உள்பட யோசனை பண்ணி சாயபு சாதா அமீருலு மாராபாதரை திட்டம் பண்ணி மகம்மது நசீப்கான் வகையறு மொகலாய

46. கர்னல் மாட்டியன்—Ramnad Manual Page 244

தண்டும், நவாபு காச பட்டாளம் பார் வகையரு, இங்கலீஷ் தண்டும், எச்சம நாயக்கன் வகையரு தண்டும் அனுப்பினார். கன சாயிபு சாதா வகையரு தஞ்சாவூர் மேலே போயி முப்பது நாள் வரைக்கும் சண்டை பண்ணி கோட்டையை வாங்கி ராஜாவை கைது பண்ணிக் கொண்டு கோட்டையில் நசீப்கான் வகையரு மொகலாய தண்டை............காச பட்டாளமும் வைத்து ராஜா பிரதானிகர் டபீர் பண்டிதருக்கு சீமை அமல் கொடுத்து ராஜா கஜானா தமாம் சர்க்கார் தாக்கல் பண்ணிக் கொண்டு ராஜாவினுடைய அறுபது யானை பல்லக்குகள், குதிரைகள், குஜராத்தி மாடுகள் வெள்ளைத் தரம் மாடுகள், எருமைக் கடாக்கள், சகலமும் அழைப்பித்துக் கொண்டு சாயபு சாதா சென்னைப் பட்டணம் வந்து சேர்ந்தார்.

அப்படியிருக்க சென சுத ாகூடு பசலி விலாயத்து இருப இங்க ரேச் பாதர்ஷா பரமானு படிக்கி லாட பீக்கட பாதர் சென்னப் பட்டணம் வந்து தம்முடைய அதிகாரம் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு நவாபு வாலாஜாவை தஞ்சாவூர் ராஜாவுக்கு விடச் சொல்லி சொன்னார். அதற்கு நவாபு சம்மதியில்லாமலிருக்க தாமே லாட்டு பாதர் தஞ்சாவூருக்குப் போயி ராஜாவிற்குப் பட்டம் கட்டி சர்க்கார் டாணுவை எழுப்பி இங்கிலீஷ் பாதர் கரா சன கர்னல் வகையருவை வைத்துப் போட்டு பணத்துக்கும் திட்டம் பண்ணிக் கொண்டு சீமையை ராஜாவுக்கு விட்டுப் போட்டு சென்னைப் பட்டிணம் வந்து சேர்ந்தார்.

மகம்மது நசீப்கான் வகையரு தண்டும் உடையார் பாளயம் வந்து சேர்ந்தார்கள். அப..............சென்னைப் பட்டிணத்திற்கும் வந்து சேர்ந்தார்கள். அப்பால் இங்கிலீஷ் சர்தார்கள் கமட்டி கூடி யோசனை பண்ணி லா.........கயது பண்ணினார்கள். லாட்டு மஸ் கூர் சென சுதள அடுகூ பசலி விழுந்து போனார். இந்த சன்னிலே விலாயத்து பரிசியிலே யிருந்து பாரிசு சர்தார் பில் கொந்து கப்பல் பேரிலே வந்து புதுச்சேரி யில் இறங்கி உடனே சிப்பந்திகள் வைத்து ராஜகாரியம் பண்ணுகிற தாயிருந்தது. நவாபு வாலாசா பாதர் இங்கிலீஷ் பாதர் சர்தார்கள் தெரிந்து கொண்டு முகனேயா அஞ்சு பட்டாளம் பார புதுச்சேரி பேரில் போனார்கள்.

பட்டாளம் காட்டு மேட்டில் வந்து இறங்கினார்கள். உத்தாரப் படிக்கு புதுச்சேரிக்குப் போற சரக்குகளை, தானியங்களை பந்து பண்ணினார்கள். பின்னாலே மகம்மது நசீப்கான் பாதர் சவார் சங்கு முகலாயி தண்டும் இங்கரேசு பாதர் சென்னல் மண்டு ரோவ் வந்து தண்டு புதுச்சேரி கோட்டை சுற்றி முரச்சா பேரில் சண்டை பண்ண

பாரச செனமும் மொரசாவில் வந்து சண்டை பண்ணி போம். இப்படி கடினமான சண்டை இரண்டு மாதம் வரைக்கும் பண்ணி புதுச்சேரிக் கோட்டையை அல்லா பண்ணி வாங்கி கோட்டையை இடித்துப் போட்டு............து வகையருவை விலாயத்துக்கு அனுப்பி விட்டார்கள். புதுச்சேரியில் இங்கிலீஷ் பாதர் டாணு வைத்தார்கள். செஞ்சிக் கோட்டைக்கு முன்னலே பாருக்காரர்...............ம பிறகு இங்கிலீஷ் பத்தியான உடனே இங்கிலீஷ் ஆபீஸரும் மூன்று கும்பினியும் டாணயிருந்தார்கள். பிறகு ஒரு கும்பினியும் சாரசந்தும் இருந்தார்கள். சென சதாஎமெ பசலி ஹைதரல்லிகான் அங்காமாவில் இங்கிலீஷ் ஆபீஸர் பத்து பேர் சொலதாதுகள். ரெண்டு கும்பினியும் இருந்தார்கள்.

அந்த சன்னிலே சங்கிலி போட்டார்கள். சன சதாஎமஅ பசலி மறுகாலும் ஹைதரல்லிகான் அங்காமாவில் நவாபு தாப்பிலே ஆஷக்கல்லிகான் நாயப்கில்லேதார் வந்தார். கில்லாராய்ஷி யக்தியாரான் சுபேதாரான படியினலே உசூர் உத்தாரப் படிக்கி நாயக்கில்லேதார் தையின் நகீப் முஷர்பவைத்து பார்க் கர்னடகம் வகையரு சத நூா செனம் வரைக்கும் சிப்பந்தி வைத்து செக்கீரா மாதினிசும் போட்டு பாருத்கானு, காாக்கானு முதல் நடந்து கொண்டு வந்தது.

நாயப் கில்லேதாருக்கு கோட்டை வாசல் வைக்க அதிகாரம் இல்லை. இங்கிலீஷ் ஆபீஸர் டாலன் அதிகாரமாயிருந்தது. அப்படியிருக்க அந்த சனனிலே ஆபீஸரும், கும்பினியும் உத்தாரப்படிக்கு சென்னப்பட்டிணம் சேர்ந்து போனர்கள். நாயப் கில்லேதார் வசம் கில்லாவோடே சேர்ந்த காரியம் எகத்தியாரியாய் ஆயிற்று. அப்படி ஆஷக்கல்லிகானிருக்க அவர்க்கு உத்தியோகம் போயி மகமத்தக்கேகான் வந்து நாயப்கில்லேதாரி பண்ணி அவர் விழுந்து போயி மறுகால் ஆஷக்கல்லிகானுக்கு உத்தியோகமாய் சென சதாஅஙக பசலி அவருக்கு உத்தியோகம் போயி ஆபீஸ் சயதல்லி நாயப் கில்லேதாரியா வந்தார். அவர் கில்லேதாரி பண்ணிக் கொண்டிருக்கும் பொழுது புதுச்சேரி கோட்டை வாங்கின கையோடே அந்த கலாபத்துக்கு ஒரு கும்பினியும் இங்கிலீஷ் ஆபீஸரும் வந்து கில்லேதாரோடே கூட வந்து கில்லாவில் வந்துயிருந்து கொஞ்ச நாள் யிருந்து சென்னைப்பட்டிணம் போனர்.

அந்தக் காலத்தில் சென்னல் மன்ரோவும் கில்லாவிற்கு வந்து போனர். அப்படியிருக்க சென சதாஅமஎ பசலி உசூர் நவாபு வாலாஜா உத்தாரப்படிக்கி ராஜா பீருபர் பாதர் தம்முடைய தைனத்து குதிரை வகையரு செனத்தோடே எச்சமநாயக்கர் வெங்கடப்பநாயக்கர் வெட்ட

வனம் பண்டாரி, மேல்ச் சேரிக்கில்லேதார், சுபேரநாதசிங்கு வகையரு மொகலாய தண்டு சேர்த்துக் கொண்டு கர்னல் வாங்கு ரெண்டு பட்டாளம் பார் இங்கரேசு தண்டும் சேர்த்து கொண்டு, பொம்ம ராஜா பேரில் தண்டெடுத்து ஆத்தம் சேரிக் கணவாயில் சண்டை பண்ணிக் கொண்டு தூறி பள்ளிப்பட்டு பொம்மராஜா சீமையில் போயிறங்கியிருந்து ஒரு மாதத்திற்கும் பிறகு பொம்மராஜா சமாதானம் பண்ணிக் கொண்டு பணம் கொடுத்து அவர் தண்டும் கூட்டினர்.

ராஜா பீருபர் பாதர் அவ்விடத்திலேயிருந்து திருத்தணிப் பக்கம் வேலூர் வகையரு ஒன்பது பாளயப்பட்டு பேரில் சண்டை கொடுத்து பாளயங்களை வாங்கி அவ்விடத்தில் கோட்டை கட்டி டாணவும் வைத்து அதிலே சிறிது பாளயப் பட்டை எச்சமநாயக்கர்[47] வெங்கடப்ப நாயக்கர், பொம்ம[48] ராஜா வசம் பண்ணி, சிறிது பாளயப் பட்டை சப்தி பண்ணி அமீல்களை திட்டம் பண்ணிப் போட்டு ஆர்க்காடு வந்து சேர்ந்தார். கர்னல் வகையரு பட்டாளம் வேலூர் போய்ச் சேர்ந்தது. ராஜாக்கள் தங்கள் சாகாவுக்குப் போய் விட்டார்கள். அப்படி சென சதாஅபெசு பசலி வகையரு நவாபு அமீருலுமாரா, இந்து வாலாஜாபாதர் சென்னைப்பட்டணத்தில் இங்கிலீஷ் பாதர் கும்பினி சர்தார்கள் கவர்னர்கள் அனுகூலமாயி கர்னடகம் ராஜிய பாரமாண்டு கொண்டு கலியாண காரியங்கள் சுபா அசுப காரியங்கள் பண்ணிக் கொண்டு சாயபு சாதாக்கள் பீ. பீசாதா சூரத்சாதாக்கள், திவான் அபுதுல்லரசிதகான் காசி ஆஷாபகான், நசீபகான் வகையரு அமீர்களோடு சந்தோஷத்தை அடைந்து கொண்டு இருந்தார்.

ஆர்க்காட்டில் ராஜா பீருபர் பாதர் என்கிற பேர் கொடுத்து இருக்க அந்தப் பேர் எண்பித்துக் கொண்டு ஆர்க்காடு சுபாகுடிகளுக்கு வாரம் தீர்வை ஞாயமாயி நடப்பித்துக் கொண்டு கர்னடகம் அம்பத்தினுலு கில்லாவுக்கும், நாயப் கில்லேதாரி பார் வகையரு டாணசக்கிரா முதல் கார்க்கான பந்தோபஸ்தாயி தம்முடைய அதிகாரத்தின் பேரில் வைத்துக் கொண்டு கணக்கும் இருசாலும் உசூருக்கு சென்னைப்பட்ட

---

47. இவர் வேங்கடகிரி பங்காரு எச்சம நாய்க்கராகக் கருதப் படுகிறார்.

48. பொம்மராஜா—விஜயநகரம் கிருஷ்ண தேவராயருக்குத் தூம்பர் போரில் துணை செய்தவர். செங்கற்பட்டு சீமையில் முக்கியத் வம் வாய்ந்தவர் போலும்.

ணத்திற்கு அனுப்பிக் கொண்டு சோயக்கில்லேதார் செமீந்தார்கள் மனசப்தார்கள் பாளயக்கார், லட்சம் பகுதி திட்டப் படிக்கி வாங்கிக் கொண்டுயிருந்தார்.

---

17. ஹைதராலியின் சூழ்ச்சிகள்

அப்படியிருக்கிற காலத்தில் சன சத சகககூ பசலி சார்வரி வருடம் ஆமீ்டிஉ கணவாய் மேல் சிரெங்கப்பட்டிணம் கர்னுடகம் கரத்தர் ராஜாவினுடைய தளவாய் மூன்று தலே முறையாய் ஷாபானுயக்கன் பத்தே நாயக்கன் ஹைதர் நாயக்கன் இப்படி உத்தியோகம் பண்ணிக் கொண்டு வந்தவர்களிலே ஹைதாநாயக்கன் முன்னுலே சந்தா சாயிபு சண்டையில் கும்மக்காயி திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் நவாபு வாலாஜா பேரில் வந்து வாலாஜாவுக்கு கர்தர் பிரதானிகர் நந்தி ராஜா கத்தி கோபால நாயக்கன் கூட வந்து யிருக்க வாலாஜாவுக்கு செபமாக இவர்கள் வாலாஜாவுக்கு அனுகூலமாய் சிரெங்கப் பட்டணத்திற்கு போன நாள் முதல் ஹைதாநாயக்கன் அதுவே மூலமாயி ராஜா உத்தாரத்தின் பேரில் தண்டு வாங்கிக் கொண்டு பாலாப்பூர் வகையறு சில்லறை ராஜாக்கள் பேரில் போயி செயம் கொண்டு அதிக சிப்பந்தி கள் வைத்து நாளுக்கு நாள் பலவந்த நாகி ராஜாவை அடக்கிதானே தலேவனுய் அதிக தண்டு சேர்த்துக் கொண்டு நவாபு நிஜாமத்தௌவுலா வேயும் அழைப்பித்து தன் மகன் திப்பு சுல்தானே பேட்டி பண்ணி வைத்து நவாபு நிஜாமத் தௌலாவிற்கு பணம் கொடுத்து கும்மக்கு அழைத்துக் கொண்டு ஆர்க்காடு சீமைக்கு சென சதாளஙெ பசலி வந்து நவாபு ராஜா இங்கலீஷ் தண்டினுலே அடிபட்டு ஓடிப்போயி மறுகாலும் சென சதாளஙெஅ பசலி வந்து சமாதானம் பண்ணிக்கொண்டு போனுன்.

முதல் பீதனூர், சித்திரக்கல்கு பந்தி வகையறு ராஜாக்களோடே சண்டை கொடுத்து செயம் கொண்டு துங்கபத்திரை ஆறு வரைக்கும் நாலு கோடி ராஜ்யம் கட்டிக் கொண்டு சிரெங்கப் பட்டிணத்திற்குதானே ராஜாவாய் மோராட்டியர் பேரிலும் சண்டை கொடுத்துக் கொண்டு மவர்களுக்கு பணமும் கொடுத்த காலமுமாயிருக்க அவ்விடங்களிலே சீமை கோட்டைகளே பந்தோபஸ்து பண்ணிப் போட்டு பதிமூவாயிரம்

தபேலா குதிரை பதினாலாயிரம் சாயாக் குதிரை அம்பதாயிரம் பார், அம்பதாயிரம் ஆஷாம் லட்சம் கந்தாசாரம் பியாதாக்கள் சாயிபு சாதா டிப்பு சுல்தான் சரீப்சாயிபு மச்சினன் மீரசல்லிகான் சாவனூர் நவாபு அறப்பண்ணபள்ளி சித்தரக்கல் வகையரு சேனைகள் தோசேகானு பூர்ணய்யா[49] கிருஷ்ணராயா சீனுவாசய்யர் பார் மீரபகுஷி பதுருச மாகான் குலாமல்லிகான் சாயா பகுஷி சுலாபதகான், லாலா சாயலி ராம புருஷோத்தம தாஸ் கந்தாசாரம் பகுஷி ஆபீஸ் அசனல்லிகான் ஹைதரல்லிகானுடைய மருமகன் மொகலிச அல்லிகான் மாலாத்து மீர அகம்மது சாதக ஆஷாம் பகுஷிதலேதில்கான் தபேலா நஷத்தா குதிரைகள் பகுஷிகள் மாமீரசாகான் உசேநல்லிகான் மீரமோயினுத் தீன். சைய்யது அமீன் இப்படி பதினெட்டு கச்சேரி சர்தார்கள் அரி சிங்கு ரிசாலா சுல்தான் சிங்கு சித்திலால் இன்னம் கச்சேரி முசுத்திகள் சிபாயிகிரி பண்ணப் பட்டவாள், ரெங்கய்யர், ராமய்யர், சுலமலய்யர் ஹரிதாஸய்யர், கிரியப்பய்யர், இப்படி இரண்டு லச்சத்து அம்பதி னாயிரம் செனம் தண்டு கூட்டிக்கொண்டு ஆயிரம் யானை, ஆயிரம் ஒட்டைகள், அறுபதாயிரம் கோணி, எருது மாடுகள், இரு நூறு பீரங்கி இப்படிப்பட்ட கரம் சாமானோடே செங்கமா கணவாய் வழியாய் ஆர்க்காடு சீமை கீழ் கர்னாடகம் வாங்க வேணுமென்று இறங்கினார்.

ஆர்க்காடு சீமை கீழ் கர்னாடகம் நவாபு வாலாஜா பாதர், இங்கிலீஷ் பாதர் இவர்களுக்கு நவாபு[50] ஹைதரல்லிகான் பாதருக்கு இப்படி தண்டு கூட்டிக் கொண்டு தங்கள் பேரில் வருகிறது நன்றாய் தெரியாது. பெங்களூர், அந்த மைதானத்தில் தண்டு சேர்ந்தது உபாயசாக்கு இட்டு இறங்கினார்கள். அப்படிப் பட்ட நவாபு ஹைதரல்லிகான் ஆர்க்காடு சீமையிலிறங்கி செங்கமா வாங்கி திருவண்ணாமலை வாங்கி போளூர் கிட்ட இறங்கினார். அவருடைய பாய்தல் ரெண்டாயிரம் குதிரை சேலத்து வழியாயி வந்து உளுந்தூராமங்கலம் பேட்டை கொள்ளை யிட்டு யஉ பறங்கிப் பேட்டை போயி வளைத்துக் கொண்டு மோகர மெயாமுதல் வர்த்தகர் வீட்டில் தங்கப்பாளம் சன்னல் முதல் கொள்ளை யிட்டார்கள்.

---

49. பூர்ணையா—இவர் ஹைதராலியின் பொக்கிஷ மந்திரி. சிறந்த அறிவாளி. பின்பு வந்த மைசூர் அரசநக்த மந்திரியாக இருந்தவர்.

50. Haidar Ali என்ற தலைப்பின் கீழ் N. K. Sinha என்றவர் எழுதிய புத்தகத்தில் அவனுடைய நிகழ்ச்சிகள் அதிகமாய் காணப்படவில்லை.

ஆர்காடு சுபா தாலூக்காத்து டாணு ஜாகீர் தவிர மயத்தயிடங்கள் வீட்டைக் கொளுத்தி கொள்ளையிட்டார்கள். அப்படியிருக்க நவாபு ஹைதரல்லிகான் கர்னடகம் கைகொள்ள வேணுமென்கிற ஆசையைப் பற்றி சீமை கொள்ளையாய்ப் போகுது என்று கிரியப்பைய்யருக்கு ஆர்க்காடு சுபா அதிகாரம் கொடுத்து இனயத்து சிப்பந்தியும் திட்டம் பண்ணினர். அந்த கிரியப்பைய்யர் திருவண்ணாமலையில் இருந்த படிக்கி சுபாதாலூக்காத்துகளுக்கு அமில்களை ஏர்ப்படுத்திஅனுப்பினர். அவாள் சிப்பந்திவைத்து சீமையை செப்தி பண்ணினர்கள். ஹைதரல்லி கான் போளூர் வாங்கிக் கொண்டு............க்குப் போயி அந்தக் கில்லாவும் வாங்கி திமிரிக் கில்லாவும் வாங்கிக்கொண்டு சேததுப்பட்டும் வாங்கி இந்தக் கில்லாக்களுக்கு நாயப்கில்லாதாரையும் வைத்து, டாணு வும் வைத்து பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார்.

தாம் தண்டோடே ஆர்க்காடு ஆலம்பனு மகாராஜ பீருபர் பாதர் பேரில் போயிறங்கினர். அந்தக் காலம் செஞ்சிக்கோட்டை தீயாக்கடை பேருமுக்கல், வந்தவாசி இவைகளிலே நவாபு வாலாசா இங்கரேசு செனம் டாணு யிருக்கிறர்கள். மற்ற சீமைகளெல்லாம் வடக்கு சோளங்கிபுரம், தெற்குக் கொள்ளிடம், மேற்குக் கணவாய், கிழக்கு சமுத்திரம் வரைக்கும் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார். ஹைத ரல்லிகான் ஆர்க்காடு சீமையில் வருகிறது சமீபத்தில் தெரிந்துகொண்டு நவாபு வாலாசா பாதர் இங்கிலீஷ் பாதர் சர்தார்கள் ஹைதரல்லிகா னேடே எதிர்த்துச் சண்டை பண்ணி கணவாய் மேலே அனுப்பி வைக் கிற நிமித்தம் ஜன்னல் மன்றேல் தண்டு சென்னைப்பட்டிணத்தில், சேகரம் பண்ணிவைத்து கூட்டுக்கும் கர்னல் வேலிக்கும் திருகெல் வேலிக்கி மேசர் காபலுக்கும் அதி சீக்கிரமா உயுத்திய சாமானேடே வரச் சொல்லி எழுதினர்கள்.

கோட்டை செஞ்சி முதல் ஆர்க்காடு சுபேதார் ராயசிங்கும் பந்தோ பஸ்தாயிருக்கச் சொல்லி குமக்கு அனுப்புறேமென்று எழுதினர்கள். ஆர்க்காடு ஆலம்பனுக் கோட்டையில் நவாபு வாலாசாப் பட்டாளம், இங்கிலீஷ் பட்டாளம், ஒப்பந்தம் சைய்யத் அமீத் கும்மனத்தான் தம்மு நாயக்கன் வகையறு நாலு பட்டாளம், பார் அஸ்தமேக்குகான் வகையறு கிலேதார் குதிரை நூறு கர்னடக பேதா வகையறு ஆயிரம் செனம் இதுவுமல்லாமல் கோட்டைக்குள்ளே இங்கிலீஷ்சர்தார் மூன்று கும்பினி மகமத் நசீப்கான் சலார் செங்குபாதர் குலாம் சீசத்தியார் கான் சமது பருத்திகான், பகுஷிக ரோடகிரி இவர்கள் மஹாராஜா பீருபர் பாதர் ஆர்க்காடு ஆலம்பனு பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு யிருந்தார்.

கோட்டையை இங்கிலீஷ் ஆபீஸர் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டுயிருந்தார். எசாமத்திகான் கில்லேதாராயிருந்தார். இதுவு மல்லாமல் அப்பா சக்குல்லிகான் வகையரு பெரிய மனிதரும் இருந்தார் கள். பட்டணத்து செனங்கள் வெளியிலிருந்தவர் சிறிது பேர் எதே யிச்சையாய் வேலூர் பொம்புராஜாபாளயம் போயிச் சேர்ந்தார்கள். சிறிது பேர் ஆலம்பனுவே நம்பி உள்ளே பட்டணத்திலே வந்து இருந் தார்கள். உள்ளேயிருந்தவாள் வெளிப்படயில்லே. அப்படியிருக்க ராயசீ முதல் இங்கிலீஷ் சர்தார் கோட்டை புருசு பேரில் ஏறிப்பார்த்து ஹைதரல்லிகான் தண்டு அகாடி பக்கம் உப்புப் பேட்டை கிட்டவைத்து கூடாரம் போட்டு இறங்கியிருப்பதைப் பார்த்து தஞ்சாவூர் லம் செடி பீரங்கியை புருசுத்தம்மா பேரில் ஏத்தி குண்டு சுட்டார்கள்.

அந்த குண்டு ஹைதரல்லிகான் கூடாரத்தண்டை போயி விழுந் தது. பின்னும் குண்டு சுட்டார்கள். கொஞ்சம் செனம் சேதமாயிற்று. அதுவே ஹைதரல்லிகான் கூடாரத்தை பிடுங்கிக்கொண்டு தண்டோடே கிழக்கே வாரலி மேட்டுக் கிட்ட குண்டுக்கு எட்டாத யிடத்தில் கூடா ரம் போட்டு யிறங்கினர். ராயசி முதல் சர்தார்கள் கோட்டையில் அதரா கில்லேதார் கூட யிருக்கிறரென்று மேல் வேலூர் வாயிற்பக்கம் அஸ்தபேக்குகானும் பட்டாளம் பாரும் வைத்துத் தெற்குப் பக்கம் நசீப்கான் சிறிது தியார்க்கான் ஒரு பட்டாளம் பார்வைத்து கிழக்குப் பக்கம் சைய்யது பரிதுத்திகான் ஒரு பட்டாளம் பார்வைத்து வடக்கு வாசல் ஒரு பட்டாளம் பார்வைத்து சோ............ ராயசி தானே விசாரிக்குறதாய் இப்படி நாலு பக்கமும் தோப்கான வகையரு கொலந் தாச கலாஷி காமாட்டி கர்னடக பியாதாக்களே பந்தோபஸ்தாய் திட் டம் பண்ணினர்.

அப்படி யிருக்க நவாபு ஹைதரல்லிகான் ஆலம்பனுவே சுற்றி சந்தா சாரம் பியாதாக்களே அடிக்கடி பார்வை வைத்து லாவாக் குதிரை யும் வைத்து ஆர்க்காடு ஆலம்பனுவுக்குள்ளே யிருந்து வெளிப்பட்டு சமாசாரம் போகப் போகுது என்று பந்தோஸ்து பண்ணினர். அப் படியும் பட்டாளத்து சிப்பாயிகள் ராயசி சென்னைப் பட்டிணம் செஞ்சி வகையருவுக்கு நவாபு கில்லேதார்களுக்கு அர்ஜி காகிதங்கள் எழுதிக் கொடுத்ததை உபாயமாயி...........காலத்தில் பூமியோடே தவழ்ந்து கொண்டு பாட்டை தப்பிப் போயி எந்த யிடத்துக்குக் காகிதம் கொடுத் தார்களோ அவ்விடத்தில் கொடுத்து உத்திரம் வாங்கிக்கொண்டு, இன மும் வாங்கிக்கொண்டு திரும்பி வரும் பொழுது ஹைதரல்லிகான் பாரா தப்பி ஆர்க்காடு ஆலம்பனுவிற்குள்ளே போயி பீருபர் பாதரண்டை...

..........த்து அவர்களிடத்திலும் இனும் வாங்குவார்கள்.

அப்படி நாற்பது நாள் ஹைதரல்லிகான் முராஜா போட்டு பெரிய பீரங்கிகளை வைத்து ஆலம்பனு முண்டேரியே யிடித்துக்கொண்டு வருவார்கள். அதற்கு அன்னேரமே பீருபர் பாதர் சர்தார்கள் முண்டேரியை சக்கரம் பண்ணிக் கொள்ளுவார்கள். ஹைதரல்லிகான் செனம் அடிக்கிற குண்டு ஆலம்பனு பேரிலேயும் பட்டணத்திலேயும் மனிதர் தலை காட்டக் கூடாது. அந்தக் குண்டுகள் பட்டு கும்மட்டம் மருதிகள் பொத்தலாய்ப் போம். கல் வெட்டுகள் பேரிலும் விழுந்து ஓட்டை பண்ணிக்கொண்டு சிறிது செனம் சேதமாகும். மஹாராஜா பீருபர்பாதர் செனம் வெளிப்பட்டு ஹைதரல்லிகான் செனம் பேரில் விழுந்து அடித்து வருகிறதும் மொரச்சா நிலையாமல் ஆலம்பனு புருசும் பேரிலிருந்து பீரங்கி அடிக்கிற வேலையுமாயிருக்கும்.

அதிலேயும் ஹைதரல்லிகான் செனம் கொஞ்சம் சேதமாகும். அப்படி யிருக்க ஹைதரல்லிகான் மருமகள் காயாண வஸ்திரம் இறக்காமல் வந்திருக்கும் கந்தா சராம் தீர்பகுஷி ஆபீஸ் அஸனல்லிகான்.......
......ரஜா பந்தோபஸ்துப் பண்ணவந்தவன் ்காட்டையையும் பிடித்துக்கொண்டு ராத்திரி காலத்தில் வந்துயிருக்க ஆலம்பனு பேரில் பெரிய மத்தாப்புகள் கொளுத்தும் பொழுது மொரசாவில் பந்தோபஸ்து நிமித்தம் ஹைதரல்லிகான் மருமகன் குந்தாசராம் மீர்பகுஷி ஆபீஸ் அஸனல்லிகான் கோட்டை பிடித்திருப்பது தெரிந்து பீரங்கி சுட்டார்கள்.

அதிலே ஆபீஸ் அஸனல்லிகான் விழுந்து போனுன். அப்படி சண்டை பண்ணிக்கொண்டு யிருக்கிற போது ஹைதரல்லிகான் நவாபு வாலாசா பாதர் தம்முடைய தம்பி அப்துல்லாப்கான் பாதர் நசரத் சங்கிற்குச் சிற்றூர் கில்லா ஜாஹீர் விட்டிருக்க அவரந்தக் கில்லாவுக் குள்ளே யிருக்க உசூரிலே வாலாஜா பாதர் காகிதம் சென்னைப் பட்டிணத்திற்கு சம்சாரத்தோடே வரச்சொல்லி எழுதியிருக்கவும். தாம் கில்லா பந்தோபஸ்து பண்ணியிருப்பதும் சிப்பந்தி யிருக்கிறதும் கெஜானுவில் சந்திரகிரி கெடைகில்லா கடினமான யிடமென்றும் சென்னப் பட்டிணம் போகாமல் ஹைதரல்லிகான் அனுப்பிவித்த செனங்களோடே சண்டை பண்ணிக்கொண்டு சந்திரகிரிக் கில்லாவும் பந்தோபஸ் தாயிருக்க ஹைதரல்லிகான் தாமே தண்டு வாங்கிக்கொண்டு போய் அப்துல்லாப்கான் பேரில் சண்டை கொடுக்க அப்துல்லாப்கான் இளப்பமாய் கவினும் பேரில் அகப்பட்டுப் போனுன்.

ஹைதரல்லிகான் அவரோடே சம்பந்தம் பண்ணி அவரோடே சேர்ந்தவர்களுக்குச் சிறிது பேர்களுக்கு உத்தியோகமும் கொடுத்து அவர்களை தண்டிலே வைத்துக்கொண்டு அப்துல்லாப்கான் முதல் சம்சாரத்தோடே சீரெங்கப்பட்டிணம் அனுப்பிவிட்டார். அந்த சித்தூர் கில்லா, சந்திரகிரி துர்க்கம் அந்த சீமையை சப்தி பண்ணிக்கொண்டு அவ்விடத்திலே அகப்பட்ட கொள்ளையும் சேர்த்துக்கொண்டு ஆவல்கடை துர்க்கம் கில்லேதார் அஸன்ராஸாகான். வக்கீல் வந்து நசரும் மிட்டாயும் வைத்துக் காண, அதன் பேரில் கில்லேதாருக்கு கில்லாவை காயப்படுத்தி கில்லேதாரும் கனம் மகம்மது ஆதிகானை அழைத்துக் கொண்டு கந்தாசாரம் பகுஷி முகாச அல்லிகானுடே கூடயிருக்கும் படியாய் பகுஷிகிரி உத்தியோகம் கொடுத்தார்.

அப்படி யிருக்க ஹைதரல்லிகான் ஆர்க்காடு ஆலம்பனு பேரில் சண்டை பண்ணிக் கொண்டிருக்க சென்னைப் பட்டிணத்திலிருந்து சென்னவம் நடு சொல்தாது தண்டு அலேமான் குதிரை, துருப குதிரை, பட்டாளம் பார் முதல் தோப்புக்கானு உட்பட பதினாயிரம் செனம் புறப்பட்டு செங்கல்பட்டு மைதானம் வந்தார்கள். கூடலூரிலேயிருந்து கர்னல் வேலி ஆறாயிரம் செனத்தோடே தக்கோலம் வந்து சேர்ந்தார். காசபல் செஞ்சிக்கி வந்து கில்லாவுக்கு ஒரு கும்பினியும் மக்காளிஸ் ஆப்பீஸர் சாரசந்தும் கில்லேதார் கூட வைத்துப்புட்டு சேத்துப்பட்டு பேரில் ஹைதரல்லிகான் சேத்துப்பட்டு வாங்கி கோட்டையில் கில்லேதார் செனங்களை வைத்திருக்க இனிமேலாக அவர்கள் பேரில் காசபல தம்முடைய பட்டாளம் மொத்த செனங்களும் சேத்துப் பட்டுக் கோட்டை பேரில் போயிச் சண்டை கொடுத்து அல்லாஏற எதிரி சண்டை கொடுத்து அல்லாஏறினவர் சேதமாயித் திரும்பி செஞ்சிக்கி வந்து சீயபுரம் சமீபத்தில் போயிறங்கினார்கள்.

அப்படியிருக்க ஹைதரல்லிகான் இந்த மூன்று துக்கடியும் வருகிறது தெரிந்துகொண்டு ஒன்றாகக் கூடினால் செயமாகிறது கடினமென்று முன்னதாய் டிப்புசுல்தானை தண்டோடே வெளிதண்டு பேரில் அனுப்ப கர்னல் வேலி தண்டை சுற்றிக் கொண்டுயிருக்க வெளிதண்டு தூறிவர அது சேதியும் மூன்று துக்கடியும் சேருகிறது என்றும் சென்னல் தண்டு காஞ்சிபுரம் வந்தது என்றும் எழுதியனுப்ப ஹைதரல்லிகான் ஆர்க்காடு பேடா சண்டையை விட்டு ஒரு பூதரில்லாமல் கரனில் வெளி தண்டே போயி வளைத்துக் கொண்டார்.

மறுநாள் காலமே ஆர்க்காடு ஆலம்பனவே சுற்றியிருந்த தண்டு இப்படியே காயேகியாய்ப் போன வயண மென்னவென்று ராசிமுதல் யோசனை பண்ணி கர்னல் வெளி பேரில் போயிருக்கிறுர்கள். சன்ன லும் காஞ்சிபுரம் வந்துயிருப்பார். காசபலும் வந்துயிருப்பார். மூன்று துக்கடியும் கூடி யிருக்குமென்று ஹைதரல்லிகான் ஒன்று கூடாமல் சண்டை பண்ணப் போயிருக்க வேண்டும். ஆனல், எப்படியும் இங்கி லீஷ் பாதர் சர்தார் அடித்துப் போடுவார்களென்றும் தமக்கு குமக்கு வருமென்றும் தையிரியப்பட்டுக்கொண்டு யிருந்தார். அந்த சமயத்தில் சிறிது செனம் ஆர்க்காடு விட்டு வலசை யெதா இச்சையாய்ப் போனுர் கள். தையிரியத்தோடே யிருந்தவர்கள் ஹைதரல்லிகான் தண்டு யிறங்கி யிருந்த யிடத்தே விறகுமற்றது சேர்த்துக் கொண்டார்கள்.

அப்படி ராயசி முதல் சர்தார்கள் ஆர்க்காடு கோட்டை ஆலம்பனு வில் இருக்க கர்னல் வேலி ஹைதரல்லிகான் தண்டு வந்து சுற்றிக் கொண்டதற்கு சென்னல் மன்ரோவுக்கு கும்மக்கு அதி சீக்கிரமாய் வரச்சொல்லி கர்னல் எழுதினதற்கு சென்னல் தாம் தண்டோடே காஞ்சிபுரம் கோயில் ஆசரா பேரிலிருந்து கொண்டு மெச்சு காஜபல துக்கடியும் வந்து சேரும். அத்தையும், அத்தையும் சேர்த்துக்கொண்டு போகலாமென்று கர்னல் எப்படியும் தூறிக்கொண்டு வருகுவாரென்றும் தம்முடைய தண்டிலே நல்லசிப்பாயி செனமா பொறுக்கி சொல்தாது கூட ஆயிரத்தைந்நூறு செனம் வெளிக்கு கும்மக்கு அனுப்பினுர்கள்.

அந்த செனம் ஹைதரல்லிகான் செனத்தைத் தூறிக்கொண்டு போய் கர்னல் தண்டு வாய்ச் சேர்ந்தார்கள். அதுவந்ததை கரல் தைரி யப்பட்டுக் கோட்டை கட்டிக்கொண்டு சண்டையும் பண்ணிக்கொண்டு நகர்ந்து வருகிறது. ஹைதரல்லிகான் கர்னலே விட்டமானுல் மோசம் வரும். சென்னல் தண்டும் வந்து கூடினுல் ரொம்பக் கடினமாயிருக்கு மென்று கர்னல்வருகிற வழியில் பெரிய பீரங்கிகளை முரசா போட்டு எத்திச் சுட்டுக்கொண்டும், குதிரைகளையும், கர்னுடக பியாதாக்களையும் பக்கம் வைத்து பார் செனங்களை முன்னதா வைத்து தபேலாக் குதிரைகளையும் ஒரு பக்கம் வைத்து கர்னல் துக்கடியே சுற்றிக் கொண்டு உள் புகுந்து தம்முடைய சர்தார்களை பகுஷி வகையறுக்களை சண்டை பண்ணச்சொல்லி டிப்பு சுல்தான் துக்கடியும் மீரர் ஸால் லிகான் துக்கடியும் அவர்களையும் உள் புகுந்து சண்டை பண்ணச் சொல்லி தான் பிறகாலேயிருந்து தள்ளிக்கொண்டு யிருக்க கர்னல் துக்கடியும் உயுத்த சன்னுகத்தோடே பீரங்கிகளை சர்ப்பசாட்டுப் போட் டுச் சுட்டுக்கொண்டு வர, இருதிறத்தாரும் மனங்கலந்து சண்டை

பண்ண கர்னல் துக்கடி கொஞ்சமான படியினலே ஹைதரல்லிகான் தண்டு லட்சம் செனத்தோடே ஏழாயிரம் செனத்தின் பேரில் விழுந்து சண்டை பண்ணும் போது கர்னல் கோட்டை கட்டாய்க்கட்டி பீரங்கி சுட்டுக்கொண்டிருக்க, யிருதிறத்திலும் அனேக செனங்கள் சேதமாக ஹைதரல்லிகான் உத்தாரப்படிக்கு கர்னல் பேரில் அல்லா பண்ண, கர்னல் செனங்கள் துப்பாக்கி சண்டை பண்ணி எதிரி கிட்டி வந்த பிறகு சனின் சண்டை பண்ணினர்கள்.

என்ன தையிரியத்தோடே கர்னல் செனம் சண்டை பண்ணியும் செனம் அல்ப்பமான படியினலே அடிபட்டுப் போனர்கள். அந்த சமயத்தில் கர்னல் செனம் சிறிது பேர் ஓடிப் போய்விட்டார்கள். சோத்துப் பாளயமும் கொள்ளையாய்ப் போயிற்று. வெளி முதல் சர்தார்கள் சொல்தாதுகள் சிப்பாயிகள் செத்துப் போனது போக, மற்ற பேர்கள் ஹைதரல்லிகான் கிட்ட அகப்பட்டுப் போனர்கள். ஹைதரல்லிகான் செனத்திலும் ஆயிரம் செனம் வரைக்கும் சேதமாயிற்று. இது சேதி சென்னல் மன்ரோல் கேட்டு இது சமயமல்லவென்று தம்முடைய துக்கடியை வாங்கிக்கொண்டு சீயபுரத்து வழி பிடித்துப் போகும்போது ஹைதரல்லிகான் தண்டு சர்தார்கள் பாரி தண்டு வாங்கிக்கொண்டு முன்னதாய் வந்து சன்னல் தண்டை மறித்தார்கள். பின்னலே ஹைதரல்லிகான் வந்தார்.

அப்படியிருக்க, மெசரகாசபலும் சிவரத்தண்டே சன்னலோடே கூட ஜன்னல் ஹைதரல்லிகான் செனத்தைத் துறிக் கொண்டு செங்கல் பட்டு போயிச் சேர்ந்து அவ்விடத்தில் ரெண்டு நாள் ஆசுதா பண்ணி கொண்டு சென்னைப்பட்டணம் போயிச் சேர்ந்தார்.

ஹைதரல்லிகான் தலாவாக்கு குதிரையை சென்னைப்பட்டணத்தைச் சுற்றி வைத்து வாலாசாப் பெல்லிராம் புருஷோத்தமதாசை அவ்விடத்தில் வைத்துப் போட்டு, தாம் தமாம் தண்டோடே ஆர்க்காடு போயி முன் இறங்கினதாவில் வந்து யிறங்கினர். கர்னல் வேலி வகையறுவை அழைத்து வந்து பார் வகையறு செனங்கள் சம்மதியான வாளையும் பலவந்தமாகவும் சேவகம் வைத்து, பெரிய உத்தாகாரர் ஆனமட்டமாயிருந்தார். சின்னத் தொழிலில் வைத்து சின்னத்தொழில் காரர் ஆளஒசத்தி பெருமனயிருந்தால் பெரிய உத்த குடுத்து வைத்து கொண்டார்.

கர்னல் வகையறு இங்கிலீஷ் சர்தார் சொல்தாதுளை சேவகம் இருக்கச் சொன்னர். தாங்கள் இங்கிலீஷ் பாதுஷா உப்புத் தின்றவர்

கள். ஒருத்தராண்டை சேவகமிருந்து இங்கிலீஷ் பேரில் ஆயுதமெடுக்க மாட்டோமென்று சொன்னார்கள். அதற்குக் கோபம் பண்ணி கர்னல் வேலி வகையறாவே சீரங்கப்பட்டிணத்திற்கு அனுப்பிவிட்டார். அப்பால் ஹைதரல்லிகான் தைரியவந்தனாய் ஆர்க்காடு ஆலம்பனாவைச் சுற்றி மோரசாபோட்டு அவ்விடத்தில் சர்தார்களை செனங்களை வைத்து பீரங்கிகளை ஏத்தி ஆலம்பனா முண்டேரிகளைத் தள்ளிக் கொண்டு வந்தார். அத்தை ராயசி செம்மைப் படுத்திக் கொண்டு வந்து முராஜா பேரிலேயும் பீரங்கி சுட்டுக் கொண்டு யிருந்தார். அப்படியிருக்க, வேலூரிலேயிருந்து உத்தாரப்படிக்கி கர்னல் வாங்கு மூன்று குப்பினி பார் ராயசிக்கி கும்மக்கு அனுப்பினார்.

அவர்கள் ராத்திரி காலத்தில் தூறிக்கொண்டு ஆலம்பனாவுக்குள்ளே வந்து சேர்ந்தார்கள். அப்படியிருக்க, ஒரு நாள் சண்டையில் கிழக்குப் பக்கம் சையது பரிதுத்திகான் இருக்க ஹைதரல்லிகான் குண்டு ஆலம்பனா முண்டேரியைக் கிழித்துக்கொண்டு மரத்தில் பட்டு ஆறிப்போனது பட்டு விழுந்து போனார். அது சேதி ராயசி கேட்டு தெரிந்து கொண்டு அதயிரியப் பட்டார். அப்படி முப்பது நாள் சண்டை பண்ணிக்கொண்டிருக்க, ஹைதரல்லிகான் ராயசிக்கி கோட்டையை விட்டு விடு ; உம்மை எப்படி வாலாஜா வைத்துக்கொண்டிருந்தாரோ அதற்கும் பெரிதாய் வைத்துக் கொண்டிருக்கிறேனென்று எழுதினார்.

அந்தக் காகிதம் ராயசி பார்த்து எனக்கு எழுபது பிராயம் ஆயிற்று. இனிமேல் வாலாஜா உப்பு தின்னு ரெண்டகம் பண்ண மாட்டேனென்று சொல்லி அனுப்பிவிட்டார். ஹைதரல்லிகான் பார்த்துக்கொண்டு தம்முடைய சர்தார்களை கண்டிப்புப்பண்ணி ஆலம்பனாவை நெருக்கிவந்து மேலண்டையும், கீழண்டையும், வடவண்டையுமாய் இறங்கி சுட்டுக்கொண்டு வழிபண்ணிக்கொண்டு அல்லா வேறினார்கள். ஆலம்பனா பேரில் இருந்தவர்கள் சண்டை பண்ணிக்கொண்டு இருந்தவாள் மிதமிஞ்சிப் போனபிறகு நவாப்கான் முதல் சிறிது செனங்கள் கோட்டை போய்ச் சேர்ந்து இங்கிலீஷ் சர்தார்கள் கூடயிருந்து கோட்டையை பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார்கள். மற்ற செனங்கள் திக்குகெட்டு அடிபட்டுப் போனதும் வலசி செனத்தோடே கூட கொள்ளை கொடுத்தார்கள்.

ஆர்க்காடு பட்டிணம் கொள்ளையாய்ப் போன வரைக்கும் மேலண்டை அஸ்தர் பேக்குகான் சண்டை கொடுத்துக்கொண்டு யிருந்

தான். ஹைதரல்லிகான் செனம் ஆர்க்காடு பட்டிணம் தமாம் பரவின பிறகு சண்டை கொடுத்துக்கொண்டு திரும்பி வந்தான். மிஞ்சிப் போனது நன்ருய்த் தெரிந்து கொண்டு கவில் பண்ணிக்கொண்டான். ஹைதரல்லிகான் ஆர்க்காடு ஆலம்பனு அல்லா பண்ணின நாழிக்கி பட்டணத்தை கவில் செண்டா போட்டார். பாணத்தார்களேயும் வீதிவீதியாய் கொத்த வால் சாவடி கிட்டவும் அனுப்பினர். கொள்ளேயிடுகிறது அத்திலே நின்றது. ராயசீ ஹைதரல்லிகான் செனம் அல்லா பண்ணதே மேல் சத்தையில்லே யென்று தம்முடைய கச்சேரி முசுத்திகள் வகையரு வோடே உட்கார்ந்தார். ஹைதரல்லிகான் மகமதல்லிக்கும் மனதான அப்பூ மம்மது சோபதரை ராயசியண்டை............ராயசி பேரில் பலவந்தங்கள் நடக்கப் போகிறது.

ஆர்க்காடு சுபா பண்ணினவன் சுவாமி காரியத்தில் கொடுமை செய்கிறவனல்ல காத்தரசமா சொல்லி அழைத்து வாங்களென்று அனுப்பி வைத்தார். அப்படியே இருவரும் தங்கள் பரட்டவணை யோடே போயி மரியாதையாயி ராயசி கிட்ட போயி பேசவேண்டியது பேசி நவாபு ஹைதரல்லிகான் கிட்ட அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஹைதரல்லிகான் பேட்டி ராயசி பண்ணிக்கொண்டார். ஹைதரல்லிகான் மரியாதையாய் உட்காரச் சொல்லி ராயசி பெருமையைச் சொன்னர். ராயசி நசர் வைத்துக்கொண்டு உட்கார்ந்தார். இருவரும் சிறிது பேச்சு பேசிக்கொண்டார்கள். நவாபு ஹைதரல்லிகான் பாதர் ராயசி பேரில் சந்தோஷமாய் தங்கதோடா பதக்கம் வஸ்திரம் கொடுத்து வாலாஜா வண்டை எப்படி யிருந்தீரோ அப்படி ஆர்க்காடு சுபா உமக்கே பாலயிருக்கிறது என்று பரயாணு பண்ணிக்கொடுத்தார்.

ஆர்க்காடு பௌவுசுதாரி மீரமகமத் சாதக்கு திட்டம் பண்ணினர். இவர்கள் ரெண்டு பேரும் ஆர்க்காடு மாலாத்து காரியம் பார்த்துக் கொண்டு யிருந்தார்கள். ஆனல் ராயசிக்கி சென்னிய மாலிய வகையருகளுக்கு மாமூல் படிக்கி விட்டு விடச்சொல்லி பெரு உத்திரவு ஹைதரல்லிகான் பண்ணிப் போட்டார். அந்தப் படியே தம்முடைய அதிகாரம் தாலூக்காத்து அமல்தார்கள் பேரிலே பண்ணிக் கொண்டிருந்தார். உத்தாரம் படிக்கி தம்முடைய கச்சேரி முசுத்திகள் வகையருவை மாமூல் படிக்கி வைத்து உலாம் கிஸ்தியார்க்கான் காணுவோம் சிபாதிராயர் கூட வைத்துக் கொண்டு இருந்தார்.

ஆர்க்காடு பட்டிணம் அதிகாரம் மீர மகமத் சாதக் பண்ணிக் கொண்டியிருந்தார். ஆவல கொண்டை நவாபு அஸன்ரசாகான் தம்

முடைய குமாரன் மகம்மது மாதிகானை ஹைதரல்லிகான்கிட்ட அனுப்பி தம்முட இடத்தை சமாளித்துக் கொண்டார். அந்த மகம்மது மோதி கானுக்கு கந்தாசாரம் மீரபகுஷி மோகல்க அல்லிகான் கூட திட்டம் பண்ணினர். அப்படியிருக்க மகம்மதல்லிகான் கும்மந்தான் வகையரு தண்டே வேலூர் பேரில் அனுப்பினர். அந்த குமந்தான் வேலூருக்குப் போயி பேடா போட்டு சமயம் பார்த்து சார்பணு பேரில் அல்லா பண்ணினர். முன்நூறு சொலதாது ஆயிரம் பார் வரைக்கும் கர்னல்வாங்கு வகையரு சர்தார்கள் இருபது பேருமிருந்தார்கள். அவர்கள் கில்லாவை பந்தோபஸ்து பண்ணிக் கொண்டுயிருந்தார்.

கில்லேதாருமிருந்தார். அமல்தார் மகம்மது அக்பர் பௌவுசுதார் அன்நூறு பேர் சிப்பந்தி செனத்தோடே சகரிலே யிருந்தான். அவாள் சிப்பந்தி செனம் சார..............நாவுலேயிருந்தார்கள். எதிரி அல்லா பண்ணும் போது பின் வாங்கிப் போனர்கள். அப்படியிருக்க மகம்மது மூராது முன்னலே அமல்தார் உத்தியோகத்திலிருந்தவர் இருபது செனத்தோடே சீவனமில்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டு யிருந்தார். அவர் சினேகிதாள் கூட வெளிப்புறப்பட்டு கிராமங்கள் பேரில் போயி தானியம் வகையருக் கொண்டு வந்து சீவனம் பண்ணிக் கொண்டுயிருந்தவர் முப்பது துப்பாக்கியோடே போயி, எதிரி அல்லா பண்ணின இடத்தில் போயிச் சண்டை பண்ணி திருப்பி விட்டார். எதிரி அப்புறம் போயிறங்கினன். அப்படியிருக்க செஞ்சியிலே மக்காளிச ஆபீஸர் ஆபீசயதல்லி கில்லேதார் ஆயிரத்து இருநூறு செனம் இருந்தவாள் கோட்டையை பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு சீமை குடிகளை அமல்தார் வகையருவை பந்து பண்ணவே காபராவாகி ராத்திரி சாரம் பண்ணினவேறி குதித்து ஓடிப் போயி விட்டார்கள்.

மாத்தாதியும் வலசைகுடிகளும் போயி விட்டார்கள். அவர்கள் ஓடிப் போயி விட்ட வேளையில் சவுக்கியிருந்தவனை ஆபீஸர் பீரங்கியில் கட்டி சுட்டுப் போட்டான். அதனலே சகல செனமும் மஹாபராயப்பட்டு போனர்கள். ஓடிப் போனவர்களிலே பெருங்காபூர் புத்திரக்கவுண்டன் மாத்தாதீரான், சந்திர நாயக்கன் இவர்கள் கிரியப்பைய்யா முகனையில் நவாபு ஹைதரல்லிகான் பேட்டி பண்ணிக் கொண்டு வஸ்திரம் வாங்கிக் கொண்டு ஹைதரல்லிகான் உத்தாரப்படிக்கி அரிதாசப்பைய்யர், சுபேதார், நூறுல ஆசார்க்கான், தசத்தாகு திரைகள், சாயாக் குதிரைகள், கந்தாசாரம் பியாதா, அரபனல்லிபியாதாக்கள், சித்திர துர்க்கம் பியாதாக்கள் வகையரு, இருபதாயிரம் செனம் செஞ்சிக் கோட்டை வாங்க வந்தவர்கள் கூட வந்தார்கள்.

ஹரிதாச............யர் தண்டோடே வந்து கோட்டை சுற்றிக் கொண்டு இருந்து கோட்டைக்குள்ளே யிருந்த சர்தார்களை மித்திர பேதம் பண்ணினார்கள். அவர்களும் சஞ்சலமாயிருந்து வாரகச்சே, அதற்கு உள்பட்டுயிருக்க குடிகளும் கூடயிருந்த படியினாலேயும் அரி தாயப்பையர் வகையரு செனம் தையிரியமாய்க் கோட்டை அல்லா வேறி வாங்கினார்கள். அந்த சேதி ஆபீஸருக்குத் தெரியாது. ஆபீ ஸர் தாசிகள் மயக்கத்திலேயிருந்தார். அல்லாவேறின பிறகு தெரிந் தது. அவர் காச கும்பினியை பத்தே தருவாசாவிலிருந்து அழைத்துக் கொண்டு ராஜ துர்கத்தின் பேரில் ஏறினார்.

கில்லோதார் வகையரு பெசபு பார் செனம் வலசை செனங்களும் ஆயிரம் செனம் வரைக்கும் ஏறி துர்க்கத்தை பந்தோபஸ்து பண்ணிக் கொண்டார். ராஜ துர்க்கத்தின் பேரிலிருந்த ஆபீஸ் வகையரு அல்லா பண்ண தினம் துர்க்கத்தின் பேரிலேரிக்கொண்டு போகும்போது பிற காலே எதிரி செனம் துரத்திக்கொண்டு வரும்போது உத்தியோக மில் லாமலிருந்த ஆஷகல்லிகான் குமாரன் குலாமல்லி கூட பத்துபேர் பாரக்கார செனம் தைரியம் பண்ணி செனங்கள் துர்க்கத்தின் பேரில் போனவாள் போக இவர்கள் துர்க்க மெத்தையில் கோவலார் சாகட்டு செங்கல்வாயிற் படிக்கதவைச் சாத்திக்கொண்டு எதிரி பேரில் சண்டை பண்ண துர்க்கத்தின் பேரிலேறினவாளும் ஓயாமல் துப்பாக்கி சுட எதிரி செனத்தில் அறுபது பேர் விழுந்து போனார்கள்.

எதிரி சனம் அந்த அத்திலே கமாகாவிலே தானே நின்று போனார்கள். துர்க்கத்தின் பேரிலேறின சர்தார்களும் செங்கல் வாசல் வரைக்கும் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டார்கள். அப்படியிருக்க மக்கா ஸீச் ஆபீஸருக்கும் கில்லாதாருக்கும் வியாசியப் பட்டது. அதன் பேரில் ஆபஸரை கில்லேதார் பாராவில் வைத்துப் போட்டார். அப்படி யிருக்க கில்லா வாங்கி எட்டு நாளானு பிறகு எதிரி கவிலின் பேரிலிறங் கினார்கள். எதிரி அரிதாஸப்பையாக் கில்லேதார் ஆபீஸர் முசத்தி சேவகர் வகையருவை ஆர்க்காட்டிற்கு ஹைதரல்லிகான் கிட்ட அனுப் பிவிட்டார். ஹைதரல்லிகான் தம்முடைய கில்லேதார் தக்கன் கோட்டை மோதீன் சாயிபு சிரான் மோதீன் சாயிபும் தையினாத்தில் முசுத்திகள் பார் கர்னாடகம் கலாஷ வகையருவை சேவக செனத்தை சேவகம் வைத்து பழயபடிக்கி செஞ்சி கில்லா தைனாத்தில் வைத்தார் கள்.

இரெண்டாயிரம் கந்தாசார செனத்தையும் வைத்தார். பெரிய கில் லேதார் துர்க்கத்திற்கு துற்கம் கில்லேதார் சவுக்கி நவீசமுஸ்பர்ப

மூவாயிரம் செனம் செஞ்சிக் கோட்டையிலிருந்தார்கள் தாலூக்காத்து களுக்கு அரிதாஸப்பையா பேஷ்கார் வைத்தார். மற்ற தண்டும் அரிதாசப்பையபரும் வந்தவாசி பேரில் போயிறங்கினர். பின்னும் சர்தார்கள் கூட தண்டு ஹைதரல்லிகான் அனுப்ப பெருமுக்கல் பேரி லேயும் இறங்கினர்கள். இந்த ரெண்டு கோட்டை பேரில் போயி சண்டை கொடுத்துக் கொண்டு யிருக்க அந்த சன்னிலே சன்னல் கூட்டு பாதர் தைய்யீம் பங்களாவிலிருந்து வந்து பார் வகையறு துருப்பு உள் பட பதினயிரம் செனம் சண்டை செனமாய் வாங்கிக் கொண்டு தோப் கான கர.........பீரங்கி முதல் வாங்கிக்கொண்டு சென்னப்பட்டிணம் விட்டு சீயபுரம் காஞ்சீபுரம் இந்த மைதானத்தில் வந்ததை அரிதாசப் பைய்ய வகையறு தண்டும், பெருமுக்கல் பேரில் போன தண்டும் ஓடி வந்து செஞ்சியில் சேர்ந்தார்கள்.

ஹைதரல்லிகான் தண்டும் வாங்கிக்கொண்டு திண்டிவனம் வந்தார். சென்னல் கூட்டு கருங்குழி வந்து புதுச்சேரி காட்டு மேட்டுமேல் இறங் கினர். ஹைதரல்லிகான் வழுதாவூர் போயிறங்கினர். அவ்விடத்தில். சண்டையாக ஹைதரல்லிகான் திருவக்கரை வந்து சேர்ந்தார். சென்னல் கூட்டு கூடலூர் போயிச் சேர்ந்தார். ஹைதரல்லிகான் திருவாதி மைதானத்திலிறங்கினர். அவ்விடத்திலிருக்கும் பொழுதும் சர்தார் களை அனுப்பி சண்டை பண்ணிக்கொண்டு ரெண்டு மாதம் இறங்கியி ருந்து கூடலூர் பேரில் சித்திலால் தண்டை வைத்துப்போட்டு தஞ்சா வூர் சீமையில் போயி கொள்ளையிட்டு சப்தி பண்ணி அவ்விடத்தில் ஹரி தாசப்பைய்யர் பௌவுசுதாரியாய் திட்டம் பண்ணி பதினயிரம் செனம் தையினத் பண்ணி போட்டு சமயபுரம் மேட்டில் போயிறங்கினர்.

அரிதாசப்பைய்யர் தஞ்சாவூர் சீமைக்காக கோட்டையிலிருந்து கொண்டு தாலூக்காத்துகளுக்கு அமல்தாரை அனுப்பி பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார். ஏழைகள் தங்கள் பிழைக்கு நிமித்தியம் வெத்திலே வகையறு தஞ்சாவூர் கோட்டைக்கிக் கொண்டு போன வாளை பிடித்து அனேகம் பேரை காதயும், மூக்கயும் அறுத்துப் போட்டார்கள். அவ் விடத்திய செனம் அரிதாசப்பைய்யர் கொடுமையினலே தத்தளித்துக் கொண்டு இருந்தார்கள்.

அப்படி யிருக்க ஹைதரல்லிகானுக்கு ஆர்க்காடு சீமையிலும், தஞ் சாவூர் சீமையிலும் தண்டம் பிடிக்கச்சொல்லி உத்திரவு பண்ணினதின் பேரில் அவர் மனிதர் கொடுமையினலே வெகு செனம் செத்து போனர் கள். விஷஷாபாத் கானவும் போனர்கள். சகல செனங்களும் தெய் வத்தை நொந்து என்னைக்கு இங்கிலீஷ் துரைகளை காண்போமோ

வென்பார்கள். அப்படி அவதிப்பட்டுக் கொண்டு கர்னாடக செனங்களிருக்க ஹைதரல்லிகான் சமயபுரத்தின் மேட்டிலேயிருந்தவர் சீரெங்கமரங்கநாயகர் கோவிலே கைப்பற்றினார். அந்தக்கோயில் ஸ்தானீகாள் வந்து ஹைதரல்லிகானையும் கண்டார்கள். அவ்விடத்தில் கொடுமை நடக்கவில்லை. ஹைதரல்லிகான் ரெங்க நாயகர் கோவில் பத்தியடைந்து பணங்களும் ஆனையும்[51] கொடுத்து பாணதார்களை தையினாத் வைத்தார். அப்படியிருக்க திருச்சிராப்பள்ளியிலிருந்து இங்கிலீஷ் பாதர் செனம் ரெண்டு பட்டாளம் பார் வெளிப்புறப்பட்டு அவ்விடத்தில் தலாவாயிருந்த குதிரைகள் பேரில் சண்டை கொடுத்து ஓட்டிவிட்டு கோட்டையில் போவார்கள்.

அப்படியிருக்கிற காலத்தில் பட்டாளம் வெளியே வந்த போது ஹைதரல்லிகான் பேதுவைத்து இருந்தவர் தண்டோடே தாமே வந்து சண்டை கொடுத்து இருதிறத்திலும் சேத மாயி பட்டாளத்தையும் அல்லா பண்ணினார். அதுவே பட்டாளம் செனம் சேதமாய்ப் போயிற்று. அப்படி ரெண்டு மாதம் அவ்விடத்திலிருக்க சென்னல் கூட்டு பாதர் தம்முடைய தண்டை வாங்கிக் கொண்டு பறங்கிப் பேட்டை வந்து சேர்ந்தார். அந்த சேதி ஹைதரல்லிகான் கேட்டு திருச்சிராப்பள்ளி பேடாவிட்டுப் போட்டு சிதம்பரம் வந்து சென்னல் தண்டையும் சுற்றிக் கொண்டார்.

சென்னல் தண்டிற்கு கும்மக்கு சமுத்திர தீரமானபடியினாலேயும் கப்பல் கூட வந்திருக்க ஹைதரல்லிகான் ரொம்பதையிரியவந்தனாயிருந்தவன் சேனைகளை அணி வகுத்து முன்னே கந்தாசாரம் பியாதாக்களை வத்து பார் தோப்கானாவை பின்னாலே பக்கமாவைத்து, குதிரைகளையும் இவர்களுக்கு கும்மக்காவைத்து மீரர் சால்லிகானை சன்னல் தண்டு குமுகளையா அவன் தண்டோடே போகச் சொல்லி பசாடியிலேயும் தென் புறமாய் டிப்பு சுல்தான் வகையறாவைப் போகச் சொல்லி பீரங்கிகளை முமசா பேரில் ஏற்றி சண்டை பண்ணினார். அதற்கு சென்னல் தம்முடைய செனத்தை கோட்டை கட்டாய்க் கட்டிக் கொண்டு நாலு பக்கமும் எதிரிக்கி செவ்வையாய்த் தானே தம்முடைய பீரங்கித் துப்பாக்கிகளை சுடாமல் படிக்கி எதிரி குண்டினாலே செனங்கள் சேதமான

51. இந்நிகழ்ச்சியால் ஐதரல்லிகான் ஜனங்களுக்குத் தாங்காத வரிகளைப் போட்டுக் கொடுமை செய்திருந்தாலும் ஸ்ரீரங்கம் முதலிய பெரிய ஹிந்துக் கோயில்களின் மீதுள்ள பெருமதிப்பால், யானைகள், பணம் முதலியவற்றைச் சீரெங்கம் கோயிலுக் குதவினமை பாராட்டற் பாலது.

லும் திருஷ்டிவைய்யாமல் எதிரி தண்டு பேரில் வர எதிரி தண்டு தணிந்து கொடுக்க ஜன்னல் கூட்டு பாதர் கொர்ப்பசாட்டு பீரங்கிகளும் துப்பாக்கிகளும் ஏக காலத்தில் எதிரி தண்டு பேரில் முனைந்து அடிக்க கப்பல் பேரிலிருந்த இங்கிலீஷ்காரரும் பீரங்கி குண்டு அடிக்க அந்தக் குண்டு மீரஸால்லிகான் பேரில் பட்டு அவன் விழுந்து போக அதன் பேரில் எதிரி செனங்கள் பின்வாங்க சென்னல் மெதித்து வர ஹைத ரல்லிகான் தம்முடைய அணி வகுத்த தண்டு சர்தார்களை மேல்விழுந்து சண்டை பண்ணச் சொல்லியனுப்பவும் அதற்கும் திரும்பி வர அதன் பேரில் கோபம் பண்ணி சின்னப்பேச்சுகள் பேச என்ன அதட்டி துரையான ஹைதரல்லிகான் சொல்லவும் தண்டு அத்திலே நில்லாமல் பின் வாங்கிப் போகிறது.

அப்படியிருக்க ஹைதரல்லிகான் இருக்க இடத்தில் சென்னல் குண்டு வந்து குதிரைக்கு காயப்படுத்த அதன் பேரில் அவ்விடத்திலி ருந்த சர்தார்கள், சாவுக்கார்கள் இனிமேல் இவ்விடத்திலிருக்கக் கூடாது என்று சொல்ல அதுவே ஹைதரல்லிகான் தம்முடைய சவாரி யோடே யிருகாத வழி வந்து யிறங்கினுர். தண்டும் கலைந்து போனது சேர்ந்தது. சென்னல் நாலு நாழி வழி துரத்திக் கொண்டு வந்து மறுபடியிருந்தயிடத்தில் போயிச் சேர்ந்தார். ஹைதரல்லிகானுக்கு சண்டையில் விழுந்த பிணத்தை எடுத்துப் போகச் சொல்லி வரதி கொடுத்தார். ஹைதரல்லிகான் தண்டு செனம் ஆயிரம் செனம் வரைக் கும் சேதமாயிற்று. அந்த சண்டை வராத சண்டையாயிருந்தது. இங் கிலீஷ் செனம் நூறு வரைக்கும் சேதமாயிருக்கும்.

இந்த சண்டையானதே ஹைதரல்லிகானுக்கு அதையிரிய மாயிற்று. அந்த சமயத்தில் ஹைதரல்லிகான் தம்முடைய தண்டு பகுஷிகள் சர்தார்களை அழைப்பித்து கோபம் பண்ணி சிறிது பேரை அடித்து, சிறிது பேரைச் சின்னப் பேச்சு பேசி, சிறிது பேர் சம்பளம் குறைத் தார். அதுவே சன்னல் தம்முடைய தண்டை வாங்கிக் கொண்டு கூடலூர் வந்து அவ்விடத்தில் பந்தோ பஸ்து பண்ணிப்போட்டு புதுச் சேரி வந்து அவ்விடத்தில் பாரிசக்காரர் எதிர்க்காமலிருக்க அவ்விடத் திலேயும் தம்முடைய செனத்தை கொஞ்சம் வைத்துப் போட்டு சென்னைப் பட்டிணம் போயிச் சேர்ந்தார். ஹைதரல்லிகான் அவ் விடத்திலேயிருந்து கூடலூர் பேரில் தலா குதிரைகளை வைத்துப் போட்டு தாம் உத்திரமல்லூர் ஏரி எதிர் வாயில் இறங்கினுர்.

அவ்விடத்தில் இருபது நாள் இறங்கியிருந்தார். டிப்பு சுல்தானை திருப்பாச்சூர் பக்கம் வைத்திருந்தார். திருப்பாச்சூர் கோட்டையும்

ஹைதரல்லிகான் டாணாவைத்து பந்தோ பஸ்து பண்ணிக் கொண்டிருந் தார். அப்படியிருக்க சென்னைப் பட்டிணத்திலிருந்து சென்னல் கூட்டு நவாபு **வாலாச பிள்ளை சயபன மூலக்பாதர்**[52] இங்கிலீஷ் தண்டோடே பதினைந்து நாளய சாமான் கொண்டு திரு..................கோட்டையை வாங்கிக் கொண்டு டிப்பு சுல்தான் பேரில் சண்டை பண்ணினார்கள். டிப்பு ஸுல்தான் பின்வாங்கி ஹைதரல்லிகானுக்கு எழுதியனுப்ப ஹைதரல்லி கான் விட்டாவிடியா உத்திரமேரூர் விட்டு காஞ்சீபுரம் போய்ச்சேர்ந்தார். அவ்விடத்தில் சோத்துப் பாளையத்தை வைத்துப் போட்டு ஹைதரல்லி கான் தமாம் தண்டோடே சென்னல் பேரில் போனார்.

அவ்விடத்தில் இரு திறத்தாருக்கும் பீரங்கி சண்டை யாயிற்று. அதில் சையபன் மூலக் குதிரைக்கிப் பட்டு சேதமாயிப் போயிற்று. அதற்கு மேல் சென்னல் கூட்டு பாதர் தம்முடைய தண்டோடே அணி வகுத்துக் கொண்டு தூறிப்போய் ஹைதரல்லிகான் தண்டு சேதமாயி அதுவே பின்வாங்கி ஆர்க்காடு போயிச் சேர்ந்தார். கந்தாசாரம் மீர் பகுஷி மோகலிச் அல்லிகான் ஹைதரல்லிகான் உத்தாரப் படிக்கி பதினாயிரம் செனம் வாங்கிக் கொண்டு உயலார் பாளையம் ராஜாம் பாளயத்தின் பேரில்ப் போயி வலசை செனங்களை கொள்ளையிட்டு அவர்களை மங்கையாய் சாச்சு பாராவைத்துக் கொண்டு பாளயக்காரரும் பிடித்துக் கொண்டு அவர்களையும் கொள்ளையிட்டு அவர்கள் பெண்டு களையும் பிடிக்கிறதாயிருக்கும் போது பாளையக்காரர் பெண்டுகள் ராஜ சேவ ராஜாதிமானஸத்தாளான படியினாலே கழுத்தை அறுத்துக் கொண்டு செத்துப் போனார்கள்.

கந்தாசாரம் மீர் பகுஷி மோகலீசஅல்லிகான் அவ்விடத்திய செனங்களை மடக்கிக் கொண்டு சேத்துப்பட்டுக் கில்லாவில் சேர்த்து சிறிது பேர்கள் கையில் தண்டம் வாங்கிக் கொண்டு காஞ்சீபுரம் தண்டில் வந்து சேர்ந்து அவன் தண்டோடே ஹைதரல்லிகான் கூட ஆர்க்காடு சேர்ந்தான். அந்த லட்சம் செனங்களிலேயும் அந்தக் காலத் தில் ஷாமத்திலேயும் லட்சம் செனம் ஏழைகள் கஞ்சியில்லாமல் செத் துப் போனார்கள். சென்னல் கூட்டு பாதர் நவாபு சயபன் மூலக் பாதர் தண்டோடே சென்னைப்பட்டிணம் போயிச் சேர்ந்தார்கள். ஹைதரல்

52. இவருடைய முழுப்பெயர் Sayful-Mulk Anwarud-Dawla Muhammad Anwar Khan Bahadur Husain Jang, Nawwab. இவர் நவாப் வாலாஜாவின் மூன்றாம் மகன்.

லிகான் ஆர்க்காடு ஆலம்பனவுக்குள்ளே வீதி திந்து கட்டி நகார்கானு வும் கட்டியிருந்தார்.

அப்படியிருக்க மறுகாலும் சென்னல் கூட்டு பாதர் வேலூருக்கு ரெஸத்து கொண்டு சோளங்கிபுரம் வழியாய் வந்தார். அந்த சேதி ஹைதரல்லிகான் கேட்டு தம்முடைய தண்டோடே போயி சென்னல் தண்டைச் சுற்றிக் கொண்டான். அவ்விடத்தில் சென்னல் தையிரிய மாய் சண்டை கொடுத்து ஹைதரல்லிகான் தண்டை தூறிக் கொண்டு ரஸத்து கூட வேலூருக்கு வடக்கே ஆத்தங்கரையண்டை யிறங்கினர். வெங்கடகிரி மனசபதார்கள் சத்திரியான் பொம்மராஜா இவர்கள் ஹைத ரல்லிகான் ஆர்க்காடு வாங்கின தெருசுவாயிருந்தவாள் யிந்த சண்டை யில் ஹைதரல்லிகான் இளைப்பானது ஏகா ஏகியாய் தங்கள் தங்களிடம் போயிச் சேர்ந்து போனார்கள். ஹைதரல்லிகான் ஆர்க்காடு வந்து இனி மேல் தம்முடைய கவை சாயமாட்டாது என்று மனதிலே எண்ணி ஆலம்பனவை யிடித்து அவ்விடத்திலிருக்கிற சாவக்காரர் பூக்காரர் வர்த்தகர் வகையறுவை சம்சாரத்தோடே சீரெங்கப்பட்டிணத்தண்டே சகர கஞ்சா மென்று பேட்டை கட்டி வைத்து அதில் கொண்டு போயிச் சேர்த்துப் போடச் சொல்லி உத்திரவு பண்ணின படி சேர்த்துப் போட்டார்கள்.

சேத்துப் பட்டு வகையறு சிறிது கோட்டையைப் பிடித்துப் போட்டார். ஹைதரல்லிகான் திண்டிவனம் வந்து யிறங்கிக் கொண்டு பெருமுக்கல் வந்த வாசி பேரில் இறங்கி சண்டை கொடுத்து பெரு முக்கல் வாங்கி தம்முடைய டாணு போட்டார். அப்படியிருக்க சென்னல் தண்டு பட்டிணம் விட்டுப் புறப்பட்டது கேட்டு காஞ்சிபுரம் வரைக்கும் போயி ஆர்க்காடு போயிச் சேர்ந்தார். சென்னல் வந்து காஞ்சிபுரத்தி ற்குக் கிழக்கே வந்து பட்டிணம் போயிவிட்டார்.

அதற்கும் பிறகு இங்கலீஷ் பாதர் தண்டு கரை துறை வழியாய் வருகிறது என்று ஆர்க்காடு விட்டு விழுப்புரம் வரைக்கும் செஞ்சி வழியாய் வந்து போயி மறுகாலும் திரும்பி ஆர்க்காடு போயிச் சேர்ந் தார். சன்னல் கூட்டு பாதர் வேலூருக்குப் போயி கர்னல்லாந்த வகையறு செனத்துக்குறசத்து செத்துப் போட்டார். வேலூரில் மகம் மது முராது சேவகமில்லாமல் இருந்தவன் இங்கரேசு கையற்காலிலே யிருந்து கொண்டு ஹைதரல்லிகான் சர்தார் மகம்மதல்லி கும்மந்தான் மொரசாபோட்டு சண்டை கொடுக்கும் போதும் தன் சொய செனத் தோடே கர்னல் கொடுத்த செனமும் வாங்கிக் கொண்டு முரசா பேரில் தூறி சண்டை கொடுக்க கர்னல் கோட்டை புருசு பேரிலிருந்து பீரங்கி குண்டு அடிக்க முரஜாவில் இருந்த வாள் பின்வாங்கிப் போனார்கள்.

கர்னல் உத்தாரப் படிக்கி மகம்மது அக்பர் பௌவுசுதார் நவாபு வாலா ஜாமனி தன் அன்நூறு செனம் வைத்துக் கொண்டு இருந்தவன் அவன் முரசாவில் அடிபட்டு வந்து விட்டான்.

கர்னல் உத்தியோகமில்லாமலிருக்கிற மகம்மது முராது சேவகத் தன்மையைப் பார்த்து நூறு துப்பாக்கியும் மருந்துகுண்டும் கொடுத்து இருக்க அது வாங்கிக் கொண்டு வெளிப் புறப்பட்டு ஹைதரல்லிகான் செப்தி பண்ணியிருக்கிற கிராமங்களில் போயி குழியெடுத்துக்கொண்டு வந்து ஜீவனம் பண்ண அதனாலே கர்னல் தெரிந்து கொண்டு சக்கிராவி லிருந்து நெல்லும் கொடுத்துக் கொண்டு வர அப்படிப் பட்டவன் சுய செனங்கள் சிவபயமில்லாமல் முராஜாவில்ப் போயி எதிரியைத்துரத்தின னென்றும் ஷாரப்பனு அல்லா பிராயிச்சானென்றும் இவன் கும்பினி கயர்காவென்று மூன்றுக்கும் பினிபார் கொடுத்து எதிரி தண்டு போயி மூசாமய்யன் பள்ளிக் கொண்டையில் இறங்கியிருக்கிறவன் பேரில் அனுப்ப மகம்மது முராது தன் செனத்தோடே பார் செனமும் வாங்கி கொண்டு பொம்முசரமய்யன் பேரில் போயிச் சண்டை பண்ணி அவனை ஓட்டி விட்டு அவ்விடத்தில் அகப்பட்ட சாமானை வேலூருக்கு அனுப்பி குடியாத்தம் வாங்கிக் கொண்டு அந்தக் கோட்டையில் தம்முடைய மகனை டாணு வைத்து சாத்துக் கெடைக்குப் போயி ஷார்ப்பன்னு அல்லா பண்ணி சாத்துக் கடை வாங்கி தூர்க்கத்தின் பேரில் எதிரி செனமிருக்க அவ்விடத்தில் அமல் பண்ணிக் கொண்டு இருந்து அப் பால் எதிரி பலவந்தனன போது அவாளோடே சண்டை பண்ணிக் கொண்டு வேலூர் வந்து மறுகாலும் கர்னல் கூட்டு கைலாசக்கடை போயி அவ்விடத்தில் சகரிலே சண்டை கொடுத்து கெத்து வாங்கின போது தன் மருமகன் குண்டு பட்டு செத்தும் தையிரியத்தோடே வேலூர் வந்து இங்கரேசு சொல் தாதுகளுக்கு ஆடு தீனிக்கி இல்லாமல் கஷ்டப்பட கர்னல் உத்தாரத்தின் பேரில் குன்னத்தூர் மட்டுக்கும் வந்து ஆடு கொள்ளை பண்ணிக் கொண்டு வந்து சொல்தாதுகளுக்கு திரத்தி பண்ண ஹைதரல்லிகான் தன்னண்டை வந்தால் ஜாகீர் கொடு த்து அதிக சம்பளம் பண்ணி தண்டிற்கு சர்தாரி கொடுக்கிறேன் இங் கரீச் கிட்டேயிருந்தால் உமக்கு என்ன நடப்பிக்கப் போகிறார்கள் நீரும் துலுக்கன் நம்மண்டை அகத்தியம் வரவும். உம்முடைய சுதர் அறிந்து நடப்பிக்கிறோமென்று எழுதினார்.

அது மகம்மது முராதுக்கு வந்தது. அந்தக்காகிதத்தை மகம்மது முராது பார்த்துக் கொண்டு கர்னல் கையில் கொடுத்தான், கர்னல் லாங்கு பார்த்துக் கொண்டு உமக்கு ஹைதரல்லிகான் என்ன எழுதி னாலும் நீர் அப்படிப் பட்டகாரியம் நடக்கமாட்டீர். உமக்கு கும்பினி துரைகள் செம்மையாய் நடப்பிப்பார்களென்று சொன்னார்.

ஹைதரல்லிகான் இந்தப் படியே மகம்மது அக்பர் பௌவுசுதாருக்கு எழுதினார். அதற்கு பதில் காகித மெழுதினது மகம்மது மூராது பாராக்காரர் கையில் அகப்பட்டது. அத்தை கர்னல் கையில் கொடுத்தார்கள். அது பார்த்துக் கொண்டு முகம்மது அக்பரை விலங்கிலே போட்டு பாராவைத்தார். அப்படியிருக்கச் சன்னல் வேலூர்க் கோட்டைக்குள்ளே வந்தார். கர்னலும் பேட்டி பண்ணிக் கொண்டு அவ்விடத்தில் நடந்த சேதிகளெல்லாம் சொல்லி மகம்மது மூராது கையர் காவென்று சென்னல் கூட்டுக்குச் சொன்னார். வேலூர் சமீபத்தில் சேபாக்கம் கிராமத்தில் அம்பது காணி நஞ்சை நிலம் பயிராயிருந்தது. சென்னல் கர்னலைக் கேட்டார். அது மகம்மது மூராது பயிரென்று சொன்னார். அதுவே அந்த அம்பது காணி நஞ்சை நிலத்திற்கும் மானிய சன்னத் பண்ணிக் கொடுத்து நவாபு வாலாஜா பாதருக்கு எழுதியனுப்பி அவர் பரமானுவும் பண்ணிக்கொடுத்தார்.

வேலூர் பௌவுசுதாரியும் நவாப் சாயபு மகம்மது மூராதுக்குப் பண்ணிக் கொடுத்தார். ஆனால், இங்கிலீஷ் துரைகள் கும்பினி காரியத்தில் யாதாமொருவர் கஷ்டப் பட்டாலும், நம்பினாலும் கடைத்தேறிப் போவார்கள். இந்த வாரிக்கை காரணம் தன்னுடைய வமிசம் கடைத்தேறும் பொருட்டால் அவர்களுடைய பெருமையைக் கொண்டாடி பூமியுள்ளவரைக்கும் பேரியிருக்கு மென்று இந்தக் கதை சொன்னது. அப்பால் சென்னல் சென்னப் பட்டிணம் போயிச்சேர்ந்தார். மறுகாலும் வந்து போனார். சென்னைப் பட்டிணத்தில் சென்னல் கூட்டு சென சதாகூஉ பசலி சரீரம் பக்குவமில்லாமல் இருந்து கெதியை அடைந்தார். நவாபு ஹைதரல்லிகான் ஆர்க்காட்டிலிருக்க தஞ்சாவூரிலே யிருந்து ரெண்டாயிரம் செனம் இங்கிலீஷ் சர்தார்கள் சொல்தாதுகள் பட்டாளம் பார் அவ்விடத்திய கர்னலுத்தாரப் படிக்கி பந்த மங்கலம் கோட்டையிலிருக்க அது ஹைதரல்லிகான் அவ்விடத்திய பௌவுசுதாராலே தெரிந்து கொண்டு டிப்பு சுல்தான் மீரகமருத்திகானை தண்டு கூட்டி அனுப்பினார்.

அவர்கள் போயிச் சண்டை பண்ணி அல்லா பண்ணியிருக்கிறதிலும் செத்துப் போக இங்கிலீஷ் சர்தார்கள் முதல் அகப்பட்டவாள் ஆயிரம் செனம் வரைக்கும் கொண்டுவந்து செஞ்சியிலிறங்கி ஆர்க்காட்டுக்குக் கொண்டு போயி அவ்விடத்திலிருந்து ஹைதரல்லிகான் இங்கிலீஷ் துரைகள் சுல்தாதை சீரெங்கப்பட்டிணம் மாற்றினார்.

ஹைதரல்லிகான் பாராஜாக்களாகிலும் அவர்கள் செனங்களாகிலும் அகப்பட்டால் சவுக்கிய மாயி............கினதில்லை.

ஹைதரல்லிகான் மனிதர் சர்தார்கள் சுயசெனங்கள் இங்கிலீஷ் துரைகள் வசம் அகப்பட்டால் சவுக்கியமாய் வைப்பார்கள். அப்படி யிருக்க இங்கிலீஷ் துரைகள் ஹைதரல்லிகான் ஆர்க்காடு சீமையிலிருக்க ஆலோசனை பண்ணி சென்னல் இஷ்டோட்டு வகையறுவை கவுடியால் பந்தர் தலசேரி பீதனூர் பக்சம் ஹைதரல்லிகான் சீமை பேரிலனுப் பினர். அந்த சன்னல் தலசேரி கெவுடியால் பந்தர் பீதனூர் வாங்கிக் கொண்டார். அது ஹைதரல்லிகான் தெரிந்து கொண்டு டிப்புசுல்தான் கூட அதிக தண்டு கூட்டியனுப்பினர். டிப்புசுல்தான் போயி பீதனூர் வாங்கிக் கொண்டு கௌடியால் பந்தர் பேரில் பேடா போட்டு சண்டை பண்ணிக் கொண்டுயிருந்தான். ஹைதரல்லிகான் சென்னைப்பட்டிணத் தின் பேரில் போக வேணுமென்று பேஷ்கானு காவேரிப் பாக்கம் போயி ஜெண்டா போட்டான்.

---

18. திப்புசுல்தானும் கர்னுடகமும்

ஜெண்டா ஒடிந்து போயிற்று அதுவே ஹைதரல்லிகான் திரு வல்லத்து ஆற்றண்டை போயிறங்கினர். அவ்விடத்தில் முதுகில் கட்டியும் வந்தது. அதுவே மூலமாயி கஷ்டபடச்சே தம்முடைய இளைய மகன் கரிம் சாயபுவிற்கு தண்டு மீரபகுஷி உத்தியோகம் கொடுத்தார்கள். கரிம் சாயபு தண்டு வரதி தன் வசம் பண்ணிக்கொண்டு யிருக்க ஆயிரத்து நூற்று தொன்னூற்றிரண்டு சித்தாகூடுஉ பசலி ஹைதரல்லிகான்[53] விழுந்து போனர். அவர் மகன் கரிம் சாயபு தண்டு தன் வசமாய் வைத்துக் கொண்டு தமயன் திப்பு சுல்தானுக்கு தகப்பன் விழுந்து போனது எழுதியனுப்ப டிப்புசுல்தான் அவ்விடத்திலே தண்டு வைத்துபோட்டு அதிசீக்கிரமாய் திருவலத்தண்டே வந்தார். ஆர்க்காடு சுபா சோகிப் பண்டிதரும் போயிக்கண்டார்.

---

53. இந்தக் கையெழுத்துப் பிரதியில் ஐதர் அலி 1192—ஆம் பசலியில் விழுந்து போனர் என்று கூறும். கேம்பிரிஜ் இந்திய வாலாறு ஐந்தாம் தொகுதி 286--ஆம் பக்கத்தில் 1782 டிசம்பர் மாதம் என்று குறிக்கின்றது. இவர்தம் இரண்டாம மகன் கரிம் சாயபு என்பவன.

அவ்விடத்திலிருந்து அல்லியா பாத் கிட்ட வந்துயிறங்கி தண்டுக்குள்ளே போக யோசனை பண்ணி தம்பிக்கி எழுதியனுப்பி வைத்தார். அதுவே கரிம் சாயபு நூறு குதிரையோடே டிப்பு சுல்தானண்டை வந்து ஆர்க்காடு சுபா வாங்கி பந்தோபஸ்து பண்ண வந்த தகப்பன் விழுந்து போன துக்கத்தைச் சொன்னார். அது கேட்டு கரிம் சாயபுவிற்கு காத்தரசமா சொல்லி திப்புசுல்தான் தண்டே போயி பட்டத்திலுட்கார்ந்து நசர் வாங்கிக் கொண்டு தண்டே பந்தோபஸ்து பண்ணி கொண்டார். ஆர்க்காட்டு சீமை கேடை இல்லாவும் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு ஆர்க்காடு சீமைக்கி சயத்த சாயிபு என்கிற மீரசமாயனுத்தி கானே பௌவுசுதாரியாய் திட்டம் பண்ணி அவர் கூட கந்தா சராம் மீர................மகமத்....................றத்திகானுக்கும் பார் மீரபகுஷி பத்ரு சமாகானுக்கும் சாயாமீர்பகுஷி சலாபத்கானுக்கும் ஆஷம் பகுஷி தலேதில் கானுக்கும் மாலாத்துக்கு சோகிப் பண்டிதரும் தோஷேகான சீனிவாசராயர் வகையறு முசத்திகள் பன்னீராயிரம் குதிரை, அய்யாயிரம்பார், அய்யாயிரம் ஆஷான் செனம், முப்பதாயிரம் கந்தாசாரம் தோப்கான கலாஷி காமாட்டி வகையறுக்களையும் திட்டம் பண்ணி சகல வரத்திகளும் எசமானத்துவம் மீர் முய்னுத்திகான் அந்தப் படிக்கி திப்புசுல்தான் வைத்துப் போட்டு தமாம் தண்டோடே திப்புசுல்தான் கெவுடியால் பந்தர் போயிச் சேர்ந்தார்.

அவ்விடத்தில் இங்கிலீஷ் பேரில் பேடா போட்டுக் கொண்டு தாம் பாதுஷா வென்று பெயர் வைத்துக் கொண்டு விராகன், ரூபா, பணம், காசு தம்முடைய பேரினலே **சிக்கா** முத்திரை போட்டு வைத்தார். அந்த சிகா பணத்தில் கொஞ்சம் நவாபு நிஜாமத்தௌலா முதல் ராஜாக்களுக்கும் நவாபு வாலாஜாபாதர், இங்கிலீஷ் பாதர் இவர்களுக்கும் அனுப்பினர்.

தம்முடைய பௌவுசுதார் மொய்னுத்தீன்கான் முதல் பௌஷிகளுக்கும் அனுப்பினர். அப்படியிருக்க ஆர்க்காடு சீமையில் டிப்புசுல்தான் பௌவுசுதார் தண்டோடே கூடயிருக்க இங்கிலீஷ் பாதர் தண்டு கருவூர் பக்கம் திருச்சிராப்பள்ளியிலிருந்து போனதாயி பௌவுசுதார் கேட்டு இவ்விடத்தில் பந்தோபஸ்து பண்ணிப் போட்டு போனர். முன்னலே நவாபு ஹைதரல்லிகான் சீவனேடே ஆர்க்காட்டிலிருக்கிற போது இங்கிலீஷ் தண்டு சென்னைப்பட்டணத்திலிருக்கும் போது புதுச்சேரி, பந்தர், பராஷி சண்டரால் நாலாயிரம் சுல்தாதுகள் கூட கப்பல் விட்டுயிறங்கினர்கள். அவர்கள் வக்கீல் முசேபேமாம் என்பவர் ஹைதர்...............ன் தங்க................அனுகூலமாகும் பொழுது ஆர்க்காட்டிற்குப் போயித் தங்கள் தண்டோடே சேவகம் அமர்ந்தார்கள்.

அந்த பாரிசதண்டு சண்டாளல் முதல் செஞ்சிக்கி வந்து பத்து மோகாம் பண்ணி ஹைதரல்லிகான் தண்டோடே சேர்ந்து போனார்கள். பாரிசதண்டிற்கு ஹைதரல்லிகான் சகலமானதுகள் தேவையானது மனிதரை வைத்துக் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்களும் கூடத்தானே இருக்க திப்புசுல்தான் மீரமுய்னுத்திகான் கூட தானே இருக்கச் சொல்லி திட்டம் பண்ணிப் போன பாரிசதண்டும் பௌவுசுதார் கூடயிருக்க அவர்கள் கப்பல் விட்டு புதுச்சேரி யிறங்காது இங்கிலீஷ் பாதர் கூடலூரிலேயிறங்கி அவ்விடத்திலே தங்கள் டாணு வைத்திருந்த தாவிலே போயிச் சேர்ந்தார்கள். அந்நேரம் முசேபூசி விலாயத்துப் பரிசிலேயிருந்து வந்து துறையாய் கூடலூரிலேயிருந்தார் அப்படியிருக்க மீர மொய்நுத்திகான் கருவூர் பக்கம் போனவர் அவ்விடத்திலே கராஷன்கான் தஸ்தாவோடே கூட கொஞ்ச செனம் வைத்து விட்டு சென சதாகூ௰௩ பசலி ஆடிமாதம் திருவதி வந்து சேர்ந்தார்.

பாரிச தண்டுக்கு சகலமான சாமானும் முன் திட்டப்படிக்கி அரிசி முதல் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அப்படியிருக்க சென்னைப் பட்டிணத்திற்கு விலாயத்து ஈருபுலே இருந்து பரங்கஸ்தான பாதுஷா வண்டை யிருந்த லாட்டு சாரிசமக்கா ரீட்டியன் பாதர் வந்து சேர்ந்தார். ஆர்க்காடு சீமையில் ஹைதரல்லிகான் தண்டு வரவே நவாபு வாலாஜா பாதர், இங்கிலீஷ் பாதர் கும்பினிக்கி சீமை எழுதிக்கொடுத்தார். ஆன படியினாலே இங்கிலீஷ் ஆமீல்களும் ஆர்க்காடு சீமையில் கொஞ்சம் சப்தி பண்ணியிருப்பார்கள். லாட்டு பாதர் சென்னல் இஷ்டோட்டு சர்னல் பயாச இவர்கள் கூட இங்கிலீஷ் தண்டோடே கூடலூர் வாங்கச் சொல்லி அனுப்பினார். சென்னல் தண்டோடே வருகிறது பௌவுசுதார் கேட்டு தம்முடைய தண்டோடே திருப்பாப்புலியூர், மஞ்சக்குப்பம் சமீபத்தில் இறங்கினார்.

சென்னல் தண்டு திருவந்தி புரத்திற்கு மேற்காலே போயி கூடலூருக்குத் தென்னண்டை போயிறங்கினார். தண்டெலாம் வறச்சேசுலுத்தான் பௌவுசுதார் தண்டோடே வளைக்கப் போனார். சென்னல் தண்டு எலாம் செனங்கள் எதிரி செனங்கள் கிட்ட வந்தாலும், அவர்கள் பக்கம் திருஷ்டிவைய்யாமல் போனார்கள். பாரச முசேபூசி தண்டும் மஞ்சக்குப்பத்திலிறங்கி யிருந்தவர்கள் கூடலூர் போயிச் சேர்ந்து பத்திரி கட்டி பீரங்கி ஏற்றி சேகரம் பண்ணிக்கொண்டார்கள். மீர மொய்நுத்திகான் முசேபூசி வசம் அய்யாரம் பார், அய்யாயிரம் ஆஷாம், இருபத்தைந்து பீரங்கி, காமாட்டி, கலாஷி, கொலந்தாசுகள், கந்தாசாரம்...

.........க்கள் கூட இருபத்தையாயிரம் செனம் விழப்பண்ணத் தன்மை இங்கலீஷ் தண்டிற்கு மேலண்டை போயிறங்கினர்.

அப்படியிருக்க சென்னல் கு............பேரில் போயி பாரிச தண்டுடனே சண்டைக்கு ஆரம்பம் பண்ணினர். பௌவுசுதார் தண்டு சுத............குதிரைகள் சென்னல் தண்டை சுற்றிக் கொண்டார்கள். சென்னல் பாதர் குதிரை தண்டிற்கும் பட்டாளத்தை வைத்து கிட்ட சேர வொட்டாமல் அடித்துக்கொண்டு பாரிச தண்டு பேரிலேயும் கூடலூர் கோட்டை பேரிலேயும் மெரித்துச் சண்டை பண்ண இருதிறத்தாரும் வெள்ளைக்காரர் ஆனபடியினலே அதிகமாய் பீரங்கி துப்பாக்கி சண்டைபண்ணி சனின் சண்டையும் பண்ணிக்கொண்டுயிருக்க பாரிச தண்டு பின் வாங்கி கவில் பண்ணிக்கொண்டார்கள். மீர மொய்நுத்திகான் பார் வகையரு தண்டு பீரங்கிகளை விட்டு திக்குக் கெட்டு செனங்கள் சிதறி ஆர்க்காடு வரைக்கும் பரவிப் போனார்கள்.

மீர மொய்னுத்திகான் குதிரைத் தண்டோடே பின்வாங்கி அவ்விடத்திலிருந்து வந்து அவ்விடத்திலிருந்து திருவதி வந்து சேர்ந்தார். பார் ஆஷாம் பகுஷி வகையரு பாரிச தண்டுகளுக்கு கும்மக்குப் போனவாளும் பௌவுசுதாரோடே வந்து சேர்ந்தார்கள். கூடலூர் இங்கிலீஷ் சென்னல் சப்தி பண்ணி டாணு வைத்துக் கொண்டார். பாரிசக்காரருக்குப் புதுச்சேரி விட்டு விட்டார்கள். சென்னல் கூடலூரிலிருந்து சென்னப் பட்டிணம் போயி லாட்டிற்கும் சல துறைகள் யோசனை பண்ணி சென்னல் கூட பதினயிரம் செனம் சண்டை சாமான் சேகரம் பண்ணிக்கொண்டு தலை சேரி, கௌடியால் பந்தர் பக்கம் தண்ணி பேரில் அனுப்பினர்கள்.

கூடலூரிலேயும் சென்னைப்பட்டணத்தில் திருச்சிராப்பள்ளி வகையருவிலேயும் பதினயிரம் பார் சுல்தாது கூட துருப்பு இருந்தார்கள். மீர முயுனுத்திகான் விழுப்புரம் வந்து அவ்விடத்திலிருந்து ரட்டணை ஆலத்திராமம்............த்தூர் ஆதண்டை வந்து இறங்கினர். சென்னல் தண்டு கூடலூர் பேரில் வரும் பொழுது பெருமுக்கல் வாங்கி டாணு பார் ஆப்பீஸரை வைத்திருந்தவர்களில் பெருமுக்கலிலேயிருந்து வெளியே வரும் பொழுது மீரமொய்னுத்தீன்கான் குதிரைக்காரர் போனர்கள். அவர்கள் சமீபத்தில வறச்சே இங்கலீஷ் மனிதர் வாட்டு மக்காரிட்டியன்[54] பாதர் துரைகள் திப்புசுல்தானுடே கவில் பண்ணப்

54. Lord Macartney என்பவர் 1781-1785ஆம் ஆண்டுகள் வரையில் சென்னைக் கவர்னராயிருந்தவர். C. S. ஸ்ரீநிவாஸாசாரியார் History of Madras பக்கம் 189 பார்க்க.

போனுர்கள். எங்கள் ஆபீஸருக்கு உத்திரம் வந்துயிருக்கிறது. திப்பு சுல்தான் பௌவுசுதார் சேனங்கள் பேரில் கத்தியெடுக்கத் தேவையில்லே. மீரமுய்னுத்திகானண்டை வக்கீலே அனுப்பி அவர்கள் மனேபாவ மறியுமென்று வந்திருக்கிறது.

ஆபீஸரும் மனிதர்களே அனுப்புவாரென்று சொன்னுர்கள். அந்த சேதி வந்து சொன்னுர்கள். அதனுலே பௌவுசுதார் சந்தோஷப்பட்டார். அப்படியிருக்க ஒரு அர்க்காராவும் ஆறுபார் சேனமும் பெருமுக்கல் ஆபீஸர் அனுப்பினுர். அவர்களே பௌவுசுதார் தவாலாக் குதிரைக்காரர் பௌவுசுதாரண்டை கொண்டு வந்து விட்டார்கள். பௌவுசுதாரோடே அரக்காரா சொன்னது: சென்னேப்பட்டிணத்தில் லாட்டு வர டிப்புசுல்தானேடே கவில் பண்ணினதாயிருக்கிறுர். நீங்கள் வக்கீல்களே பட்டணத்திற்கு அனுப்பினுல் கவிலாகுமென்று சொன்னுர்கள். இந்தப்படி எங்கள் ஆபீஸர் உத்திரவு பண்ணினுரென்று சொன்னதற்கும் பேரில் மீரமொய்னுத்திகான் சந்தோஷப்பட்டு அருக்காரா வகையருக்களுக்கு இனும் கொடுத்து அனுப்பி அப்பாசி ராம்ரிஸாவா சாயாக்காரரையும், சீனுவாசாரியர் தோஷேகானு முசத்தியையும், சென்னேப்பட்டிணத்திற்கு அனுப்பினுர்.

அவர்கள் போயி லாட்டு மக்காரட்டியன் பாதரைக் கண்டு சமாதானம் பண்ணிக்கொண்டு சட்டரேல் சின்னதுரையையும் மூன்று கும்பினி இருபது பேர் சர்தாரையும் அழைத்துக்கொண்டு ஆரணி, குன்னத்தூர் மேட்டில் பௌவுசுதார் தண்டிற்கு அகாடியிறங்கினுர்கள். சட்டரேல் துரையும் தண்டு பேசிக்கொண்டு மரியாதை நடப்பித்துக்கொண்டு பதினுயிரம் ரூபாய் வரைக்கும் இனுங்களும் நடப்பித்து சட்டரையிலும் பகுஷிகளுக்கு இருபதாயிரம் ரூபாய் மரியாதை பண்ணி சந்தோஷமாயிருக்க சென சதாகூம..........து பசலி கார்த்திகை மாதம் சட்டரேல் துரை பௌவுசுதாரோடே மேற்கே கொண்டு போகக்கூடயிருதிறத் தண்டு பயணமாயி கலசபாக்கும் போயிச் சேர்ந்தது.

அவ்விடத்திலே பௌவுசுதாரை விட்டு சட்டரேல் துரை கொடியால் பந்தருக்கு திப்பு சுல்தானண்டை போனுர். ஆர்க்காடு சீமையில் இது முதல் கொண்டு சேத்துப்பட்டு வகையரு எவ்விடத்தில் சப்தி பண்ணினுர்களோ அவ்விடத்தில் இங்கிலீஷ் அமல் நடக்கும். இருதிறத்திலேயும் பகையில்லே. அப்படியிருக்க சட்டரேல் துரையும் டிப்பு சுல்தானும் சமாதானமாயி இங்கிலீஷ் துரைகள், சொல்தாதுகள் டிப்பு சுல்தான் படாவிலே அகப்பட்டவரையும் நவாபு அப்துல்லாப்களேயும் அழைத்துக்கொண்டு கௌடியால் பந்தர் டிப்புவிற்கு விட்டு விட்டு ஆர்க்

காடு சீமை இங்கிலீஷ் வசம் பண்ணிக்கொண்டு மீர மொய்நுத்தீன் கானை வந்து விடச்சொல்லி டிப்பு சுல்தான் தாக்கீது அனுப்பிவிட்டு சென்னைப் பட்டிணம் வந்து சேர்ந்தார். சென மசகூரிலே சித்திரை மாதம் மீர மொய்நுத்தீன்கான் பௌவுசுதார் கர்னாடகம் கில்லா சுக்கிரா காலி பண்ணி சுக்கிராலே சில்வு பண்ணிப் போட்டு பீரங்கிகளை தங்கள் தேசத்துக்கு அனுப்பி ஆர்க்காடு சீமை செனங்கள் அமல்தார் முதல் சேவகம் பண்ணினவர்களையும் அவர்கள் பெண்டுகள் முதல் அழைத்துக் கொண்டு பெங்களூர் போயிச் சேர்ந்தார்.

நவாபு ஹைதரல்லிகான் ஆர்க்காடு சீமைக்கு வந்த நாள் முதல் ஒழிந்த நாள் வரைக்கும் நாற்பத்தைந்து மாசத்தில் குடிகள் அன்ன மில்லாமல் இறந்து போனது இருபது லட்சம் சென மிருக்கும். அவர் களைக் கொள்ளையிட்டதும், தண்டங்கள் பிடித்ததும், அயவசும் பேரில் வசூல் பண்ணினதும், சர்க்கார் பீரங்கிகள் கைக்கொண்டதும், ரமாரமி பத்துகோடி ரூபாயிருக்கும். ஆர்க்காடு சீமை செனங்கள் பஞ்சை யானபடியினாலே ஹைதரல்லிகான் உபத்திரத்தில் பட்டது. தெய் வத்தை நொந்து கொண்டு இருந்தது.

தெய்வமே, என்றைக்கு இங்கிலீஷ் தர்ம துரைகளைக் காண்பது என்று மனக் கோரி கவிகபண்ணிக் கொண்டிருக்க சித்திரை மாதம் மூ ரெண்டு ஆபீஸரும் ரெண்டு கும்பினி மாரும் செஞ்சியில் வந்து யிறங்க வேதாயில்லசு கண்ணு தடுமாறி தாயைக் கண்டாப்போலே வந்து ஆபீ ஸர்கூடாரத்தைச் சுற்றிக் கொண்டார்கள். அந்த ஆபீஸர் சகலமான கிரேஷத்தாளுக்கும் கும்முக்கு மூடி கொடுக்க, தவாரிக்கைக் காரனுக்கு பார்த்துக் கொடுக்க, தெய்வப் பிரசாதமென்று தலைமேல் கொண்டார் கள். அது முதல் இங்கலீஷ் ஆபீஸர்கள், கர்னாடகம் கில்லா சப்தி பண்ணிக் கொண்டார்கள். ஆமில்கள் போயி தாலூக்காத்து சப்தி பண்ணினார்கள். ஆர்க்காடு சீமை மாத்திரம் தடுமாறியிருந்ததற்கு மூன்று மிட்டாவாய் திட்டம் பண்ணினார்கள்.

அப்படி ஆர்க்காடு மூதல் கர்னாடகம் அமல் இங்கிலீஷ் பாதுஷா கும்பினிக்கி சென சதாகூசு பசலி வரைக்கும் நடந்தது. அப்பால் இங்கிலீஷ் பாதுஷா உத்தாரத்தின் பேரில் லாட்டு பாதர் கர்னாடக...... மல்களை மாமூல் படிக்கி நவாபு வாலாஜா பாதர் வசம் விட்டுப் போட்டு தேலீஷ் துரைக்கு கவர்னர் சென்னைப் பட்டிணத்திற்கு திட்டம் டண் ணிப் போட்டு விலாயத்து இருபதேசத்திற்குப் போயி விட்டார். நவாபு வாலாஜா தம்முடைய முரசான கர்னாடகம் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டார். தீவான்கிரி அமீருலுமாரா நவாப் பாதர் வசம்

பண்ணினர். அமீருனுமாராபாதர் தமாம் தாலூக்காத்துக்களுக்கு அமீல்களை அனுப்பி ஜப்தி பண்ணி இங்கிலீஷ் பாதர் கும்பினிக்கி கிஸ்திப்படிக்கி பணம் திட்டப்படிக்கிச் செலுத்திக் கொண்டு நவாபு வாலா ஜாபாதர் காணிக்கை வகையறுவிற்கும் திட்டப்படிக்கி பணம் கொடுத்து கொண்டு விவகாரம் எசத்தியாதியை பண்ணிக் கொண்டு வந்து சென சதாகூ௰அ பசலி விழுந்து போனர்.

நவாபு வாலாஜாபாதர் விழுந்து போன பிறகு பிள்ளை பெரிய சாயபு சாதா உமந்துல உமர்பாதர் கூட வைத்துக் கொண்டு தாமே சென சதாகூ௰கூ பசலி வரைக்கும் பார்த்துக் கொண்டு வந்தார். அப்படியிருக்க விலாயத்திலிருந்து சென்னை..............டம் போச வந்து சென்னைப்பட்டிணத்திலிருந்த தண்டும் பங்காளிகளையும் அழைப்பித்து சகல செனங்கள் சண்டைக்கி யோக்கியமான துரப்பார் வகையறு இருபதாயிரம் செனம் சேர்த்துக் கொண்டு திருவண்ணாமலை வழியாய் திருச்சிராப்பள்ளிக்கிப் போய் அவ்விடத்திலிருந்து டிப்புசுல்தான் பேரில் பாலக்காட்டுக்குப் போயிச் சேர்ந்தார். டிப்புசுல்தான் தாமே பாதுஷாவாய் துர்க்கபாதுஷாக்களுக்குக் காகிதங்கள் தாம் கர்னடக பாதுஷாவென்று எழுதியனுப்பி, உச்சித வஸ்துக்களும் அனுப்பி, அவர்களும் புதிதாயி, கர்னடக பாதுஷாவா எழுதியனுப்பினதற்கு பதில் அனுப்பினர். மேல் ஆர்க்காடு சீமை, மலையாளம் சீமை, மனிதரைப்பிடித்து கொண்டு போனவர்களையும் பின்னும் துலுக்குப் பண்ணி அகமதியென்றும், அஸதுல்லாவென்றும் செலாக்களே திட்டம் பண்ணிஅவர்களுக்கு கவாயத்து வகையறு கத்துக் கொடுத்து தமக்கு நலமென்று பன்னீராயிரம் செனங்களைச் சேர்த்து ஆயுதங்கள் சடுத்து வைத்துக் கொண்டார்.

ஆனல் துலுக்கமதத்தைக் கோரி யற்ற மதத்தை நிஷித்தமாய் நடப்பித்துக் கொண்டு சிறிது சர்தார்களை மனக்கலக்கம் பண்ணி கொன்று போட்டார். சகலமான பேரும் பயத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படியும் இருக்க, நாஞ்சிநாடு, மலையாளம் வாங்க வேணுமென்று குடகுதேசம் வாங்கி அவ்விடத்தில் டாணு போட்டு ராமராஜா பேரில் போயி அடிபட்டு வந்துயிருக்கிற சமயத்தில் இங்கிலீஷ் தண்டு பாலக்காட்டுப் பக்கம் வரவே சென சதகூா பசலி ஆர்க்காடு சீமையைச் கொள்ளையிடச் சொல்லி நாலாயிரம் பயதள குதிரையை அனுப்பினர். குதிரைகள் வந்து ஆர்க்காடு சீமையில் கிராமங்களைக் கொள்ளையிட்டுக் கொளுத்தி புரட்டாசி மாதம் தங்கள் தண்டே போயி

சேர்ந்தார்கள். பாலக்காட்டு சத்தியமங்க இருதிறத்தாருக்கும்சண்டை யாயி டிப்புசுல்தான் மச்சினன் புறனுத்தின் விழுந்து போனுன். அதுவே டிப்பு சுல்தான் மனைவி வியாகூலமாயிருந்து தம்முடைய சீமையைப் பந்தோபஸ்தாயிருக்கச் சொல்லி இரண்டு லட்சம் செனத்தோடே சகல சாமானேடே மார்கழிமாதம் இருபத்தாறும் தேதி வாலிடுகாண்டா புரத்திலிருந்து வந்து வந்தவாசி யண்டை யிறங்கினுர்.

பிறகாலே சென்னல் மேடோச ஆரணிமேல் போயி சென்னப் பட்டிணம் போயிச் சேர்ந்தார். டிப்பு சுல்தான் ஆர்க்காடு சீமையைக் கொள்ளையிட்டும் செனங்களண்டை தெண்டம் வாங்கினதும் ரமாரமி கோடி ரூபாய் இருக்கும். அவருடைய ரோஸ்டுனலே ஏழைகளும் சேதமாயிருக்கும். அவ்விடத்திலிருந்து பெருமுக்கல் போயிச் செஞ் சிக்கி வந்து பட்டணத்தைக் கொளுத்தி கோட்டை துர்க்கங்கள் வாசல் கதவுகளைக் கொளுத்தி ஏழை செனங்கள் தவாரிக்கைக்காரன் கூட தர்ம துரைகள் சென்னைப் பட்டணத்திலிருந்து தண்டு கூட்டிக்கொண்டு வருவார்கள். என்று கேட்டு ராஜகிரி பேரில் கதவைச் சாத்திக்கொண்டு கொஞ்சம் மருந்து கொண்டும் சக்கிராவும் போட்டுக்கொண்டு நாதனில் லாமலிருக்க தைரியம் பண்ணிக் கொண்டு வலசை செனங்களும் வைத் துக்கொண்டிருக்க டிப்பு தண்டு சனம் பெரிய துர்க்கம் ராஜகிரி பேரில் ....திமலைமேல் செங்கல் கட்டு வாசல் அவ்விடத்தில் பத்துத் துப் பாக்கிகாரரிருந்தால் லட்சம் செனம் வந்தாலும் கெடுதலிராது என்று அந்த வாசல் பந்தோபஸ்து பண்ணி மூன்று நாள் சண்டை கொடுத் தார்கள்.

திப்பு மனிதருக்கு தைரிய மில்லாமல் கவில் பேரில் இறங்கச் சொன்னுர்கள். அவ்விடத்திலிருந்த ஏழை செனங்கள் நம்பாமலிருக்க வண்டு துலுக்கர் இருந்தவாள் கவிலுக்கு சம்மதப்பட்டு வாசல் கதவைத் திறந்தார்கள். திப்பு மனிதர் துர்க்கத்தின் பேரிலேறி ஏழைகளை வலசி முதல் கொண்டு பாராவைத்து வைத்திருந்து நாலு பிரமாத்து பேர் வைத்துக்கொண்டு மற்ற செனங்களை விட்டு விட்டார்.

ராஜகிரி பேரில் இருந்த பீரங்கிகளை தள்ளி உடைத்துப் போட்டு கவியில் ஆனந்தக் கோன் கோவல ராஜா முதலிருந்த சாரத்தைக் கொளுத்தி வாயிற் படிகளை பின்னம் பண்ணினுர்கள். அப்படி திப்பு சுல்தான் தண்டு கூட செஞ்சியிலிறங்கி யிருக்கும் போது இங்கலீஷ் பாதுஷா வசீர் வாலீசபங்களாவிலிருந்து வந்து சென்னைப் பட்டணத் தில் அதிக தண்டு சகல சாமான்கள் சேர்த்துக்கொண்டு சென்னல் மேடோச கூட ஆர்க்காடு கிட்ட வந்து யிறங்கினுர்கள். அது செய்தி

திப்பு சுல்தான்............நீதலாவா குதிரைக் காரராலே மனவிசாரப் பட்டார். அதன் பேரில் ரெண்டு நாழி யோசனைகள் பண்ணி பாரிச ஜண்டராலே அழைப்பித்து நீர் மூவாயிரம் பேர் சொல்தாது தண்ணி யின் பேரில் வருகிருர்களென்று சொன்னது வந்தார்களாவென்று கேழ்க்க பத்து நாளையிலே வருவார்களென்று தயிரியம் சொன்னுர்.

அதன் பேரில் திப்பு சுல்தான் கோபம் பண்ணி கொஞ்சம் வார்த்தை சொல்லி அனுப்பி விட்டு தம்முடைய சர்தார்கள் மீரகமருத் திகான் சைய்யத் ஆமிதுச மேதார் முன்னுலே நவாபு வாலாஜா பாதர் பார் சிபாயி குமந்தாணுகியிருந்து ஹைதரல்லிகான் பட்டாலிலே அகப் ப்ட்டவன் வகையருவை அழைப்பித்து இங்கிலீஷ் தண்டு சீரெங்கப்பட் டிணம் பெங்களூர் போகிறதாயிருக்கிறது, நாம் என்ன செய்யலா மென்று கேழ்க்க, அதற்கு அவர்கள் சொன்னது..............சீமையில் பாதி தண்டு விட்டுப் போட்டு தாங்கள் சீரெங்கப் பட்டிணத்திற்குப் போயி பந்தோபஸ்து பண்ணி அவர்களோடே சண்டை பண்ணுங்கள். இவ்விடத்திலிருப்பவர்கள் சென்னைப் பட்டணத்தின் பேரில் சண்டை கொடுக்கலாமென்று சொல்ல திப்பு சுல்தான் அதற்கு உத்திரம் கொடுக் காமல் மூன்று சாமம் வரைக்கும் பட்டினியாய் விஜாரத்தின் பேரிலி ருந்து யோசனை பண்ணி வீட்டிற்குப் போயி சாப்பிட்டு உடனே கச்சே ரியில் வந்து சர்தார்களை மிசல் பேதித்து தமாம் தண்டு கூச்சென்று வருத்தி சொன்னுர்.

இங்கிலீஷ் தண்டு போய் பெங்களூர் சேர்ந்தது. திப்பு கூஜ் பண் ணிப் போற போக்கிலே ஆரணிக் கில்லாவை அசைத்துப் பார்த்துக் கூடாமல் சென சதஉா பசலி சித்திரை மாதம் பெங்களூர் போயிச் சேர்ந்து தண்டை வெளியிலே யிறங்கி தாம் கோட்டைக்குள்ளே போயி பந்தோபஸ்து பண்ணி தண்டு வந்து சேர்ந்தார். வசீர் லாட்டுக்காரன் வாலிச பாதர், சென்னல் மேடோசி பாதர் இவர்கள் தண்டோடே பெங் களூர்க் கோட்டைக்கி வடபுறமாயிறங்கிக் கோட்டை பேரிலேயும், சுல் தான் தண்டு பேரிலேயும், தண்டைப் பிரித்து விட்டு சண்டை பண்ணி பத்து நாள் முரசா போட்டு பீரங்கி சண்டை பண்ணி கோட்டையை வாங்கி இங்கிலீஷ் டாணு போட்டுக் கொண்டார்கள்.

அவ்விடத்தில் இங்கலீஷ் பாதர் தண்டிற்கு கும்மக்கு நவாபு வசீர் நிஜாமுத் தெளலா தண்டும், மோராட்டிய சீமந்து சர்தார் அரிபணமதர் தாதா சாயிபு தண்டும் கும்மக்கு வந்தவர்கள் வல இங்கலீஷ் பாதர் தண்டு டிப்பு சுல்தான் தண்டோடே சீரெங்கப்பட்டிணம் போகிற வழியில் நந்தி துர்க்கம் மாகடி வகையருவை வாங்கிக் கொண்டு சீரெங்

கப் பட்டிணம் கரிகட்டுமலை போயிச் சேர்ந்தார். ஆர்க்காடு சுபாவுக்கு டிப்பு குதிரை வந்த பிறகு இங்கலீஷ் பாதர் சுபாவை தங்கள் வசம் பண்ணிக் கொண்டு மூன்று மிட்டாதார்கள், கலெக்டர் வந்து அமல் பண்ணினவர்கள் தாலூக்காத்தே பந்தோபஸ்து பண்ணிக்கொண்டார்கள்.

மதுரை, திருநெல்வேலி, நெல்லூர் வகையறுவும் பந்தோபஸ் தாயித்தானே நடந்தது. லாட்டு வாலீச வகையறு சுலுத்தான் தண்டோடே தானே துரத்திக் கொண்டு நந்திதுர்க்கம் மாகடி சென்னை பட்டிணம் துர்க்கம் வாங்கிக் கொண்டு சீரெங்கப்பட்டிணத்தண்டை, கரிகட்டு மலையண்டை போயிறங்கினவர்கள் அவ்விடத்தில் சிறிது நாள் இருந்து சண்டையும் பண்ணி ரஸத்து செருகிறது கடினமாயிருக்கிறது என்று உபாயம் பண்ண வேணுமென்று பெங்களூர் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்திலிருந்து ரெஸத்து முதல் சண்டை சாமான்கள் சகலதும் வேண்டியது சென்னைப்பட்டணம் பந்தரிலேயிருந்து அழைப்பித்துக் கொண்டு அவ்விடத்தில் நவாபு நிஜாமுத்தௌலா அரிபண்டிதர் பரசராம் பாவு தங்கள் தண்டிற்கு கும்மக்கு வந்தவர்களையும் அழைத்து கொண்டு அவ்விடத்திலாறு மாதமிருந்து மறுகாலும் முன்னிறங்கின தாவிலே................கட்டு மலையண்டையிறங்கினூர்கள்.

டிப்புசுல்தான் சர்தார் பதுருதசமாகான மகன் மகம்மது பாக்கர் கான் நலாயிரம் குதிரை வாங்கிக் கொண்டு தன் எசமானனுத்திரவின் பேரில் ஆர்க்காடு சீமையில் வந்து சென்னைப்பட்டிணத்தண்டை சைதா பேட்டை கொள்ளையிட்டு தங்கள் சாகாபோயிச் சேர்ந்தான். லாட்டுக் காரன்வாலீச், 55 சென்னல் மேடோச, இங்கரேச பாதர் தண்டும் நிஜா மத்தௌலா பாதர் தண்டும் அரிபண்டிதர் பரசராம பாவு தண்டு இது களெல்லாம் சீரெங்கப்பட்டிணத்தைச் சுற்றியிறங்கினூர்கள். இங்கிலீஷ் பாதர் தண்டு ஷகரகஞ்சாம் வாங்கிக் கொண்டு சுல்தான் பதகெரியைப் பிடித்துக் கொண்டு தாங்களும் பதகிரிகள் போட்டு பீரங்கிகள் எத்தி சீரெங்கப்பட்டிணம் கோட்டையை இடிக்கத் தலைப்பட்டு கோட்டையிலிருப்பவர்களும் கோட்டை அலங்கம் புருசுகளிலிருப்பவர்களும் தலை எடுக்காமல் அடிக்கிற காலத்தில் டிப்புசுல்தானும் கோட்டையை பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு கோட்டைக்குப்பக்கத்தில் குதிரை தண்டும் பத்தெரியில் பார் வகையறுவும் வைத்து கனசண்டை பண்ணிக் கொண்டிருக்க இங்கிலீஷ் தண்டிற்கு மோராட்டியர் தண்டு ரஸ்து கொண்டு வந்து கொடுக்க இப்படி முப்பது நாள் வரைக்கும் சண்டை

55. இவர் அந்நாள் கவர்னர் ஜெனரலாயிருந்தவர்.

கொடுத்துக் கொண்டுயிருக்க சீரெங்கப்பட்டிணம் கோட்டை வாங்கிக் கொள்ளுகிறதாய் ஆயிற்று.

திப்பு சுல்தான் தாயார் "இங்கலீஷ் உடனே சமாதானம் பண்ணிக் கொள்ளு" அவர்களை செயம் கொள்ளக் கூடாதென்று சொன்னத்தின் பேரிலே திப்பு சுல்தான் தன் மக்கள் ரெண்டு பேரையும் குலாமல்லி கான் மீரபகுஷியையும் பின்னும் மனிதரை இங்கலீஷ் வசீர் லாட்டு வாலீஷ் பாதரண்டை நவாபு நிஜாமத்தெளலா பாதர் மோராட்டிய சர் தார் மாறுபத்தாய் சமாதானத்திற்கு அனுப்பினர்.

அதன் பேரில் லாட்டு காரன் வாலீஷ் சத்தியாய் சமாதானம் பண்ணிக் கொள்ளுகிறது உபாய மென்று சமாதானத்திற்கு ஒப்பினர். சமாதானம் ஆன வயனம் இங்கலீஷ் பாதர் கும்பினிக்கி நாற்பத்தைந்து லட்சம் ரூபாய் சரக்கும், மூன்று கோடி ரூபாய் நிஜாமத்தெளலா பாத ருக்கு நாற்பத்தைந்து லட்சம் ரூபாய் சீமையும், ஒரு கோடி ரூபாயும், மோராட்டியருக்கு நாற்பத்தைந்து லட்சரூபாய் சீமையும், ஒருகோடி ரூபாய் நகதும், டிப்பு சுல்தான் குடுக்கிறதாய் சமாதானம் பண்ணிக் கொண்டார்கள். அந்தப்படியே சீமையும், நகது ரூபாயும், நகதிலே பாதி வாங்கிக் கொண்டு பாதி நகது சேருகிற வரைக்கும் டிப்பு சுல்தான் பிள் ளைகளை ரொம்பமரியாதியாய் பாட்டவணையோடே அழைத்துக்கொண்டு நவாபு நிஜாமத்தெளலா பௌவுசுதாருக்கு, மோராட்டிய பௌவுசுதா ருக்கும் சிலவு கொடுத்து அனுப்பிவிட்டு லாட்டு பாதர் ஆர்க்காடு வழி யாய் சென்னைப் பட்டிணம் வந்து சேர்ந்தார்.

சமாதானம் பண்ணிக்கொண்ட.........சென்னல் மேடோச கேட் டதே சிவனுக்கு ஒட்டிய கோபம் பண்ணினர். அவருக்கு சம்மதியில்லை. எசமான் லாட்டு சமாதானத்திற்கு ஒப்பானபடியினலே தீராமல் அவ ரும் வந்து விட்டார். டிப்பு சுல்தான் பாராமல் சீமை, பெரிசேலம் சீமை, பேசின படிக்கி கும்பினி சீமை பிரித்து விட்டதில் கெப்பன... ...ட்...க் காலக்டரி கொடுத்தார்கள். அந்த காலக்டரி கூட சின்னகலெக் டரி கெப்பன் உல்லி மக்களோட்டு, கெப்பன் கிரீம், கெப்பன் மன்றோ லையும் தட்டம் பண்ணினர்கள்.

இவர்கள் டிப்புசுல்தான் விட்ட சீமையை பந்தோபஸ்து பண்ணிக் கொண்டார்கள். தகர கஞ்சர்மாவில் இங்கிலீஷ் தண்டு இறங்கினது அவ்விடத்தில் ஆர்க்காடு வகையரு வர்த்தகர் முதல் சிறை பிடித்துக் கொண்டு வந்து அந்த ஷகர கஞ்சாம் பேட்டையை பந்தோபஸ்து பண்ண அந்த வர்த்தகர் முதல் ஆர்க்காடு சீமை செனங்களை திப்பு சுல்

